ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

முதலாழ்வார்களுள் முதல்வரான

பொய்கையாழ்வார் அருளிச்செய்த

முதல் திருவந்தாதி.

பெருமாள் கோயில்

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர்

இயற்றிய

திவ்யார்த்ததீபிகையென்னும்

உரையுடன் கூடியது.

M.R. கோவிந்தஸாமி நாயுடுவால்,

மதராஸ் மாடல் அச்சுக்கூ

அச்சிடுவிக்

விபவ௵

1928.

ஸ்ரீமான் உ. வே. (காஞ்சீபுரம்) பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமிகள் அருளிச்செய்த க்ரந்தங்களும் அவற்றின் விலையும்.

திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி —தெளிவுரை	3	0	0
திருப்பாவையின் விரிவுரை ...	1	4	0
ஷை திக் ர[illegible]பர் பயிண்ட் ...	1	0	0
நாச்சியார் திருமொழியின் விரிவுரை ...	2	0	0
பெருமாள் திருமொழியின் விரிவுரை ...	1	12	0
திருச்சந்த விருத்தத்தின் விரிவுரை ...	1	10	0
திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு—இவற்றின் விரிவுரை	1	6	0
முதலாயிரம் முழுமையும் 3 வால்யூம்களாக நல்ல பைண்ட்	10	8	0
இராமாநுச நூற்றந்தாதியின் விரிவுரை ...	0	12	0
சிறிய திருமடல்—விரிவுரை	0	10	0
பெரிய திருமடல்—விரிவுரை	1	0	0
திருவெழுகூற்றிருக்கை—விரிவுரை	0	5	0
திருவாசிரியம்—விரிவுரை	0	5	0
பெரிய திருவந்தாதி	1	8	0
ஸ்ரீவசநபூஷண ஸாரம்	1	0	0
கூரத்தாழ்வான் வைபவம்	0	4	0
பிரதிவாதி பயங்கரம் அண்ணா வைபவம் ...	0	3	0
முகுந்தமாலையின் தெளிவுரை	0	6	0
ஆளவந்தார் ஸ்தோத்ரத்தின் தெளிவுரை ...	0	12	0
ஸ்தோத்ரவ்யாக்யாந சோதநம்	0	3	0
நமஸ்காரதத்துவம்	0	2	0
ப்ரணவாதிகாரதத்துவம்	0	4	0
ஸுதர்சந சதகம் தமிழுரை	1	0	0
ஸ்ரீவரதராஜ ஸ்தவத்தின—விஸ்தாரமான மணிப்ரவாள வியாக்கியானம் (தெலுங்கு) லிபி	1	4	0
ஸ்ரீஸ்தவத்தின் ஷை ஷை ...	0	6	0
அதிமாநுஷ ஸ்தவத்தின் ஷை ஷை ...	0	12	0
திருப்பல்லாண்டு விரிவுரை ஷை ...	0	4	0
ஆசார்ய ஹ்ருதய மூலம் ஷை ..	0	3	0
ரஹஸ்ய மூலம் ஷை ...	0	6	0
உபந்யாஸரத்நமாலா (க்ரந்தலிபி) ஸம்ஸ்க்ருத பாஷையில் சிறந்த 5 உபந்யாஸங்கள்	0	6	0
சேஷாவதாரச் சிறப்பு	0	2	0

[இன்னும் பல புத்தகங்களும் உள்ளன.]

"திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை" ஆபீஸ்,
32, பந்தர் தெரு, G. T., மதராஸ்.

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பொதுத் தனியன்கள்.

(நம்பெருமாள் அருளிச் செய்தது.)

శ్రీశైలేశదయాపాత్రం ధీభక్త్యాదిగుణార్ణవమ్।
యతీన్ద్రప్రవణం వన్దే రమ్యజామాతరం మునిమ్॥

[ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்.
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.]

(ஆழ்வான் அருளிச் செய்தவை.)

లక్ష్మీనాథసమారమ్భాం + వన్దే గురుపరమ్పరామ్॥
యోనిత్యమచ్యుతపదామ్బుజ + రామానుజస్యచరణౌశరణంప్రపద్యే।

[லக்ஷ்மீநாதஸமாரம்பாம் + வந்தே குருபரம்பராம்.
யோ நித்யமச்யுத + ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.]

(ஆளவந்தார் அருளிச் செய்தது.)

మాతా పితా యువతయః + ప్రణమామి మూర్ధ్నా॥

[மாதா பிதா யுவதய: + ப்ரணமாமி மூர்த்நா.]

(ஸ்ரீபராசர பட்டர் அருளிச் செய்தது.)

భూతం సరశ్చ + శ్రీమత్పరాఙ్కుశమునిం ప్రణతోఽస్మి నిత్యమ్।

[பூதம் ஸரச்ச + ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.]

ஸ்ரீ:



முதலாழ்வார்கள் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்களனைவர்க்கும் முன்னே இந்த வுலகிலிருள் நீங்க வந்துதித்து அந்தமிழால் நற்கலைகளாய்ந்துரைத்த பொய்கையார் பூதத்தார் பேயார் என்னுமிம்மூவரும் முதலாழ்வார்களென்று பிரஸித்தி பெற்றிருப்பர். "மற்றுள்ள வாழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து, நற்றமிழால் நூல் செய்து நாட்டையுய்த்த—பெற்றிமையோரென்று முதலாழ்வார்களென்னும் பெயரிவர்க்கு, நின்றதுலகத்தே நிகழ்ந்து." என்ற உபதேசரத்தினமாலைப் பாசுரம் நோக்கத்தக்கது.

விபவத்தில் இம்மூவரும் பகவத்கடாக்ஷம் பெற்ற பின்னர் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாமல் ஒன்று கூடியே வாழ்ந்தது பற்றி அர்ச்சாவதாரத் திருக்கோயில்களிலெங்கும் இம்மூவரும் ஒன்றுசேர்ந்தே கோயில் கொண்டிருப்பர்கள்; அப்படியே இவர்களின் வைபவமும் ஒன்றுசேர்த்தே அநுஸந்திக்கப்படும். இம்மூவர்க்கும் திருநாள்பாட்டு அருளிச்செய்யாநின்ற ஸ்ரீமணவாள மாமுனிகளும் "ஐப்பசியிலோணமவிட்டம் சதயமிவை, ஒப்பிலவா நாள்களுலகத்தீர்—எப்புவியும், பேசுபுகழ்ப் பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார், தேசுடனே தோன்று சிறப்பால்." என்று ஒரே பாசுரமாகத் தொகுத்து அருளிச்செய்தமையும் நோக்கத்தக்கது.

பொய்கையாழ்வார்.

"தெண்ணீர்வயல் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று ஔவையார் பாடியபடி கல்வி கேள்வி அறிவொழுக்கங்களாலான்றவர் பலரையுமுடையதான தொண்டை நன்னாட்டிலே புண்ய க்ஷேத்ரங்களெல்லாவற்றினுள்ளும் மிக்க சீர்மைபெற்று விளங்கும் ஸத்யவ்ரதக்ஷேத்ரத்திலே, "முத்திதரும் நகரேழில் முக்கியமாங்கச்சி" என்றும் "காசி முதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனியருளாளர் கச்சிக்கு ஒவ்வா" என்றும் சிறப்பித்துக் கூறப்படுவதும் வேகவதியென்னும் புண்ணிய நதியின் தென்பால் விளங்குவதுமான காஞ்சிமாநகரிலே ஸ்ரீயதோக்தகாரி ஸந்நிதியென்று ப்ரஸித்தமான திருவெஃகா வென்னும் திவ்யதலத்தின்வடபுறத்தில் மஹான்களது திருவுள்ளம்போல் ஆழ்ந்து தெளிந்து விளங்கும் பொற்றாமரைப் பொய்கையிலே பூத்ததொரு நற்றாமரைப்பூவிலே ஐப்பசிமாதத்துத் திருவோணத்திலே ஒருவர் திருவவதரித்தார். இவருடைய பிரபாவத்தைப் பார்த்து அனைவரும் இவரைத் தேவிற்சிறந்த திருமாலின் திவ்யாயுதங்களுள் பாஞ்சஜந்யமென்னும் திருச்சங்கின் அம்சமாக அறுதியிட்டிருந்தனர். பொய்கையில் அவதரித்தது காரணமாகப் பொய்கையாழ்வாரென்று திருநாமம் பெற்றாரிவர்.

பூதத்தாழ்வார்.

நீர்வளம் நிலவளம் முதலிய பல வளங்களும்மலிந்து இப்பூமண்டலத்திற்குத் திலகம் போன்றுள்ள அத்தொண்டை மண்டலத்திலே கீழ்கடற்கரையிலுள்ள திருக்கடல்மல்லை யென்கிற மஹாபலிபுரத்திலே குருக்கத்திப்பந்தரிலே ஒரு குருக்கத்திமலரிலே ஐப்பசி மாதத்து அவிட்ட நக்ஷத்ரத்திலே ஒருவர் திருவவதரித்தார். இவருடைய வைபவத்தை நோக்கி அனைவரும் இவரைக் கௌமோதகி யென்னும் கதாயுதத்தின் அம்சமாக அறுதியிட்டிருந்தனர். இவர்க்குப் பூதத்தாழ்வாரென்று திருநாமமானபடி என்னென்னில்;—வடமொழியில் "஭ூ-ஸத்தாயாம்." [பூ—ஸத்தாயாம்.] என்கிற தாதுவடியாகப் பிறந்தது பூதம் என்னுஞ் சொல்.

ஸத்தை பெற்றது என்று பொருள். எம்பெருமானுடைய திருக்குணங்களையநுபவித்தே ஸத்தைப்பெற்றாரென்னுங் காரணம் பற்றிப் பூதத்தாழ்வாரென்று திருநாமமாயிற்றென்றுணர்க. திருவாய்மொழியில் (5-2-1) "கடல்வண்ணன் பூதம்" என்றவிடத்து வியாக்கியானங்களில் இப்பொருள் விளங்கக் காண்க.

பேயாழ்வார்.

"ஆறேழுடரெட்டுத் தொண்டை" என்றவாறு நூற்றெட்டுத் திருப்பதிகளுள் இருபத்திரண்டு திருப்பதிகளையுடையதான துண்டீரமண்டலமென்கிற அத்தொண்டைவளநாட்டிலே திருவல்லிக்கேணியென்னும் திவ்ய தேசத்துக்குத் தென்திசையிலுள்ள திருமயிலை நகரியில் ஒரு கிணற்றிலேயுண்டான செவ்வல்லிப் பூவிலே ஐப்பசி மாதத்துச் சதயநக்ஷத்ரத்திலே ஒருவர் திருவவதாரஞ் செய்தருளினர். இவருடைய வைபவத்தைக்கண்டு பலரும் இவரை நந்தகமென்னும் வாட்படையின் அம்சமாக அறுதியிட்டனர். இவர் ஒப்புயர்வற்ற பகவத்பக்தியையுடையராய், கண்டவர்களடங்கலும் 'இவர் பேய் பிடித்தவர்' என்னும்படி நெஞ்சழிந்து கண் சுழன்று அழுதும் சிரித்தும் தொழுதுமெழுந்தாடியும் மகிழ்ந்து பாடியும் அலறியுமே அநவரதம் போதுபோக்கிக்கொண்டிருந்தமையால் பேயாழ்வாரென்று திருநாமம் பெற்றனர். பரமபக்தி தலையெடுத்து எம்பெருமானை அநுபவிக்குந்திறம் மற்ற ஆழ்வார்களிற் காட்டில் இவர்க்கு மிகப் பெரிதாயிருந்ததனாலும், இவர் தாம் எம்பிரானுக்கு ஆட்பட்டது மாத்திரமேயன்றித் திருமழிசையாழ்வாரைத் திருத்திப் பணிகொண்ட மஹானுதலாலும் மஹதாஹ்வயர் என்ற மற்றொரு திருநாமமும் இவர்க்கு உண்டு.

இவர்களின் வைபவம்.

ஸ்ரீராம பரதலக்ஷ்மணர்போல அடுத்தடுத்த நாள்களில் அவதரித்தவர்களும் அயோநிஜர்களுமாகிய இம்மூவர்க்கும், ஸ்ரீவைகுண்டநாதனுடைய திருவாணையினால் ஸேனைமுதலியார் இந்நிலத்திற்கெழுந்தருளிப் பஞ்சஸம்ஸ்காரங்களைச் செய்து திருமந்தி

ரப் பொருள்களையும் உபதேசித்தருளினர். அதனால் இவர்கள் "முக்குணத் திரண்டவையகற்றி, ஒன்றினிலொன்றி நின்று" என்றாற்போல ரஜோகுணமும் தமோகுணமும் சிறிதுமற்று சுத்த ஸாத்விகர்களாய் எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்வதையே பெரும் பேறாகக்கொண்டு ஞானபக்திவிரக்திகளுக்குப் பிறப்பிடமென்னலாம்படி விளங்கி "உண்ணுஞ்சோறு பருகுநீர்த்தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்" என்றாற்போல பகவத் குணாநுபவத்தையே தாரகமும் போஷகமும் போக்யமுமாகக்கொண்டு அந்நபாநாதிகளை யொழித்து, உண்டியே உடையே உகந்தோடுகின்ற இம்மண்டலத்தாரோடு கூடகில்லாமல் ஒருநாளிருந்தவிடத்தில் மற்றொருநாளிராதபடி ஓடித்திரியும் யோகிகளாய், தம்மில் ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியே ஸஞ்சரித்துக்கொண்டிருந்தனர்.

இப்படி ஸஞ்சரித்துக் கொண்டிருந்த இம்மூவரையும் ஓரிடத்திலே சேர்த்து ஆட்கொண்டு இவர்கள் முகமாக உலகத்தை வாழ்விக்கவேணுமென்கிற குதூஹலம் எம்பெருமான் திருவுள்ளத்திலுண்டாயிற்று.

ஸத்யகாமனாய் ஸத்யஸங்கல்பனான எம்பெருமானுடைய மநோரதம் பழுதுபடுமோ? அவனுடைய திருவுள்ளம் நிறைவேறுதற்கு வழியுண்டாயிற்று. அதாவது—ஒருநாள் ஸூர்யன் அஸ்தமித்தபின்பு பொய்கையாழ்வார் திருக்கோவலூரையடைந்து அங்கு ம்ருகண்டு மஹர்ஷியின் திருமாளிகையிற் சென்று அதன் இடைகழியிற் பள்ளிகொண்டிருந்தார். பிறகு பூதத்தாழ்வாரும் அங்கே வந்து சேர, "வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா தண்டவத் ப்ரணமேத் புவி" என்கிற சாஸ்திர முறைப்படி ஒருவரை யொருவர் வந்தனை வழிபாடுகள் செய்தவுடன், "இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் உட்கார்ந்திருக்கலாம்" என்று பொய்கையார் விண்ணப்பஞ்செய்ய, அவ்விதமே இருவரும் அங்கு உட்கார்ந்திருந்தனர். அதன் பிறகு பேயாழ்வாரும் அவ்விடத்திற்கே வந்துசேர, ஒருவரையொருவர் தண்டன்ஸமர்ப்பித்து உபசரித்துக் கொண்டபின் "இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்" என்று பொய்கை பூதத்தாரிருவரும் சொல்ல, அவ்

விதமே மூவரும் அவ்விடத்திலே நின்றுகொண்டு பரஸ்பரம் பகவத் குணங்களைச் சொல்லுதலும் கேட்டலுஞ்செய்து களித்திருந்தனர்.

அப்பொழுது உலகளந்த மூர்த்தி அவர்கள் திறத்திலே திருவருள் செய்யும் பொருட்டுப் பெருத்த இருளையும் கனத்த மழையையுமுண்டாக்கி, பெரிய வடிவத்தோடு அவர்களிடையே சென்று நின்று பொறுக்க முடியாத மிக்க நெருக்கத்தைச் செய்தருளினான். அதன்மேல் இவர்கள் 'இதுவரையிலும் இல்லாத நெருக்கம் இப்போது உண்டானதற்குக் காரணமென்கொல்!; பிறரெவரேனும் இங்கு வந்து புகுந்தவருண்டோ?' என்று சங்கிக்கையில், பொய்கையாழ்வார் பூமியாகிய தகழியில் கடல் நீரையே நெய்யாகக் கொண்டு ஸூர்யனை விளக்காக ஏற்ற, பூதத்தாழ்வார் அன்பாகிய் தகழியில் ஆர்வத்தை நெய்யாகவும் சிந்தையைத் திரியாகவுங் கொண்டு ஞானதீபத்தை ஏற்ற, இவ்விரண்டினொளியாலும் இருளற்றதனால், பேயாழ்வார் எம்பெருமானைத் தாம் ஸேவித்தமை கூறியவளவிலே மூவரும் பகவத்ஸ்வரூபத்தை நன்கறிந்து அநுபவித்து ஆநந்தப் பெருவெள்ளமெய்தி அதனுக்குப் போக்குவீடாகப் பிரபந்தங்களருளிச்செய்து உலகத்தாரை உய்விக்கத் திருவுள்ளம்பற்றினர்.

அப்பொழுது, பொய்கையாழ்வார் "வையந் தகளியா" என்று தொடங்கியும், பூதத்தாழ்வார் "அன்பே தகளியா" என்று தொடங்கியும், பேயாழ்வார் "திருக்கண்டேன்" என்று தொடங்கியும் மூவரும் மூன்று திருவந்தாதிப் பிரபந்தங்களைத் திருவாய்மலர்ந்தருளினர். இப்பிரபந்தங்கட்கு அடைவே, முதல் திருவந்தாதியென்றும் இரண்டாந் திருவந்தாதியென்றும் மூன்றாந் திருவந்தாதியென்றும் திருநாமம் வழங்கலாயிற்று.

பின்பு இவ்வாழ்வார்கள் மூவரும் தேஹளீசனென்னும் திருக்கோவலூராயனைத் திருவடி தொழுது விடைபெற்று நெடுங்காலம் திருப்பதிகள்தோறும் சென்று மங்களாசாஸநம் செய்து, யோகபலத்தால் ஆயிரக்கணக்கான வருஷங்கள் இம்மண்ணுலகில் வாழ்ந்திருந்து வையகத்தை வாழ்வித்தருளினர்.

முதலாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

முதல் திருவந்தாதி.

இது—மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுள் முதல்வரான பொய்கையாழ்வாரருளிச் செய்தது, நாலாயிரப் பிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாக ஸ்ரீமந்நாதமுனிகளால் வகுக்கப்பட்ட இயற்பாவில் முதற் பிரபந்தமுமாகும்.

அந்தத்தை ஆதியாகவுடையது அந்தாதி. அன்மொழித் தொகை; வடமொழித்தொடர். அந்த ஆதி எனப்பிரிக்க. அந்தாதியாவது—முன்னின்ற செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்துவரும் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது. அந்தாதியென்பது தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாம். பதிற்றந்தாதியென்றும் நூற்றந்தாதியென்றும் வகைகளுண்டு. பத்து வெண்பாவினாலேனும் பத்து கட்டளைக் கலித்துறையினாலேனும் அந்தாதித் தொடையாற் கூறுவது பதிற்றந்தாதி. நூறு வெண்பாவினாலேனும் நூறு கட்டளைக்கலித்துறையினாலேனும் அந்தாதித் தொடையாற் பாடுவது நூற்றந்தாதி. இப்பிரபந்தம் நூறு வெண்பாவினாலமைந்தது. சொற்றொடர் நிலைச் செய்யுள், பொருட்டொடர் நிலைச்செய்யுள் என்றவகையில் இது சொற்றொடர் நிலை; "செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே" என்றார் தண்டியலங்காரத்தும். இந்நூலின் பாசுரங்கள் பொருளில் ஒன்றையொன்று தொடர்ந்து நிற்பது தோன்ற அறிவிற் சிறந்த ஆன்றோர் உபந்யஸிக்கக் கூடுமாதலால் இது பொருட்டொடர் நிலையுமாம். "பொருளினுஞ் சொல்லினு மிருவகை தொடர்நிலை" என்னும் தண்டியலங்காரச் சூத்திரத்தின் உரையில் "இரண்டென்னாது வகை என்ற மிகையான் மூன்றாவது பொருளினுஞ் சொல்லினுந் தொடர்தலுமுண்டெனக் கொள்க." என்றது காண்க. நெடுக ஒரு கதையாகக் கூறுதலின்றியே ஸ்தோத்ர

ரூபமாக அருளிச் செய்யப்பட்ட பாசுரங்களாதலால் சொற்றொடர் நிலையாகவே கொள்ளலாம்.

தொல்காப்பியத்துச் செய்யுளியலிற் கூறப்பட்ட அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்ற எண்வகை வனப்பினுள் இந்நூல் விருந்தென்னும் வனப்பின் பாற்படும். §"விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்ற தொல்காப்பியச் சூத்திர வுரையில் நச்சினார்க்கினியர் "விருந்து தானும் பழங்கதை மேலதன்றிப் புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளும் தொடர்ந்து வரத் தொடுத்துச் செய்யப்படும் தொடர்நிலை மேலது" என்றும், "அது—முத்தொள்ளாயிரமும் பொய்கையார்முதலாயினோர்செய்தஅந்தாதிச்செய்யுளும் என உணர்க; கலம்பகம் முதலாயினவும் சொல்லுப." என்றும் உரைத்துள்ளமை காண்க.

திரு என்னும் பலபொருளொருசொல் - வடமொழியிலே ஸ்ரீ என்பதுபோலத் தமிழிலே மேன்மையையுடைய எப்பொருள்களுக்கும் விசேஷண பதமாகி அவற்றிற்கு முன்னே மஹிமைப் பொருளைக் காட்டிவரும். இங்கே இது அந்தாதிக்கு [நூலுக்கு] அடைமொழி. மேன்மையாகிய அந்தாதி என்றாவது, மேன்மையையுடைய அந்தாதி என்றாவது விரியும். மற்றைத் திருவந்தாதிப் பிரபந்தங்களுக்கு முன்னே இது திருவவதரித்ததுபற்றி முதல் திருவந்தாதி யென்று இதற்குத் திருநாமமிட்டு வழங்கலாயினர் முன்னோர். ... ... *

---

§ தொல் காப்பியம்—பொருளதிகாரம். செய்யுளியல்—240.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

முதல் திருவந்தாதி-தனியன் உரை.

[முதலியாண்டானருளிச் செய்த தனியன்.]

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு—வையத்
தடியவர்கள் வாழ வருந்தமிழ் நூற்றந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து.

பதவுரை.

கைதை சேர்	தாழைகள் மிகுதியாகச் சேர்ந்திருக்கப்பெற்ற	வாழ	வாழும்படியாகவும்
பூம்பொழில் சூழ்	அழகிய சோலைகளாலே சூழப்பட்ட	படி விளங்க	இப்பூமியானது (இருள்நீங்கி ஞானவொளி பெற்று) விளங்கும்படியாகவும்
கச்சி நகர்	காஞ்சீபுரத்தில் [திருவெஃகாவினருகே]	அரு தமிழ்	அரிய தமிழினாலாகிய
வந்து உதித்த	திருவவதரித்த	நூற்றந்தாதி	அந்தாதித் தொடையாலமைந்த நூறு பாசுரங்களையுடைய பிரபந்தத்தை
பொய்கைப் பிரான்	பொய்கையாழ்வாரென்கிற		
கவிஞர் போர் ஏறு	கவிச்ரேஷ்டரானவர்		
வையத்து	இப்பூமண்டலத்திலுள்ள	பரிந்து	அன்புகொண்டு
அடியவர்கள்	பக்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள்	செய்தான்	திருவாய் மலர்ந்தருளினர்.

“இன்கவிபாடும் பரமகவிகள்” என்றும் “செஞ்சொற் கவிகள்” என்றும் நம்மாழ்வாராலும், “செந்தமிழ் பாடுவார்” என்று திருமங்கை மன்னனாலும் சிறப்பித்துக் கூறப்பட்டுச் செந்தமிழ்க் கவிகளுள் சிறந்து விளங்குபவரும், திருக்கச்சிமாநகரில் திருவவதரித்தவருமான பொய்கையாழ்வார் தமது திவ்யப்ரபந்

மாகிற சிறந்த திருவிளக்கையேற்றி அதனால் இந்நிலவுலகம் முழு வதையும் இருள் நீக்கி விளங்கச்செய்து, "தொண்டர்க்கு அமு துண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றாற்போல பகவத் பக்தரான ஸ்ரீவைஷ்ணவர்களையும் இப்பிரபந்த முகத்தால் வாழ் வித்தருளினர் என்றதாயிற்று.

கவிஞர்போரேறு = வடநூலார் ச்ரேஷ்டர்களைச் சொல்லும் போது, சிங்கம் புலி எருது முதலிய செருக்குடைய மிருகங் களுக்கு வாசகமான சொற்களைச் சேர்த்து, 'புருஷஸிம்ஹஃ' 'புருஷவ்யாக்ரஃ' 'புருஷபுங்கவஃ—புருஷர்ஷபஃ' என்று பிர யோகிப்பதுபோலவே தமிழரும் பிரயோகிப்பதுண்டாகையாலே, "கவிஞர் போரேறு" என்றது கவிகளுட்சிறந்தவரென்றபடி. ஆழ் வார்களின் அருளிச் செயல்களாகிய திவ்யப்ரபந்தங்களை அதிகரித் தலையே ஸ்ரீவைஷ்ணவர்கள் உஜ்ஜீவநமாக அத்யவஸித்திருப்பது பற்றி 'அடியவர்கள் வாழ' எனப்பட்டது.

"அருந்தமிழ் நூற்றந்தாதி" என்ற பாடத்தில் வெண்டளை பிறழ்கின்றமையால் "அருந்தமிழந்தாதி" என்று பாடமிருந் திருக்கவேணும். ஆனாலும், தனியன் வியாக்கியானஞ் செய்தருளின பிள்ளைலோகஞ்சீயர் "அருந்தமிழ் நூற்றந்தாதி" யென்றே ஸ்பஷ்டமாக ப்ரதீக மெடுத்து வியாக்கியானமருளியிருப்பதாலும் இப்பாடமே நாடெங்கும் வழங்கிவரக் காண்கையாலும் இதுவே கொள்ளப்பட்டது.

படிவிளங்க என்பதற்குப் பலவகையாகப் பொருள் கூறுவர்; படி—பூமியிலே, விளங்க—இப்பிரபந்தம் நெடுங்காலம் விளங்கும் படியாக என்றும்; படி என்று உபமாநத்துக்கும் வாசகமாகை யாலே, தமிழ்ப் பிரபந்தங்கட்கெல்லாம் உபமாநமாக விளங்கும் படியாக என்றும்; படி என்று திருமேனிக்கும் பெயராகையாலே, "திருக்கண்டேன் பொன் மேனிகண்டேன்" என்று பேயாழ்வார் அநுஸந்திக்குமாறு எம்பெருமானுடைய திருமேனி விளங்கும்படி "வருத்தும் புறவிருள் மாற்ற எம் பொய்கைப்பிரான் மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையுங்கூட்டி ஒன்றத் திரித்தன் றெரித்த திருவிளக்கு" என்று இராமாநுசநூற்றந்தா

தியில் அமுதனார் அருளிச்செய்தபடியே திருவிளக்கேற்றியது போன்ற பாமாலையை அருளிச் செய்தாரென்றும் கூறுவர்.

பரிந்து — எம்பெருமான்மேற் காதல்கொண்டு என்கை.

கேதகீ என்னும் வடசொல் 'கைதை' எனவும், காஞ்சீநகரம் என்னும் வடசொல் தொடர் 'கச்சி நகர்' எனவும் திரிந்தன.

கச்சிநகர்வந்துதித்த பொய்கைப்பிரான்.

இத்திருவந்தாதிக்குப் பெரிய வாச்சான்பிள்ளை யருளிச்செய்த வியாக்கியான அவதாரிகைத் தொடக்கத்தில்—

"இன்கவிபாடும் பரமகவிகளென்றும் செந்தமிழ் பாடுவாரென்றும் இவர்கள் அவதரித்தது ஓரோ தேசங்களிலேயாகிலும் காலப் பழமையாலே இன்னவிடமென்று நிச்சயிக்கப் போகாது."

என்றருளிச் செய்திருக்கும் வாக்கியத்தை நோக்குங்கால், பொய்கையாழ்வாரைக் கச்சிநகரில் அவதரித்தவராகவும் பூதத்தாழ்வாரைத் திருக்கடல் மல்லையில் அவதரித்தவராகவும் பேயாழ்வாரைத் திருமயிலையில் அவதரித்தவராகவும் நாம் சொல்லிக்கொண்டிருப்பது அஸங்கதமென்னவேண்டியதாகிறது. மேற்குறித்த வியாக்கியான வாக்கியம் அச்சுப்பிரதிகளிற் காண்கிறபடியே உண்மையாயின், முதலாழ்வார்கள் அவதரித்தது யுகாந்தரத்திலாகையாலே இன்னவிடத்தில் அவதரித்தனர்என்பது நிச்சயிக்கமுடியாத விஷயமென்று பெரியவாச்சான்பிள்ளையின் திருவுள்ளமாக விளங்காநின்றது. இப்படியாகில் முதலாழ்வார்களின் அவதார ஸ்தலங்களை விவரித்துக் கூறுகின்ற திவ்யஸூரிசரிதம், திருவந்தாதித் தனியன்கள், குருபரம்பராப்ரபாவம், பிரபந்தசாரம், உபதேசரத்தினமாலை முதலிய பிரபந்தங்களின் ப்ராமாண்யத்தில் ஸந்தேஹம் ஜநிக்க இடமுண்டாகின்றது. இவ்விஷயத்தை நாம் நன்கு ஆராய்தல் வேண்டும்.

மேலெடுத்துக் காட்டிய வியாக்கியான-ஸ்ரீ ஸூக்தியின் அரும்பதவுரையில்—"இவையிரண்டு ஸங்கதியும் ஸ்வரஸமன்று; பிழையும் தெரியாது; வந்தவிடங்களிலே கண்டுகொள்வது" என்றிருப்

க்கண்டு பிராசீநதாளகோசங்களைப் பரிசீலனம் செய்ய நாம் தொடங்கினபோது மேற்குறித்த வியாக்கியான வாக்கியத்தின் பிழையற்றபாடம் இங்ஙனே கிடைத்தது:— "இன்கவிபாடும் பரமகவிகள்—செந்தமிழ்பாடுவோர்—என்னுமிவர்கள் அவதரித்தது ஓரோதேசங்களிலேயாகிலும் ஞானப்பெருமையாலே இன்னவிடத்தவரென்று நிச்சயிக்கப் போகாதிறே." என்று.

இவ்வாக்கியம் - "ஆழ்வார்களிற் காட்டில் பகவத் விஷயத்திலுண்டான அவகாஹனத்தாலே முதலாழ்வார்கள் மூவரையும் நித்யஸூரிகளோபாதியாக நினைத்திருப்பர்கள்" என்கிற அடுத்த கீழ்வாக்கியத்திற்கு விவரணமாயிருக்கின்றது. இதன் கருத்தாவது:—இவ்வாழ்வார்கள் வந்து திருவவதரித்தது இந்நிலத்திலே ஓரோ விடங்களிலே யாகிலும் இவர்களது ஞான மஹிமையை நோக்குங்கால், "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ வையமோ நும் நிலையிடமே" என்றாற்போலச் சங்கிக்கவேண்டும்படியான நிலைமையாயிருக்கின்றதென்றவாறு. "அத்ரி ஜமதக்நி பங்க்திரத வஸுநந்த ஸூநுவானவனுடைய யுகவர்ணக்ரமாவதாரமோ? வ்யாஸாதிவத் ஆவேசமோ? மூதுவர் கரைகண்டோர் சீரியரிலே ஒருவரோ? முன்னம் நோற்ற அனந்தன்மேற் புண்ணியங்கள் பலித்தவரோவென்று சங்கிப்பர்கள்" (ஆசார்யஹ்ருதயம்.) என்று நம்மாழ்வார் திறத்திலருளிச் செய்தவாற்றை இங்கே நினைப்பது.

முதலாழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களுக்குப் போலவே மற்றுள்ள ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தங்கட்கும் வியாக்கியான முரைத்தருளின பெரியவாச்சான்பிள்ளை, அவதாரிகைகளிலே அந்தந்த ஆழ்வார்களின் திருவவதார ஸ்தலங்களை அருளிச் செய்திருப்பாராயின், இவ்விடத்திலே 'முதலாழ்வார்களின் அவதார ஸ்தலம் காலப்பழமையாலே தெரியாது' என்றெழுதிவைக்க ப்ரஸக்தியாகிலுமுண்டு; மற்ற ஆழ்வார்களின் அவதாரஸ்தலங்களைப்பற்றி ஒன்றுமருளிச் செய்யாதவர் முதலாழ்வார்களின் அவதாரஸ்தலங்களைப்பற்றி மாத்திரம் பேசத் தொடங்குவதும் காலப்பழமையாலே இன்னவிடமென்று தெரியாதென்பதும் அப்ரஸக்தமாகையாலே அச்சுப்பிழை அங்கீகரிக்கத்தக்கதே. யாமெடுத்துக் காட்

டிய எட்டுப்பிரதிகளிற்பாடமே சாலவும் பொருந்தும். முதலாழ்வார்களின் திருவவதாரம் உண்மையில் யுகாந்தரத்திலே யாகிலும் இவர்களது சரிதமும், மற்றும் திருமழிசைப்பிரான் முதலான ஆழ்வார்களின் சரிதமும் வெளிப்பட்ட விதமாகவே இவர்களது திருவவதாரஸ்தலமும் ஸ்ரீமந்நாதமுனிகள் வழியாக வெளிப்பட்டன வென்று கண்டு கொள்க.

காலப்பழமையாலே இவர்களவதரித்த விடம் இன்னதென்று தெரியாதென்றுரைப்பதே பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளமாயிடின் உபதேசரத்தினமாலையிலே "எண்ணருஞ்சீர்ப் பொய்கை முன்னோர் இவ்வுலகில் தோன்றியவூர், வண்மைமிகு கச்சி மல்லை மாமயிலை" என்று * பொய்யிலாத மணவாள மாமுனிகள் அருளிச்செய்திருக்கமாட்டார்; இதனாலும் அச்சுப்பிழை அறுதியிடத்தக்கதாம். ... ... *

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பொய்கையாழ்வார் அருளிச்செய்த

முதல் திருவந்தாதி.

[பெருமாள்கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய திவ்யார்த்ததீபிகையுடன் கூடியது.]

வையம் தகளியா வார்கடலே நெய்யாக *
வெய்ய கதிரோன் விளக்காக *—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை *
இடராழி நீங்குகவே யென்று (க)

பதவுரை.

வையம் தகளி ஆ	பூமி அகலாகவும்	சொல் மாலை	இப்பாமாலையாகிற பூ மாலையை
வார் கடலே நெய் ஆக	அந்தப் பூமியைச் சுற்றியிருக்கிற கடலே நெய்யாகவும்	சூட்டினேன்	சாத்தினேன்;
			(எதுக்காகவென்னில்;)
வெய்ய கதிரோன் விளக்கு ஆக	உஷ்ணகிரணனை ஸூர்யன் விளக்காகவும்,	இடர் ஆழி நீங்குக என்று	(பகவத் கைங்கரியத்திற்கு இடையூறாக வுள்ள) துன்பக்கடல் நீங்குகைக்காக.
செய்ய சுடர் ஆழியான் அடிக்கே	செஞ்சுடர்ச் சக்கரக் கையனை எம்பெருமானது திருவடிகளில்		

* * *—[வையம்தகளியா.] தகளியாவது—நெய்க்கும் திரிக்கும் ஆதாரமாயிருக்கிற அகல். (தாளி என்று உலகவழக்கு.) பூமியானது கடிந வஸ்துவாயிருப்பதால் அதைத் தகளியாகவும், கடலானது த்ரவ வஸ்துவாயிருப்பதால் அதை நெய்யாகவும், ஸூர்யன் ப்ரகாசஸ்வரூபனாயிருப்பதால் அவனை விளக்காகவும் ரூ அருளிச்செய்கிறார். இங்கு இங்ஙனே ரூபணம் செய் கருத்துயாதெனில்; சூந்யமே தத்துவமென்றும், உலகம் ஓ வரனையுடையதல்ல என்றும் பலபடியாகப் பகரும் மதாந்தர மறுத்து விசித்திரமான பிரபஞ்சத்தை நிருமிக்கவல்ல ஞான

முதலிய குணங்களையுடைய திவ்விய மங்கள விக்ரஹத்தோடு கூடிய ஸர்வேச்வரன் உளனென்றும் அவனுக்கு அடிமை செய்கையே புருஷார்த்தமென்றும் இப்பாசுரத்தால் விளக்கப்பட்டதாகும்.

ஸூர்யன் சிறிதும் தவறாமல் உதிப்பதும் அஸ்தமிப்பதுமாக நீடூழியாய் நடந்து வருவதானது—விசித்ரசக்தி வாய்ந்த ஸர்வேச்வரனொருவனுளன் என்பதை நமக்கு நன்றாக விளக்குகின்றதன்றோ. வார்கடலின் நிலைமையும் வையத்தின் நிலைமையும் இவ்வுண்மையையே வற்புறுத்துகின்றன. கடலானது தன்னிடத்தில் பலபல ஆற்றுப் பெருக்குகள் வந்து விழுதலால் நிறைந்து வழிதலாவது, அவை வந்து விழாதகாலத்தில் வடிந்து குறைபடுதலாவது ஒன்றுமின்றியே எப்போதும் ஸமநிலைமையாகவே யிருந்துகொண்டு எல்லையை மீறாதிருப்பதும், ஐம்பதுகோடி யோஜனை தூரத்தளவும் பரந்து கடினமாயிராநின்ற இப்பூமியானது பெரிய வெள்ளத்தில் ஒரு கழற்காய் மிதப்பதுபோல மஹார்ணவ ஜலத்தில் மிதந்து கொண்டிருப்பதும் இவை தம்மைப் படைத்தவொரு முழு முதற் கடவுளின் அற்புதமான சக்திவிசேஷத்தைப் புலப்படுத்துகின்றனவன்றோ. அப்படிப்பட்ட அபாரசக்தி யுக்தனான ஒரு ஜகத்காரணபூதன் ஸித்திக்கும்போது அப்பெருமானுக்குக் கைங்கரியம் செய்யவேண்டுதல் முக்கியம்; கைங்கரியம் மாநஸிக மென்றும் வாசிகமென்றும் காயிகமென்றும் மூன்று வகைப்படும்; அவற்றுள் வாசிக கைங்கரியமான பாசுரம் பாடுதலை அடியேன் செய்கின்றேன்; இக்கைங்கரியத்தை இதுவரையில் நான் செய்யக் கூடாதபடி இடையூறாகவிருந்த ஸம்ஸாரத் துன்பத்திரள்கள் இன்றோடு ஒழிந்திடுக—என்றாராயிற்று.

முன்னடிகளின் கருத்தை ஊன்றி நோக்குமிடத்தில் இவ்வாழ்வார் அநுமாநத்தினால் ஈச்வரனை ஸாதிப்பதாக ஏற்படுகின்றது; சராசரரூபமான இந்த பிரபஞ்சம் முழுவதையும் படைத்து நடத்திக்கொண்டு போவதற்குப் பாங்கான வல்லமை வாய்ந்த ஸர்வேச்வரனொருவனுண்டு என்பதை வையம் கடல் ஸூர்யன் என்ற மூன்று பொருள்களின் நிலைமையைச் சொல்லுகிற முகத்தினால் ஸமர்த்தித்தபடியால் அநுமாநத்தாலே ஈச்வரனை ஸாதிக்கிற

தார்க்கிகர்களின் படியை அடியொற்றினராகிறார்; இதுகூடுமோ? சாரீரகமீமாம்ஸையில் சாஸ்த்ரயோநித்வாதிகரணத்தில் அநுமாநத்தால் ஈச்வரனை ஸாதிக்கலாகாதென்று மறுத்து வேதப்ரமாணமொன்றினாலேயே ஈச்வரனுடைய உண்மையை உணரவேணுமென்று ஸ்தாபித்திருப்பதற்கு மாறாக இஃது இருக்கின்றதே! என்று சிலர் சங்கிக்கக்கூடும்; வேதத்துக்கு விருத்தமாக அநுமாநங்கொண்டு ஸாதிப்பதை அங்கு மறுத்துரைத்த மாத்திரத்தினால் வேதத்துக்கு விருத்தமல்லாத அநுமாநங் கொள்வதில் பிசகுள்ளதாக நினைக்கலாகாது. இது ஸ்ரீபாஷ்யாதி ஸம்மதமுமாம். விரிப்பிற் பெருகும்.

இடராழி நீங்குகவேயென்று = இதுவரையில் எம்பெருமானைத் துதியாதிருந்ததனாலுண்டான வருத்தம் நீங்குவதற்காக என்றும், துதிக்க வொட்டாமல் பிரதிபந்தகமாயிருந்த பாவங்கள் தொலைவதற்காக என்றும், இப்பிரபந்தத்தைக் கற்று ஸம்ஸாரிகளும் துயர்தீர்ந்து வாழ்வதற்காக என்றும் மூன்றுபடியாக உரைக்கலாம். ... ... (க)

என்று கடல்கடைந்த தேவ்வுலகம் நீரேற்றது *
ஒன்று மதனை யுணரேன்நான் *—அன்று
தடைத்துடைத்துக் கண்படுத்த வாழி * இதுநீ
படைத்திடந் துண்டுமிழ்ந்த பார். (உ)

கடல் கடைந்தது	(தேவர்களுக்காகக்) கடலைக் கடைந்தது	அன்று	ஸ்ரீராமாவதார காலத்தில்
என்று	எந்த நாள்?	அடைத்து	மலைகளைக்கொண்டு திருவணைகட்டித் தூர்த்து
நீர் ஏற்றது	(மாவலி) தாரை வார்த்து தத்தஞ் செய்யப்பெற்றது		
எ உலகம்	எந்த வுலகம்?	உடைத்து	(இராவணனை முடித்துத் திரும்புங்கால் அந்தத் திருவணையை) உடைத்து
அதனை	அவற்றை		
நான் ஒன்றும் உணரேன்	நான் அடியோடு அறிகின்றிலேன்;		
அது	அந்தக் கடலானது		

கண்படுத்த	எப்போதும் பள்ளிகொள்ளு மிடமாகக் கொண்டிருக்கப் பெற்ற	இடந்து	(வராஹாவதார காலத்தில் அண்ட பித்தியில் நின்று) ஒட்டுவிடுவித் தெடுக்கப்பட்டும்
ஆழி	ஸமுத்ரமாம்;	உண்டு	(பிரளய வெள்ளம் கோத்தபோது) திருவயிற்றிலே வைத்துப் பாது காக்கப்பட்டும்
இது	(நீரேற்றுப்பெற்ற) இவ்வுலகமானது		
நீ	ஸர்வேச்வரனான உன்னாலே	உமிழ்ந்த	பின்பு வெளிப்படுத்தப் பட்டதுமான
படைத்து	ஸ்ருஷ்டிக்கப்பட்டும்	பார்	பூமியாகும்.

* * *—[என்றுகடல்கடைந்தது.] ஸர்வேச்வரனை அநுமானத்தால் ஸாதிப்பது தோன்றக் கீழ்ப்பாட்டு அருளிச் செய்யப்பட்டது; அவனை அநுமானங்கொண்டு ஸாதிக்கவேண்டிய வருத்தமில்லை; அவன் செய்தருளியிருக்கும் எல்லையற்ற அதிமாநுஷங்களான செயல்களே அவனுடைய உண்மையை ஸாதித்துக் கொடுக்கக்கூடியவை என்று வெளியிடக்கருதி, கடல் கடைந்தது உலகளந்தது முதலிய சில சேஷ்டிதங்களை அருளிச்செய்யும் முகத்தால் அவனுடைய உண்மையை மூதலிக்கின்றார்.

ஆளவந்தார் எம்பெருமானுடைய உண்மையை உணர்வதற்கு உரிய ஸாதநங்களை அருளிச் செய்யுமிடத்து "த்வாம் சீல ரூப சரிதை:" (ஸ்தோத்ரரத்நம்.) இத்யாதிகள் அருளிச் செய்ததும், அப்படியே ஆழ்வானும் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில்—"சித்ரைச்ச கைச்சிதுசிதை: பவதச் சரித்ரை:" என்றருளிச் செய்ததும் ஸ்மரிக்கத்தக்கன.

கடல்கடைந்து தேவர்களுக்குச் சாவாமருந்து எடுத்துத்தந்து அவர்களை ரக்ஷித்ததும், மாவலி பக்கல் மாணுருவாய்ச்சென்று மூவடி நீரேற்றுப்பெற்று உலகளந்து இந்திரனது துன்பத்தைத் தீர்த்தொழித்ததும் ஸ்ரீமந் நாராயணனுடைய உண்மையை விளக்க வல்லன காண்மின் என்கிறார்.

என்றுகடல்கடைந்தது? என்கிற கேள்வியும் எவ்வுலகம் நீரேற்றது? என்கிற கேள்வியும் கேள்வி கேட்பதில் நோக்குடை

முதல் திருவந்தாதி.

கடல் கடைந்தபோது தோன்றிய திரையும் நுரையும் மேல் இப்போதுதான் கடல் கடைந்ததுபோலத் தோன்றுகின்றதே!; உலகளக்கும்போது வைத்த அடிச்சுவடு மாறாமல் "வாமனன் மண்ணிது" என்னும்படி இதோ தோன்றுகின்றதே! என்று ப்ரத்யக்ஷஸமமாகக் காட்டுபவர்போலச் சொல்லுகிறபடி. கடல் கடைந்ததும் உலகளந்ததும் என்றைக்கோ நிகழ்ந்ததாயினும் மயர்வற மதிநலமருளப்பெற்ற இவ்வாழ்வாரது அகக்கண்ணுக்கு அச்சரிதைகளெல்லாம் ஸ்பஷ்டமாகத் தோற்றி விளங்குதலால் இங்ஙனே அருளிச்செய்யக் குறையில்லை யென்க.

நெடுநாளைக்கு முன்னே நடந்த செயல்கள் ஆழ்வார்க்கு இன்று ப்ரத்யக்ஷம்போல் தோற்றினாலும், 'ஐயோ! கடல்கடைந்த அக்காலத்து நாம் நேரில்கண்டு மங்களாசாஸனம் செய்யப் பெறவில்லையே!, உலகளந்த அக்காலத்திலே காடும் மேடும் தீண்டின திருவடிகளின் கீழே நம்முடைய தலையை மடுக்கப் பெற்றிலோமே!' என்கிற வருத்தம் தோன்றி அவ்விழவு விளங்க ஒன்றுமதனையுணரேன்நான் என்கிறார்; அச்செயல்கள் நடந்தகாலத்திலே அவற்றை நான் அநுபவியா தொழிந்தேனே! என்றவாறு. நம்மாழ்வார் * மத்துறுகடை வெண்ணெய்களவினிலுரலிடையாப்புண்ட சரிதையை அநுஸந்தித்ததும் 1. "எத்திறம்!" என்று மோஹித்துக் கிடந்ததுபோல் இவரும் முதலடியில் அநுஸந்தித்த செயல்களிலே மோஹித்து "ஒன்றுமதனையுணரேன் நான்" என்கிறார் என்றுமுரைப்பர்.

முதலடியிலே கடல் கடைந்ததும் உலகளந்ததும் அநுஸந்திக்கவே அக்கடலிலும் அவ்வுலகத்திலும் எம்பெருமானுக்குள்ள ஸம்பந்தங்கள் திருவுள்ளத்திலே ஞாபகத்திற்குவர, அவற்றைப் பின்னடிகளிற் பேசி அநுபவிக்கிறார். கடலில் எம்பெருமான் செய்த காரியங்களை மூன்றாமடியிலும் உலகுக்காக அவன் செய்த காரியங்களை நான்காமடியிலும் அருளிச் செய்கிறார்.

இராவண ஸம்ஹாரம் செய்து பிராட்டியை மீட்டுக் கொணர்வதற்காக இலங்கைக் கெழுந்தருளும்போது 2. "மறிகடல் நெறிபட மலையால் அரிகுலம் பணிகொண்டு அலைகடலடைத்தான்"

1. திருவாய்மொழி 1-3-1. 2. பெரிய திருமொழி 5—7—7.

என்றபடி ஸேதுபந்தனம் பண்ணினதும், பிராட்டியைக் கைக் கொண்டு மீண்டெழுந்தருளும்போது அதனை உடைத்ததும், 1. "வெள்ளை வெள்ளத்தின்மேலொரு பாம்பை மெத்தையாக விரித்து அதன்மேலே கள்ள நித்திரை கொள்கின்ற" என்றபடி * தன் தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பல பரப்பிப் பள்ளி கொண்டிருத்தலுமாகிய கடலிலே செய்த காரியங்கள் அநுஸந்திக் கப்பட்டன.

ஆதியில் படைத்ததும், வராஹாவதாரத்தில் ஹிரண்யாக்ஷனைக் கொன்று இடந்ததும், பிரளயம் வந்தபோது திருவயிற்றினுள்ளே வைத்திட்டதும், பிறகு வெளிப்படுத்தியதுமாகிய இவை உலகுக்காகச் செய்த செயல்களாக அநுஸந்திக்கப்பட்டன.

இப்படிப்பட்ட அதிமாநுஷ சேஷ்டிதங்களைச் செய்தருளின ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருளென்றும், அவனுடைய உண்மையை இச்செயல்களே ஸாதித்துத் தரவல்லன என்றும் இப்பாசுரத்தால் அறிவிக்கப்பட்டதாயிற்று. ... ... (உ)

பாரளவு மோரடிவைத் தோரடியும் பாருடுத்த *
நீரளவும் செல்ல நிமிர்ந்ததே *—சூருருவின்
பேயளவு கண்ட பெருமான்! அறிகிலேன் *
நீயளவு கண்ட நெறி. (௩)

ஓர் அடி	ஒரு திருவடியை	செல்ல	செல்லும்படி
பார் அளவும் வைத்து	பூமிப்பரப்பு உள்ள வரையிலும் போரும்படி வைக்க	நிமிர்ந்தது	ஓங்கிற்று;
ஓர் அடியும்	மற்றொரு திருவடியும்	சூர் உருவின் பேய்	தெய்வமகளான யசோதையின் வடிவுகொண்டு வந்த பூதனையை
பார் உடுத்த	இந்த அண்ட கடாஹத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கிற	அளவுகண்ட	முடித்த
நீர் அளவும்	ஆவரண ஜலம் வரையில்	பெருமான்	ஸ்வாமியே!
		நீ அளவு கண்ட நெறி	நீ உலகளந்த விதத்தை
		அறிகிலேன்	அளவிட்டுக் காணவல்ல அறிவுடையேனல்லேன்.

1. பெரியாழ்வார் திருமொழி 5—1—7.

* * *—[பாரளவும்.] எம்பெருமானுடைய திவ்ய சேஷ்டிதங்கள் பலவற்றினுள்ளும் உலகளந்த சரிதையிலே நம் ஆழ்வார்கள் அதிகமாக ஈடுபடுவர்கள் ; விசேஷித்து முதலாழ்வார்கள் மிகவு மதிகமாக ஈடுபடுவார்கள். கீழ்ப்பாட்டில் "எவ்வுலகம் நீறேற்றது" என்று அந்தச் செயலைச் சிறிது ப்ரஸ்தாவித்த மாத்திரத்திலே அதிலே திருவுள்ளம் மிகவும் அவகாஹிக்கப்பெற்று அந்த வரலாற்றைப்பேசி அநுபவிக்கத் தொடங்கி நிலைகொள்ள மாட்டாமல் நின்று தளும்புகின்றார்.

சூருருவிற்பேயளவுகண்டபெருமான் என்பது ஸம்போதநம் (விளி) ; தமது வல்லமையால் எம்பெருமானை அளவிட்டுக் காண வேணுமென்று நினைப்பவர்கள் பூதனை பட்டபாடு படுவர்கள் என்பது தோன்ற இந்த ஸம்போதநமிடுகின்றார். உன்னை முடிப்பதாகவந்த பூதனையை முடித்த பிரானே! நீ மாவலிபக்கல் மூவடி மண் நீரேற்றுப் பெற்று ஒரு திருவடியைப் பூமிப்பரப்படங்கலும் மலரவைத்து, மற்றொரு திருவடியை மேலில் அண்டத்தைச் சூழ்ந்த ஆவரணஜலத்தளவும் செல்லவைத்து உலகளந்த விதத்தை யானறிகின்றிலேனென்கிறார்.

அளப்பதாவது—அளக்கிறவன் தான் நின்றவிடந்தவிர மற்றோரிடத்தில் மாறிக்காலிடுதல் என்று உலகத்திலே நாம் காண்கிறோம். ஓரிடத்திலேயே நின்றுகொண்டிருப்பதை அளப்பதாக யாரும் சொல்லமாட்டார்கள் ; ஆகவே, எம்பெருமான் உலகளந்தான் என்று பலரும் சொல்லுகிறார்களே இது எப்படி பொருந்தும்? ஒரு திருவடிக்குக் கீழுலகமும் மற்றொரு திருவடிக்கு மேலுலகமும் சரிசமமாக இடமாகப் போந்துவிட்டபடியால் மாறி மாறி அடியிடுவதற்கு அவகாசமேயில்லையாதலால் அளந்தானென்பது எங்ஙனே சேரும்? என்று ஒரு சமத்காரமாகப் பேசுவார்போல "நீஅளவுகண்ட நெறி அறிகிலேன்" என்கிறார். இதனையே நம்மாழ்வார் திருவிருத்தத்தில்—"கழல்தல மொன்றே நில முழுதாயிற்று ஒருகழல் போய், நிழல்தர எல்லா விசும்பும் நிறைந்தது,......அழறலர்தாமரைக் கண்ணன் என்னோ விங்களக்கின்றதே?" (58.) என்ற பாசுரத்தினால் விரித்துரைத்தாரென்க. அவ்விடத்து வியாக்கியானத்திலே—"அளக்கைக்கு ஒரு அவகா

சம் காண்கிறிலோம்; நின்ற நிலையிலே நின்றுரை அளந்தாரென்ன வொண்ணுதிறே; அடிமாறியிடிலிறே அளந்ததாவது; இவனிங்கு அளந்தானாக ஒன்றும் காண்கிறிலோமீ!" என்றுள்ள பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்திகளும் இங்கு அநுஸந்திக்கத்தக்கன.

"நீ அளவுகண்ட நெறி அறிகிலேன்" என்பதற்கு மற்றும் சிலவகையாகவும் பொருள் கூறுவர். அளவுகாண்கையாவது அளக்கை.

[சூருருவிற்பேயளவுகண்ட.] "சூருமணங்கும் தெய்வப் பெண் பெயர்" என்பது நிகண்டு. பூதனை யென்னும் பேய்மகள் தெய்வப் பெண்ணுருவாக வந்தாளோ வென்னில்; கண்ணபிரானுக்குத் தாயாகிய யசோதைபோல வடிவெடுத்து வந்தாளாகையாலும், அவ் யசோதை 1. "தெய்வநங்கை" என்று குலசேகரப் பெருமாளால் கூறப்பட்டிருக்கையாலும் சூருருவின்பேய் என்னக் குறையில்லை யென்க. அன்றி, பதினெண் தேவகணத்தில் பேயும் ஒன்றுகக் கூறப் பட்டிருத்தல் பற்றியும் "சூருருவின் பேய்" என்றாராகவுமாம். பேயளவு காண்கையாவது—அவளுடைய ஆயுளின் அளவைக் கண்டுவிடுதல்; கொல்லுதலைக் கூறியவாறு. கண்ணபிரானைக் கொல்லுமாறு கம்ஸனுலேவப்பட்ட பூதனை யென்னும் பேய்ச்சி தன் முலையிலே விஷத்தைத் தடவிக்கொண்டு யசோதைபோல வடிவெடுத்துத் திருவாய்ப்பாடிக்கு வந்து, தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ண சிசுவையெடுத்து நஞ்சுதீற்றிய முலையை உண்ணக்கொடுக்க, பேயென்றறிந்த பெருமான் முலைப்பாலோடு அவளுயிரையும் உறிஞ்சி உண்டிட்டனனென்ற வரலாறு ப்ரஸித்தம். ... ... (௩)

நெறிவாசல் தானேயாய் நின்றுனை * ஐந்து
பொறிவாசல் போர்க்கதவம் சாத்தி *—அறிவானும்
ஆலமர நீழ லறம்நால்வர்க் கன்றுரைத்த *
ஆலமமர் கண்டத் தரன். (௪)

1. பெருமாள் திருமொழி. 7—5.

அன்று — முன்பொரு காலத்தில்,

ஆலமரம் நீழல் — ஆலமரத்தின் நிழலிலே

(இருந்துகொண்டு)

நால்வர்க்கு — அகஸ்தியர், புலஸ்தியர், தக்ஷர், மார்க்கண்டேயர் என்கிற நான்கு சிஷ்யர்களுக்கு

அறம் உரைத்த — தருமோபதேசம் செய்தவனும்

ஆலம் அமர் கண்டத்து — விஷத்தைக் கழுத்தளவிலே அடக்கிக்கொண்டுள்ளவனுமான

அரன் — சிவன்

ஐந்து பொறி வாசல் — செவி வாய் கண் மூக்கு உடல் என்கிற ஐந்து இந்திரியங்கள் செல்லும் வழியில்

போர் கதவம் சார்த்தி — வலிய கதவுகளையிட்டு அடைத்து [இந்திரியங்கள் பட்டிமேய வொண்ணுதபடி அவற்றை வென்று]

நெறி வாசல் தானே ஆய் நின்றானை — உபாயமும் உபேயமும் தானேயாயிருக்கிற எம்பெருமானை

அறிவான் ஆம் — அறிந்துவிட்டதாகச் செருக்குற்றிருக்கிறானே! (இஃது என்ன அறிவுகேடு!.)

* * *—[நெறிவாசல்.] எம்பெருமானுடைய இன்னருளால் ஞான விகாஸம் பெற்ற நானே அவனுடைய ஸ்வரூபம் ரூபம் குணம் சேஷ்டிதம் முதலியவற்றை நன்கு அறியமாட்டாமல், கடலிலே நீஞ்சிக் கரையேறமாட்டாதே கிடந்து அலைவாரைப்போலே அலையா நிற்க, தன் முயற்சியால் சிறிது ஞானம்பெற்ற சிவன் அவற்றை எங்ஙனே அறியவல்லான்? எனக்குத் தெரிந்தவற்றில் ஏகதேசமும் அறியமாட்டாத அவன் தன்னை ஸர்வஜ்ஞனுக நினைத்துக்கொண்டு பகவத் விஷயத்தைத் தான் உபதேசிக்கவல்லவன் போலச் சில சிஷ்யர்களைச் சேர்த்துக்கொண்டு ஆலமரத்தடியிலே உட்கார்ந்துகொண்டு ஆசார்யபதம் வஹித்து எம்பெருமானது தன்மைகளை உபதேசிப்பதாக இழிந்துவிட்டானே! இஃது என்ன அறிவுகேடு! என்று ருத்ரனைப் பரிஹஸித்துப் பேசுகிறார். "அரன் அறிவானும்" என்ற சொல்லின் காம்பீர்யத்தை நோக்குமின். நானே அறியமாட்டாதிருக்க அவனே அறியப்போகிறான்; தான்

தெரிந்துகொள்ளவும் ப்ரஸக்தியில்லாதிருக்கப் பிறர்க்குப் போதகாசிரியனாக வீற்றிருந்தானே! என்று கர்ஹிக்கிறபடி.

"அரன், நெறிவாசல் தானேயாய் நின்றானை அறிவானும்" என்று அந்வயிக்க. நெறி என்று வழிக்குப்பேராகையாலே பலனைப் பெறுவிக்கும் வழியாகிய உபாயத்தைச் சொன்னபடி. வாசல் என்று புகுமிடத்துக்குப் பேராகையாலே இறுதியில் அடையத்தக்க பலனைச் சொல்லுகிறது; ஆகவே, உபாயமும் உபேயமும் தானேயாயிருக்கிற எம்பெருமானை என்றதாயிற்று. அன்றி, நெறி—ஸ்வரூபத்துக்கு ஏற்ற, வாசல்—உபாயம், தானேயாய் நிற்பவனை என்று முரைக்கலாம்.

சிவன் ஒரு காலத்திலே அகஸ்தியர் புலஸ்தியர் தக்ஷர் மார்க்கண்டேயர் என்கிற நான்கு முனிவர்களைச் சிஷ்யர்களாக அமைத்துக் கொண்டு ஆலமரத்தடியிலே ஸ்ரீமந்நாராயண தத்வோபதேசம் செய்தனனென்று நூல்கள் கூறும்; திருமழிசையாழ்வாரும் நான்முகன் திருவந்தாதியிலே—"ஆலநிழற்கீழ் அறநெறியை நால்வர்க்கு, மேலையுகத்துரைத்தான் மெய்த்தவத்தோன்—ஞாலம், அளந்தானை ஆழிக்கிடந்தானை ஆல்மேல், வளர்ந்தானைத் தான் வணங்குமாறு" (17.) என்ற பாசுரத்தினால் இக்கதையை அநுஸந்தித்தமை காண்க.

$ப்ரஹ்மஜ்ஞாநமில்லாத பாலாகி யென்பவன் ப்ரஹ்மஜ்ஞாநமுடையனான அஜாதசத்ரு வென்பவனுக்கு ப்ரஹ்மஜ்ஞாநத்தை உபதேசிக்கத் தொடங்கியதுபோலும் சிவனது உபதேசமும் என்ற இழிவுதோன்ற "அறிவானும்" என்று பழித்துக் கூறுகின்றார்.

["ஐந்து பொறிவாசல் போர்க்கதவம் சார்த்தி."] ஒரு வாசலை அடைக்கத் தொடங்கினால் மற்றொரு வாசற் கதவு திறந்து கொள்ளும்படியாயுள்ள பஞ்சேந்திரியங்களாகிற யந்த்ரம் போன்ற ஐந்து வாசல்களையும் அடைத்தாலன்றி பகவத்தத்துவத்தை உபதேசிக்க வொண்ணாதென்பதும், அந்த வாசற் கதவுகளை அடைப்பது மிகவும் அருமை என்பதும் இவ்வாக்கியத்தில் தோன்றும். ஐந்து பொறி வாசற்கதவுகளை அடைக்கமாட்டாத ருத்ரன் எங்ஙனே

$ இக்கதை ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் நான்காம் அத்யாயத்திலும், கௌஷீதகி உபநிஷத்தில் மூன்றாம் அத்யாயத்திலும் காணத்தகும்.

அறிவான்? என்றவாறு. போர்க்கதவம் என்றது—அடைக்கத் தொடங்குகிறவர்களின் முகத்திலே அறைகிற கதவு என்றபடியாய், எப்படிப்பட்டவர்களையும் விஷயப்ரவணராக்கவல்ல இந்திரியங்களின் வன்மையைக் கூறியவாறு.

எம்பெருமான் திருப்பாற்கடலைக் கடையும்போது அதினின்றும் தோன்றிய விஷத்தை ஸ்ரீமந்நாராயணனுடைய கட்டளையாலே சிவன் தான் வாங்கி உண்ண அதனை யறிந்த பார்வதி அஞ்சி அவ்விஷம் கழுத்துக்குக்கீழே இறங்காதபடி அவனது கழுத்தை இறுகப்பிடித்துக்கொள்ள விஷம் கழுத்தளவிலே நின்றுவிட்டது; அதனால் சிவன் கறுத்த கழுத்தை யுடையனாய் காலகண்டனென்று பேர் பெற்றனன் என்ற வரலாறு தோன்ற "ஆலமமர்கண்டத்தரன்" என்றார். ஆலம்—விஷம்; ஹாலாஹலமென்ற வடசொற்சிதைவு என்பர். சிவன் தனது தமோகுணத்துக்குத் தக்க செயலைச் செய்யவல்லவனேயன்றி ஸாத்விகர் செய்யும் செயல் அவனால் செய்யமுடியாதென்பதும் இவ்விசேஷணத்தின் கருத்தாம்.

ஹரஃ என்ற வடசொல் அரனெனத் திரிந்தது; ஸம்ஹாரகர்த்தா என்கை. ... ... (ச)

அரன் நாரணன்நாமம் ஆன்விடை புள்ளூர்தி *
உரைநூல் மறையுறையுங் கோயில் *—வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவேல் நேமி *
உருவமெரி கார்மேனி யொன்று. (ரு)

மம்	ஒருவனுடைய பெயர்	நாரணன்	(ஸர்வவ்யாபகனென்றும் ஸர்வரக்ஷகனென்றும் காட்டுகிற) நாராயணனென்பது;
அரன்	எல்லாவற்றையும் அழிப்பதையே தொழிலாக வுடையவனென்று காட்டுகிற ஹரனென்பது;	ஊர்தி	ஒருவனுடைய வாஹனம்
	(மற்றொரு மூர்த்தியின் திருநாமமோ வெனனில்)	ஆன்விடை	(மூடத்தனத்துக்கு உதாரணமாகக் காட்டப்படுகிற) எருதாம்;

(மற்றொரு மூர்த்தியின் வாஹனமோ வென்னில்)

புள் — (வேதமூர்த்தியான) கருடப் பறவையாகும்;

உரை — ஒருவனைப்பற்றிச் சொல்லுகிற பிரமாணம்

நூல் — மனிசரால் ஆக்கப்பட்ட ஆகமம்;

(மற்றொரு மூர்த்தியைப் பற்றிச் சொல்லுகிற பிரமாணமோ வென்னில்)

மறை — (ஸ்வயம் வ்யக்தமான) வேதமாகும்;

உறையும் கோயில் — ஒருவனுடைய வாஸஸ்தானம்

வரை — (கடினத்தன்மை யுள்ள) கைலாஸ மலையாம்;

(மற்றொரு மூர்த்தியின் இருப்பிடமோ வென்னில்)

நீர் — (அவனுடைய நீர்மைக்குத் தகுதியான) திருப்பாற் கடலாம்;

கருமம் — ஒருவனுடைய தொழில்

அழிப்பு — (கல்நெஞ்சனென்று சொல்லும் படியான) ஸம்ஹாரத் தொழிலாம்;

(மற்றொரு மூர்த்தியின் காரியமோ வென்னில்)

அளிப்பு — (இன்னருளுக் குரிய) ரக்ஷணத் தொழிலாம்;

கையது — ஒருவனுடைய கையிலுள்ள ஆயுதம்

வேல் — (கொலைத் தொழிலுக்கு ஏற்ற) சூலாயுதம்;

(மற்றொரு மூர்த்தியின் ஆயுதமோ வென்னில்)

நேமி — அருளார் திருச்சக்கரம்;

உருவம் — ஒருவனுடைய வடிவம்

எரி — (கண்கொண்டு காண வொண்ணாதபடி) காலாக்நி போன்றதாம்;

(மற்றொரு மூர்த்தியின் திருமேனியோ வென்னில்)

கார் — (கண்டபோதே தாபங்களெல்லாம் தீரும்படியான) காளமேக வுருவாம்;

ஒன்று — சிவனாகிய ஒருவன்

மேனி — (ஸ்ரீமந் நாராயணனுக்கு) சரீர பூதன்;

[ஸ்ரீமந் நாராயணமூர்த்தியோ அந்த சிவனுட்பட எல்லாவற்றையும் சரீரமாக வுடையவனென்பது விசித்தம்.]

* * *—[அரன்நாரணன்நாமம்.] கீழ்ப்பாட்டில் சிவனுடைய ஒரு செய்தியை எடுத்துப்பேசின ஆழ்வார் "அரன் அறிவானும்" [சிவனுக்கு என்ன தெரியும்?] என்று இழித்துப் பேசவே அதனைக்கேட்ட சிலர் "நாடடங்கலும் ஈச்வரனென்று கொண்டாடப்படுகிற அச்சிவபெருமானை இப்படி நீர் ஏசிப் பேசலாமோ? அவன் கூற்கீழே பலரும் தலையை மடுத்து ஏத்தியிறைஞ்சக் காண்கிறோமே, அவன் பரதெய்வமன்றோ?" என்று சொல்ல, அது கேட்ட ஆழ்வார்—ஸ்ரீமந்நாராயணனே பரதேவதையென்பதும் ருத்ரன் அங்ஙனல்லன் என்பதும் இருவருடையவும் நாமம் ரூபம் வாஹனம் தொழில் முதலியவற்றால் நன்குவிளங்கக் காணலாமென்று அவற்றை யெடுத்துரைத்துக் காட்டுகிறாரிதில்.

இருவருடைய பெயரையும் நோக்குமிடத்து. சிவன் பெயர் அரனென்றும் விஷ்ணுவின் பெயர் நாராயணனென்றும் ப்ரஸித்தமாகவுள்ளன; அரனென்றால் ஹரிப்பவன்—எல்லாவற்றையும் ஒழிப்பவன் என்று பொருள்படும்; நாராயணனென்றால், நாரங்களாகிய நித்யவஸ்துக்களெல்லாவற்றிலும் உறைந்திருந்து அவற்றை நோக்குமவன் என்று பொருள்படும்; ஆகவே, ஸர்வரக்ஷகன் பரதேவதையாயிருக்கத் தகுமோ அன்றி ஸர்வபக்ஷகன் பரதேவதையாயிருக்கத் தகுமோ என்பதை நீங்களே ஆராயலாம் என்றாராயிற்று.

இப்படியே இருவருடைய வாஹனங்களையும் நோக்குங்கால், 'அடா மாடே!' என்று மூர்க்கரை நிந்திப்பதற்கு த்ருஷ்டாந்தமாகக் கொள்ளப்படுகிற எருதை வாஹனமாகவுடையவன் அரன்; 1. ஸுபர்ணோஸி கருத்மாந்" என்ற வேதவாக்கியத்தாலும் 2. "வேதாத்மா விஹகேச்வரஃ" என்ற ஆளவந்தார் ஸ்ரீ ஸூக்தியாலும், 3. "சிரஞ்சேதனன் விழிதேகம் சிறைபின் சினைபதம் சந்தரம் தோள்களுரு வடிவம் பெயரெசுர்சாமமுமாம்......அரங்கர்த மூர்திச் சுவணனுக்கே." என்ற ஐயங்கார் பாசுரத்தாலும் வேதஸ்வரூபியாகப் பிரதிபாதிக்கப்பட்ட பெரிய திருவடி யென்னும் கருடாழ்வானை வாஹனமாகவுடையவன் ஸ்ரீமந்நாராயணன்.

---

1. கிருஷ்ணயஜுர்வேதம் 4வது காண்டம், முதல் ப்ரச்நம்—43.
2. சதுச் ச்லோகீ (காந்தா ஸ்தோத்ரம்)—1. 3. திருவரங்கத்துமாலை—88.

இனி இருவரையும்பற்றிச் சொல்லுகிற பிரமாணங்களை ஆராய்ந்தால், வேதவிருத்தமான பொருள்களைச் சொல்லுமதாயும் ராஜஸதாமஸ புருஷர்களால் செய்யப்பட்டதாயுமுள்ள சைவாகமம் அரனைப்பற்றிச் சொல்லுவது; ஒருவராலும் செய்யப்படாமல் அநாதியாய் எவ்வகையான தோஷமுமற்று உண்மைப் பொருளையே உரைக்கின்ற வேதம் ஸ்ரீமந்நாராயணனைப் பிரதிபாதிக்கும் பிரமாணம். இனி இருவருடைய இருப்பிடங்களையும் நோக்குங்கால், தனது நெஞ்சின் கடினத் தன்மைக்கு ஏற்றவாறு கடினமான கைலாசமலை அரனுக்கு உறைவிடம்; தனது திருவுள்ள நீர்மைக்குத் தக்கபடி நீர்மையே வடிவான திருப்பாற்கடல் ஸ்ரீமந் நாராயணனுக்கு உறைவிடம். இதற்குத் தக்கபடி அழித்தல் தொழில் அரனது; காத்தல் தொழில் நாராயணனது. அதற்குத் தக்கபடி கொலைத் தொழிலுக்கு ஏற்ற முத்தலைச் சூலம் அரனது, * அருளார் திருச்சக்கர மென்றே புகழ்பெற்று உலகங்களையெல்லாம் பாதுகாக்குமாறுள்ள சக்கரப்படை நாராயணனது.

இவை யெல்லாம் ஒரு புறமிருக்கட்டும்; "ரூபமேவாஸ்ய ஏதந்மஹிமாநம் வ்யாசஷ்டே" [உருவமே வ்யக்தியின் பெருமையைத் தெரிவிக்கும்] என்ற வேத வாக்கியத்தின்படி இருவருடையவும் உருவத்தை நோக்குவோமாயின், கண்ணெடுத்துப் பார்க்க முடியாதபடி காலாக்நிபோலேயிருக்கும் அரனுருவம்; கண்டார் கண்குளிரும்படியான காளமேகம்போலே யிருக்கும் செல்வநாரணன் திருவுருவம். "ஒன்று செந்தீ ஒன்று மா கடலுருவம்" என்றார் திருமங்கையாழ்வாரும் திருநெடுந்தாண்டகத்திலே.

இப்படி ஒன்றுக்கொன்று மாறுபட்டுக் கிடக்கிற இரண்டு பொருள்களில் "அங்காந்யந்யா தேவதா:" இத்யாதி உபநிஷத் வாக்கியங்களின்படி அரன் நாராயணனுக்கு அங்கமாயும் நாராயணன் அங்கியாயு மிருப்பர்கள். சரீரி தலைமையானதோ? சரீரம் தலைமையானதோ? ஆராய்ந்து சொல்லுங்கள் என்றவாறு.

"மேனி ஒன்று" என்று அரனுடைய சரீரத் தன்மை சொன்னதுபோல நாராயணனுடைய சரீரித் தன்மை மூலத்தில் சொல்லப்படவில்லையாயினும், ஒன்று சரீர மென்றால் மற்றொன்று சரீரி யென்பது தன்னடையே விளங்குமிறே. அந்தர்யாமிப்ராஹ்மண

மென்னும் வேதப்பகுதியில் ஸ்ரீமந்நாராயணனே ஸர்வ சரீரி யென்பது பன்னியுரைக்கப்பட்டுள்ளமை காண்க.

"உருவமெரி கார்மேனியொன்று" என்பதை இரண்டு வாக்கியமாகக் கொள்ளுத லின்றியே ஏகவாக்கியமாகவே கொண்டு, இருவருடையவும் உருவத்தைப் பார்த்தால், ஒன்று எரிமேனி, மற்றொன்று கார்மேனி என்பதாக உரைத்தலும் ஒக்கும் ... (ரு)

ஒன்று மறந்தறியே னோதநீர்வண்ணனைநான் *
இன்று மறப்பனோ வேழைகாள் *—அன்று
கருவரங்கத் துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்க மேயான் திசை. (சு)

அன்று	அறிவு நடையாடுகைக்கு யோக்யதை யில்லாத காலத்திலே
கரு அரங்கத்துள் கிடந்து	கர்ப்பப்பையாகிற ஸ்தானத்திலே இருந்துகொண்டு,
திருஅரங்கம் மேயான்	ஸ்ரீரங்கத்திலே வந்து பள்ளி கொண்டிராநின்ற பெரிய பெருமாளுடைய
திசை	ஸ்வபாவங்களை யெல்லாம்
கண்டேன்	ஸாக்ஷாத் கரித்தவனாய்
கை தொழுதேன்	அஞ்ஜலியும் செய்தவனாகிய நான்
ஓதம் நீர் வண்ணனை	வெள்ளம்பரந்த ஸமுத்ரஜலம் போலே குளிர்ந்த வடிவழகுள்ள அப்பெருமானை
ஒன்றும் மறந்து அறியேன்	க்ஷணகாலமும் மறந்தறிய மாட்டேன்;
ஏழைகாள்	(விஷயாந்தரங்களை விரும்பித் திரிகிற) அறிவு கேடர்களே!
நான்	(அவனை மறக்கக்கூடிய கர்ப்பஸ்தானத்தி லிருக்கச் செய்தேயும் மறவாதிருந்த) நான்.
இன்று	(மறக்கமுடியாதபடி ஞானவிகாஸம் பெற்ற) இக்காலத்திலே
மறப்பனோ	எப்படி மறப்பேன் [மறக்கவே மாட்டேன்.]

* [ஒன்றுமறந்தறியேன்.] கீழ் நான்காம் பாட்டில் “ அரன் அறிவானும்” என்று சிவபிரானை மாத்திரம் இழித்துக் கூறி விட்டீரே; அவனுக்கு பகவத் விஷயமே தெரியா தென்றும், தெரிந்தவன்போலப் பாவித்து சிஷ்யர்களுக்கு உபதேசிக்கவும் தொடங்கி விட்டானே யென்று ஏசியும் பேசினீரே; அவனைக் காட்டிலும் நீர் பகவத் விஷயஜ்ஞானத்தில் சிறந்தவரோ? நீர் தாம் எம்பெருமானை யறிந்து பிறர்க்கு உபதேசிக்க வல்லீரோ? பிரபந்த முகத்தால் உணர்த்தத் தொடங்கிவிட்டீரே, இஃது எங்ஙனே? என்று ஆழ்வாரை நோக்கி ஒரு கேள்வி பிறக்க, ஆழ்வார் அதற்கு உத்தரம் அருளிச் செய்கிறதுபோலே யிருக்கிறது இப்பாட்டு. அந்த அரனுக்கும் எனக்கும் எவ்வளவோ வாசியுண்டு; அவன் ஸத்வ குணம் தலையெடுத்தபோது எம்பெருமானது திருவருளாலன்றி ஸ்வப்ரயத்நத்தாலே அப்பெருமானது ஸ்வரூபஸ்வபாவங்களைச் சிறிது அறிந்து பரமஸாத்விகன்போல இருப்பன்; அடுத்த க்ஷணத்திலேயே ரஜோ குணமும் தமோ குணமும் தலையெடுக்கப் பெற்று ‘என்னைக் காட்டிலும் வேறொரு ஈச்வரன் உண்டோ? நானே ஸர்வேச்வரன்’ என்று செருக்குக் கொள்வன்; அவனைப் போலவோ நான்?; நான் கர்ப்பவாஸம் செய்யும்போதே பிடித்து அப்பெருமானால் நிர்ஹேதுகமாகக் கடாக்ஷிக்கப் பெற்று, தன்னுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை யெல்லாம் அவன்தானே காட்டக் கண்டு, “ ஜாயமாநம் ஹி புருஷம்யம் பச்யேத் மதுஸூதநஃ- ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஃ ஸ வை மோக்ஷார்த்த சிந்தகஃ” =[கர்ப்பத்திலேயே எம்பெருமான் எவனைக் கடாக்ஷித்தருள்வனோ அவனே ஸாத்விகன்; அவனே முமுக்ஷுவாவான்] என்கிறபடியே சுத்த ஸாத்விகனாய் அப்பெருமானுடைய திருக்கல்யாண குணம் முதலியவற்றை ஸ்வயம் அநுபவிப்பதும் பிறர்க்கு எடுத்து உபதேசிப்பதுமாக இவற்றையே காலக்ஷேபமாகக் கொண்டிருந்தவன்; பெரும்பாலோர் பகவானை மறந்திருக்கும்படியான கர்ப்பவாஸ காலத்திலுங்கூட அவனை மறவாது வாழ்த்திக் கொண்டிருந்த நான் இனி ஒருகாலாகிலும் மறக்க வழியுண்டோ? அரனுக்குப்போலே எனக்கும் முக்குணங்களும் மாறி மாறி வருமோ? ஸத்வ குணகார்யமே நிலை நின்றிருக்கப் பெற்ற வெனக்கு அவனை உணர்தலும் உணர்ந்த

வற்றைப் பிறர்க்கு உபதேசித்தலும் உசிதமே யன்றோ என்றுரா யிற்று.

ஓதநீர்வண்ணனை என்ற சொல்லாற்றலால்—அவனுடைய வடிவழகு நெஞ்சிலே ஊன்றப் பெற்றவர்கட்கு அவனை மறப்பது ஒருநாளும் ஸம்பாவிதமல்ல என்பது பெறப்படும். கர்ப்பவாஸ காலத்தில் வந்து ஸேவை ஸாதித்தது மாத்திரமே யல்லாமல் எப்போதும் கடாக்ஷித்து விஷயீகரிப்பதற்காகவே திருவரங்கம் முதலான திருப்பதிகளிலே ஸந்நிஹிதனாயிரா நின்றானென்பது தோன்றத் திருவரங்கமேயான் என்கிறார். மேயான்—மேவியிருப்பவன், திருவுள்ளமுவந்து எழுந்தருளி யிருப்பவன்.

இப்பாட்டின் முடிவிலுள்ள திசை என்னும் பதத்திற்கு 'திக்கு' என்று பொருளாயினும் 'தன்மை' என்னும் பொருளிலே அச்சொல் இங்குப் பிரயோகிக்கப்பட்டது. இப்பிரயோகம் வடநூற்களிலே விசேஷமாக வுண்டு.

இதில் மூன்றாமடியில் ஒரு சங்கை பிறக்கும்; அதாவது—பொய்கையிலே ஒரு செங்கமலப் பூவிலே திருவவதரித்ததனால் அயோநிஜராகிய இவ்வாழ்வார்க்கு கர்ப்பவாஸமென்பது கிடையாதே; அப்படி யிருக்க, "கருவரங்கத்துள் கிடந்து" என்று இவர்தாம் எங்ஙனே அருளிச் செய்கிறார் என்று; இதற்கு உத்தரமாவது—"கருவரங்கத்துள் கிடந்து" என்றவிதனால், * தீண்டா வழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறி தசையுமாய் வேண்டா நாற்றம்மிக்கிருக்கிற கர்ப்பத்தும்பையில் நின்றும் ஆழ்வார் பிறந்தாரென்று கொள்ளவேண்டிய அவசியம் யாதுமில்லை; எவ்விடத்தில் நின்று அவதரித்தாரோ அவ்விடமே கர்ப்பஸ்தாநமாகும்; இவ்வாழ்வாருடைய வாழித் திருநாமத்தில் "வனசமலர்க் கருவதனில் வந்தமைந்தான் வாழியே" என்றிருப்பதும் இவ்வர்த்தத்தை வற்புறுத்தும். 'நான் இவ்விருள் தருமா ஞாலத்தில் வந்து தோன்றுவதற்கு முன்னமே எம்பெருமானுடைய கடாக்ஷம் பெற்றவன்.' என்று சொல்லுவதே இங்கு விவக்ஷிதம். "அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன்" என்றாற்போலுமாம்.

"கருவரங்கத்துள்" என்றவிடத்து அரங்கம் என்னுஞ் சொல் ரங்கம் என்ற வடசொல்லின் விகாரம்; அச்சொல்—நட

னம் செய்யுமிடம், போர் செய்யுமிடம் என்று சிறப்பிடப் பொருளதாயினும் இங்கே 'இடம்' என்னும் பொதுப் பொருளிலே நிற்கிறது. ... ... (௬)

திசையும் திசையுறு தெய்வமும் * தெய்வத்
திசையும் கருமங்க ளெல்லாம் *—அசைவில்சீர்க்
கண்ணன் நெடுமால், கடல்கடைந்த * காரோத
வண்ணன் படைத்த மயக்கு. (௭)

திசையும்	திக்குக்களோடு கூடிய உலகங்களும்	நெடு மால்	மிகப் பெருமையையுடையவனாய்
திசை உறு தெய்வமும்	அந்தந்த திசைகளிலே வாழும் தேவதைகளும்	கடல் கடைந்த	(தன் பெருமையைப் பாராது சரணாகதர்களுக்காக உடம்புநோவக்) கடல் கடைந்தவனாய்
தெய்வத்து இசையும் கருமங்கள்	அந்தந்த தேவதைகளுக்கு ஏற்ற (ஸ்ருஷ்டி முதலிய) வியாபாரங்களும்	கார் ஓதம் வண்ணன்	மேகம் போலவும் கடல் போலவும் குளிர்ந்த வடிவையுடையவனான எம்பெருமான்
எல்லாம்	ஆகிய இவையெல்லாம்,	படைத்த	(தன்னிடம் வந்து பணியமாட்டாதவர்களை அகற்றுகைக்காக) உண்டாக்கிவைத்த
அசைவு இல் சீர்	கேடில்லாத [நித்யமான] குணங்களையுடைய	மயக்கு	அறிவை மயக்கும் பொருள்களாம்.
கண்ணன	ஸ்ரீகிருஷ்ணனாயவதரித்த		

* * * [திசையும்.] ஸ்ரீமந்நாராயணனே பரதேவதையாகில், பலரும் பரதேவதை யென்று மயங்கும்படியான பல பல தேவதைகள் ஏற்படுவானேன்? அந்தத் தெய்வங்கள் தாம் விசித்திரமான செயல்களைச் செய்ய வல்லமை பெற்றிருப்பானேன்? என்றொரு கேள்வி உண்டாக, எம்பெருமான்தானே, தன்னை உகவாதவர்கள் தன்னை வந்து கிட்டாமல் தேவதாந்தரங்களைப் பணிந்து க்ஷுத்ர பலன்களைப் பெற்று அகன்று போவதற்காகச் செய்து வைத்த மயக்குக்கள் காண்மின் இவை—என்று மறுமொழி கூறுகின்றார். சர்க்

கரை, கற்கண்டு, திராக்ஷை முதலிய சிறந்த வஸ்துக்களை வாங்கி உண்டு களிக்க இயற்றி யில்லாத ஜனங்களுக்காக உப்பு புளி முதலிய சிறு பொருள்களைக் கடை பரப்பி வைத்த மாத்திரத்தினால் எல்லாப் பொருள்களுக்கும் கடைகள் ஏற்பட்டிருக்கின்றன வென்று எல்லாம் சிறந்த பொருள்களாய் விடுமோ? செல்வம் மிகுந்தவர்களுக்காக விலையுயர்ந்த உண்மையான ரத்னங்கள் ஏற்பட்டிருப்பது போல ஏழைகளுக்காக அற்ப விலையுள்ள க்ருத்ரிமங்களான ரத்னங்களும் ஏற்பட்டிருக்கின்றன; இவை தம்மில் வாசியின்றிக்கே யொழியுமோ? சிறந்த வஸ்துக்களை அநுபவிக்க யோக்யதை யில்லாதவர்களை மயக்குவதற்கு ஸாமாந்ய வஸ்துக்கள் எப்படி ஏற்பட்டனவோ, அப்படியே பரமவிலக்ஷணனான திருமாலை அநுபவித்து வாழமாட்டாத க்ஷுத்ர ஜநங்களை மயக்குதற்காகத் திசையும் திசையுறு தெய்வமும் தெய்வத் திசையுங் கருமங்களு மெல்லாம் ஏற்படுத்தப்பட்டன வென்று கொள்ள வேணுமென்கிறார்.

"திசையும்" என்றது பல பல வுலகங்களைச் சொன்னபடி; எம்பெருமானொருவனையே தொழுது இறைஞ்சுதற்கு உரிய உலகமொன்றே யிருக்கலாமாயினும், 'இது சிவஸாலோக்யம் பெறும் உலகம்' 'இது இந்த்ரஸாலோக்யம் பெறும் உலகம்' என்றிப்படி பல பல ஸ்தானங்களைக் கற்பித்தது காரோதவண்ணன் படைத்த மயக்கு என்றபடி.

திசையுறுதெய்வமும் = இன்ன ஸ்தானத்திற்கு இன்னான் கடவன், இன்ன ஸ்தானத்திற்கு இன்னான் கடவன் என்று ஒவ்வொரு ஸ்தானத்திலும் நிர்வாஹகமாக ஒவ்வொரு தேவதையை ஏற்படுத்தினதும் காரோதவண்ணன் படைத்த மயக்கு.

தெய்வத்து இசையும் கருமங்கள் = நான்முகன் படைப்புத் தொழிலை நிர்வஹிக்கக் கடவன்; சிவபிரான் ஸம்ஹாரத் தொழிலை நிர்வஹிக்கக் கடவன்; இந்திரன் தேவதைகளை மெய்காட்டுக்கொள்ளுந் தொழிலை நோக்கக் கடவன்; யமன் உயிர் நீத்துந் தொழிலை நடத்தக் கடவன் என்றிப்படி அவ்வத் தெய்வங்கட்கு இசைந்தவாறாகத் தொழில்களை வகுத்திருப்பதும் காரோதவண்ணன் படைத்த மயக்கு. திரிபுர மூன்றெரித்தல், காமதஹநம், வ்ருத்ரா

ஸுர வதம் முதலிய அரிய பெரிய செயல்களை இங்குக் கொள்ளவு மாம்.

கடல் கடைந்து அமுதங் கொண்ட காலத்திலே தேவாஸுர விவாதம் ப்ரஸங்கிக்க, எம்பெருமான் மோஹிநி யுருவம் பூண்டு உகவாதாரை மயக்கினது போலவே இவையும் மயக்காக உண்டு பண்ணி வைக்கப்பட்டவை என்கிற உட்பொருளுந் தோன்றக் "கடல் கடைந்த காரோதவண்ணன் படைத்த மயக்கு" என்றரு ளிச் செய்தாரென்க. கடைந்த கடலிலே அமுதம் விஷம் யானை குதிரை சந்திரன் கல்பவ்ருக்ஷம் அப்ஸரஸ் முதலிய பலவிசித்திரப் பொருள்களைப் படைத்தருளின பெருமான் இவை யித்தனையும் செய்ய வல்லவனே யென்பதும் மூதலிக்கப்பட்டதாம்.

மயக்கு என்றது—மயங்கச் செய்யும் பொருள் என்றபடி. 'விளக்கு' என்றால் விளங்கச் செய்யும் பொருள் என்று பொருள் படுதல்போல் ... ... (எ)

மயங்க வலம்புரி வாய்வைத்து * வானத்
தியங்கு மெறிகதிரோன்றன்னை *—முயங்கமருள்
தேராழியால் மறைத்த தென்நீ, திருமாலே *
போராழிக் கையால் பொருது. (அ)

திரு மாலே	லக்ஷ்மீநாதனே!,
நீ	நீ,
முயங்கு அமருள்	(எண்ணிறந்த மன்னர்கள்) நெருங்கிக் கிடந்த பாரதப் போர்க்களத்திலே
மயங்க	(எதிரிகள் அஞ்சி) அறிவு கலங்கும்படியாக
வலம்புரி	ஸ்ரீபாஞ்சஜந்ய மென்னும் திருச்சங்கை
வாய் வைத்து	தனது திருப் பவளத்திலே வைத்து ஊதி,
போர் ஆழி கையால்	போர் செய்வதற்கு உபகரணமான திருவாழியை ஏந்தின கையாலே
பொருது	(பீஷ்மர் முதலான வர்களைத் துரத்தி) யுத்தம் செய்து,
வானத்து இயங்கும் எறி கதிரோன் தன்னை	ஆகாயத்தில் ஸஞ்சரித்துக் கொண்டே யிருக்கிற ஸூர்யனை
தேர் ஆழியால்	சக்கராயுதத்தினால்
மறைத்தது என்	மறைத்தது எதுக்காக?

* * *—[மயங்கவலம்புரி.] எம்பெருமான் தன்னையுகவாதாரை அகற்றுகைக்காகச் சில மயக்குப்பொருள்களை ஏற்படுத்தினனென்றார் கீழ்ப்பாட்டில். ஸர்வரக்ஷகனான எம்பெருமானுக்கு இது தகுதியோ? என்று ஒரு சங்கை தோன்ற, ஆச்ரிதர்களை எவ்விதத்திலும் பரிந்து பாதுகாப்பதும் தன்னை மதியாத ஆஸுரப்ரக்ருதிகளை விலக்கி விடுதலும் அப்பெருமானுடைய காரியம்; துஷ்டநிக்ரஹமும் சிஷ்ட பரிபாலநமும் செய்வதே ஸர்வரக்ஷகத்வமாதலால் அங்ஙனே செய்தருள்கின்ற எம்பெருமானுடைய ஸர்வரக்ஷகத்வ குணத்திற்கு யாதொரு கேடுமில்லை, மேன்மேலும் விளக்கமேயுள்ளது என்று ஸமாதான முரைப்பவர்போல இப்பாட்டு அருளிச் செய்கிறார்.

பாரதப் போர்க்களத்திலே துர்யோதநாதிகள் அஞ்சி நடுங்கும்படியாக பாஞ்சஜந்ய மென்னும் தனது சங்கைத் திருப்பவளத்திலே வைத்தூதி அதன் பேரொலியாலே ஆச்ரிதர்களை வாழ்வித்தும் எதிரிகளை இடிவிழுந்தவர்போல அச்சமுறுத்தியும், சக்கராயுதத்தினாலே ஸூர்யனை மறைத்துப் பகலை இரவாக்கியும், அவ்வாயுதத்தை யெடுத்துக்கொண்டு பீஷ்மரைத் தொடர்ந்தோடியும் செய்த காரியங்கள் ஆச்ரித பக்ஷபாதத்தைத் தெரிவிப்பவையாதலால் அவற்றை யெடுத்துக் கூறுகின்றார்.

மயங்கவலம்புரிவாய்வைத்தது பகவத்கீதையின் முதலத்யாயத்திற் சொல்லிற்று. எறிகதிரோன் தன்னைத் தேராழியால் மறைத்த வரலாறு:—பாரதப்போரில் பதின்மூன்றாநாளிலே அர்ஜுநனது மைந்தனான அபிமந்யுவைத் துரியோதநனது உடன் பிறந்தாளின் கணவனான ஸைந்தவன் கொன்றுவிட, அங்ஙனம் தன் மகனைக் கொன்ற ஜயத்ரதனை மற்றைநாள் ஸூர்யாஸ்தமனத்திற்குள் தான் கொல்லாவிடில் தீயில்குதித்து உயிர் துறப்பதாக அர்ஜுநன் சபதஞ்செய்ய, அதனையறிந்த பகைவர்கள் பதினாலாநாள் பகல் முழுவதும் ஜயத்ரதனை வெளிப்படுத்தாமல் சேனையின் நடுவே நிலவறையில் மறைத்துவைத்திருக்க, அர்ஜுநனுடைய சபதம் பழுதாய் விடுமே என்று சிந்தித்துக் கண்ணபிரான் ஸூர்யனை அஸ்தமிப்பதற்குச் சில நாழிகைக்கு முன்னமே தனது திருவாழியினால் மறைத்துவிட, அப்பொழுது எங்கும் இருள் பரவியதனால் அர்

ஜுநன் தன் உறுதியின்படி அக்நிப்ரவேசம் செய்யப்புக, அதனைக் களிப்போடு காண்பதற்குத் துரியோதனுதிகளுடனே ஸைந்தவன் வந்து எதிர்நிற்க, அப்போது கண்ணபிரான் திருவாழியை வாங்கி விடவே பகலாயிருந்ததனுல் உடனே அர்ஜுநன் ஜயத்ரதனைத் தலை துணித்தனன் என்பதாம். 1. "நாழிகை கூறிட்டுக் காத்து நின்ற அரசர்கள்தம் முகப்பே, நாழிகை போகப் படை பொருத வன் தேவகிதன் சிறுவன்" என்ருர் பெரியாழ்வாரும்.

இவ்வரலாற்றில் ஒரு சங்கை பிறப்பதுண்டு ;—திருமாலின் சக்கராயுதத்தின் ஒளியானது ஸூர்யனுடைய ஒளியிற் காட்டிலும் பலகோடி நூருயிரம் மடங்கு மேம்பட்டதென்று சொல்லியிருக்க, கோடி ஸூர்யப்ரகாசமுன அத்திருவாழியினுலே இருளை உண்டாக்கினதாக வுரைப்பது எங்ஙனே ? என்று. இதற்குப் பலர் பலவகையான ஸமாதானங்கள் கூறுவர் ; ஒரு ஸமயவிசேஷத்தில் திருவாழியின் பிரகாசம் சிறிதுபோது மழுங்கிப் போகக் கடவதென்று ஒரு சாபம் ஏற்பட்டிருந்ததென்றும் அதனுல்தான் இங்ஙனே செய்யலாயிற்றென்றும் முக்கிய ஸமாதானமாகக் கூறுவதுண்டு.

"போராழிக்கையால் பொருது" என்ற நான்காமடியில்—பாரதப்போரில் கண்ணபிரான் பீஷ்மரைக் கொல்வதாகத் திருவாழியைக் கையிலேகொண்டு தேரில் நின்றும் கீழிறங்கித் துரத்திக் கொண்டு சென்ற கதை அநுஸந்திக்கத்தக்கது. [மஹாபாரதம்—பீஷ்மபர்வம்—ஐம்பத்தொன்பதாமத்தியாயத்தில் விரிவு காண்க.]

மயங்கவலம்புரி வாய்வைத்ததும் எறிகதிரோன்தன்னை ஆழியால் மறைத்ததும் போராழிக்கையால் பொருததும் ஏதுக்காக ? என்று ஆழ்வார் எம்பெருமானைக் கேள்வி கேட்கிருர் இப்பாட்டால். 'போரில் நான் ஆயுதமெடுப்பதில்லை' என்று பிரதிஜ்ஞை செய்துவைத்து அதற்குமாருகக் காரியஞ் செய்தது எல்லாரோடும் ஒரு நிகராகவுள்ள உனது உறவுக்குத்தகுமோ ? ஸத்யஸங்கல்பனுன உன் இருப்புக்குத் தகுமோ? உன் பெருமைக்குத் தகுமோ? இவை யொன்றையும் பாராமல் நீ செய்த செயல்கள் எதற்காக ? என்ற இக்கேள்வியானது—ஆச்ரிதர்களான பாண்டவர்களிடத்

1. பெரியாழ்வார் திருமொழி 4—1—9.

திலே நீ கொண்டிருந்த பக்ஷபாதமேயன்றோ இத்தனையும் செய்வித்தது என்று வெளியிடுகிறமுகத்தால் அவனுடைய ஸௌஹார்த்த குணத்தை வெளியிடுவதில் நோக்குடைத்தென்க.

முயங்குஅமர் என்றது பல பேர்கள் திரண்டு நெருங்கியிருக்கும் போர்க்களமென்றபடி. போர்புரிய வந்தவர்களும் போர்காண வந்தவர்களுமாகத் திரண்ட திரளுக்கு எல்லையில்லையிறே.

'தேராழியால் மறைத்தது' என்கிறாரே, தேர்ச்சக்கரத்தையெடுத்தோ ஸூர்யனை மறைத்தது? என்று சிலர் சங்கிப்பர்; அன்று; தன் திவ்யாயுதமான சக்கரத்தைக் கொண்டே மறைத்தது; சக்கரம் தேருக்கு உறுப்பாயிருக்குந் தன்மையுடையதாதலால் வடநூலார் 'ரதாங்கம்' என வழங்குதல் போலத் தேராழியெனப்பட்டதென்க. போராழிக்கையால் — கையிற்கொண்ட போராழியினால் என்று கொள்ளலாம். ... ... (அ)

பொருகோட்டோ ரேனமாய்ப் புக்கிடந்தாய்க்கு - * அன்றுன்
ஒருகோட்டின் மேல்கிடந்த தன்றே *—விரிதோட்ட
சேவடியை நீட்டித் திசைநடுங்க விண்துளங்க *
மாவடியில் நீயளந்த மண். (கூ)

விரி தோட்ட	ஒளி விரிகின்ற திருக்குண்டலங்களை அணிந்துள்ளவனே!'	நீ அளந்த	நீ அளந்து திருவடிக் கீழ் இட்டுக் கொண்ட
சே அடியை நீட்டி	செந்தாமரை போன்ற திருவடிகளை வளரச் செய்து	மண்	பூமியானது,
திசை நடுங்க	பூதலத்திலுள்ளவர்கள் நடுங்கும்படியாகவும்	பொரு கோடு ஓர் ஏனம் ஆய்	நிலத்தைக் குத்தியெடுத்துக் கொண்டு திரிகிற கோரப்பற்களையுடைய விலக்ஷணமான வராஹமூர்த்தியாய்
விண் துளங்க	மேலுலகங்களிலுள்ளவர்கள் நடுங்கும்படியாகவும்		
மா வடிவின்	(திரிவிக்கிரமனாக வளர்ந்த) பெரிய வடிவத்தோடு	புக்கு	(பிரளயஜலத்திலே) முழுகி

இடந்தாய்க்கு அன்று	அண்டபித்தியில் நின்றும் இந்தப் பூமியைக் குத்தி யெடுத்துக் கொண்டுவந்த அக்காலத்தில்
உன்	உன்னுடைய
ஒரு கோட்டின் மேல்	ஒரு கோரப்பல்லின் ஏகதேசத்திலே
கிடந்தது அன்றே	அடங்கிக்கிடந்ததல்லவோ ?

* * *—[பொருகோட்டோர்.] எம்பெருமான் தான்செய்த பிரதிஜ்ஞையைப் பங்கப்படுத்திக் கொண்டாகிலும் ஆச்ரிதருடைய காரியமே கண்ணாயிருப்ப னென்றார் கீழ்ப்பாட்டில்; அவ்வளவே யல்ல; தன் வடிவத்தை மாறுபடுத்திக்கொண்டும் இழிபிறப்பை ஏற்றுக்கொண்டும் காரியம் செய்பவன்காண்மின் என்றருளிச் செய்வதாக வராஹாவதாரத்தை ப்ரஸங்கிக்கிறாரிதில்.

பொருகோட்டோரேனமாய்ப்புக்கிடந்த வரலாறு :—ஹிரண்யகசிபுவின் உடன்பிறந்தவனான ஹிரண்யாக்ஷனென்னுங் கொடிய அசுரன் தன் வலிமையாற் பூமியைப் பாயாகச்சுருட்டி எடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிச் சென்றபோது தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மஹாவராஹரூபியாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ்வசுரனை நாடிக்கண்டு பொருது கோட்டினாற் குத்திக் கொன்று பாதாளலோகத்திற் சார்ந்திருந்த பூமியைக் கோட்டினாற்குத்தி அங்கு நின்று மெடுத்துக்கொண்டு வந்து பழையபடி விரித்தருளினன் என்பதாம். இப்பொழுது நடக்கிற ச்வேதவராஹகல்பத்துக்கு முந்தின பாத்மகல்பத்தைப் பற்றிய பிரளயத்தின் இறுதியில் ஸ்ரீமந்நாராயணன் ஏகார்ணவமான பிரளயஜலத்தில் மூழ்கியிருந்த பூமியை மேலே யெடுக்க நினைத்து மஹாவராஹரூபியாகிக் கோட்டு நுனியாற் பூமியை எடுத்து வந்தனனென்ற வரலாறும் உண்டு. 1. "பாராருலகம் முதுமுந்நீர் பரந்தகாலம் வளை மருப்பில், ஏராருருவத்தேனமா யெடுத்தவாற்றலம்மான்" என்ற திருமங்கையாழ்வாரருளிச்செயலை நோக்குக.

இவ்வரலாற்றினாலும் பின்னடிகளிற் குறித்த திரிவிக்கிரமாவதார சரிதையினாலும்—எம்பெருமான் ரக்ஷ்யவர்க்கங்களை இன்ன

---

1. பெரியதிருமொழி 8–8–3.

படிதான் ரக்ஷிப்பனென்கிற ஒரு நியதியில்லை யென்பது வெளியிடப்பட்டதாம்.—“ஆபத்துவந்தால் தலையாலே சுமந்து நோக்குதல், தலையிலே காலைவைத்து நோக்குதல் செய்யுமவனன்றோ நீ; ரக்ஷ்யவர்க்கத்தை நோக்குமளவில் உனக்கொரு நியதியுண்டோ வென்று உகந்தனுபவிக்கிறார்” என்றும்; “உதாரனாயிருப்பானொருவன் நாலுபேருக்குச் சோறிட நினைத்து நாற்பது பேருக்கு இட்டு மிகும்படி சோறுண்டாக்குமா போலே ரக்ஷ்யத்தினளவன்றிறே ரக்ஷகன் பாரிப்பு” என்றுமுள்ள வியாக்கியான வாக்கியங்கள் அநுஸந்திக்கத் தக்கன.

மிகப்பெரிய வடிவுகொண்டு உலகளந்தபோது எங்கும்பரந்த திருவடிக்குச் சரிசமமாகப் போந்திருந்த பூமியானது வராஹாவதாரகாலத்தில் உனது திருஎயிற்றிலே ஒரு நீலமணிபோலே சிறுகிக் கிடந்ததே! இஃது என்ன ஆச்சரியம் என வியக்கின்றார். இப்பிரபந்தத்தில் மேலே “பிரானுன் பெருமை பிறராரறிவார், உராயுலகளந்த நான்று—வராகத், தெயிற்றளவு போதாவாறென்கொலோ? எந்தை அடிக்கு அளவு போந்தபடி.” என்றருளிச் செய்துள்ள எண்பத்துநாலாம் பாசுரமும் இங்கு ஸ்மரிக்கத்தக்கது.

‘விரிதோட்ட’ என்பதை விளியாகக்கொண்டு ஒளிவிரிகின்ற தோடுகளையணிந்தவனே!—மகர நெடுங்குழைக்காதனே! என்று பொருள் கொள்ளும் பக்ஷத்தில் ‘விரிதோட’ என்றிருக்க வேண்டுவது விரித்தல் விகாரம் பெற்று ‘விரிதோட்ட’ என்றாயிற்றென்று கொள்ளவேண்டும்; இஃது அருமையெனின்; வேறுவகையாகவே பொருள் கொள்ளலாம்—மலர்ந்த இதழ்களையுடைய தாமரை போலேயிருக்கிற என்று. இப்போது இது சேவடிக்கு விசேஷணம். (௯)

மண்ணும் மலையும் மறிகடலும் மாருதமும் *
விண்ணும் விழுங்கியது மெய்யென்பர் *—எண்ணில்
அலகளவு கண்ட சீராழியாய்க்கு - *அன்றிவ்
வுலகளவு முண்டோ வுன்வாய். (௧௦)

மண்ணும்	பூமியும்	அலகு அளவு கண்ட சீர் ஆழியாய்க்கு உன் வாய்	அளவிடுதற்கு உறுப்பான எண்ணிக்கைகளை யெல்லாம் எல்லை கண்டிருக்கிற [—எண்ணிறந்த] கல்யாண குணங் களுக்குக் கடல் போன்றவனான வுன்னுடைய வாயானது
மலையும்	குலபர்வதங்களும்		
மறி கடலும்	அலையெறிகிற ஸமுத்ரங்களும்		
மாருதமும்	காற்றும்		
விண்ணும்	ஆகாசமும் ஆகிய இவற்றை யெல்லாம்		
விழுங்கியது	(உனது திருவயிற்றின் ஒரு மூலையிலே அடங்கும்படி) அமுதுசெய்ததை	அன்று	இவற்றை யெல்லாம் விழுங்கின வக்காலத்தில்
மெய் என்பர்	ஸத்யமாகச் சொல்லுவர்கள் (வைதிகர்கள்);	இ உலகு அளவும் உண்டோ	இந்த ஜகத்தளவு விசாலமாகவும் இருந் திருக்குமோ?
எண்ணில்	இதனை ஆராயுமளவில்,		

* * *—[மண்ணும் மலையும்.] ஏனமாய் நிலங்கீண்டபோது மிகப்பெரிதான பூமி ஒருகோட்டின் மேலே அடங்கிக்கிடந்த விசித்திரத்தைக் கீழ்ப்பாட்டில் பேசியநுபவித்த ஆழ்வார்க்கு மற்றொரு அற்புதச் செயலும் நினைவுக்கு வந்தது; பிரளயகாலத்தில் சிறியபாலகனாய் எழுலகையும் அமுதுசெய்தாயென்று ப்ராமாணிகர்களான வைதிக புருஷர்கள் சொல்லுகின்றனர்; இது ஸத்யமான விஷயமேயன்றி ஈஷத்தும் அஸத்யமல்ல; சிறியவாயினாலே பெரிய வுலகங்களை அமுதுசெய்யக் கூடாமையாலே உலகுண்ட அக்காலத்தில் உனது வாயும் உலகங்களின் பெருமைக்குத் தகுதியாகப் பெருத்திருந்ததோ என்று வினவுகின்றார். இங்ஙனே கேள்வி கேட்கிற முகத்தால் எம்பெருமானுடைய ஒப்புயர்வற்ற சக்தி விசேஷத்தை வெளிப்படுத்துகின்றாராழ்வார் என்றுணர்க. சிறிய வாயினாலே பெரிய வுலகங்களை யெல்லாம் எளிதில் விழுங்கவல்ல அபாரசக்தியுக்தனன்றோ நீ என்றவாறு.

[அலகளவுகண்டசீர்.] நூறு ஆயிரம் பதினாயிரம் லக்ஷம் கோடி சங்கம் மஹாசங்கம் பத்மம் என்றாற்போன்ற எண்கள்

அலகு எனப்படும்; அவற்றை அளவுகாண்கையாவது—அந்த எண்களின் எல்லைக்குத் தான் மேற்பட்டுப்போதல்; அளவுகடந்து போவதைச் சொன்னபடி. "அஸங்க்யேய கல்யாணகுணகணௌக மஹார்ணவ!" என்பர் ஸ்ரீபாஷ்யகாரரும். சீராழியாய்க்கு=ஆழி யென்று ஸமுத்ரத்துக்குப் பெயர்; ஆழியான்—ஸமுத்ரமா யிருப்பவன்; முன்னிலைப்பெயர் நான்காம் வேற்றுமையுருபு பெற்று "ஆழியாய்க்கு" என்றாயிற்று. அன்றி, ஆழியையுடையவன் ஆழியான் என்றாகி, எல்லை கடந்த திருக்குணங்களையும் சக்கராயுதத்தையும் உடைய உனக்கு என்று பொருளாகவுமாம்; இதுவே வியாக்கியானத்திற்கும் பொருந்தியதென்க. (௰)

வாயவனை யல்லது வாழ்த்தாது * கையுலகம்
தாயவனை யல்லது தான்தொழா *—பேய்முலைநஞ்
சூணாக வுண்டா னுருவோடு பேரல்லால் *
காணாகண் கேளா செவி. (௧௧)

வாய்	எனது வாயானது	பேய் முலை நஞ்சு	பேயான பூதனையின் முலைகளில் தடவியிருந்த விஷத்தை
அவனை அல்லது	ஸர்வேச்வரனைத் தவிர	ஊண் ஆக	உணவாக
வாழ்த்தாது	(மற்றொன்றைப்) புகழாது;	உண்டான்	அமுது செய்த கண்ணபிரானுடைய
கை தாம்	கைகளானவை	உருவொடு பேர் அல்லால்	திருமேனியையும் திருநாமத்தையு மல்லது (மற்றெதையும்)
உலகம் தாயவனை அல்லது தொழா	உலகங்களைத் தாவி யளந்துகொண்ட திரிவிக்கிரமனை யல்லது வேறொருவனைத் தொழமாட்டா;	கண் கணா செவி கேளா	கண்கள் காணமாட்டா; காதுகள் கேட்கமாட்டா;

* * * [வாயவனையல்லது.] எம்பெருமான் ஆச்ரிதரை ரக்ஷிப்பதிலும் கொடியவர்களைத் தண்டிப்பதிலும் தீக்ஷிதனாயிருக்கின்றா

னென்கிற திருக்குணங்களிலே யீடுபட்டுத் தம்முடைய இந்திரியங்கள் அவ்வன்றிறத்தே அவகாஹிக்கும்படியைப் பேசுகிறாரிதில்.

உலகம் தாயவன் என்றதனால் ஆச்ரிதரை ரக்ஷிப்பதில் தீக்ஷிதனென்பதும், பேய் முலை நஞ்சு ஊணாகவுண்டா னென்றதனால் கொடியவர்களைத் தண்டிப்பதில் தீக்ஷிதனென்பதும் தெரிவிக்கப் பட்டனவென்க.

மூன்றாமடியில், உருவோடு—உருவையும் என்றபடி. உருவை யல்லால் கண்காணா, பேரையல்லால் செவிகேளா என்று அடைவே அந்வயிப்பது—முறைநிரனிறைப் பொருள்கோள்.

முகுந்தமாலையில் "ஜிஹ்வே! கீர்த்தய கேசவம் முராரிம்" என்றச்லோகம் இப்பாட்டுக்குச் சேர அநுஸந்திக்கவுரியது. (கக)

செவிவாய் கண்மூக் குடலென் றைம்புலனும் * செந்தீ
புவிகால் நீர்விண் பூதமைந்தும் *—அவியாத
ஞானமும் வேள்வியும் நல்லறமு மென்பரே *
ஏனமாய் நின்றாற் கியல்வு. (கஉ)

ஏனம் ஆய் நின்றாற்கு	வராஹாவதாரம் செய்தருளித் தானே காரியங்களை நடத்துகிற பெருமானைப் பெறுவதற்கு	அவியாத ஞானமும்	(இந்தக் காரணங்களே பரங்களாலே ஸாதிக்கப்படுவதாய்) இடைவிடாது எம்பெருமானைச் சிந்திப்பதான பக்தியும்
(இயல்வு	ஏற்ற ஸாதனமாவது—,)	வேள்வியும்	(அந்த பக்தி உண்டாகி வளர்வதற்குக் காரணமான) அக்நிஹோத்ரம் முதலிய சடங்கும்
செவி வாய் கண் மூக்கு உடல் என்று ஐம்புலனும்	செவிதொடக்கமாகச் சொல்லப்படுகிற ஞானேந்திரியங்கள் ஐந்தும்	நல் அறமும்	(நாடோறும் பக்தியை வளர்க்கக் கடவதான) விவேகம் முதலிய நற்குணங்களும்
செம் தீ புவி கால் நீர் விண் பூதம் ஐந்தும்	தேஜஸ் முதலான பஞ்ச பூதங்களினுடைய வியன்ற தேஹமும்	இயல்வு என்பரே	ஸாதனங்கள் என்று சொல்லுகிறார்களே! (இது தகுதியோ? என்றவாறு.)

* * *—[செவி வாய் கண்.] 'நமக்கு உபாயமும் உபேயமும் எம்பெருமானேயாவன்' என்கிற சாஸ்த்ரார்த்தம் பலர்க்கும் தெரியுமாயினும், பக்தி முதலானவற்றையும் எம்பெருமானைப் பெறுகைக்கு உபாயமாகச் சிலர் ப்ரமித்திருப்பர்கள். அந்தோ! இப்படியும் சில மஹான்களுங்கூட மயங்கியிருக்கிறார்களே! என்று ஆழ்வாரிரங்குகிறாரிப்பாட்டில்.

ஆபத்து நேரிடும்போது, தானே வந்து பாதுகாப்பவனன்றோ எம்பெருமான் என்னவேண்டி ஏனமாய் நின்றற்கு என்கிறார். * மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாய்த் திருவவதரித்து அரியன செய்ததெல்லாம் தன்னுடைய நிர்ஹேதுக கிருபையாலே யன்றி வேறொரு உபாயத்தை எதிர்பார்த்தன்றே என்று குறிப்பித்தவாறு.

எம்பெருமான் எப்போதும் நமக்கு நன்மை செய்வதற்கே ஸமயம் பார்த்துக்கொண்டிருப்பன்; அவனது முயற்சியை நாம் விலக்கித்தள்ளுகிறவரையில் 'ஐயோ! நம்முடைய க்ருஷி பலிக்கவில்லையே!' என்று திருவுள்ளம் நொந்துகிடப்பன்; எப்போது நாம் விலக்காமல் "அவன் செய்வன செய்து கொள்க" என்கிற ஆதாரமுமில்லாமல் வாளா இருந்திடுவோமோ, அப்படிப்பட்ட ஸமயத்தையே பற்றாசாகக்கொண்டு "என் ஊரைச்சொன்னாய், என்பேரைச் சொன்னாய், என் அடியாரை நோக்கினாய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக்கு ஒதுங்க நிழலைக்கொடுத்தாய்" என்றாற்போலே சிலவற்றை ஏறிட்டு மடிமாங்காயிட்டு, பொன் வாணியன் பொன்னை உரைகல்லிலே உரைத்து மெழுகாலே யெடுத்து 'கால் பொன்னாயிற்று, கழஞ்சு பொன்னாயிற்று' என்று நாள்வட்டத்திலே திரட்டுவதுபோல, யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகம் என்கிற ஸுக்ருதவிசேஷங்களைத் தானே கற்பித்துக்கொண்டு தானே அவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக் கொண்டு போந்து நன்மைகளைப் பயக்குமவன்; இப்படிப்பட்ட எம்பெருமான் தானே தன்னையடையுமாறு தந்தால் அவனை நாம் பெறலாமேயன்றி, நாம் ஒருபாயஞ்செய்து அவனைப் பெற்று விடுவோமென்பது ஒருகாலும் நம்மால் இயலாது. அவனுக்கு சேஷப்பட்டிருக்கிற நாம் ஸர்வ சேஷியான அவனது திருவருளை

உபாயானுஷ்டானங்களாலே வலியக்கொணர்வோமென்பது நம் ஸ்வரூபத்துக்குத் தகாது; ஆதலால் ஆழ்வார்கள் வேறொரு உபேயத்தை அறியாதவாறுபோல வேறொரு உபாயத்தையும் அறியாதேயிருப்பர்கள்; $. "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்பர்கள். இக்கொள்கைக்கு மாறாகக் "கரும ஞானங்களினால் நிர்மலமான மநஸ்ஸையுடையவனால் செய்யப்படுவதும் தைலதாரைபோல இடைவிடாத த்யாநபரம்பரா ரூபமுமான பக்தியே உபாயம்" என்று வைதிகர்களும் சொல்லுகிறார்களே! இஃது என்ன அறியாமையோ! என்னும் முகத்தால் எம்பெருமானுடைய உபாயத்வத்தை வற்புறுத்துகின்றார்.

நாம் செய்யும் நற்காரியங்கள் எம்பெருமானைப் பெறுதற்கு உபாயமல்ல என்று சொல்லிவிட்டால், நாம் ஒன்றையும் செய்யாமலே இருந்துவிடலாமன்றோ என்றும், சாஸ்த்ரங்கள் நற்கருமங்களை ஸாதநமாகச் சொல்லியிருக்கின்றனவே என்றும் சிலர் கேட்பதுண்டு. அவர்களுக்குச் சொல்லுகிறோம்;—கடலிலே வலைவீசி மீன் முதலியன பிடித்து ஜீவிப்பானொரு செம்படவன் ஒருநாள் விலையுயர்ந்த ரத்னமொன்று மீன்களிடையே கடலிலே கிடைக்கப் பெற்றான்; அதனுடைய மதிப்பை அவன் அறியமாட்டாதவனாகையாலே ¶. "மாமதியம் திளைக்கும் கொடிமாளிகை சூழ்தெருவிற் செழுமுத்து வெண்ணெற்கெனச் சென்று முன்றில் வளைக்கை நுளைப்பாவையர்மாறு" மாபோலே அந்த ரத்னத்தைக் கொண்டு போய் ஒரு வ்யாபாரியிடத்திலே ஸ்வல்ப விலைகூறி விற்றுவிட்டான்; அந்த வ்யாபாரி ரத்னத்தின் மதிப்பை நன்குணர்ந்தவனாகையாலும் வர்த்தகமே தொழிலாக ஜீவிப்பவனாகையாலும் அந்த ரத்னத்தைக் கொண்டுபோய் ஒரு மஹாராஜனிடத்திலே அதற்குண்டான விலை கூறி ஆயிரம் வராஹனுக்கு விற்றான்; பிறகு அந்த மஹாராஜன் அந்த ரத்னத்தைத்தான் விற்பனைசெய்ய நினையாதே அதனைப் பெரியதொரு ஹாரத்திலே இணைத்து ஸ்வயம் போக்யமாகப் பூண்டுகொண்டான். ஆக இந்நடவடிக்கையில் ஒரு ரத்னத்துக்கே மூன்று தன்மைகள் உண்டாயின; (1) ஸ்வல்ப விலைக்கு மாறுதல்; (2) உள்ள விலைக்கு மாறுதல்; (3) விலைக்கு ஆட்படா

$. திருவாய்மொழி 5–7–10. ¶. பெரிய திருமொழி 3–8–7.

மல் ஸ்வயம் போக்யமாகக் கொள்ளப்படுதல்—என மூன்றுவகைகள் ஒரு வஸ்துவுக்கே அமைந்தாற்போல, "அவியார்த ஞானமும் வேள்வியும் நல்லறமும்" என்று இப்பாட்டிற் சொன்ன பக்தி முதலியவற்றுக்கும் இங்ஙனே மூன்று தன்மைகள் கூடும்; ரத்னத்தின் மதிப்பை அறியமாட்டாத செம்படவன்போலே பக்தியின் சீர்மையை அறியமாட்டாத நீசர் அந்த பக்தியைக்கொண்டு ஐச்வரியம் கைவல்யம் முதலிய அற்பபலன்களைக் கொள்வர்; ரத்னத்தைக் குறைந்த விலைக்குக்கொடாதே தகுந்த விலைக்குக்கொடுத்த வ்யாபாரியைப்போன்ற அதிகாரிகள் பக்தியை மோக்ஷஸாதநமாக அபிமானித்து அற்பபலன்களைக் கொள்ளாமல் சிறந்ததான மோக்ஷபலனைக் கொள்வர்கள்; ரத்னத்தை ஒன்றுக்கும் ஸாதநமாக்காதே ஸ்வயம் போக்யமாகக் கொள்ளும் மஹாராஜனைப் போன்ற விலக்ஷணாதிகாரிகள் பக்தியை ஒன்றுக்கும் ஸாதநமாகக் கோலாமல் ஸ்வயம் புருஷார்த்தமாகக் கொண்டு வர்த்திப்பர்கள். மஹாராஜ பதவியை விரும்பாதே வ்யாபாரியின் நிலைமையை விரும்பி பக்தியை ஸாதநமாகக் கொள்ளுமவர்கள் அப்படியே கொள்க.

தோட்டம் சமைத்து மாம்பழம் பயிர் செய்வார்களில் அப்பழங்களை அரைகுறை விலைக்கும் அதிக விலைக்கும் விற்பாருமுண்டு; விற்காதே ஸ்வயம் போக்யமாகப் புஜிப்பாருமுண்டு. ஒரு மாம்பழந்தானே ஒருத்தனுக்கு உபாயமாயும் ஒருத்தனுக்கு உபேயமாயும் ஆகாநின்றது. விற்று உபாயமாகக் கொள்ளுமவன் அதமனாகவும் தரித்ரனாகவும், விற்காதே உபேயமாகக் கொள்ளுமவன் உத்தமனாகவும் உயர் செல்வனாகவும் பெயர் பெறுவான். அதுபோலே பக்திக்கு உபாயத்தன்மையும் உபேயத்தன்மையும் உண்டாயிருக்கச்செய்தே உபேயத்தன்மையைக் கொண்டு [அதாவது—அதனையே பலனாகக்கொண்டு] உத்தமாதிகாரிகளின் திரளில் புகாதே உபாயத்வாகாரத்தைக்கொண்டு கீழ்வகுப்பில் புக நினைப்பாரை ஆர்கொல் விலக்குவார்?

"வனத்திடரை ஏரியாம் வண்ணமியற்றும் இதுவல்லால், மாரியார் பெய்கிற்பார் மற்று" என்ற இரண்டாந் திருவந்தாதிப் பாசுரமும் நோக்கத் தக்கது. மேட்டு நிலங்களை நாம் பள்ளமாக

வெட்டி வைப்பது மழை பொழிவதற்கு ஸாதந மன்றாகிலும், எப்போதேனும் மழை பெய்தால் அந்த நீரைத் தாங்கிக்கொள்வதற்கு உறுப்பாவது போல, நாம் செய்யும் நற்கிரிசைகள் பகவத் ப்ராப்திக்கு ஸாதனமல்லவாகிலும் எப்போதேனும் பகவானுடைய அருள் வெள்ளம் நம்மேல் பெருகப்புக்கால் அதைத் தாங்கிக் கொள்ள நமது நற்கிரிசைகள் உறுப்பா யிருக்குமத்தனை.

இப்பாட்டின் முதலடியில் இந்திரியங்கள் ஐந்தையும், இரண்டா மடியில் பஞ்ச பூதங்களையும் சொல்லி யிருப்பதன் கருத்தாவது — இந்திரியங்களோடு கூடினதாய்ப் பஞ்ச பூதங்களால் இயன்றதான சரீரத்தைச் சொன்னபடி. சரீரத்தை மோக்ஷ ஸாதநமாக ஆரும் சொல்லவில்லையே யெனில்; அவியாத ஞானம் என்பதனால் சொல்லப்பட்ட பக்திரூபாபந்ந ஜ்ஞானமானது கரண களேபர ஸாத்யமாகையாலே கரணகளேபரங்களுக்கும் பரம்பரயா மோக்ஷ ஸாதநத்வம் சொல்லக்கூடு மென்றுணர்க.

அக்நிஹோத்ரம் முதலிய வேள்விகளும் விவேகம் தயை ஸத்யம் முதலிய நற்குணங்களாகிற நல்லறமும் ஸாக்ஷாத் மோக்ஷ ஸாதனமாகக் கொள்ளப்படுகின்றனவோ வென்னில்; அவையும் பக்தி உண்டாகி வளர்வதற்குக் காரணங்களாக சாஸ்த்ரங்களில் சொல்லப்படுகையாலே அவற்றுக்கும் பரம்பரயா மோக்ஷ ஸாதநத்வமே சொல்லக்கூடும்.

ஆகவே, இப்பாட்டில் அவியாத ஞான மென்று சொல்லப்பட்ட பக்தி யொன்றே மோக்ஷோபாயமாக வழங்கக் கூடியது. எம்பெருமானுக்கே நிரபேக்ஷ உபாயத்வம் கொள்ளுகிற ஆழ்வார் திருவுள்ளத்தாலே அந்த பக்தி யுபாயத்வமும் கழிக்கப்படுகின்றது. என்பரே! என்ற ஏகாரம் இதனைக் காட்டும்.

இனி, என்பரே என்றவிடத்து ஏகாரத்தை அசையாகக் கொண்டு 'பகவத் ப்ராப்திக்கு பக்தியை உபாய மென்பர்' என்று சொல்லிவிடுவதாக உரைப்பாரு முண்டு. இயல்வு—உபாயம். (கஉ)

இயல்வாக வீன்துழா யானடிக்கே செல்ல *
முயல்வா ரியலமரர் முன்னம் *—இயல்வாக
நீதியா லோதிநியமங்க ளாற்பரவ *
ஆதியாய் நின்றா ரவர். (கங)

ஈன் துழாயான் அடிக்கே செல்ல இயல்வு ஆக — அழகிய திருத் துழாய் மாலையை அணிந்துள்ள எம் பெருமானது திருவடிகளில் கிட்டுதற்குத் தகுதியாக

முன்னம் — அநாதிகாலமாக

முயல்வார் — முயற்சிசெய்பவர்கள் (யாரென்றால்)

இயல் அமரர் — யோக்யதையுள்ள நித்யஸூரிகளே யாவார்;

(நம்போன்றவர்களும் அவனை இழக்க வேண்டாதபடி)

இயல்வு ஆக — பொருத்தமாக

நீதியால் ஓதி — முறைமை தவறாமல் வேதத்தை அத்ய யனம் செய்து

நியமங்களால் பரவ — (அந்தவேதத்தின் பொருளை உணர்ந்து அதிற் சொன்ன) நியமங்களோடே தன்னைத் துதி செய்யுமாறு

அவர் — அந்த எம்பெருமான்

ஆதி ஆய் நின்றார் — முற்பட்டு ஸித்தராக இருக்கின்றார்.

* * * [இயல்வாக.] எம்பெருமான் திருவடிகளிலே நித்ய கைங்கரியம் செய்வதற்குத் தக்க யோக்யதை யுடையவர்கள் நித்ய ஸூரிகளேயன்றோ, ஸம்ஸாரிகளான நமக்கெல்லாம் அப்பெருமானைப் பணிந்து உய்தற்கு உரிய விரகு உண்டோ? என்று ஒரு சங்கை உதிக்கக்கூடுமே; அதற்கு உத்தரமாக அவதரித்த பாசுரம் இது. நித்யஸூரிகள் தாம் எம்பெருமான் திருவடிகளிலே ஆழ்ந் திருப்பவர்; இருக்கட்டும்; ஸம்ஸாரிகளுக்கு பகவத் ஸமாச்ரயண யோக்யதையே கிடையாதென்று கொள்ள இடமில்லை. ஸம்ஸாரிகளும் வேதங்களை யோதி அவற்றின் பொருள்களைத் தெரிந்து கொண்டு படிப்படியாகத் திருந்தி எம்பெருமானை வந்து கிட்டும் படியாக அப்பெருமான்தானே மூல ஸுக்ருதமாக அமைந்திரா நின்றானென்கிறார். இப்படி யருளிச்செய்வதன் கருத்து யாதெனில்; எம்பெருமானை யடைவதாகிற காரியம் சேதநருடைய தலையிலே கிடப்பதன்று; 1. "எதிர் சூழல்புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய, விதி சூழ்ந்ததா லெனக்கே லெம்மான் திரிவிக்கிரமனையே" என்கிறபடியே நெடுநாளே பிடித்து ஸம்ஸாரியைப் பெறுவதற்கு அப்பெருமான்தானே பலவகையான

1. திருவாய்மொழி 2-7-6.

க்ருஷிகளைப் பண்ணிக்கொண்டிருக்கிறான் என்றவாறு. “ஆதியாய் நின்றாரவர்” என்றதன் கருத்து இதுவே. ஸ்ரீ வேதாந்த தேசிகனும் இதனையே திருவுள்ளம்பற்றி ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸாரத்திலே “நிதாநம் தத்ராபி ஸ்வயமகிலநிர்மாண நிபுண: = நிதாநம் தத்ராபி ஸ்வய மகில நிர்மாண நிபுண:” என்றருளிச் செய்தாரென்றுணர்க. ... ... (கங)

அவரவர் தாந்தா மறிந்தவா றேத்தீ *
இவரிவ ரெம்பெருமா னென்று *—சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும் தொழுவர் * உலகளந்த
மூர்த்தி யுருவே முதல். (கச)

- அவர் அவர் — ராஜஸரும் தாமஸருமாகிய சில அதிகாரிகள்
- தாம் தாம் அறிந்தஆறு ஏத்தி — (தங்களுடைய ரஜஸ்தமோ குணங்களுக்குத் தக்கபடி) தாங்கள் எப்படி அறிந்திருக்கிறார்களோ அப்படி வாய்விட்டுப் புகழ்ந்து
- இவர் இவர் எம்பெருமான் என்று — தாங்களறிந்த சில தேவதாந்தரங்களையே கடவுளாகச் சொல்லிக் கொண்டு
- சுவர்மிசை சார்த்தியும் — சுவரிலே சித்திர ரூபமாக எழுதியும்
- வைத்தும் — பிரதிமையாக ஆங்காங்கு ஸ்தாபித்தும்
- தொழுவர் — தொழுகின்றார்கள்;

(எவர் என்ன செய்தாலும்)

- உலகு அளந்த மூர்த்தி — (எல்லாத் தெய்வங்களும் தன் காலின்கீழே அடங்கும்படி) உலகங்களை யளந்த ஸ்வாமியினுடைய
- உருவே — திருமேனியொன்றே
- முதல் — முக்கியமானது.

* * *—[அவரவர்தாந்தாம்.] கீழ்ப்பாட்டில் “ஆதியாய் நின்றாரவர்” என்றதை விவரித்துப்பேசுகிறது இப்பாட்டு. உலகத்திலுள்ள ஜனங்கள் ஒவ்வொரு தெய்வங்களைப் பரதேவதையாகக்கொண்டு தாம்தாம் கற்ற சொற்களைக்கொண்டு அத்தெய்வங்களைத்துதித்து விக்ரஹாராதநம் விசேஷமென்றறிந்து சுவர்

களிலே சித்திரரூபமாக அத்தெய்வங்களை யெழுதியும் லோஹமய பிம்பங்களாக ஆலயங்களில் பிரதிஷ்டைசெய்தும் தொழா நின்றார்களாகிலும், அம்மன் பிடாரி முதற்கொண்டு சிவன் முடிவாக வுள்ள தெய்வங்களுக்கெல்லாம் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே பிரதான தேவதையாம் என்றாராயிற்று. கீழ்ப்பட்ட தெய்வங்களெல்லாம் எம்பெருமானை ஆச்ரயித்தே ஸத்தை பெறவேண்டும்படி அவனே முழுமுதற் கடவுள் என்கை.

அவரவர் என்ற சுட்டு—அவர்களின் குணக்குறைவைக்காட்டும். ஸத்வகுண பூர்த்தியில்லாத ஜனங்களெல்லாம் என்றபடி. தாந்தாமறிந்தவாறுவது—சாஸ்த்ரங்களையும் சிஷ்டாசாரங்களையுங் கொண்டு அறியகில்லாமல் தங்களுடைய ராஜஸ தாமஸபுத்திகளுக்கு எட்டியவாறு.

இப்பாட்டில் ஸ்ரீமந் நாராயணனை 'உலகளந்தமூர்த்தி' என்ற திருநாமத்தால் குறிப்பிட்டது கருத்தோடுகூடியதாம்; புருஷோத்தமனான எம்பெருமானைவிட்டு க்ஷுத்ர தெய்வங்களைப்பணிகின்ற ஸம்ஸாரிகளோடு அத்தெய்வங்களோடு வாசியின்றியே எல்லாரும் தன்னுடைய திருவடியின் கீழே துகையுண்ணுமாறு உலகங்களை வியாபித்தவனென்று சொல்லுமாற்றால் இவனே முழுமுதற் கடவுளென்று மூதலித்தாராய்த்து. மூர்த்தி—ஸ்வாமி. ... (கச)

முதலாவார் மூவரே அம்மூவ ருள்ளும் *
முதலாவான் மூரிநீர் வண்ணன் *—முதலாய
நல்லா னருளல்லால் நாமநீர் வையகத்துப் *
பல்லா ரருளும் பழுது. (கரு)

(உலகத்தில் பலபல தெய்வங்கள் வழங்கப்பட்டாலும்)

மூவரே — (ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு உரியவரான) பிரமன் விஷ்ணு ருத்ரன் என்கிற மூவருமே

முதல் ஆவார் — முக்கியரான தேவர்களாவர்;

அம்மூவர் உள்ளும் — அந்த த்ரிமூர்த்திகளுக்குள்ளே

மூரி நீர் வண்ணன் — கடல் வண்ணனாகிய திருமாலே

முதல் ஆவான் — தலைவனாயிருப்பவன்;

முதல் ஆய	உலகுக்கெல்லாம் காரண பூதனும்	நாமம்நீர் வையகத்து	கடல்சூழ்ந்த இப்பூமியில்
நல்லான்	நற்குணங்களமைந்தவனுமான அப் பெருமானுடைய	பல்லார்	(அத்திருமால் தவிர மற்றும்) பலருடைய
அருள் அல்லால்	கிருபையானது நன்மையை விளைக்குமே யொழிய	அருளும்	தயையும்
		பழுது	பயனற்றதாம்.

* * *—[முதலாவார்.] கீழ்ப்பாட்டில் "உலகளந்தமூர்த்தி யுருவேமுதல்" என்றருளிச்செய்த ஆழ்வாரை நோக்கிச் சிலர் 'கீழ்ப்பட்ட தெய்வங்களென்று உம்மால் கூறப்படுகின்ற தெய்வங்களும் தம்மைத் தொழுகின்றவர்களுக்குப் பலன்களையளிக்கக் காண்கிறோமே; அவர்களது அருளைப் பலரும் பெற்று வாழ்கின்றனரன்றோ' என்றுகூற, அவர்களுக்கு விடையளிக்கிறாரிப்பாட்டில். தெய்வம் தெய்வமென்று நாட்டிலே பலர் வழங்கப்படினும், படைத்தல் காத்தல் அழித்தல் என்கிற மூன்று தொழில்களுக்கும் கர்த்தாக்களாக ஏற்பட்ட ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரன் என்ற மூவருமே முதன்மைபெற்ற தேவர்களாவார்; அந்த த்ரிமூர்த்திகளுக்குள்ளே கடல் வண்ணனாகிய ஸ்ரீமந்நாராயணனே தலைமை பெற்றிருப்பவன். ஸகல ஜகத்காரண பூதனாய் எல்லாரிடத்திலும் வாத்ஸல்யம் நிறைந்தவனான அந்தத் திருமாலின் திருவருள் நன்மையைத்தருமேயொழிய வேறு எந்த தெய்வத்தினருளும் சாச்வதமான நன்மையை நல்கமாட்டாது; அவ்வருளைப்பெற நினைப்பது வீணேயாகும் என்றாராயிற்று. க்ஷுத்ர தெய்வங்களின் அருள் க்ஷுத்ர பலன்களுக்கே காரணமாவதனாலும பரமபுருஷனுடைய பேரருள் ஒப்புயர்வற்ற அழிவில்லாத பேரின்பத்தைப் பெறுவிக்கக் காரணமாவதனாலும் 'முதலாய நல்லானருளே நன்று, பல்லாரருளும் பழுது' என்னத்தட்டில்லையென்க.

"முதலாவார் மூவர்" என்றே பெரும்பான்மையாகப் பாடம் வழங்கிவருமாயினும், அதில் தளைதட்டுதலாலும் பெரியோர்களின் பாடமன்றாகையாலும் 'மூவரே' என்ற பாடமே கொள்ளப்பட்டது. சிலர், 'மூவர்' என்றே பாடங்கொண்டு "அம்மூவருள்ளும்"

என்றவிடத்து "அம்மூவரினுள்ளும்" என்று கொண்டால் வெண்டளைக்குச் சேர்ந்துவிடுகிறதென்பர்; ஆன்றோரருளிச் செயல்களில் நம்முடைய ஸ்வாதந்திரியத்தை உபயோகித்தல் உரியதன்றென்றுணர்க.

மூரிநீர் = மூரியென்று பெருமையும் வலிமையுமாம். நாமநீர் = 'நாமம்' என்ற வட சொல் பேர் என்று பொருள்படும்; பேர் என்றால் பெரியது என்றபடியாம்; ஆகவே இங்கு இச்சொல் லக்ஷித லக்ஷணையால் பெரிய நீர் என்று பொருள்படும். வில்லிபுத்தூரார் பாரதத்தில் புத்திசேனனைக் குறிக்கவேண்டுமிடத்து, "திங்கள் சேர் பெயரினான்" என்றதுபோல. (திங்கள்—சந்திரன்; சந்திரனுக்குத் தமிழிலே மதியென்று பெயர்; மதியென்ற வடசொல் புத்தியென்று பொருள்படுமாதலால் புத்திசேனனையுணர்த்திற்றாம்.) இனி வேறு வகையாகவும் பொருள் கூறுவர். ... (௧௫)

பழுதே பலபகலும் போயினவென்று * அஞ்சி
அழுதேன் அரவணைமேற் கண்டு—தொழுதேன் *
கடலோதம் காலலைப்பக் கண்வளரும் * செங்கண்
அடலோத வண்ணரடி. (௧௬)

கடல் ஓதம்	கடலலையானது	அடி	திருவடிகளை
கால்	தன்திருவடி வாரத்திலே	அரவு அணை மேல்	சேஷசயனத்தின் மீது
அலைப்ப	(துடைதட்டி உறங்கச்செய்வது போல) வீச	கண்டு தொழுதேன்	கண்ணாரக்கண்டு (இன்று) ஸேவிக்கப்பெற்ற அடியேன்
கண்வளரும்	யோகநித்திரை செய்கின்ற	பல பகலும்	"கீழ்க்கழிந்த காலமெல்லாம்
செம் கண்	செந்தாமரை போன்ற திருக்கண்களையுடையவரும்	பழுதே போயின என்று	(இவ்விதமாகக் கழியாமல்) வீணாகக் கழிந்தனவே!" என்று
அடல் ஓதம் வண்ணர்	அநுபவிக்க இழிந்தவர்களை அநுபவிக்க வொட்டாமல் அடர்க்கின்ற ஸௌந்தரியமாகிற அலைகளோடு கூடிய வடிவையுடையவருமான பெருமானுடைய	அஞ்சி அழுதேன்	மிகவும் சோகமுற்றுக் கிடக்கின்றேன்.

* * *—[பழுதேபலபகலும்.] கீழ்ப்பாட்டில் "முதலாய நல்லானருளல்லால்...பல்லாரருளும் பழுது" என்றருளிச்செய்த ஆழ்வார் அவ்வெம்பெருமானுடைய அருள் தம்மிடத்தில் நெடுங்காலம் பயன்படாதிருந்ததை நினைத்து, 'அந்தோ! நெடுங்காலம் பாழாய்ப் போய்விட்டதே!' என்று அநுதாபப்படுகிறாரிதில்.

இப்பாட்டில், இறந்தகாலத்தைப்பற்றி வருத்தமும் நிகழ்காலத்தைப்பற்றி மகிழ்ச்சியும் எதிர்காலத்தைப்பற்றி அச்சமும் ஆக மூன்றுகாலங்களைப்பற்றின மூன்று விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. (எங்ஙனே யெனின்?) "கடலோதம் காலலைப்பக் கண்வளரும் செங்கணடலோத வண்ணரடியை அரவணை மேல் கண்டு (இன்று) தொழுதேன்" என்றமையால் நிகழ்காலத்தில் பகவத்ஸேவை வாய்க்கப்பெற்ற ஆநந்தம் வெளியிடப்பட்டதாயிற்று; "பழுதே பலபகலும் போயினவென்று அழுதேன்" என்றமையால், கீழ்க்கழிந்த அநாதிகாலமெல்லாம் இவ்விதமாக ஆநந்தமயமாய்க் கழியவில்லையே யென்கிற வருத்தம் காட்டப்பட்டது; "அஞ்சியழுதேன்" என்றமையால்— இனிமேல் வரப்போகிற காலமும் கீழ்க்கழிந்த காலம்போலே வீணாகக்கழிந்து விடுமோ வென்கிற அச்சம் காட்டப்பட்டது.

"கண்டு தொழுதேன்" என்னப்பெற்ற பின்பு எதிர்கால நிலைமைக்கு அஞ்ச வேண்டுவானேன்? என்னில்; தாம் இருப்பது இருள் தருமாஞாலத்திலாகையாலே 1. "விண்ணுளார் பெருமாற்கு அடிமை செய்வாரையும் செறுமைம்புலனிவை, மண்ணுளென்னைப் பெற்றால் என் செய்யா?" என்கிறபடியே இந்த லீலா விபூதியின் ஸ்வபாவத்தை நினைத்து அஞ்சாதிருக்க முடியாதிறே. பரமபக்தனாயிருந்த ப்ரஹ்லாதாழ்வானையுமன்றோ ஒருகால் எதிரியாக்கிற்று இம்மண்ணுலகம். 2. "ஆற்றங்கரை வாழ்மரம்போலஞ்சுகின்றேன்" என்றாரே திருமங்கையாழ்வாரும்.

கீழ் ஆறும்பாட்டில் "ஒன்று மறந்தறியேன் ஓதநீர்வண்ணனை நான்" என்றும் "அன்று கருவரங்கத்துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்" என்றும் கர்ப்பவாஸகாலம் முதற்கொண்டே

---

1. திருவாய்மொழி 7—1—6.
2. பெரிய திருமொழி 11—8—1.

தாம் பகவத் விஷயப்ரவணராயிருப்பதாகச் சொல்லிக்கொண்ட இவ்வாழ்வார் இங்கே * பழுதே பலபகலும் போயினவென்று அழுவதாகச் சொல்லிக்கொள்வதேன் என்னில்; இப்பிறவிக்கு முன்னே * மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து போந்த காலங்களில் நாள்கள் பலவும் பழுதாயினவே யென்று வருந்துகிறபடி: இப் பிறவியிலும் ஆதியேபிடித்து இங்ஙனே பாசுரம்பேசி அநுபவிக்க ப்ராப்தியிருந்தும் கீழே பலநாள்கள் பாழாயினவேயென்று வருந்துவதாகக் கொள்ளவுமாம்.

பேயாழ்வார் "1. சென்றநாள் செல்லாத செங்கண்மா லெங்கண்மாலென்றநாள் எந்நாளும் நாளாகும்" என்கிறார்; (அதாவது) நிகழ்கால நிலைமை நன்றாயிருக்கப்பெற்ற ஆநந்த மிகுதியினால் இறந்தகால எதிர்கால நிலைமைகளிற் கவலையற்று எல்லாக்காலமும் எனக்கு நல்லகாலமே யென்றார்; அஃதொரு சொற்சமத்கார விசேஷமென்க.

அடலோத வண்ணர் = ஓதம் என்று கடலுக்கும் அலைக்கும் பெயர்; இவ்விடத்தில் அலை என்னும் பொருள் விவக்ஷிதம்; அதாவது திருமேனியிலே பரவுகின்றலாவண்ய தரங்கங்களைச் சொன்னபடி. அநுபவிக்க வருமவர்களை அடர்த்துத்தள்ளுகிற லாவண்ய தரங்கங்களோடு கூடிய திருமேனியையுடையவர் என்றதாயிற்று. ... ... (கசு)

அடியும் படிகடப்பத் தோள்திசைமேற் செல்ல *
முடியும் விசும்பளந்த தென்பர் *—வடியுகிரால்
ஈர்ந்தா னிரணியன தாகம் * இருஞ்சிறைப்புள்
ஊர்ந்தா னுலகளந்த நான்று. (கஎ)

இரணியனது	ஹிரண்யாஸுரனுடைய	இரு சிறை புள்ஊர்ந்தான்	பெரிய சிறகையுடைய கருடனை ஏறிநடத்தும் பவனுமாகிய எம்பெருமான்
ஆகம்	மார்வை		
வடி உகிரால்	கூர்மையான நகங்களாலே	உலகு அளந்த நான்று	உலகளந்த காலத்திலே
ஈர்ந்தான்	கிழித்தெறிந்தவனும்	அடியும்	திருவடி

1. மூன்றாந்திருவந்தாதி—17.

படி கடப்ப	பூமியை அளந்துகொள்ள	அளந்தது	அளவு படுத்திக் கொண்டது
தோள்	திருத்தோள்கள்		
திசைமேல் செல்ல	திக்குகளிலே வியாபிக்க	என்பர்	என்று சொல்லுவர்கள்.
முடியும்	கிரீடம்	(ஐயோ! நான் நேரில் ஸேவிக்கப் பெறவில்லையே. !!)	
விசும்பு	மேலுலகத்தை		

* * *—[அடியும்படிகடப்ப.] கீழ்ப்பாட்டில் "பழுதே பல பகலும் போயின" என்றருளிச்செய்ததையே விவரிக்கிறது இப்பாட்டு. இப்போது ஒரு மனிதனாகப் பிறந்திருக்கிற நான் திடீரென்று பிறந்துவிடவில்லை; ஜீவாத்மாவுக்குப் புதிதாக ஸ்ருஷ்டியென்பது இல்லையாகையால் "மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து" என்கிறபடியே அநாதிகாலமாகவே பலபல பிறவிகள்பெற்று ஸம்ஸாரியாய் வந்துகொண்டிருக்கிறேன்; எம்பெருமான் உலகளந்தருளின காலத்திலும் நான் ஏதோ ஒரு ஜந்துவாகப் பிறந்திருந்தவனேயொழிய அன்று நான் இல்லாமலிருக்கவில்லை; அப்போது நான் விவேகியாயிருந்து அந்த திவ்யசரிதையிலே ஈடுபட்டிருந்தேனாகில் அப்போதே இந்த ஸம்ஸாரத்தில் நின்றும் விடுபட்டு முக்தனாய்ப் போயிருப்பேன்; அன்று நான் அறிவிலியாய்க்கிடந்து வாணாளை வீணாளாகப் போக்கிவிட்டேன்; ஆகவே பழுதே பலபகலும் போயினவென்று கதறியழவேண்டியதாயிற்று—என்பதே இப்பாட்டின் உட்கருத்தாகும். "முடியும் விசும்பளந்தது என்பர்" என்ற சப்தஸ்வாரஸ்யம் நோக்கத்தக்கது. என்பர் என்கையாலே—உலகளந்தவாற்றை நான் இன்று பிறர்சொல்லக் கேட்கவேண்டியதாயிற்றேயொழிய நேரிலிருந்து ஸேவிக்கப் பெறவில்லையே யென்கிற அநுதாபம் நன்கு விளங்குமிறே.

கீழ் இரண்டாம்பாட்டில் "என்று கடல் கடைந்தது எவ்வுலகம் நீரேற்றது" என்று புராதன சரிதங்களெல்லாம் ப்ரத்யக்ஷம் போலப் பேசப்பட்டிருந்தாலும், கிரமமாக அவை நடந்தகாலத்திலே அவற்றைத் தாம் ஸேவிக்கப்பெறவில்லையே என்கிற வருத்தம் ஸம்பாவிதமேயன்றோ.

அடியும்படிகடப்ப=1. "கோலமாமென் சென்னிக்கு உன் கமலமன்ன குரைகழலே" என்றாற்போல அடியவர்களுக்கு சிரோபூஷணமாக அமையவேண்டிய திருவடிகளைக்கொண்டு கல்லும் கரடுமான உலகங்களையளப்பதே! என்கிற வருத்தமும், [தோள் திசைமேல் செல்ல] பிராட்டியை அணைக்கவேண்டிய திருத்தோள்களைக்கொண்டு திசைகளின்மேல் வியாபிப்பதே! என்கிற வருத்தமும், [முடியும் விசும்பளந்தது] எங்கள் கண்முன்னே விளங்கி 2. "முடிச்சோதியாய் உனது முகச்சோதிமலர்ந்ததுவோ?" என்று நாங்கள் பாசுரம் பேசவேண்டும்படியான திருமுடியை அஹங்காரிகளும் பகவத்விஷயச்சுவடறியாதவர்களுமான தேவதைகளுள்ள விடங்களிலே நிமிர்ப்பதே! என்கிற வருத்தமும் உள்ளுறையும்.

பின்னடிகளின் கருத்தையும் ஆழ்ந்து நோக்கினால், இரணியனைப்பிளந்து ப்ரஹ்லாதனுக்கு அருள்செய்தகாலத்திலும், ஸ்ரீ கஜேந்திராழ்வானைக் காத்தருளப் பெரியதிருவடியின்மீதேறி அரைகுலையத் தலைகுலைய விரைந்தோடி வந்தகாலத்திலும் நேரில் ஸேவித்து வாழா தொழிந்தேனே! என அநுதாபப்படுவதும் தோன்றும். ... ... (கள)

நான்ற முலைத்தலை நஞ்சுண்டு * உறிவெண்ணெய்
தோன்றவுண் டான்வென்றி சூழ்களிற்றை —ஊன்றிப் *
பொருதுடைவு கண்டானும் புள்வாய் கீண்டானும் *
மருதிடைபோய் மண்ணளந்த மால். (கஅ)

(பேய்ச்சியான பூதனையினுடைய)

நான்ற முலைத் தலை	சரிந்து தொங்குகின்ற முலையிலுள்ள
நஞ்சு	விஷத்தை
உண்டு	(அவள் பிணமாய் விழும்படி) அமுதுசெய்து
உறி	உறிகளிலே வைத்த
வெண்ணெய்	வெண்ணெயை(க் களவு செய்து)
தோன்ற	இச்செயல் எங்கும் ப்ரஸித்தமாம்படி
உண்டான்	அமுது செய்தவனும்
வென்றி	ஜயத்தையுடைய
சூழ்	எதிர்ப்பவர்களைத் தப்பாமல் தன் கையில் அகப்படுத்திக் கொள்ளவல்ல

1. திருவாய்மொழி 4—3—6. 2. திருவாய்மொழி 3—1—1.

களிற்றை	(கம்ஸனுடைய) யானையை	மருது இடை போய்	இரட்டை மருத மரங்களின் நடுவே தவழ்ந்து சென்றவனாய்
ஊன்றி பொருது	எதிர்நின்று யுத்தம் செய்து		
உடைவு கண்டானும்	அழித்தொழித்த வனும்	மண் அளந்த	உலகங்களை அளந்து கொண்டவனை
புள் வாய் கீண்டானும்	பகாசுரனுடைய வாயைக் கிழித்துப் போகட்டவனும் (யாவனெனில் ?)	மால்	எம்பெருமானே யாவன்.

* * *—[நான்றமுலைத்தலை.] இப்பாசுரமும் கீழ்ப்பாசுரம் போலே இழந்தநாளைச் சொல்லி அநுதாபப்படுவதாம். ஸ்ரீ கிருஷ்ணனாய்த் திருவவதரித்துப் பேய்ச்சியை முலையுண்கிற வியாஜத்தாலே முடித்தும், நவநீதம் முதலியவற்றைக்களவாடி அமுது செய்தும் குவலயாபீடமென்கிற கம்ஸனது மதயானையை முடித்தும் பகாஸுரனை வாய்பிளந்தும் இரட்டை மருதமரங்களை முறித்துத்தள்ளியும் இப்படி பல்வகையான சிறுச்சேவகங்களைச் செய்தருளின காலத்திலும் ஸேவிக்கப்பெறாதே இழந்தேனே! என்கிறார்போலும். இழந்ததற்கு அநுதாபப்படுவதாகப் பாசுரத்தில் வாய்ச்சொல் இல்லையாயினும் கீழ்ப்பாசுரங்களின் ஸந்தர்ப்பத்தை நோக்குங்கால் இழந்தநாளைக்கு அநுதாபம்தோன்றவே இப்பாசுரமருளிச்செய்வதாகக் கொள்ளலாம். “ இடக்கை வலக்கை அறியாதாரும் வாழும்படி இடைக்குலத்திலே வந்து பிறந்தவிடத்திலும் இழந்தேனிறே என்று சோகிக்கிறார் ” என்றார் முன்னோர்களும். இனி, கிருஷ்ணாவதார சரித்திரங்கள் சிலவற்றைச்சொல்லி ஆநந்தமாகப் போதுபோக்குகிறார் எனினும் குற்றமில்லை.

களிற்றையூன்றிப்பொருத வரலாறு :— வில்விழாவென்கிற வியாஜம் வைத்துக் கம்ஸனால் வரவழைக்கப்பட்டு ஸ்ரீ கிருஷ்ண பலராமர்கள் கம்ஸனரண்மனையை நோக்கிச் செல்லுகையில், அவனது அரண்மனைவாயில் வழியில் தம்மைக் கொல்லும்படி அவனால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயா பீடமென்னும் மதயானை பாகனால் தூண்டப்பட்டுச் சீறிவர, அந்த யாதவவீரர் அதனை யெதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை எடுப்பது

போல எளிதிற்பறித்து அவற்றையே ஆயுதமாகக்கொண்டு அடித்து அந்த யானையை உயிர்தொலைத்துவிட்டு உள்ளேபோயின ரென்பதாம்.

புள்வாய்கீண்ட வரலாறு:—கண்ணபிரானைக் கொல்லுமாறு கம்ஸனால் ஏவப்பட்ட ஓரஸுரன் கொக்கின் உருவங்கொண்டு சென்று யமுனைக்கரையில் கண்ணபிரானை விழுங்கிவிட, அவனது நெஞ்சில் கண்ணன் நெருப்புப்போல எரிக்கவே அவன் பொறுக்க மாட்டாமல் கண்ணனை வெளியே உமிழ்ந்து மூக்கால் குத்த நினைக்கையில் கண்ணன் அவன் வாயலகுகளைத் தனது இருகைகளினு லும் பற்றிக் கிழித்திட்டனனென்பதாம்.

மருதிடைபோன வரலாறு:—கண்ணன் குழந்தையாயிருக்குங் காலத்தில் துன்பப்படுத்துகின்ற பல விளையாடல்களைச்செய்யக் கண்டு கோபித்த யசோதை கிருஷ்ணனைத் திருவயிற்றில் கயிற்றி னால் கட்டி ஒருரலிலே பிணித்துவிட கண்ணன் அவ்வுரலை யிழுத் துக்கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருதமரத்தின் நடுவே சென்றபொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப் பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தவளவில் முன் நாரதர் சாபத்தால் அம்மரங்களாய்க்கிடந்த நளகூபரன் மணிக்ரீவன் என்னும் குபேர புத்திரர் இருவரும் சாபம்தீர்ந்து சென்றனர். இந்தக் குபேரபுத்திரர்கள் முன்பு ஒருகாலத்தில் பல அப்ஸரஸ் ஸ்த்ரீகளுடனே ஆடையில்லாமல் ஜலக்ரீடை செய்துகொண்டிருக்கையில் நாரதமுனிவர் அங்கு எழுந்தருள மங்கையர் அனைவரும் நாணங்கொண்டு ஆடையெடுத்து உடுத்து நீங்க, இந்த குபேரபுத்திரர்கள் மாத்திரம் மதுபான மயக்கத்தி னால் வஸ்திரமில்லாமலேயிருக்க, நாரதர் கண்டு கோபங்கொண்டு 'மரங்கள்போலிருக்கிற நீங்கள் மரங்களாவீர்' என்று சபிக்க, உடனே அவர்கள் வணங்கி வேண்டிக்கொண்டதற்கு இரங்கி 'நெடுங்காலஞ் சென்றபின்பு திருமால் உங்களருகே நெருங்குங் காலத்தில் இவ்வடிவமொழிந்து முன்னையவடிவம் பெற்று மீள்வீர்' என்று சாபவிடைகூறிப் போயினர். இப்படி சாபத்தினால் மரங்க ளான இவற்றில் கம்ஸனாலேவப்பட்ட இரண்டு அஸுரர் களும் ஆவேசித்துக்கிடந்தனரென்று சில புராணங்கள் கூறும்;

1. "ஒருங்கொத்த விணைமருத முன்னிய வந்தவரை" என்றும் 2. "போய்ம்மாயமருதானவசுரரை" என்றும் பெரியாழ்வாரு மருளிச்செய்தார்.

"மருதிடைபோய் மண்ணளந்த" = உலகளப்பதற்கு முன்னே மருதிடைபோனன் என்று பொருளன்று; மருதிடைபோனது ஒருகாலத்திலும் மண்ணளந்தது ஒருகாலத்திலுமாகிலும் ஆழ்வாருடைய ஜ்ஞாநவைசத்யத்தாலே அநுஸந்தாந தோரணியில் முன்னது பின்னதென்கிற வாசியின்றியே எல்லாம் ஒன்றுசேர விளங்குகிறபடி.

"புள்ளின் வாய் கீண்டானும்" என்ற பாடமே பெரும்பாலும் வழங்கிவருகின்றது; இப்பாடத்தில் வெண்டளை பிறழ்வதால் "புள்வாய் கீண்டானும்" என்ற மேலையார்பாடத்தைப் பேணுதல் தகும். ... ... (கஅ)

மாலுங் கருங்கடலே! என்நோற்றாய்? * வையகமுண்
டாலி னிலைத்துயின்ற வாழியான் *—கோலக்
கருமேனிச் செங்கண்மால் கண்படையுள் * என்றும்
திருமேனி நீதீண்டப் பெற்று. (கக)

வையகம்	இவ்வுலகத்தை யெல்லாம்
உண்டு	(பிரளயம் கொள்ளாதபடி) திருவயிற்றினுள்ளே வைத்து
ஆலின் இலை	ஆலந்தளிரிலே
துயின்ற	சயனித்துக் கொண்டவனும்
ஆழியான்	திருவாழியை யுடையவனும்
கோலம் கரு மேனி	அழகிய கறுத்த திருமேனியை யுடையவனும்
செம் கண்	செந்தாமரைக் கண்ணனுமான
மால்	எம்பெருமான்
கண்படையுள்	உறங்குகையில்
என்றும்	எப்போதும்
திருமேனி	அவனுடைய திருமேனியை
தீண்ட பெற்று	ஸ்பர்சிக்கப்பெற்று
மாலும்	(அந்த ஸ்பர்ச ஸுகத்தினால்) மயங்கிக் கிடக்கிற
கரு கடலே	கரிய ஸமுத்ரமே!
நீ என் நோற்றாய்	(இந்தப் பாக்கியம் உனக்குக் கிடைக்குமாறு) நீ என்ன நோன்பு நோற்றாயோ?

1. பெரியாழ்வார் திருமொழி 1-5-5. 2. பெரியாழ்வார் திருமொழி 3-1-3

* * *—[மாலுங்கருங்கடலே.] * பழுதே பலபகலும் போயின வென்று அழுத ஆழ்வார், 'நம்மைப்போலே எல்லாரும் ஏமாந்தவர்கள்தானோ, அன்றி யாராவது எம்பெருமானை ஒரு நொடிப்பொழுதும் விடாது அநுபவிக்கப்பெற்றவர்களுண்டோ' என்று ஆராய்ந்துபார்த்தார்; 1. "மாகடல் நீருள்ளான்" என்கிறபடியே ஸமுத்ரத்தில் ஸர்வகாலமும் எம்பெருமான் திருக்கண் வளர்ந்தருளும் செய்தி நினைவுக்கு வந்தது; ஹா! ஹா!! ஸமுத்ர ராஜனுடைய பாக்கியமே பாக்யம்; ஒரு நொடிப்பொழுதும் விடாமல் எம்பெருமானது திருமேனியைத் தீண்டப்பெற்றிருக்கிறானன்றோவென்றநுஸந்தித்து அக்கடல்தன்னையே நோக்கி 'இப்படி உனக்குப் பகவதநுபவம் நித்யமாய்ச் செல்லும்படி நீ என்ன நோன்பு நோற்றாய் கொல்?' என வினவுகின்றார். நீ நோற்ற நோன்பைச் சொல்லுவாயாகில் நானும் அந்த நோன்பை நோற்று இப்பேறுபெறுவேன்காண்-என்பது உள்ளுறை.

அஃறிணைப் பொருளான கடலை நோக்கிக் கேள்விகேட்பதாகப்பேசின இப்பாசுரத்தின் கருத்தாவது-எம்பெருமான் இடைவிடாது திருப்பாற்கடலில் சயனித்துக்கொண்டு * உறங்குவான் போல் யோகுசெய்யும் பெருமானாயிருக்கின்றானென்பதைக் காட்டுவதேயாமென்க.

கருங்கடலே != திருப்பாற்கடல் வெண்ணிறமுள்ளதாயினும் கார்முகில் வண்ணனான எம்பெருமானுடைய நிழலீட்டாலே கருங்கடலாயிற்று. பட்டர் ஸ்ரீ ரங்கராஜ ஸ்தவத்திலே ஸ்ரீரங்க விமானத்தைப்பற்றிப் பேசும்போது "அபி ஃபணிபதிபாவாத் ஶுப்ரம், அந்த: ஶயாநோ: மரகதஸுகுமாரை: ரங்கபர்த்துர் மயூகை:। ஸகலஜலதிபாநஶ்யாமஜீமூதஜைத்ரம் புலகயதி விமாநம் பாவநம் லோசநே ந:"= அபி பணிபதிபாவாத் சுப்ரம், அந்தச் சயானோ: மரகதஸுகுமாரை: ரங்கபர்த்துர் மயூகை:—ஸகல ஜலதிபாநச்யாமஜீமூதஜைத்ரம் புளகயதி விமாநம் பாவநம் லோசநே ந:" என்றருளிச் செய்தச்லோகம் இங்கு ஸ்மரிக்கத்தகும். இதன் கருத்தாவது — திருவனந்தாழ்வானே ஸ்ரீரங்கவிமாநமாக எழுந்தருளியிருக்கையாலே இவ்விமானம்

---

1. மூன்றாந்திருவந்தாதி—3.

வெண்ணிறமுள்ளதாயினும், உள்ளே சயனித்திருக்கின்ற ஸ்ரீரங்கநாதனுடைய மைவண்ணத்திருமேனி நிறத்தின் நிழலீட்டாலே கடலைப்பருகிக் கிளர்ந்த காளமேகத்தைவென்று விளங்குகின்றது ....என்பதாம்.

"கருங்கடலே!" என்றவிளியில்—பகவத் விரஹ வ்யஸநத்தாலே நான்மாத்திரம் உடம்பு வெளுத்திருக்க, நீ நித்யஸந்தோஷச் செருக்குத்தோன்ற மாமைபெற்று விளங்குகிறாயே! என்பதாகக் கருத்துத்தொனிக்கும்.

1. "உவர்க்குங் கருங்கடல் நீருள்ளான்" என்று உப்புக்கடலிலும் எம்பெருமான் உளனாகக்கூறுகையாலே இங்கு 'மாலுங் கருங்கடலே!' என்று உப்புக்கடலையே விளித்ததாகக்கொள்ளுதலும் கூடும்.

கண்படை—கண்வளர்ந்தருளுகிற நிலை; யோகத்துயில்நிலையெனக்கொள்க. ... ... (கக)

பெற்றார்தளை கழலப் பேர்ந்தோர் குறளுருவாய்ச் *
செற்றார் படிகடந்த செங்கண்மால் *—நற்றா
மரைமலர்ச் சேவடியை வானவர்கை கூப்பி *
நிரை மலர்கொண் டேத்துவரால் நின்று. (உ0)

பெற்றார்	மாதா பிதாக்களான வஸுதேவ தேவகிகளுடைய	செற்றார் படி	ஆச்ரித விரோதியான மாவலி தன்னதென்று நினைத்திருந்த பூமியை
தளை கழல	கால் விலங்கு அற்றுப்போம் படியாக	கடந்த	அளந்து தன்னுடைய தாக்கிக்கொண்ட
பேர்ந்து	திருப்பாற்கடலில் நின்றும்) பெயர்ந்து (க்ருஷ்ணனாக வந்து பிறந்தவனும்,)	செம் கண் மால்	புண்டரீகாக்ஷனுடைய
		நல் தாமரை மலர் சே அடியை	அழகிய தாமரை போற் சிவந்த திருவடிகளை
ஓர் குறள் உரு ஆய்	விலக்ஷண வாமந வேஷத்தை யுடையனாய்	வானவர்	இந்திராதி தேவர்கள்
		கைகூப்பி	அஞ்ஜலி செய்துகொண்டு

1. மூன்றாந்திருவந்தாதி—37.

நிரை மலர் கொண்டு நின்று	தொடைவாய்த் திருந்துள்ள பூக்களை ஸமர்ப்பித்துக்கொண்டு பணிந்து	ஆல்	ஐயோ! (அப்போது அவர்களைப் போலே தாமும் துதிக்கப்பெறவில்லையே யென்கிற துக்கத்தைக் காட்டுகிறது.)
ஏத்துவர்	துதிப்பார்கள்;		

* * *[—பெற்றார்தளைகழல.] க்ருஷ்ணாவதார காலத்திலும் த்ரிவிக்ரமாவதார காலத்திலும் எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளை ஏத்தியிறைஞ்சப்பெற்ற பாக்கியசாலிகள் பலரிருந்தனரன்றே; அப்பாக்கியம் அடியேனுக்கு வாய்க்கவில்லையே! என்று நோவுபடுகிறார்.

பெற்றார்தளைகழலப்பேர்ந்து = ஸ்ரீக்ருஷ்ணனாய்ப் பிறந்தபடியைச் சொல்லுகிறது. பெற்றார் என்று கண்ணபிரானுடைய மாதாபிதாக்களான வஸுதேவ தேவகிகளைச் சொல்லுகிறது; அவர்களுடைய தளை—விலங்கு; அது நேர்ந்தவிதமும் கழன்றவிதமும் யாதெனில்;—மதுராநகரத்தில் யதுவம்சத்தில் உக்ரஸேநன் என்றொரு தார்மிகன் அரசனாயிருந்தான்; அவனது மகன் கம்ஸனென்பான். இக்கஞ்சன் துஷ்டர்களில் தலைவனாயிருந்து கொண்டு பெரியோர்கட்குத் தீமையும் புல்லியர்கட்கு நன்மையும் செய்து கொண்டு தன்பலத்தினால் தனது தந்தையாகிய உக்ரஸேநனைச் சிங்காதனத்தினின்று தள்ளிவிட்டுத் தானே அரசாண்டுவருங் காலத்து, கம்ஸன் தனது உடன்பிறந்தவளாகிய தேவகியை யுக்த வயதில் வஸுதேவர்க்கு விவாஹம் செய்வித்து அவ்விவாஹம் முடிந்தபின் அவளை வஸுதேவர் மாளிகையிற் கொண்டு விடுகைக்காகத் தேரேற்றிக்கொண்டு தான் தேவகியிடத்தில் மிக்க அன்பு ஆதரத்துடன் ஸாரதியாயிருந்து தேரை நடத்திக்கொண்டு வரும்போது, ஆகாயத்தில், 'அறிவுகேடனே! நீ யாரிடத்தில் அன்பு பூண்டிருக்கின்றனையோ அந்தத் தேவகியின் எட்டாவது கர்ப்பம் உன்னைக் கொல்லப்போகிறது' என்றொரு அசரீரிவாக்குப் பிறக்க, அதனைக் கேட்ட கம்ஸன் மிகவும் திடுக்கிட்டு 'இனி நாம் தப்ப வழியாது?' என்று யோசித்து, 'இவள் பிழைத்திருந்தாலன்றோ இவளது எட்டாவது பிள்ளை நம்மைக் கொல்லப்போகிறது; இப்போதே இவளைக்கொன்றுவிடுவோம்' என்றுநிச்சயித்துக் கத்தியை

உருவிக்கொண்டு தேவகியைக் கொலை செய்யப்புக, வஸுதேவர் அவனுக்குப்பல தருமங்களையும் காலகதியையும் பரக்க உபதேசிக்கவும் அவன் அதை மதியாமல் ஒரே பிடிவாதமாய் நிற்க, பின் வஸுதேவர் 'அப்பா! உனக்கு இவள்கையால் சாவு இல்லை; இவளுடைய பிள்ளை கையினாலல்லவோ சாவு நேரிடப்போகிறது; இவளுக்குப் பிள்ளை பிறந்தவுடன் அப்பிள்ளைகளை உன்னிடம் கொடுத்துவிடுகிறேன், நீ அவற்றைக் கொன்றுவிடு' என்று சொல்ல; கம்ஸன் அதை யுக்தமென்று கொண்டு இத்தம்பதிகளை விலங்கிட்டுச் சிறையிலடைத்திட்டான். சிலநாள் கழிந்தபின்பு தேவகி கர்ப்பந்தரித்துப் பிள்ளை பெற்றாள்; வஸுதேவர் அப்பொழுதே அப்பிள்ளையைக் கம்ஸனிடம் கொண்டுபோய்க்கொடுத்துவிட, அவன் அதைக்காலைப்பிடித்துக் கல்மேலறைந்து கொன்றுவிட்டான்; "மக்களறுவரைக் கல்லிடைமோத" என்றபடி இவ்வாறு ஆறுபிள்ளைகளைக் கொன்றான். எம்பெருமானால் நியமிக்கப்பட்ட யோகநித்திரை யென்னும் மாயை, நந்தகோபருடைய கோகுலத்திலிருந்த வஸுதேவ பத்தினியான ரோஹிணியின் வயிற்றிலிருந்த வாயுரூபமான ஆறுமாதத்துக் கர்ப்பத்தைக் கலைத்துவிட்டு வஸுதேவருடைய மற்றொரு பத்தினியான தேவகியின் வயிற்றிலிருந்த ஆதி சேஷாம்சமான கர்ப்பத்தைக் கொண்டுபோய் அந்த ரோஹிணியின் வயிற்றில் சேர்த்திட, இங்ஙனம் வஸுதேவ பத்தினிகளுள் தேவகியின் கர்ப்பத்தில் (ஏழாவது கருவாக) ஆறு மாஸமும், ரோஹிணியின் கர்ப்பத்தில் மற்றோர் ஆறுமாஸமுமிருந்து பலராமன் பிறந்தனன். பிறகு திருமால் தேவகியிடம் எட்டாவது கர்ப்பத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாயவதரிக்க அப்போதே வஸுதேவ தேவகிகளின் கால்விலங்கு இற்று முறிந்து விழுந்தது. "தந்தைகாலில் பெருவிலங்கு தாளவிழ நள்ளிருட்கண் வந்த வெந்தை பெருமானார்" என்றும் "தந்தைகாலில் விலங்கற வந்து தோன்றிய தோன்றல்" என்றும் திருமங்கையாழ்வாரு மருளிச் செய்தார்.

"பெற்றார் தளைகழலப் பேர்ந்தோர்குறளுருவாய்" என்றிருப்பதுகொண்டு கிருஷ்ணனைப் பிறந்தபின் வாமநனைப் பிறந்தானென்று கருதவேண்டா; ஒருகாலத்தில் கிருஷ்ணனைப் பிறந்தவ

னும் மற்றொருகாலத்தில் வாமநனாய்ப் பிறந்தவனுமான ஸர்வேச்வரன் என்றபடி. அன்றி, "பெற்றார் தளைகழலப் பேர்ந்து" என்பதும் வாமநாவதாரச் செயலையே கூறுவதெனவும் கொள்வர்; அப்போது, பெற்றார் என்றது—தன்னை ஆச்ரயிக்கப் பெற்றவர்களென்றபடி; அவர்களுடைய தளையாவது—கருமபந்தம்; அது நீங்கும் படியாகப் பரமபதத்தில் நின்றும் வந்து ஓர் குறளுருவான படியைச் சொல்லிற்றாகக் கொள்க.

செற்றார்படி = செற்றாரென்று சத்ருக்களுக்குப் பெயர்; படி யென்று பூமிக்குப் பெயர்; ஆச்ரிதவிரோதிகளான மஹாபலி போல்வார் தங்களுடையதென்று அபிமாநித்திருந்த பூமியை என்றதாயிற்று.

ஈற்றடியில் "ஏத்துவராம் நின்று" "ஏத்துவரால் நின்று" என்பன பாடபேதங்கள். தங்கள் காரியத்தையே பார்ப்பவரான தேவர்களும் எம்பெருமானது திருவடிகளை ஏத்தியிறைஞ்சப் பெற்றார்களே! என்கிற ஆச்சரியமும் தொனிக்கும். ... (உ௦)

நின்று நிலமங்கை நீரேற்று மூவடியால் *
சென்று திசையளந்த செங்கண்மாற்கு *—என்றும்
படையாழி புள்ளூர்தி பாம்பணையான் பாதம் *
அடையாழி நெஞ்சே! யறி. (உக)

சென்று நின்று	(மஹாபலியின் யாகபூமியிற்) போய் நின்று	ஆழி	சக்கரமானது
		படை	ஆயுதமாயிருக்கும்;
அம் கை	(தனது) அழகிய திருக்கையினால்	புள்	கருடன்
நீலம் நீரேற்று	பூமிதானம்வாங்கி	ஊர்தி	வாஹனமாயிருப்பன்;
மூ அடியால்	மூன்றடிகளாலே	ஆழி நெஞ்சே	கம்பீரமான மனமே!
திசை அளந்த	எல்லாவிடங்களையும் ஸ்வாதீனப் படுத்திக்கொண்ட	அறி	நான் சொல்வதை ஆராய்ந்து கொள்;
செம் கண் மாற்கு	செந்தாமரைக் கண்ணனான எம்பெருமானுக்கு	பாம்பு அணையான் பாதம் அடை	சேஷசயனனான அப்பெருமானுடைய திருவடிகளை அடைந்திடு.
என்றும்	எப்போதும்		

* * *—[நின்றுநிலமங்கை.] தம்முடைய திருவுள்ளத்தை நோக்கி எம்பெருமானுடைய ஸௌசீல்யகுணத்தை உரைக்கின்றார். முன்னடிகளில் உலகளந்த வரலாற்றை எடுத்துரைத்ததன் கருத்து—இப்படிப்பட்ட அவனது மேன்மையைப் பார்த்து நெஞ்சே! நீ பின்வாங்கவேண்டா என்றவாறு. நம்முடைய விரோதிகளைத் தலைதுணிப்பதற்கு அப்பெருமான் கையுந்திருவாழியுமாயிருப்பவன்; நாம் இடர்பட்டால் நம்முடைய கூக்குரல் கேட்டவுடனே சடக்கென ஓடிவந்து நம்மைக் காப்பதற்குப் பாங்காகப் பெரிய திருவடியை வாஹனமாகவுடையவன் என்கிறார் என்றும் படையாழி புள்ளூர்தி என்பதனால். ... ... (உக)

அறியு முலகெல்லாம் யானேயு மல்லேன் *
பொறிகொள் சிறையுவண மூர்ந்தாய் *—வெறிகமழும்
காம்பேய் மென்தோளி கடைவெண்ணெ யுண்டாயை *
தாம்பேகொண் டார்த்த தழும்பு. (உஉ)

பொறி கொள் சிறை	பல நிறங்களையுங் கொண்ட சிறகுகளையுடைய	உண்டாயை	(களவிலே) அமுது செய்த வுன்னை
உவணம்	கருடாழ்வானை	தாம்பே கொண்டு	(கையில் கிடைத்த தொரு) தாம்பைக் கொண்டு
ஊர்ந்தாய்	ஏறி நடத்தும் பெருமானே!	ஆர்த்த	கட்டியதனு லுண்டான
காம்பு ஏய் மென் தோளி	மூங்கிலையொத்த மெல்லிய தோள்களையுடைய யசோதையினலே	தழும்பு	காய்ப்பை (அறிபவன்)
கடை	கடையப்பட்டு	யானேயும் அல்லேன்	நானொருவனே யன்று;
வெறி கமழும்	பரிமளம்வீசப்பெற்ற	உலகு எல்லாம் அறியும்	உலகத்திலுள்ளாரெல்லாரும் அறிவர்கள்.
வெண்ணெய்	வெண்ணெயை		

* * *—[அறியுமுலகெல்லாம்.] எம்பெருமானுடைய ஸௌலப்ய குணத்தையறியாதார் ஆருமில்லை யென்கிறார். "ஆங்கொரு

நாள் ஆய்ப்பாடி, சீரார்கலையல்குல் சீரடிச்செந்துவர்வாய், வாரார் வனமுலையாள் மத்தாரப்பற்றிக்கொண்டு, ஏராரிடைநோவ எத்தனையோர்போதுமாய்ச், சீரார் தயிர்கடைந்து வெண்ணெய் திரண்டதனை, வேரார் நுதல்மடவாள் வேறோர்கலத்திட்டு, நாரா ருறியேற்றி நன்கமைய வைத்ததனைப், போரார்வேற்கண் மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம், ஓராதவன்போல் உறங்கியறிவுற்றுத், தாரார் தடந்தோள்களுள்ளளவுங் கைநீட்டி, ஆராத வெண்ணெய் விழுங்கி அருகிருந்த, மோரார்குடமுருட்டி முன்கிடந்ததானத்தே, ஓராதவன்போல் கிடந்தானைக்கண்டவளும், வாராத் தான்வைத்தது காணாள் வயிறடித்திங்கு, ஆரார் புகுதுவார் ஐயரிவரல்லால், நீராமிது செய்தீரென்றோர் நெடுங்கயிற்றால், ஊரார்களெல்லாருங் காணவுரலோடே, தீராவெகுளியளாய்ச்சிக்கன ஆர்த்து அடிப்ப" (சிறிய திருமடல்) என்ற திருமங்கையாழ்வா ரருளிச்செயல் இங்கே பரமபோக்கியமாக அநுஸந்திக்கத்தக்கது.

வெண்ணெயுண்ட குற்றத்திற்காக யசோதைப்பிராட்டி உன்னைக்கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டிவைத்திருந்ததனால் உன்னுடம்பு தழும்பேறிக்கிடக்குஞ் செய்தியை நானொருவன் மாத்திரமேயோ அறிவேன், உலகமெல்லாமறியாதோ என்கிறார்.

ஸௌலப்யகுணம் பாராட்டத்தகுந்ததாயினும் பரத்வமுள்ள விடத்தில் அஃது இருந்தால்தான் பாராட்டத்தகும்; காஷ்டம், லோஷ்டம் முதலிய குழைச்சரக்குகள் ஸுலபமாயிருந்தாலும் அந்த ஸௌலப்யம் மெச்சத்தக்கதன்று, அங்குப் பரத்வமில்லாமையால். இப்படியே ஸௌலப்யத்தோடு கூடியிராத பரத்வமும் புகழத்தக்கதன்று; மேருமலையில் பரத்வமுள்ளதெனினும் அங்கே ஸௌலப்யமில்லாமையால் அப்பரத்வத்தைப் பாராட்டுவாரில்லை. ஆகையால், ஸௌலப்யத்தோடுகூடின பரத்வமும், பரத்வத்தோடுகூடின ஸௌலப்யமுமே போற்றத்தக்கனவாம்; இவையிரண்டுங்கூடி எம்பெருமானிடத்திலுள்ளன என்று காட்டவேண்டி, "போறிகோள் சிறையுவணமூர்ந்தாய்!" என்கிறார். கருடனை வாஹனமாகக்கொண்டிருத்தல் பரத்வலக்ஷணமென்றுணர்க. வடமொழியில் கருடனுக்கு 'ஸுபர்ண:' என்றுபெயர்; அதுவே தமிழில் உவணம் எனச் சிதைந்துகிடக்கின்றது.

வெறிகமழும் என்பது வெண்ணெய்க்கு விசேஷணமாகவு மாம், காம்பேய்மென்தோளி [யசோதை]க்கு விசேஷணமாகவு மாம். காம்பு என்ற பலபொருளொருசொல் இங்கு மூங்கிலெனப் பொருள்படும்; பசுமைக்கும் சுற்றுடைமைக்கும் மூங்கிலைத் தோளுக்கு உவமைகூறுவர். உண்டானை—'உண்டான்' என்பதன் முன்னிலையின்மேல் இருண்டனுருபு ஏறியிருக்கிறதென்க.

தழும்பு—வடமொழியில் கிணம் எனப்படும். ... (உஉ)

தழும்பிருந்த சார்ங்கநாண் தோய்ந்தவா மங்கை *
தழும்பிருந்த தாள்சகடம் சாடித் *—தழும்பிருந்த
பூங்கோதை யாள்வெருவப் பொன்பெயரோன் மார்பிடந்த *
வீங்கோத வண்ணர் விரல். (உ௩)

வீங்கு ஓதம் வண்ணர்	பொங்கி அலையெறியுங்கடல் போன்ற வடிவை யுடைய எம்பெருமானது
அம் கை	அழகிய திருக்கைகளில்
சார்ங்கம்	சார்ங்க வில்லினுடைய
நாண்	நாணி
தோய்ந்த	உராய்ந்ததனு லுண்டான
தழும்பு	காய்ப்பானது
இருந்த ஆம்	இருக்கின்றதுகாண்;
தாள்	திருவடிகளிலே
சகடம் சாடி	சகடத்தையுதைத்து (அதனு லுண்டான)
தழும்பு இருந்த	காய்ப்பு இருக்கின்றது;
பூங் கோதையாள்	அழகிய மயிர் முடியையுடைய பிராட்டி
வெருவ	(என்ன நேரிடுமோ என்று) அஞ்சும்படியாக (மிக்க சீற்றத்துடனே)
பொன் பெயரோன்	இரணியா சுரனுடைய
மார்பு இடந்த தழும்பு	மார்பைக் கிழித்தெறிந்த தனு லுண்டான காய்ப்பு
விரல்	விரல்களிலே
இருந்த	இருக்கின்றது.

* * *—[தழும்பிருந்த.] "தாம்பேகொண்டார்த்த தழும்பு—அறியுமுலகெல்லாம்" என்று கீழ்ப்பாட்டிலருளிச்செய்ததைக்

கேட்ட எம்பெருமான் 'நான் வெண்ணெய் திருடினதாகவும் அதற்காகத் தாம்பினால் கட்டுண்டிருந்ததாகவும் அதனால் தழும்பு உண்டாயிருப்பதாகவும் அதனை உலகெல்லாம் அறிவதாகவும் நீர் சொல்லுவது முழுப்பொய்' என்று சொல்ல; அதுகேட்ட ஆழ்வார் 'பிரானே! ஒரு தழும்பாயிருந்தால் உன்னால் மறைக்கமுடியும்; உனது கையிலும் காலிலும் விரலிலுமாக உன்னுடம்பு முழுதும் ஆச்ரிதர்க்காகச்செய்த ஒவ்வொரு காரியத்தினால் தழும்பேறிக்கிடக்கிறதே!' என்று ஸ்ரீ ராமாவதாரத்திலும் கிருஷ்ணாவதாரத்திலும் நரஸிம்ஹாவதாரத்திலுமாக நேர்ந்த தழும்புகளையெடுத்துரைக்கின்றாரிப்பாட்டில்.

இப்பாட்டின் முதலடியைத் திருவுள்ளம்பற்றியே ஆளவந்தார் ஸ்தோத்ரரத்நத்தில் " [illegible] = சகாஸதம் ஜ்யாகிணகர்க்கசைச் சுபை: சதுர்ப்பிராஜாநுவிலம்பிபிர்ப் புஜை:" என்றருளிச்செய்தாரென்க. ஸ்ரீ தேசிகன் தசாவதாரஸ்தோத்ரத்தில் இராமபிரானைப்பற்றிப்பேசும் ச்லோகத்தில் " [illegible] = தர்மோ விக்ரஹவாந் அதர்மவிரதிம் தந்வீ ஸ தந்வீத ந:" என்று இராமனை [தந்வீ] வில்லாளியென்ற சொல்லால் கூறினமையாலும், 1. "புணராநின்ற மரமேழன்றெய்த ஒரு வில்வலவா!" என்று ஆழ்வார்களருளிச்செய்வதாலும் இங்கு நாணித் தழும்புள்ளமை கூறினது ராமாவதாரத்துக்குப் பொருந்துமென்க.

சகடஞ்சாடினது கிருஷ்ணாவதாரத்தில்;—திருவாய்ப்பாடியில் நந்தகோபர் திருமாளிகையில் ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே கண்ணனைத் தொட்டிலிலிட்டுக் கண்வளர்த்தி யசோதை யமுனை நீராடப்போனாள். கம்ஸனாலேவப்பட்ட அஸுரனொருவன் அச்சகடத்தில் வந்து ஆவேசித்து ஸ்ரீ கிருஷ்ண சிசுவின் மேலே விழுந்து கொல்லமுயன்றதை அறிந்த அப்பகவான், பாலுக்கு அழுகிற பாவனையிலே தன் சிறிய திருவடிகளை மேலே தூக்கி உதைத்தருள, அவ்வுதைபட்டமாத்திரத்தில் அச்சகடு திருப்பப்பட்டுக் கீழ்மேலாய்விழுந்து அசுரனுட்பட அழிந்ததென்று வரலாறறிக. சகடம்—வடசொல்.

மூன்றாமடியில், பூங்கோதையாள் என்று பெரிய பிராட்டியாரைச் சொல்லுகிறது. அவள் எம்பெருமானுடைய திருமார்பிலே இறையுமகல கில்லாது உறையுமவளாகையாலே, அப்பெருமான் பெரிய சீற்றத்துடனே உக்ரமான நரசிங்கவுருவைக்கொண்டபோது. 'ஜகத்துக்கே பிரளயம் விளைந்திடுமோ!' என்று அஞ்சி நடுங்கினளென்க.

கடை நிலைத்தீவகமாக நின்ற வீங்கோதவண்ணர் என்றது— கை தாள் விரல் என்ற மூன்றிலும் அந்வயிக்கத்தக்கது; கடல்வண்ணனுடைய கை, கடல்வண்ணனுடைய தாள், கடல்வண்ணனுடைய விரல் என்று.

கை, தாள், விரல் என்பவற்றையே எழுவாயாகக்கொண்டு, கைகளும் கால்களும் விரல்களும் தழும்பைச் சுமந்திருக்கின்றன என்று பொருள்கொள்ளவுமாம். ... ... (௨௩)

விரலோடு வாய்தோய்ந்த வெண்ணெய்கண்டு * ஆய்ச்சி
உரலோ டுறப்பிணித்த நான்று *—குரலோவா
தேங்கி நினைந்தயலார் காண விருந்திலையே ? *
ஓங்கோத வண்ணா ! வுரை. (௨௪)

ஓங்கு ஓதம் வண்ணா	தேங்கிக் கிளர்ந்த கடல்போன்ற வடிவை யுடையவனே!
(நீ வெண்ணெய் திருடி உண்ணும்போது)	
விரலோடு வாய் தோய்ந்த	உன் விரலிலும் வாயிலும் படிந்திருந்த
வெண்ணெய்	வெண்ணெயை
ஆய்ச்சி	யசோதையானவள்
கண்டு	பார்த்து
(உன்னைத் தண்டிக்கவேண்டி)	
உரலோடு உற பிணித்த நான்று	உரலோடு சேர்த்துக் கட்டிவைத்த போது
குரல் ஓவாது	நீ கத்துகிற கத்தல் நீங்காமல்
ஏங்கி	ஏங்கிக்கொண்டு
நினைந்து	(அப்போதும் வெண்ணெய் திருடுவதையே) சிந்தித்துக் கொண்டு
அயலார் காண	அயலாரெல்லாரும் வேடிக்கை பார்க்கும்படி
இருந்திலையே	இருந்தாயல்லவோ?
உரை	உண்மையாகச் சொல்லு.

* * *—[விரலோடு வாய்தோய்ந்த.] 'தாம்பால் ஆப்புண்ட தழும்பு எனக்கு உண்டோ?' என்று எம்பெருமானை நோக்கி ஆழ்வார் 'அஃது ஒரு தழும்புதானோ? உடம்பெல்லாம் தழும்பு மயமே காண்' என்றார் கீழ்ப்பாட்டில். சார்ங்கநாண் தோய்ந்த தழும்பும், சகடம் சாடின தழும்பும், இரணியன் மார்பிடந்த தழும்பும் வீரச் செயல்களை விளக்குவன வாதலால் அம்மூன்று தழும்புகளையும் எம்பெருமான் இசைந்துகொண்டு, * தாம்பாலாப் புண்ட தழும்பு மாத்திரம் பரிஹாஸாஸ்பதமாயிருக்குமே யென்றெண்ணி அதனை இல்லை செய்யத் தொடங்கினான்; 'நான் வெண்ணெய் திருடினது மில்லை, ஆய்ச்சி யென்னைப் பிடித்ததுமில்லை; உரலோடு சேர்த்து என்னைக் கட்டினதுமில்லை; தழும்பு உண்டானது மில்லை' என்று எல்லாவற்றையும் மறைத்துப் பேசினான். அதற்குமேல் ஆழ்வார் என்ன செய்யக்கூடும்? பிரானே! முழுப்பூசினியைச் சோற்றில் மறைக்க நினைப்பாரைப்போலே செய்த காரியங்களையெல்லாம் இப்படி மறைத்துப் பொய் சொல்லுவது தகுதியோ? "ஸத்யம் வத" என்று மெய்யே சொல்லுமாறு பிறர்க்கு விதிக்கிற நீ பொய் சொல்லலாகுமோ? வெண்ணெயை விரல்களால் அள்ளியெடுத்து நீ வாயிலே யிட்டுக்கொண்டபோது யசோதை கண்டு உன்னைப் பிடித்துக் கொள்ளவில்லையா? வெறுமனே கயிற்றினால் உன்னைக் கட்டிவைத்தால் அறுத்துக்கொண்டு போய்விடுவாய் என்று பெரியவொரு உரலோடே இணைத்துப் பிணைத்துவைக்கவில்லையா? அதனால் நீ நெடும்போது ஏங்கியேங்கி அழவில்லையா? அந்த நிலைமையை எத்தனையோபேர்கள் வந்து காணவில்லையா? இவை யொன்றும் நடந்ததேயில்லை யென்று உன்னால் மறைக்கமுடியுமா? நீயேசொல் நாயனே!' என்கிறார்.

அவாப்த ஸமஸ்தகாமனாய் ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியுக்தனான நீ ஒரு குறையுள்ளவன் போலவும், அந்தக் குறையை நீக்கிக் கொள்ளக் களவு செய்தவன் போலவும், அதற்காகக் கயிற்றினால் கட்டித் தண்டிக்கப்பட்டவன் போலவும், அந்தக் கட்டில் நின்று தப்புவதற்கு சக்தியற்றவன் போலவும் கட்டை யவிழ்க்கும் உபாயத்தை உணராதவன் போலவும், இருந்தாயே! இது என்ன ஆச்சரியம்! என்று ஈடுபட்டவாறு.

முதலடியிலும் இரண்டாமடியிலும் "விரலோடு" "உரலோடு" என்றே பாடமிருந்தும் "விரலோடு—உரலோடு" என்றே பலரும் ஓதுவது ஒவ்வாது; இரண்டாமடியின் தனிச்சீர் "குரலோவாது" என்றிருத்தல் காண்க.

"ஓங்கோதவண்ணா!" என்ற விளியின் ஆழ்பொருளைப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்கிறார்காண்மின்—"இவனைக் கட்டிவைத்தது ஒருகடலைத் தேக்கிவைத்தாற்போலே காணும்" என்று. ... ... (உ௪)

உரைமேற் கொண் டென்னுள்ள மோவாது * எப்போதும்
வரைமேல் மரகதமே போலத் *—திரைமேல்
கிடந்தானைக் கீண்டானைக் * கேழலாய்ப் பூமி
யிடந்தானை யேத்தி யெழும். (உ௫)

வரை மேல்	ஒரு மலையின்மேலே	என் உள்ளம்	எனது மனமானது
மரகதமே போல	மரகதப்பச்சை படிந்தாற்போல	உரை மேற்கொண்டு	உரைப்பதில் ஊற்றங்கொண்டு
திரை மேல்	திருப்பாற்கடலிலே	ஓவாது எப்போதும்	இடைவிடாமல் எப்போதும்
கிடந்தானை	சயனித்திருப்பவனும்	ஏத்தி	(அப்பெருமானது சரிதைகளைப்) புகழ்ந்து
கீண்டானை	இரணியனுடலைப் பிளந்தவனும்	எழும்	உஜ்ஜீவிக்கும்.
கேழல் ஆய்	வராஹமூர்த்தியாகி		
பூமி இடந்தானை	பூமியை உத்தரிப்பித்தவனுமான எம்பெருமானை		

* * *—[உரைமேற்கொண்டு.] கீழ்ப்பாட்டில், கண்ணபிரான் ஓயாமல் ஏங்கியழுத சீலகுணத்தை அநுஸந்தித்த ஆழ்வார், அவன் ஓயாமல் ஏங்கினதுபோலவே தாமும் ஓயாமல் அவனுடைய சீலகுணத்தைப் பேசுவதில் உத்ஸாஹங் கொண்டிருப்பதை இப்பாட்டிலருளிச் செய்கிறார்.

"என்னுள்ளம் உரைமேற்கொண்டு ஏத்தியெழும்" என்றதனால்—நெஞ்சு தன்தொழிலாகிய சிந்தனையோடு நில்லாமல் வாக்

கின் தொழிலையும் ஏன்றுகொண்டமை கூறப்பட்டது. திருவாய்மொழியில் “முடியானே! மூவுலகுந் தொழுதேத்தும்” [3-8-1.] என்ற பாசுரத்தை இங்கே நினைப்பது. “உரைமேற்கொண்டு” என்பதை ‘மேல் உரைகொண்டு’ என்று மாற்றி—மேலான சொற்களைக் கொண்டு என்று முரைக்கலாம்.

[வரைமேல் மரகதமேபோலத் திரைமேற்கிடந்தானை.] திருப்பாற்கடலிலே எம்பெருமான் பள்ளிகொண்டிருப்பது—வெண்ணிறமானதொரு மலையில் மரகதக்கல்லைப் பதித்தாற் போன்றிருப்பதாக அபூதோபமை கூறப்பட்டதென்க.

[கீண்டானை.] ‘இரணியன் மார்வை’ என்பது மூலத்தில்லையாயினும் கீண்டா னென்னும்போதே ‘இரணியன் மார்வு’ ஞாபகத்திற்கு வந்து விடும். இரணியனுடலைக் கீண்டதுபோலவே, குதிரை வடிவங்கொண்டுவந்த கேசியென்னுமஸுரனது வாயைக் கீண்டதும் பகாஸுரனுடைய வாயைக் கீண்டது முண்டாதலால் அவையும் நினைவுக்குவரின் அவற்றையும் கொள்ளத் தட்டில்லை. அன்றியே, “கேழலாய்க் கீண்டானை இடந்தானை” என்று சேர்த்து, வராஹரூபியாய் அண்டபித்தியிலே ஓட்டின பூமியை அதனின்று ஓட்டு விடுவித்துப் பிறகு கோட்டாற் குத்தியெடுத்தவனை என்று பொருள் கூறுவதும் பொருந்தும். “திரைமேற்கிடந்தானைக் கீண்டானை” என்ற சேர்த்தியால்—எம்பெருமான் ‘நம் அடியார்க்கு எப்போது என்ன தீங்கு வருமோ’ என்ற சிந்தனையுடனே சயனித்திருப்ப, துன்புற்ற அடியாரின் கூக்குரல் செவிப்பட்டவுடனே பதறி அத்துன்பத்தைத் தீர்க்க ஏற்றதொரு திருக்கோலங் கொண்டு இங்குத்தோன்றி ரக்ஷித்தருள்கிறானென்பது விளங்கும். இப்படிப்பட்ட எம்பெருமானை எனது நெஞ்சு இடைவிடாது துதித்து உஜ்ஜீவிக்கின்றது என்றாராயிற்று. ... (உரு)

எழுவார் விடை கோள்வா ரீன்துழா யானை *
வழுவா வகைநினைந்து வைகல்—தொழுவார் *
வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடமே * வானோர்
மனச்சுடரைத் தூண்டும் மலை. (உசு)

எழுவார்	(தாங்கள் விரும்பின ஐச்வரியம் கிடைத்தவுடனே எம்பெருமானைக்) கைவிட்டுப் போகின்ற ஐச்வர்யார்த்திகளும்
விடை கொள்வார்	(தாங்கள் விரும்பின கைவல்யமோக்ஷம் கைப்பட்டபின் எம்பெருமானைத் திரும்பிப் பாராமல்) விடை பெற்றுக்கொண்டு போமவர்களான கைவல்யார்த்திகளும்
ஈன் துழாயானை வழுவா வகை நினைந்து வைகல் தொழுவார்	இனிய திருத்துழாயை அணிந்தவனை திருமாலை ஒரு நாளும்விட்டு நீங்காதபடி சிந்தித்து எப்போதும் அநுபவிப்பவர்களான முமுக்ஷுக்களுமாகிய இம் மூவகை அதிகாரிகளுடைய
வினை சுடரை	(அவரவர் வேண்டுகின்ற பலன்களுக்குத் தடையான) தீவினையாகிய நெருப்பை
நந்துவிக்கும்	அணைக்கின்ற
வேங்கடமே	திருவேங்கடமலையே
வானோர்	நித்ய ஸூரிகளுடைய
மனம் சுடரை	ஹ்ருதயமாகிற விளக்கை
தூண்டும்	தூண்டி ஜ்வலிப்பிக்கின்ற
மலை	மலையாகும்.

* * *—[எழுவார்விடைகோள்வார்.] கீழ்ப் பல பாசுரங்களில் விபவாவதார சேஷ்டிதங்களைப் பேசி அநுபவித்த ஆழ்வார், என்றைக்கோ கழிந்த அவ்வவதாரங்களின் திருக்குணங்கள் இன்றைக்கும் நன்கு விளங்குமாறு * பின்னானார் வணங்குஞ் சோதியாக ஸேவை ஸாதித்தருள்கின்ற அர்ச்சாவதாரங்களையும் அநுபவிக்க ஆசைகொண்டு, "1. தென்னனுயர் பொருப்பும் தெய்வவடமலையும் என்னுமிவையே முலையாவடிவமைந்த" என்கிறபடியே பூமிப்பிராட்டிக்குத் திருமுலைத்தடங்களாகச் சொல்லப்பட்டுள்ள

1. பெரிய திருமடல்.

‡ இரண்டு திருமலைகளுள் திருவேங்கடமலையிலே திருவுள்ளஞ் சென்று அவ்விடத்தைப் பேசி அநுபவிக்கிறாரிப்பாட்டில். எம்பெருமானிலுங்காட்டில் எம்பெருமானோடு ஸம்பந்தம்பெற்ற பொருள்களை பரமஉத்தேச்யமென்று கொள்ளுகிறவர்களாகை யாலே திருவேங்கடமுடையான் வரையில் போகாமல் அவனுடைய ஸம்பந்தம் பெற்றதான திருமலையோடே நின்று அநுபவிக்கிறார்.

திருமலை எப்படிப்பட்டதென்றால் ப்ரயோஜநாந்தரங்களை விரும்புமவர்களோடு அநந்யப்ரயோஜநரோடு வாசியற எல்லாருடைய வினைகளையும் போக்கிப் பலனைப் பெறுவிக்குமது; இதனையே மூன்றடிகளில் அருளிச்செய்கிறார்

எழுவார் என்றால் எழுந்துபோகிறவர்களையும் சொல்லும்; மேன்மேலும் ஆசைப் பெருக்கமுடையவர்களையும் சொல்லும். இரண்டு படியாலும், ஐச்வர்யார்த்திகளைச் சொல்லுகிறது இங்கு; 'எங்களுக்கு ஐச்வர்யத்தைத்தரவேணும்' என்று பிரார்த்தித்து அது கைப்பட்டதும் எம்பெருமானைவிட்டு எழுந்துபோகிறவர்கள் என்றாவது, ஐச்வரியம் வேணுமென்று மேலே மேலே பிரார்த்திக்குமவர்கள் என்றாவது கொள்க. இவர்களுடைய வினைச்சுடரை நந்துவிக்கையாவது—ஐச்வர்ய ப்ராப்திக்கு விரோதியான பாவங்களைத்தொலைத்து ஐச்வர்யவிருப்பத்தை நிறைவேற்றுகை.

விடை கோள்வார் என்றால் விட்டு நீங்குகிறவர்கள் என்கை; ஸந்தர்ப்பம் நோக்கி இங்கே கைவல்யார்த்திகளைச்சொல்லுகிறது. அவர்களுடைய வினைச்சுடரை நந்துவிக்கையாவது—ஆத்மாநுபவத்திற்கு விரோதியான பாவங்களைத் தொலைத்துக் கைவல்யாநுபவத்தை நிறைவேற்றுகை.

ஈன்துழாயானை வழுவாவகை நினைந்து வைகல் தொழுகிறவர்கள்—பரமைகாந்திகளான பகவத்பக்தர்கள்; அவர்களுடைய வினைச்சுடரை நந்துவிக்கையாவது—மாறிமாறிப் பலபிறப்பும் பிறக்கும்படியான தீவினைகளைத்தொலைத்து முத்தியளிக்கை. ஆக, வேண்டுவார் வேண்டினபடியே அநிஷ்ட நிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் செய்விக்கவல்லது திருவேங்கடம் என்றதாயிற்று.

‡ திருமாலிருஞ்சோலை, திருவேங்கடம்.

[வினைச்சுடரை நந்துவிக்கும்]—பாவங்களை நெருப்பாக நிரூபித்துக்கூறினமைக்கு இணங்க "நந்துவிக்கும்" எனப்பட்டது; நந்துவித்தல்—(நெருப்பை) அணைத்தல்.

[வானோர்மனச்சுடரைத் தூண்டும்மலை.] ஒரு நெருப்பை அணைக்கும்; ஒரு நெருப்பை அபிவிருத்திசெய்யும் என்று சமத்காரமாக அருளிச்செய்கிறார். வானோர் மனச்சுடரைத் தூண்டுகையாவது—பரமபதத்திலே பரத்வகுணத்தை அநுபவித்துக்கொண்டிருக்கிற நித்யஸூரிகளை, இங்குவந்து ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணங்களை அநுபவிக்கும்படி உத்ஸாஹ மூட்டுதலாம். திருவேங்கடமலையின் தன்மை இப்படிப்பட்டதென்று அநுஸந்தித்தாராயிற்று. ... ... (உசு)

மலையால் குடைகவித்து மாவாய் பிளந்து *
சிலையால் மராமரமேழ் செற்று *—கொலையானைப்
போர்க்கோ டொசித்தனவும் பூங்குருந்தஞ் சாய்த்தனவும் *
கார்க்கோடு பற்றியான் கை. (உஎ)

மலையால்	கோவர்த்தன கிரியைக்கொண்டு
குடை கவித்து	குடையாகப் பிடித்தும்,
மா வாய் பிளந்து	குதிரை வடிவங் கொண்டுவந்த கேசியென்னும் அஸுரனுடைய வாயைப்பிளந்தும்,
சிலையால்	வில்லைக்கொண்டு
மராமரம் ஏழ் செற்று	ஸப்த ஸாலவ்ருக்ஷங்களை அழித்தும்,
(இச்செயல்களோடு நிற்காமல்)	
கொலை யானை	கொலைசெய்வதாக வந்த குவலயாபீடமென்னும் யானையினுடைய
போர் கோடு	சண்டைசெய்ய உதவியாயிருந்த தந்தங்களை
ஒசித்தனவும்	பிடுங்கினவையும்
பூ குருந்தம்	பூவோடுகூடிய குருந்தமரத்தை
சாய்த்தனவும்	வேரோடே பறித்துத் தள்ளினவையும் (எவையென்றால்)
கார்	(கம்பீரமாக முழங்குவதில்) மேகத்தை யொத்த
கோடு	சங்கை
பற்றியான்	ஏந்தியிருக்கின்ற பெருமானுடைய
கை	திருக்கைகளேயாகும்.

* * *—[மலையால்குடைகவித்து.] கீழ்ப்பாட்டில் திருவேங்கட மலையை அநுபவித்துப்பேசின ஆழ்வார் பிறகு திருவேங்கடமுடையானையும் ஸேவித்து அவனது திருக்கைகளினழகிலே ஆழங்காற்பட்டார்; அவை மிகவும் ஸுகுமாரமாக இருந்தும் ராமக்ருஷ்ணாதியவதாரங்களில் பெரிய வீரச்செயல்களையெல்லாம் சிறிதும் வருத்தமின்றிச் செய்தனவே! என்று ஈடுபட்டு, அத்திருக்கைகள் இன்றைக்கும் அந்த வீரப்பாடு தோன்ற விளங்கும் படியை யாவரும் காணலாமென்கிறார்.

ஆயர்கள் வழக்கப்படி இந்திரனுக்கு இடும் சோற்றை விலக்கிக் கோவர்த்தனமலைக்கு இடுவித்துத் தானே அமுதுசெய்த போது இந்திரன் பசிக்கோபத்தால் ஏழுநாள் விடாமழை பெய்வித்துத் துன்பம் விளைக்க நினைத்தபோது இடையர்க்கும் பசுக்களுக்கும் ஒரு தீங்கு நேரிடாதபடி அந்த மலையையே குடையாகத் தூக்கிப்பிடித்து நின்று காத்தருளின கதை மலையால்குடை கவித்து என்பதனால் அநுஸந்திக்கப்பட்டது.

மாவாய்பிளந்த வரலாறு:—கம்ஸனால் ஏவப்பட்ட அசுரர்களில் ஒருவனான கேசியென்பவன் குதிரையுருவங்கொண்டு ஆயர்களுக்கெல்லாம் மிக்க பயங்கரனாய்க் கனைத்துக்கொண்டு கண்ணபிரான்மேற் பாய்ந்துவர, அப்பெருமான் தன் திருக்கையை நன்றாகப்பெருக்கி நீட்டி அதன் வாயிற்கொடுத்துத் தாக்கிப் பற்களையுதிர்த்து உதட்டைப்பிளந்து அதனுடம்பையும் இருபிளவாக வகிர்ந்து தள்ளினன் என்பதாம்.

சிலையால் மராமரமேழ் செற்றது ஸ்ரீராமாவதாரத்தில் ஸுக்ரீவமஹாராஜனுக்குத் தன் வலிமையில் நம்பிக்கையுண்டாவதற்காகச் செய்த ஸப்த ஸாலவ்ருக்ஷங்களைத் துளைத்தது.

பூங்குருந்தம்சாய்த்த வரலாறு:—கண்ணபிரான் மலர் கொய்வதற்காக நித்தியம் ஒரு குருந்தமரத்தின்மேலேறுவது வழக்கம்; கம்ஸனால் ஏவப்பட்ட ஓரசுரன் அம்மரத்தில் ஆவேசித்திருந்து கண்ணன் வந்து மலர்கொய்ய ஏறும்போது தான் முறிந்துவீழ்ந்து அவனை வீழ்த்திக் கொல்லக்கருதி நின்றபோது, மாயவனான கண்ணபிரான் அம்மரத்தைக் கைகளாற்பிடித்துத் தன் வலிமை கொண்டு முறித்து அழித்தனன் என்பதாம்.

ஆக, மலையால் குடைகவித்ததும் மாவாய்பிளந்ததும் மராமரமேழ் செற்றதும், யானைக்கொம்புபறித்ததும் பூங்குருந்தம் சாய்த்ததும் இத்திருக்கைகளே காண்மின் என்று பழைய வீரச்செயல்களை ஸ்மரித்து அநுஸந்தித்தாராயிற்று. ... ... (உஎ)

கைய வலம்புரியும் நேமியும் * கார்வண்ணத்து
ஐய! மலர்மகள் நின்னாகத்தாள் *—செய்ய
மறையான் நின்னுந்தியான் மாமதிள்மூன்றெய்த *
இறையான் நின்னாகத் திறை (உஅ)

கார் வண்ணத்து ஐய	மேகம்போன்ற வடிவையுடைய பெருமானே!
வலம்புரியும்	வலம்புரிச்சங்கமும்
நேமியும்	சக்கரமும்
கைய	உன் கையிலுள்ளன;
மலர் மகள்	பெரியபிராட்டியார்
நின் ஆகத்தாள்	உனது திருமார்பை விட்டுப் பிரியாதிருப்பவள்;
செய்ய மறையான்	சிறந்த வேதத்தை நிரூபகமாகவுடைய பிரமன்
நின் உந்தியான்	உனது உந்திக்கமலத்திலுள்ளான்;
மா மதிள் மூன்று எய்த இறையான்	பெரிய மதிளையுடைய மூன்று பட்டணங்களை முடித்த சிவபெருமான்
நின் ஆகத்து இறை	உனது திருமேனியின் ஏகதேசம்.

* * *—[கையவலம்புரியும்.] திருவேங்கடமுடையானை நோக்கி உனது திருமேனியிலே அழகும் ஐச்வரியமும் சீலம்முதலிய குணங்களும் நிழலிட்டுத் தோற்றுகின்றனவே! என்று ஈடுபடுகிறார். சங்கும் சக்கரமும் திருக்கைகளிலே உள்ளன என்றதனாலும் மலர்மகள் நின்னாகத்தாள் என்றதனாலும் ஈச்வரத்வம் சொல்லப்பட்டது; 'கார்வண்ணத்துஐய!' என்ற விளியினால் அழகு அறிவிக்கப்பட்டது. பிரமனுக்கும் சிவனுக்கும் முதன்மையுண்டாகுமாறு திருநாபியிலும் திருமேனியின் வலப்பக்கத்திலும் இடம் கொடுத்திருப்பதைக் கூறுகின்ற பின்னடிகளால் சீலகுணம் தெரிவிக்கப்பட்டது.

கைய = கைகளிலேயுள்ளன; 'கையது' என்பதன் பன்மை. வலம்புரி—வலப்பக்கத்தால் சுழிந்திருப்பது. (இதற்கு எதிர்-

இடம்புரி.) இப்பியாயிரஞ் சூழ்ந்தது இடம்புரியென்றும் இடம்புரியாயிரஞ் சூழ்ந்தது வலம்புரியென்றும் நூல்கள் கூறும்; அதாவது—இப்பியைவிட ஆயிரம்மடங்கு சிறந்தது இடம்புரியென்றும், அவ்விடம்புரியினும் ஆயிரம்மடங்கு சிறந்தது வலம்புரியென்றும் சொன்னபடி.

சக்கரத்தின் விளிம்பைச்சொல்லுகிற நேமி என்னும் வடசொல் தமிழில் சக்கரத்துக்கும் பெயராக வழங்கும். ஐய!—அண்மைவிளி. மலர்மகள்நின்ஆகத்தாள் = "அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறைமார்பன்" திருவேங்கடமுடையானிறே. பிரமன் நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களையும் எப்போதும் ஓதிக்கொண்டிருப்பதனாலும், "வேதா மே பரமம் சக்ஷு: வேதா மே பரமம் தநம் = வேதங்களே எனக்குச் சிறந்த கண்; வேதங்களே எனக்குச் சிறந்த செல்வம்" என்று சொல்லுபவனாதலாலும் செய்ய மறையானெனப்பட்டான்.

[மாமதிள்மூன்றெய்தஇறையான்.] சிவன் திரிபுரமெரித்தவனெனப்படுவான்;—தாரகாஸுரனுடைய புத்திரர்களாகிய வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்க தவஞ்செய்து பிரமனிடம் பெருவரம்பெற்று வானத்துப் பறந்து செல்லுந்தன்மைவாய்ந்த மூன்று பட்டணங்களையடைந்து மற்றும் பல அசுரர்களோடு அந்நகரங்களுடனே தாம் நினைத்தவிடங்களிற் பறந்து சென்று பலவிடங்களின்மேலும் இருந்து அவ்வவ்விடங்களைப் பாழாக்கிவருகையில் அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் சிவபெருமான் பூமியைத் தேராகவும் சந்த்ர ஸூர்யர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும் நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும் மஹாமேருவை வில்லாகவும் ஆதிசேஷனை வில் நாணியாகவும், விஷ்ணுவை வாயுவாகிய சிறகமைந்து அக்கினியை முனையாகவுடைய அம்பாகவும் அமைத்துக்கொண்டு யுத்தஸந்நத்தனாய்ச்சென்று போர் தொடங்கும்போது சிரித்து அச்சிரிப்பில் நின்று உண்டான நெருப்பினால் அவ்வசுரர்களை அந்நகரங்களுடனே எரித்திட்டனன்.

இறையான் = ஈச்வரனாகத் தன்னை அபிமானித்திருக்கிற ருத்ரன் என்கை. நின்ஆகத்துஇறை = ‘இறை’ என்பதற்குப் பல பொருள்களுண்டு; அற்பம் என்னும் பொருள் இங்குக் கொள்ளத்தக்கது; உனது திருமேனியிலே சிவன் அற்பபாகமாக அமைந்திருக்கிறுனென்றவாறு. திருவாய்மொழியில் “ஏறாளு மிறையோனும் திசைமுகனும் திருமகளும் கூறாளுந்தனியுடம்பன்” [4—8—1.] என்ற பாட்டின் இருபத்திநாலாயிரப்படி வியாக்கியானத்தில்—“தபஸா தோஷிதஸ்தேந விஷ்ணுநா ப்ரபவிஷ்ணுநா। ஸ்வபார்ச்வே தக்ஷிணே சம்போ: நிவாஸ: பரிகல்பித:॥ = தபஸா தோஷிதஸ் தேந விஷ்ணுநா ப்ரபவிஷ்ணுநா—ஸ்வபார்ச்வே தக்ஷிணே சம்போ: நிவாஸ: பரிகல்பித:.” என்றெடுத்துக் காட்டப்பட்டுள்ள பிரமாண வசனம் இங்கு அநுஸந்திக்கத்தகும். [இதன்பொருள்:-பரமசிவன் தவம்புரிந்ததனால் திருவுள்ளமுவந்த ஸ்ரீமஹாவிஷ்ணு தனது வலப்பக்கத்திலே அவனுக்கு இடம் கற்பித்துத் தந்தருளினனென்பதாம்.] .... (உஅ)

இறையும் நிலனு மிருவிசும்புங் காற்றும் *
அறைபுனலுஞ் செந்தீயு மாவான் *—பிறைமருப்பின்
பைங்கண்மால் யானைப் படுந்துயரங் காத்தளித்த *
செங்கண்மால் கண்டாய் தெளி. (உகூ)

இறையும்	ஸ்ரீவைகுண்டநாதனும்	பிறை மருப்பின்	பிறைபோன்ற தந்தத்தையுடையதும்
நிலனும் இருவிசும்பும் காற்றும் அறைபுனலும் செம்தீயும் ஆவான்	பூமியென்ன பரவிய ஆகாசமென்ன வாயுவென்ன அலையெறிகிற ஜலமென்ன சிவந்த நிறமுள்ள அக்நியென்ன ஆகிய பஞ்சபூதங்களினுலாகிய லீலா விபூதியை யுடையவனுயுமிருக்கிற எம்பெருமான்,	பைங்கண்	பசுமைதங்கிய கண்களையுடையதுமான
		மால் யானை	பெரியகஜேந்திரனை
		படு துயரம்	(முதலையின் வாயிலே அகப்பட்டுப்) பட்ட துக்கத்தில் நின்றும்

காத்து அளித்த	ரக்ஷித்தருளின	தெளி	(நெஞ்சே ! நீ இதனைத்) தெரிந்துகொள்.
செம் கண் மால் கண்டாய்	புண்டரீகாக்ஷனை பெருமான்காண் ;		

* * *—[இறையும்நிலனும்.] நித்யவிபூதி யென்னப்படுகிற பரமபதத்திற்கும் லீலாவிபூதியென்னப்படுகிற ஸம்ஸாரமண்டலத்திற்கும் நாதனாய்க்கொண்டு உபயவிபூதி நாதனென்று பேர் பெற்றிருக்கு மெம்பெருமான் தன்பெருமையை நினைத்து மேனாணித்திருப்பவனல்லன் ; அடியவர்கள் துன்புறுங்காலத்து நேரில் ஓடிவந்து காத்தருளும்படியான வாத்ஸல்யகுணமுமுடையவன்காண் என்று தம் திருவுள்ளத்துக்கு உபதேசிக்கிற முகத்தால் எம்பெருமானது மேன்மையையும் நீர்மையையும் வெளியிடுகிறார்.

இறை என்று ஸ்வாமிக்குப் பெயர் ; 1. " வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல் செல்லவீவில்சீர், ஆற்றல் மிக்காளுமம்மான் " என்றபடி பரமபதத்தில் ஸர்வஸ்வாமித்வம் தோன்றுமாறு எழுந்தருளியிருக்கிற ஸ்ரீவைகுண்ட நாதத்வம் இங்கே விவக்ஷிதம். ஆகவே, இறை யென்றது இங்கே நித்யவிபூதிநாதனைச் சொன்னபடி. நிலனும் என்று தொடங்கிச் சேர்ந்தீயுமாவான் என்ற வளவால் லீலாவிபூதி நாயகத்வம் சொல்லப்படுகிறது ; பஞ்சபூதங்களினாலாகிய பதார்த்தங்கள் நிறைந்தவிடமே லீலாவிபூதியாதலால் பஞ்சபூதங்களை யிட்டு அருளிச்செய்தாரென்க.

" இறையும் " என்ற உம்மைக்குச்சேர (இரண்டாமடியில்) " ஆவான் " என்ற விடத்திலும் உம்மை கூட்டிக்கொள்ளவேணும் ; ஆவானும் என்க. ஆகஇவ்வளவால்—உபயவிபூதி நாதனாயிருக்கும் பெருமையையுடையவனா யிருந்தாலும் என்றதாயிற்று. இதற்குப் பிரதிகோடியான நீர்மையைப் பின்னடிகளில் அருளிச்செய்கிறார். முதலைவாய்க் கோட்பட்ட கஜேந்திராழ்வான் துயரை அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து காத்தருளினது பிரசித்தம்.

[பிறைமருப்பின் பைங்கண்மால்யானை.] யானைக்கு வெளுத்த தந்தமிருப்பதும் பசுமைதங்கிய கண்களிருப்பதும் அதிசயமான விஷயமன்றே ; இதைச்சொல்லி வருணிப்பதற்குப் பிரயோஜன

1. திருவாய்மொழி. 4—5—1.

மென்னெனில் ;—ஒரு குழந்தை கிணற்றில் விழுந்துபோக, அதனையெடுத்துக் கரையிலே போட்டவர்கள் 'அந்தோ! இதொரு காலழகும் இதொரு கையழகும் இதொரு தலையழகும் இதொரு முகவழகும் என்னே!' என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போவர்களன்றோ ; அப்படியே எம்பெருமானும் யானையின் காலை முதலைவாயினின்றும் விடுவித்தபின் அதனுடைய தந்தத்தினழகிலும் கண்ணினழகிலும் ஆழ்ந்து கரைந்தமை தோற்ற அந்தபகவத் ஸமாதியாலே ஆழ்வார் யானையை வருணிக்கின்றாரென்க.

பசுமை + கண், பைங்கண். கண்டாய்—முன்னிலையசைச் சொல். இப்பாட்டில் 'நெஞ்சமே!' என்கிறவிளி வருவித்துக் கொள்ளவேண்டும். ... ... (௨௯)

தெளிதாக வுள்ளத்தைச் செந்நிறீஇ * ஞானத்
தெளிதாக நன்குணர்வார் சிந்தை *—எளிதாகத்
தாய்நாடு கன்றேபோல் தண்டுழா யானடிக்கே *
போய்நாடிக் கொள்ளும் புரிந்து. (௩௦)

உள்ளத்தை	மனத்தை
தெளிது ஆக	(ஐம்புலன்களில் மேய்வதனாலுண்டான கலக்கம் நீங்கித்) தெளிவையுடையதாம்படி
செம் நிறீஇ	செவ்வனே நிறுத்தி [எம்பெருமானிடத்தில் மனத்தையூட்டி]
ஞானம்	பகவத்விஷய பக்தியாலே
தெளிது ஆக	'அவன் தலைவன், நாம் அடிமை' என்கிற தெளிவு உண்டாகும்படி
நன்கு	நன்றாக
உணர்வார்	அறிபவர்களுடைய
சிந்தை	மனமானது,
எளிது ஆக	வருத்தமில்லாமல்
தாய் நாடு கன்றே போல்	(பெரிய பசுக்கூட்டத்தினிடையே) தன் தாயைத் தேடிக்கொண்டு கிட்டுகிற கன்றைப்போல,
தண் துழாயான் அடிக்கே	குளிர்ந்த திருத்துழாய்மாலையையணிந்த எம்பெருமானது திருவடிகளையே
புரிந்து	விரும்பி
போய் நாடிக் கொள்ளும்	தானேசென்று தேடிச்சேரும்.

* * *—[தெளிதாக.] ஆழ்வாரை நோக்கிச் சிலர் 'உம்முடைய நெஞ்சுபோலே எங்களுடைய நெஞ்சு பகவத்விஷயத்திலே ஊன்றப்

பெறவில்லையே, இதற்கு என்னகாரணம்?' என்று கேட்க; அவர்கட்கு உத்தரமாக அருளிச்செய்வது போலும் இப்பாட்டு. பட்டிமேயவொண்ணுதபடி மனத்தையடக்கி எம்பெருமானோடு தமக்குள்ள உறவை அறிந்திருப்பவர்களின் மனமானது மற்றெவரையும் பற்றுமலும் ஐம்புலன்களிலும் செல்லாமலும் அவ்வெம்பெருமானையே பதறிக்கொண்டு மிக்க ஆவலுடன் சென்று கிட்டும்; ஒரு கன்றுக்குட்டியானது பல்லாயிரம் பசுக்களின் திரளினுள்ளே தனது தாயைக் கண்டுபிடித்துக்கொள்வது எப்படியோ அப்படியே இதுவும். இதற்கு ஸம்பந்தவுணர்ச்சியேகாரணம். ஸம்பந்தஜ்ஞானமில்லாதவர்களுக்கு ஒருநாளும் எம்பெருமானைக் கிட்டுதல் ஸாத்யமன்று; அஃது உள்ளவர்களுக்கு அது மிகவும் ஸுலபம் என்றுராயிற்று.

மூன்றுமடியில் "அடிக்கே" என்றும் "அடியே" என்றும் பாடபேதங்கள். ... ... (௫0)

புரியோரு கைபற்றி யோர்பொன்னுழி யேந்தி *
அரியுருவு மாளுருவு மாகி *—எரியுருவ
வண்ணத்தான் மார்பிடந்த மாலடியையல்லால் * மற்று
எண்ணத்தா னமோ விமை. (௫௧)

ஒரு கை புரி பற்றி	ஒரு திருக்கையிலே வலம்புரிச் சங்கத்தை ஏந்தி
	(மற்றொரு திருக்கையிலே)
ஓர் பொன் ஆழி ஏந்தி	ஒப்பற்ற அழகிய திருவாழியை ஏந்தி,
ஆள் உருவும் அரி உருவும் ஆகி	நரமும் சிங்கமுங் கலந்த வடிவை யுடையனாய்க் கொண்டு
எரி உருவம் வண்ணத் தான்	அக்நியின் வடிவம் போலே (கண்ணெடுத்துக் காண முடியாத) வடிவத்தையுடையனை இரணியனுடைய
மார்பு	மார்பை
இடந்த	நகத்தால் குத்திப் பிளந்துபோட்ட
மால்	திருமாலினுடைய
அடியை அல்லால்	திருவடிகளைத்தவிர
மற்று	வேறொரு விஷயத்தை
இமை	க்ஷணகாலமேனும்
எண்ண தான் ஆமோ	நினைப்பதற்கேனும் முடியுமோ? (முடியாது.)

* * *—[புரியோருகைபற்றி.] அடியவர்கள் திறத்தில் எம்பெருமானுக்குண்டான பாரதந்திரியத்தையும் வாத்ஸல்யத்தையும் அநுஸந்தித்தால் அப்பெருமானைத் தவிர்ந்து வேறொருவிஷயத்தை ஒரு நொடிப்பொழுதாகிலும் நினைக்க வழியுண்டோ? என்ன வேண்டி, அப்பெருமான் பரமபக்தனாகிய ப்ரஹ்லாதனிடத்துள்ள வாத்ஸல்யத்தாலே செய்தருளின செயலையெடுத்துப் பேசுகிறார்.

புரியோருகைபற்றி='வலம்புரி' என்னும் பதத்தில் 'வலம்' என்பதை நீக்கி, புரியென்பதை மாத்திரம் இங்குப் பிரயோகித்திருப்பது நாமைகதேசத்தைக்கொண்டு நாமத்தை க்ரஹிக்கும் முறையாமென்க: ஸத்யபாமையைப் பாமையென்பதுபோல. எம்பெருமானுடைய அவதாரங்களெல்லாவற்றிலும் திவ்யாயுதங்களின் சேர்த்திக்குக் குறையில்லாமையாலே "புரியொருகைபற்றி யோர் பொன்னாழியேந்தி" எனப்பட்டது. இத்திவ்யாயுதங்கள் சில அவதாரங்களில் மறைந்திருப்பதும் சில அவதாரங்களில் வெளித்தோன்றியேயிருப்பதும் காரணார்த்தமாகவாம்.

அசுரர்களுடைய உடல் நெருப்புநிறமா யிருக்குமாதலால் எரியுருவவண்ணத்தான் என்ற சொல்லால் இரணியனைக்கூறினர். பாசுரத்தினிறுதியிலுள்ள இமை என்பதை வினைமுற்றாகக் கொண்டு உரைக்கவுமாம்; இதை ஆராய்ந்துபார் என்கை: 'நெஞ்சே!' என்று வருவித்துக்கொள்க. ... ... (௩௧)

இமையாத கண்ணா லிருளகல நோக்கி *
அமையாப் பொறிபுலன்க ளைந்தும்—நமையாமல் *
ஆகத் தணைப்பா ரணைவரே * ஆயிரவாய்
நாகத் தணையான் நகர். (௩௨)

இமையாத கண்ணால்	(ஞானத்தில்) குறைவில்லாத (நெஞ்சுஎன்னும்) உட்கண்ணாலே	நோக்கி	(தன் ஸ்வரூபத்தையும் பரப்ரஹ்ம ஸ்வரூபத்தையும், உள்ளபடி) கண்டு
இருள் அகல	(அஜ்ஞானமாகிய) அந்தகாரம் நீங்கும்படியாக	அமையா	த்ருப்திபெற்று அடங்கியிராத

பொறி புலன்கள் ஐந்தும்	பஞ்சேந்திரியங்களையும் (அவற்றிற்கு உரிய சப்தாதி) பஞ்சவிஷயங்களையும்	ஆயிரம் வாய் நாகத்து அணையான்	ஆயிரம் வாய்களைக் கொண்ட ஆதிசேஷனைப் படுக்கையாகவுடைய எம்பெருமானது
நமையாமல்	அடக்காமலே	நகர்	நகரமாகிய ஸ்ரீவைகுண்டத்தை
ஆகத்து அணைப்பார்	(மாதர்களின்) தேஹத்தை அணைத்துக் கொண்டு கண்டபடி திரிபவர்கள்	அணைவரே	கிட்டப்பெறுவர்களோ?.

[இமையாதகண்ணால்.] இப்பாட்டுக்கு இரண்டு வகையாகக் கருத்துரைக்க இடமுண்டு. மூன்றாமடியில், அணைவரே என்றவிடத்து ஏகாரத்தைத் தேற்றப்பொருளதாகக் கொண்டால், அணைவர்—கிட்டப்பெறுவர்கள் என்று பொருளாய்விடும். அன்றி, ஏகாரத்தை எதிர்மறைப் பொருளதாகக் கொண்டால், அணைவரே?—சேருவர்களோ?, சேரமாட்டார்கள் என்றதாகும். ஒன்றோடொன்று முரண்படுகின்ற இரண்டு பொருள்களும் பொருந்துமோ எனின்; கேண்மின்: இந்திரியங்களைப் பட்டிமேயவொட்டாமல் அடக்கி ஆளாதே ஸ்த்ரீகளின் உடம்போடே அணைந்து மனம்போனபடியே திரியுமவர்கள் பரமபதத்தைக் கிட்டமாட்டார்கள்; இவ்வுலகத்துக்கும் நரகத்துக்குமே போக்குவரத்தாயிருப்பார்கள் என்பது ஒரு கருத்து. இந்திரியங்களை அடக்கி ஆளாவிட்டாலும் எம்பெருமான் தானாகவே கடாக்ஷிக்கும்போது அவனை விலக்காதவர்களுக்கு உஜ்ஜீவிக்க வழியுண்டு என்கை மற்றொரு கருத்து. இதில், "ஆகத்து அணைப்பார்" என்பதற்கு—எம்பெருமானாலே அந்தரங்கத்தில் விஷயீகரிக்கப் பெறுமவர்கள் என்று பொருள் கொள்ளுதல் நன்று. இவ்விரண்டு கருத்துகளில் முந்தின கருத்து சேதநஸ்வரூபத்துக்குப் பொருந்தினது; பிந்தின கருத்து பகவந்நிர்ஹேதுக க்ருபாவைபவோக்திக்குப் பொருந்தினது: இதுவே ஆழ்வார்க்கும் ஆசாரியர்கட்கும் அபிமதமாயிருக்கும்.

இமையாதகண் என்றது-ஞானக்கண். அது திறந்தால் அஜ்ஞானவிருள் அகலுமாதலால் இருளகலநோக்கி என்றார்.

பொறிபுலன்களைந்தும்—பொறியைந்தும் புலனைந்தும் என்றபடி : சப்தாதிவிஷயங்களைக் கவர்கின்ற செவி வாய் கண் மூக்கு உடலென்னும் பஞ்சேந்திரியங்களும், இவ்விந்திரியங்களுக்கு இலக்காகின்ற சப்தம் ரூபம் ரஸம் கந்தம் ஸ்பர்சம் என்னும் பஞ்ச விஷயங்களும்.'

இந்திரியங்களுக்கு 'அமையா' என்றிட்ட விசேஷணம்—பெற்றவற்றைக்கொண்டு த்ருப்திபெற்று அடங்கியிராமையைக் காட்டும். ... . (௩௨)

நகர மருள்புரிந்து நான்முகற்குப் பூமேல் *
பகர மறைப்பயந்த பண்பன்—பெயரினையே *
புந்தியால் சிந்தியா தோதியுரு வெண்ணும் *
அந்தியாலாம் பயனங் கென். (௩௩)

பூ மேல்	திருநாபிக் கமலத்திலே
நான்முகற்கு	பிரமனுக்கு
நகரம் அருள் புரிந்து	இருப்பிடத்தை ஏற்படுத்தி யருளியும்
பகர	(யோக்யர்களெல்லாரும்) ஓதும்படியாக
மறை	வேதத்தை
பயந்த	உபகரித்த
பண்பன்	குணசாலியான எம்பெருமானுடைய
பெயரினை	திருநாமங்களை
புந்தியால்	மனத்தினால்
சிந்தியாது	எண்ணாமல்
ஓதி உரு எண்ணும் அந்தியால்	ஜபம் செய்வதும் உருச்சொல்வதுமான ஸந்த்யா வந்தனம் முதலிய கர்மாநுஷ்டானங்களால்
அங்கு ஆம் பயன் என்	உண்டாகப்போகிற பிரயோஜனம் என்ன ? (ஒன்றுமில்லை.)

[நகரமருள்புரிந்து.] உலகில் பலர் இரவும்பகலும் வேதங்களை உருச்சொல்லிக்கொண்டும் ஜபங்கள் செய்துகொண்டும் ஸந்தியா வந்தனம் முதலிய கருமங்களை அநுஷ்டித்துக்கொண்டும் போது போக்குகிறார்களே, இது நல்ல போதுபோக்குத்தானே, இப்படிப் பட்டவர்களுக்குப் புருஷார்த்த ஸித்தியில் ஸந்தேஹமில்லையே என்று சிலர் கேட்டனர்போலும் ; அவர்கட்கு உத்தரமுரைக்கின்றார்—எம்பெருமானை உள்ளீடாகக் கொள்ளாதே செய்கிற ஜபம்

தவம் முதலியவை யாவும் பயனற்றனவாமென்கிறார். அந்தரங்கத்தில் பகவத்பக்தி முக்கியமாக இருக்கவேண்டும்; அஃது இன்றியே கையை மூடிக்கொண்டும் வாயை மொணமொணத்துக்கொண்டும் செய்யுமவை பிறரை ப்ரமிக்கச் செய்வதற்கு உபயோகப்படுமத்தனையேயொழிய புருஷார்த்த ஸித்திக்குப் பயன்படாதென்றாராயிற்று.

பண்பன்பெயரினைப் புந்தியால்சிந்தியாது = பகவந்நாமங்களின் பொருளாகிய திவ்யகுண சேஷ்டிதங்களைச் சிந்திப்பதைவிட்டு என்றபடி. ஸந்த்யா என்ற வடசொல் அந்தி என விகாரப்பட்டது; ஸந்த்யாவந்தனத்தைச் சொன்னபடி. மனப்பூர்வமாகவல்லாமல் செய்யும் ஆபாஸரூபமான கருமங்களால் எம்பெருமானை அகன்றுவிடுகை பலிக்குமேயொழிய அணுகுகை பலிக்கமாட்டாது என்றாராயிற்று.

அந்தரங்கர்க்கு அருகிலே மாளிகை அமைக்குமாபோலே, திருமால் தனது நாபிக்கமலத்திலே நான்முகனுக்கு இருப்பை அருளினன் என்கிறார் முதலடியில். மத்ஸ்யாவதாரம் ஹம்ஸாவதாரம் முதலியவற்றால் வேதோபதேசம் செய்தருளினமையை இரண்டாமடியி லருளிச்செய்தாரென்க.

நகரம்—வடசொல். புந்தி—புத்தி. ... ... (௩௩)

என்றொருவர் மெய்யென்ப ரேழுலகுண்டு * ஆலிலையில்
முன்னொருவ னாய முகில்வண்ணா! *—நின்னுருகிப்
பேய்த்தாய் முலைதந்தாள் பேர்ந்திலளால் * பேரமர்க்கண்
ஆய்த்தாய் முலைதந்த வாறு. (௩௪)

முன்	முற்காலத்தில்	முகில்வண்ணா	காளமேகத் திருவுருவனான பெருமானே!
ஏழ் உலகு உண்டு	ஏழுலகங்களையும் (பிரளயத்திலழியாதபடி) அமுது செய்து	நின் உருகி	உன்விஷயத்தில் உருக்கம் கொண்டவள் போல மேலுக்குக் காட்டி
ஆல் இலையில்	ஓர் ஆலந்தளிரிலே		
ஒருவன் ஆய	துணையற்றவனாய்க் கண்வளர்ந்தருளின	முலை தந்தாள்	முலை கொடுத்தவளான

பேய் தாய்	பேய்த் தாயாகிய பூதனையானவள்	முலை தந்த ஆறு	முலைகொடுத்த விதத்தை
பேர்ந்திலள்	அவ்விடத்தில் நின்றும் பேர மாட்டாமல் (பிணமாய்) விழுந்தாள்;	ஒருவர்	ஞானத்தில் ஒப்பற்றவர்களான வ்யாஸ பாராசராதி ரிஷிகள்
பேர் அமர் கண்	பெரிய அந்த யுத்த பூமியில்	மெய் என்பர்	மெய்யென்று சொல்லா நிற்பர்கள்;
ஆய் தாய்	இடைத்தாயாகிய யசோதை யானவள்	என்	இது என்ன ஆச்சரியம்?

[என்னொருவர்மெய்யென்பர்] எம்பெருமானிடத்தில் அந்தரங்கமான அன்பு பூண்டவர்களுள் தலையானவள் யசோதைப் பிராட்டி யொருத்திதான் என்று வெளியிடக்கருதிய ஆழ்வார் அதனை ஒரு சமத்காரச் சொல்லாலே வெளியிடுகிறார். கண்ணபிரான் இளங்குழவியாய் நந்தகோபர் திருமாளிகையில் சயனித்திருக்கும்போது வஞ்சகக் கஞ்சனால் ஏவப்பட்டுக் கொல்லவந்த பூதனையென்னும் பேய்த்தாய் மிக்கபரிவுள்ளவள்போலத் தெய்வக் குழவியையெடுத்துத் தனது விஷந்தடவின முலையைக்கொடுக்க, பேதைக்குழவி பிடித்துச் சுவைத்துண்டவாறே அப்பேய்ச்சி உயிர் மாண்டுபிணமாய் விழுந்தாள்; உடனே யசோதைப் பிராட்டி ஓடிவந்து குழந்தையை வாரியெடுத்தணைத்து முலைகொடுத்தாள்— என்பதாக இதிஹாஸம் சொல்லப்படுகின்றதே; இது மெய்யாயிருக்குமா? என்கிறார். ஒருத்தி வந்து முலைகொடுத்துப் பட்ட பாடு கண்ணெதிரே காணாநிற்கச் செய்தே இன்னொருத்தி கிட்ட வரத்தான்முடியுமா? அஞ்சாமல் கிட்டவந்து எடுத்து முலை கொடுத்தாளென்பது ஸம்பாவிதமாகுமோ? என்கிறார். நாட்டில் இவ்வாறு வேறு எவர்களிடத்திலேனும் நாம் கண்டிருந்தால் இதை மெய்யெனக் கொள்ளலாம்; இப்படி எங்குங்காணாமையாலே இதனை எங்ஙனே மெய்யெனக் கொள்ளலாம்? என்றாலும், பூதனை கொடுத்தவிஷத்திற்கு மாற்றான அம்ருதமாகத் தனது ஸ்தந்யத்தைக் கொடுக்கவேணுமென்னும் அன்புமிகுதியினால் யசோதைசெய்த இக்காரியம் அவளுடைய பக்திபோன்ற பக்தியை

யுடைய மெய்யன்பர்க்கு நம்பத்தகுந்ததாயிருக்குமே யொழிய மற்றையோர்க்கு இதில் விச்வாஸம் பிறப்பது அரிதே என்ற தாய்த்து.

பேரமர்க்கண்—கண்ணபிரானைக் கொல்லக்கருதி அதற்காக முயன்று பேய்ச்சி இறந்த இடமாதல்பற்றி அதனைப்போர்க்கள மென்றார். "பேரமர்க்கண்" என்றதை யசோதைக்கு விசேஷண மாக்கி, அமர்—ஒன்றோடொன்று சண்டைசெய்வன போன்றிருக் கிற, பேர்—பெரிய, கண்—கண்களையுடையளான, ஆய்த்தாய்—, என்று உரைத்தலுமொன்று. .... (கூச)

ஆறிய வன்பி லடியார்த மார்வத்தால் *
கூறிய குற்றமாக் கொள்ளல்நீ—தேறி *
நெடியோய் ! அடியடைதற் கன்றே * ஈரைந்து
முடியான் படைத்த முரண். (கூரு)

ஆறிய அன்பு இல்	நிரம்பின பக்தி யில்லாதவர்களாய்	படைத்த	புத்திபூர்வகமாகப் பண்ணின
அடியார்	சேஷத்வஜ்ஞாந மாத்திரத்தை யுடையராயிருப் பவர்கள்	முரண்	தப்புக்காரியமானது
தம் ஆர்வத்தால்	தங்களுடைய ஸ்நேஹத்தாலே	நெடியோய்	பெருமை பொருந்திய உன்னுடைய
கூறிய	சொல்லும் வார்த்தைகளை	அடி	திருவடிகளை
குற்றம் ஆ	குற்றமாக	தேறி அடைதற்கு அன்றே	தெளிந்துவந்து (காலக்ரமத்திலே சிசுபாலனாகி) கிட்டுகைக்குக் காரணமாகி விட்டதன்றோ ?.
நீ கொள்ளல்	நீ கொள்ளாதே ; (அது ஏனெனில் ;)		
ஈர் ஐந்து முடியான்	பத்துத்தலைகளை யுடையனான ராவணன்		

[ஆறியவன்பில்.] கீழ்ப்பாட்டில் யசோதைப்பிராட்டியி னுடைய ஒப்புயர்வற்ற அன்பை அநுஸந்தித்த ஆழ்வார்க்குத் தாம் போல்வாருடைய அன்பு ஒரு அன்பாகவே தோற்றவில்லை; கம் ஸன் முதலானாருடைய ப்ராதிகூல்யத்தோடு ஸமமாகவே தம்

முடைய அன்பை நினைக்கலாயினர் ; அதனால் சிறிது கலக்கமுற்ற ஆழ்வார் "மிகக் கொடியனான இராவணனிடத்திலிருந்த பிராதிகூல்யமே, அவன்றானே சிசுபாலனாகப் பிறந்த பிறவியில் உன்னடிச் சேர்வதற்கு அநுகூலமாகப் பலித்ததே!; அப்படியிருக்க, என் போல்வாரிடத்துள்ள போலியான ஆநுகூல்யம் [அன்பு] அநுகூலமாவதற்குத் தடையுண்டோ? என்று தமக்குத்தாமே தேறிக் கூறுகின்ற பாசுரம் இது.

ஸ்ரீவைகுண்டத்தில் ஜய விஜயரென்னும் த்வாரபாலகர் மஹர்ஷிகளின் சீற்றத்துக்கு இலக்காகி எம்பெருமானால் சபிக்கப்பட்டு இந்நிலத்தில் வந்து ஹிரண்ய ஹிரண்யாக்ஷர்களாகவும் இராவணனாகவும் சிசுபாலனாகவும் பிறந்து கடைசி ஜன்மமாகிய சிசுபால ஜன்மத்தில் "1. சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன், திருவடி தாட்பாலடைந்த" என்கிறபடியே திருவடிகளை யடைந்த வரலாறு இங்கு அறியத்தக்கது. 2. "சுரிகுழற்கனிவாய்த் திருவினைப்பிரித்த கொடுமையிற் கடுவிசையரக்கன்" என்கிறபடியே சொல்லவொண்ணாத தீச்செயல் புரிந்தவனான இராவணனுடைய பிரதிகூலகாரியங்களை (சிசுபாலனான பிறப்பில்) அநுகூலகாரியங்களின் பலனைப் பெறுவித்தன வென்றால், நம்முடைய ஆநுகூல்யாபாஸம் அநுகூலமாகவே தலைக்கட்டுமென்பதில் தட்டுண்டோ? என்ற கருத்துக்காண்க. பின்னடிகளிற் காட்டிய த்ருஷ்டாந்தத்தைக்கொண்டு இங்கு ஆழ்வார் பிரார்த்திப்பதாவது—பரிபூர்ணமான அன்புஇல்லாமல் மேலுக்கு அடியாரென்று பேர்சுமக்கிற நாங்கள் ஏதாவது குற்றமாகச் சொல்லிவிட்டால் அதைக்கொண்டு திருவுள்ளம் சீறவேண்டா; ப்ரத்யக்ஷமாக விரோதியென்றே வெளிவந்த இராவணனுடைய தீயசெயல்களை நன்மைக்கு உறுப்பாம்போது, மேலுக்காவது அன்பரென்று காட்டிக்கொள்ளுகிற எங்களுடைய உக்திகள் பொறுக்கக் கூடியவையன்றோ? என்றவாறு.

"ஆறியவன்பிலடியார்" என்று தம்மையே சொல்லிக்கொள்ளுகிறார்போலும்; தன்மையில் வந்த படர்க்கை. கூறிய = பலவின்பால் வினையாலணையும் பெயர்; கூறியவற்றை யென்று பொருள். கொள்ளல்—எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. நெடியோய் =

1. திருவாய்மொழி 7—5—3. 2. பெரியதிருமொழி 5—7—7.

முன்னிலையொருமை வினையாலணையும் பெயர்; ஆறும்வேற்றுமைத் தொகை. முரண்—கோணலான காரியங்கள். தேறி என்னும் வினையெச்சத்தை முன்னடிகளிற் கூட்டியுமுரைக்கலாம், பின்னடிகளிற் கூட்டியுமுரைக்கலாம். .... (௫௫)

$ முரணை வலிதொலைதற் காமென்றே * முன்னம்
தரணி தனதாகத் தானே *—இரணியனைப்
புண்ணிரந்த வள்ளுகிரார் பொன்னாழிக் கையால் * நீ
மண்ணிரந்து கொண்ட வகை. (௫௬)

- முன்னம் — முற்காலத்தில்,
- தரணி தனது ஆக தானே — பூமியெல்லாம் தன்னுடையதென்று அஹங்காரங் கொண்டிருந்த
- இரணியனை — ஹிரண்யாஸுரனை
- புண் இரந்த — புண்படுத்திப் பிளந்த
- வள் உகிர் ஆர் — கூர்மையான நகங்கள் பொருந்திய
- பொன் ஆழி கையால் — அழகிய திருவாழியைக் கொண்ட திருக்கையினால்
- நீ — நீ
- மண் இரந்து கொண்ட வகை — (மாவலியிடத்தில்) பூமியை யாசித்துப் பெற்றதானது
- முரணை வலி தொலைதற்கு ஆம் என்றே — (ஸம்ஸாரிகளின்) முரட்டுத்தனத்தின் மிடுக்கைத் தொலைக்கலாமென்றல்லவோ?.

[முரணைவலி.] ஆச்ரிதவிரோதியான இரணியனைக் கிழித்தெறிந்தது போல மஹாபலியையும் கொன்றொழிக்கலாமாயிருக்கச் செய்தேயும் அங்ஙனஞ் செய்யாது, அழகிய வடிவெடுத்து யாசகனாய் நிற்கும் வகையாலே உலகங்கொண்டது ஏதுக்காக? "எம்பெருமான் இவ்வளவு ஸௌலப்யகுணமுடையவன்" என்று எல்லாரும் தெரிந்துகொண்டு இக்குணத்தில் ஈடுபட்டுத் தங்களுடைய அஹங்காரத்தை விட்டொழிந்து ஆட்படக்கூடுமென்கிற திருவுள்ளத்தாலோ? என்கிறார்.

"இரணியனைப் புண்ணிரந்த வள்ளுகிரார் பொன்னாழிக்கையால்" என்ற சொல்லாற்றலால், மாவலியையும் இரணியனைப் போலவே பங்கப்படுத்தவேண்டியது ப்ராப்தமாயிருக்கவும் அங்ஙனஞ் செய்யாதது மேற்குறித்த கருத்தினாலாம்—என்பது விளங்கும்.

தரணி—வடசொல். .... (௫௬)

$ "முரணைவலி" "முரணவலி" என்பன பாடபேதங்கள்.

வகையறு நுண்கேள்வி வாய்வார்கள் * நாளும்
புகைவிளக்கும் பூம்புனலு மேந்தி *—திசைதிசையின்
வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே * வெண்சங்கம்
ஊதியவாய் மாலுகந்த வூர். (௬௭)

வகை அறு	அற்பபலன்களையும் பரமபுருஷார்த்தத்தையும் உட்புகுந்து இன்னவகை இன்னவகை என்று அறுதியிடுவதற்குறுப்பான
நுண் கேள்வி வாய்வார்கள்	ஸூக்ஷ்மார்த்த ச்ரவணமுடையவர்களான
வேதியர்கள்	வைதிகர்கள்
நாளும்	நித்தியமும்
புகை விளக்கும்	தூபதீபங்களையும்
பூ புனலும்	புஷ்பங்களையும் தீர்த்தத்தையும்
ஏந்தி	தரித்துக்கொண்டு
திசை திசையின்	பலதிக்குக்களில் நின்றும்
சென்று	வந்து சேர்ந்து
இறைஞ்சும்	வணங்குமிடமான
வேங்கடம்	திருவேங்கட மலையானது,
வெண் சங்கம் ஊதிய வாய் மால்	வெளுத்த சங்கைத் திருப்பவளத்திலே வைத்து ஊதின எம்பெருமான்
உகந்த	திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்கப்பெற்ற
ஊர்	திவ்யதேசமாம்.

[வகையறுநுண்கேள்வி.] மூன்று பாசுரங்களாலே திருமலையை அநுபவிக்கிறார். எம்பெருமான் திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்குமிடம் திருவேங்கடமலை யென்கிறார். அத்திருமலை எப்படிப்பட்டதென்னில்; தினந்தோறும் பலபல திசைகளினின்றும் வைதிகர்கள்வந்து தூபதீபம் முதலிய திருவாராதநஸாமக்ரிகளைக் கொண்டு ஆச்ரயிக்கப்பெற்றது—என்கிறார். அந்த வைதிகர்கட்கு விசேஷணமிடுகிறார் வகையறுநுண்கேள்விவாய்வார்கள் என்று. ஸூக்ஷ்மமான சாஸ்த்ரார்த்தங்களையும் அலகலகாக நிச்சயித்தறியக்கூடிய கேள்வி வாய்ந்தவர்கள்—பஹுச்ருதர்கள் என்றபடி.

வெண்சங்க மூதியது பாரதப்போரில். (௬௭)

ஊரும் வரியரவ மோண்குறவர் மால்யானை *
பேர வெறிந்த பெருமணியை *—காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே * மேலசுரர்
எம்மென்னு மால திடம். (௯௭)

ஊரும்	திரிகின்ற	கார் உடைய மின் என்று	மேகத்தினிடையே தோன்றுகிற மின்னலென்று பிரமித்து (இடிக்கு அஞ்சி)
வரி அரவம்	(உடம்பில்) கோடுகளையுடைய ஸர்ப்பமானது,—	புற்று அடையும் வேங்கடம்	புற்றினுள்ளே நுழையுமிடமான திருமலை,
ஒண் குறவர்	அழகிய குறவர்கள்	மேல சுரர்	மேற்பட்டவர்களான நித்யஸூரிகள்
மால் யானை பேர	(பட்டி மேய்கின்ற) பெரிய யானைகள் (தங்களுடைய புனத்தில் நின்றும்) அப்பால் போவதற்காக	எம் என்னும் மாலது	'எங்களுடையவன்' என்று அபிமானிக்கும் படியாகவுள்ள எம்பெருமானது
எறிந்த	(அவ்யானைகளின் மேல்) வீசியெறிந்த	இடம்	திவ்யதேசமாம்.
பெரு மணியை	பெரியதொரு மாணிக்கத்தை (கண்டு)		

[ஊரும்வரியரவம்.] திருவேங்கடமலையே நித்யஸூரி நிர்வாஹகனை எம்பெருமான் திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்குமிடமென்கிறார். திவ்யதேசங்களிலுள்ள சராசரங்கள் முற்றும் மெய்யன்பர்கட்கு உத்தேச்யமாயிருக்கும். ஸ்ரீகுலசேகராழ்வார் தம்முடைய பிரபந்தத்திலே $ நான்காந்திருமொழியிலே "வேங்கடத்துக்கோனேரிவாழுங் குருகாய்ப் பிறப்பேனே" "திருவேங்கடச் சுனையில் மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே" "வேங்கடக் கோன் தான் உமிழும் பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவேனாவேனே" "வேங்கடத்துச் செண்பகமாய்நிற்குந் திருவுடையேனாவேனே" "வேங்கடமலைமேல் தம்பகமாய்நிற்குந் தவமுடையேனாவேனே" "வேங்கடத்துள் அன்னனைய பொற்குவடா மருந்தவத்தனாவேனே" "திருவேங்கடமலைமேல் கானாறாய்ப் பாயுங்

$ "ஊனேறு செல்வத்து" இத்யாதி.

கருத்துடையேனாவேனே" "திருவேங்கடமலைமேல் நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேனாவேனே" "வேங்கடவா! நின்கோயிலின் வாசல்.......படியாய்க்கிடந்துன் பவளவாய் காண்பேனே" என்று திருமலையிற் பலவகைப் பிறவிபிறக்கக் குதூஹலித்து, கடைசியாக "எழில் வேங்கடமென்னும் எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே" என்று தலைக்கட்டியிருப்பதற்கேற்ப, இக் குலசேகராழ்வாரைப்போன்ற அத்யவஸாயமுடைய மஹான்களே திருமலையில் பாம்பாகவும் குறவராகவும் யானையாகவும் புற்றாகவும் வந்து பிறந்திருப்பர்களாகையாலே அப்பொருள்களையும் எம்பெருமானைப்போலவே உத்தேச்யமாகக்கொண்ட இவ்வாழ்வார் இப் பாசுரத்தாலே தம்முடைய ப்ரதிபத்தியை வெளியிடுகின்றாரென்க.

குறவர்களுக்குப் புனங்காப்பது தொழில்; புனங்களிலே யானை முதலிய ஜந்துக்கள் பட்டிமேய்ப்பதும்; அவற்றைத் துரத்திப் புனத்தைக் காவல்செய்து கொள்ளவேண்டிய குறவர் தாங்கள் பரண்களிலேயிருந்தபடியே தங்கள் கையிலுள்ள பெரிய மாணிக்கக் கட்டியை யானையின்மீது எறிவர்கள்—யானை புனத்தைவிட்டு அப் பால்போவதற்காக. அப்போது அங்குத்திரியாநின்ற மலைப்பாம்புகளானவை யானையின்மேற்பட்ட ரத்னத்தைக்கண்டு, யானையை மேகமாகவும் ரத்னத்தை மின்னலாகவும் பிரமித்து மேகத்தில் மின்னலுண்டானவுடனே இடி உண்டாகுமாகையாலும், பாம்புகள் இடிக்கு அஞ்சி ஒளிக்கு மியல்வுடையனவாகையாலும் அப்பாம்புகள் புற்றினுள்ளே புகாநிற்கும்: இப்படிப்பட்ட தன்மைவாய்ந்த திருமலை எம்பெருமானது திருப்பதியாம் என்றாராயிற்று.

ஊரும்வரியரவம்—இயற்கையாகத்திரிகின்ற பாம்பு என்றாவது, யானையை விழுங்குவதற்காகத் திரிகின்ற பாம்பு என்றாவது பொருள்கொள்ளலாம். பாம்புகள் யானையை விழுங்கவல்லனவோ? எனின்; கேண்மின்;—சில மலைப்பாம்புகள் யானையைப்பார்த்து அஞ்சி நடுங்கி ஓடிப்போய்விடுமென்றும், பல மலைப்பாம்புகள் யானையை அணுகி விழுங்கிவிடுமென்றும் தமிழ் நூல்களால் தெரிகின்றது; 'திரையன் பாட்டு' என்ற ஓர் பழையநூலில்—"கடுங் கண்யானை நெடுங்கை சேர்த்தி, திடங்கொண்டறைதல் திண்ணமென்றஞ்சிப், படங்கொள்பாம்பும் விடரகம்புகூஉம், தடங்கொள்

உச்சித்தாழ்வரையடுக்கத்து" என்றதனால் பாம்பு யானையைக் கண்டு 'இது துதிக்கையினால் நம்மைத் தொலைத்திடும்' என்று நிச்சயித்து அஞ்சி பொளிக்குமென்பது தெரிகின்றது. இனி, சங்கநூல்களுள் ஒன்றான நற்றிணையில் "ஞால்வாய்க்களிறு பாந் தட்பட்டெனத், துஞ்சாத்துயரத் தஞ்சுபிடிப்பூசல், நெடுவரை விடரகத்தியம்பும், கடுமான் புல்லிய காடிறந்தோரே" (14) என் றும், தேவாரம் திருக்கயிலாயம் முதல் திருமுறை இரண்டாம் பாட்டில் "பரியகளிற்றை அரவுவிழுங்கி மழுங்கவிருள் கூர்ந்த, கரியமிடற்றர் செய்யமேனிக் கயிலைமலையாரே" என்றும், கம்ப ராமாயணம் சித்திரகூடப் படலத்தில் (34) "இடிகொள் வேழத்தை எயிற்றொடு மெடுத்துடன் விழுங்கும், கடியமாசுணம் கற்றறிந்தவ ரென வடங்கிச், சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாமிதித் தேறப், படிகடாமெனத் தாழ்வரைகிடப்பன பாராய்" என்றும் சொல்லியிருக்கையாலே, பாம்பு யானையை விழுங்குமென்பது தெரிகின்றது ஆகவே, பாம்பு யானையைக்கண்டு அஞ்சி யொளித் தல் சிறுபான்மையும், விழுங்குதல் பெரும்பான்மையுமாயிருக்கு மென்று கொள்ளக்கடவது. 1. "கரியமாமுகிற்படலங்கள் கிடந்து அவை முழங்கிடக், களிறென்று பெரிய மாசுணம் வரை யெனப் பெயர்தரு பிரிதி" என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில், நஞ்சீயர்க்கும் நம் பிள்ளைக்கும் விளைந்ததாக அருளிச்செய்யப்பட்டுள்ள ஸம்வாத மொன்று இங்கே அநுஸந்திக்கத்தக்கது.

வரி அரவம்=பாம்பின் உடலில் இயற்கையாகவுள்ள கோடு களைச்சொன்னபடி. ஒண் குறவர்=சிறந்த குறவர் என்றபடி. குறவர்க்குச் சிறப்பு யாதெனில்;—"இவர்களுடைய பாட்டன் பாட்டனிலே யொருத்தன் பூமியிலே இறங்கினான் என்னும் பழியின்றிக்கேயிருக்கை" என்று பெரியவாச்சான்பிள்ளை வியாக் கியானமாதலால், வம்ச பரம்பரையாகத் திருமலையைவிட்டுக் கீழிறங்காமல் அவ்விடத்தே நித்யவாஸம் பண்ணியிருக்கையே சிறப்பாமென்க.

"மால் யானை பேர ஒண்குறவர் எறிந்த பெருமணியை ஊருமு

---

1. பெரியதிருமொழி 1—2—10.

வரியரவம் (கண்டு) காருடைய மின்னென்று புற்றடையும் வேங்கடம்" என்று அந்வயக்ரமம் காண்க. மலைகளின்மேல் நவமணிகள் நிரம்பிக்கிடக்குமாதலாலும், நமக்கெல்லாம் ஸாதாரணமான கல்லுகள்போலே குறவர்க்கு மணி மாணிக்கங்கள் எளியனவாதலாலும் யானையைத் துரத்தவேண்டிய குறவர் பெருமணியை விட்டெறிந்தனரென்க.

காருடைய மின்னென்று புற்றடையும்வேங்கடம்=பாம்புகள் மேகத்தைக்கண்டு யானையாக ப்ரமிப்பதும் உண்டு; யானையைக் கண்டு மேகமாக ப்ரமிப்பதும் உண்டு. "கரியமாமுகிற் படலங்கள்" என்ற கீழுதாஹரித்த பெரியதிருமொழிப் பாசுரத்தில், மேகத்தைக்கண்டு யானையாக ப்ரமித்தபடி சொல்லிற்று; இப்பாட்டில் யானையைக்கண்டு மேகமாக ப்ரமித்தபடி சொல்லுகிறது.

மேல சுரர் எம்மேன்னும் மாலதிடம்=மேலான சுரர் என்று நித்யஸூரிகளைச் சொன்னபடி. 'ஸுர' என்ற வடசொல் தேவதைக்குப் பெயர். "எம்மேன்னும்" என்றது—'எம்முடையது, எம்முடையது' என்று மேல்விழும்படியான என்றபடி. அப்படி மேல்விழுந்து ஆச்ரயிக்கத்தக்க பெருமைபொருந்திய இடம் என்றாவது, மேல்விழுந்து ஆச்ரயிக்கத்தக்க பெருமானுடைய இடம் என்றாவது பொருள்கொள்ளலாம். ... (௩அ)

இடந்தது பூமி யெடுத்தது குன்றம் *
கடந்தது கஞ்சனை முன்னஞ்ச *—கிடந்ததுவும்
நீரோத மாகடலே நின்றதுவும் வேங்கடமே *
பேரோத வண்ணர் பெரிது. (௩௯)

பேர் ஓதம் வண்ணர்	பெரிய கடலின் நிறம்போன்ற நிறமுடைய பெருமான்	எடுத்தது	குடையாக வெடுத்துப் பிடித்தது
முன்	முற்காலத்தில்	குன்றம்	கோவர்த்தன மலையாம்;
இடந்தது	(மஹாவராஹமாகிக்) கோட்டாற் குத்தியெடுத்தது	அஞ்ச கடந்தது	அஞ்சி முடிந்து போம்படி செய்தது
பூமி	பூமியாம்;	கஞ்சனை	கம்ஸனையாம்;

கிடந்ததுவும்	திருக்கண் வளர்ந் தருளினது	பெரிது நின்றதுவும்	பெருமை யெல்லாம் தோற்ற நின்றது
ஓதம் நீர் மா கடல்	பெருவெள்ள முடைய திருப் பாற்கடலிலாம்;	வேங்கடம்	திருமலையிலாம்.

[இடந்ததுபூமி.] எம்பெருமானுடைய பல செயல்களை அநுஸந்தித்து இனியராகிறார். முன்பு மஹாப்ரளயத்தில் அண்டபித்தியில் ஒட்டிக்கிடந்த பூமியை மஹாவராஹமாகி உத்தரித்தான்; இந்திரன் பசிக்கோபத்தால் ஏழுநாள் விடாமழை பெய்வித்தவன்று திருவாய்ப்பாடியைக் காத்தருள்வதற்காகக் கோவர்த்தன மலையைக் குடையாகவெடுத்துப் பிடித்தான்; சாதுசனங்களை நலிந்துகொண்டிருந்த கம்ஸனைக் கொன்றொழித்தான்; அவதாரங்களுக்கு மூலகந்தமாகத் திருப்பாற்கடலிலே திருக்கண்வளர்ந்தருளாநின்றான்; வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பாகத் திருவேங்கடமலையிலே தன்பெருமையெல்லாம் பொலிய நின்றருள்கின்றான்—என்று இப்பாட்டில் அநுஸந்திப்பதன் கருத்தாவது—இப்படி ஓயாமல் பிறர் காரியமே போதுபோக்காயிருக்கின்ற எம்பெருமானுடைய நீர்மை வருணிக்கமுடியாதது என்றதாம்.

இப்பாசுரத்தின் வியாக்கியானத்திலே பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்கிறார்—"நாம் பெருமாளை யுகந்தோமென்று சோற்றை யுகப்புதோம்; சோற்றையுகந்தோமென்று நாலும் பத்தும் பட்டினி விடுவுதோம்; ஸ்த்ரீகளையுகந்தோமென்று சூது சதுரங்கம் பொருதல் உறங்குதல் செய்வுதோம்; ஒன்றிலும் ஸ்நேஹமில்லை." என்று. அற்புதமான இந்த ஸ்ரீஸூக்திகளின் உட்கருத்து யாதெனில்;—ஸம்ஸாரிகளான நம்முடைய போதுபோக்குக்கும் மெய்யடியார்களான ஆழ்வார்களுடைய போதுபோக்குக்கும் நெடுவாசியுண்டு; நாம் ஒரு விஷயத்திலும் பிடிமானமில்லாமலிருக்கிறோம்; ஆழ்வார்களோ தாம் பிடித்த பகவத்விஷயத்தை ஒரு நொடிப்பொழுதும் விடாமல் அதுதன்னிலே தோள் மாறுகின்றனர்; இடந்தது பூமி, எடுத்தது குன்றம் என்றிப்படி எம்பெருமானுடைய சேஷ்டிதங்களை மாறிமாறி அநுபவிக்கிறாரேயொழிய வேறொன்றில் நெஞ்சு செல்லப் பெறுகின்றிலர்; நாமெல்லாரும் இப்படி பகவத்விஷயத்தில் பற்றுதலில்லாமல்

கெட்ட விஷயத்தைப்பற்றி யிருக்கிறோம்; இருந்தாலும் அதிலாவது ஏதேனுமொன்றைப்பற்றிப் பிடித்தபிடி விடாமல் திண்ணியோமா யிருக்கிறோமோவெனில்; இல்லை; நாம் பெருமாளை ஸேவிக்க ஆசையுள்ளவர்கள்போலக் காட்டிக்கொண்டு கோவில்களுக்குப் போகிறோம்; போனாலும் அங்குப்போய்ச் செய்வது புளியோரை பொங்கல் தோசை வடை முதலியவற்றையிட்டு வயிற்றை நிரப்புவதேயன்றிப் பெருமாளை அன்பார ஸேவித்த பாடில்லை; சோற்றை உகக்கிற நாம் அதிலாவது ஒரு பிடிவாதங் கொண்டிருக்கிறோமோ வென்னில்; அதுவுமில்லை; ஏகாதசி முதலிய சில விரதங்கள் அநுட்டிப்பதுபோலக் காட்டி வயிற்றை யடக்கிப் பட்டினிகிடக்கின்றோம். இஃது இருக்கட்டும்; வேசிகளை யநுபவிக்க விரும்பி அவர்களின் வீட்டுக்குப்போகிறோம்; அதையாவது பிடிமானமாகச் செய்கிறோமோ வென்னில், இல்லை; அங்குப்போய்ச் சூதாடியும் சதுரங்கமாடியும் உறங்கியும் போதைப்போக்கி வருகிறோம்; இப்படி நாம் கெட்டகாரியங்களைச் செய்தாலும் அதிலும் ஒரு பிடிவாதமில்லாமல் பலபல காரியங்களிலே நெஞ்சு செலுத்திக்கிடக்கிறோம்; ஆழ்வார்களோ, பகவத்விஷயத்தைப் பிடித்து அதில் ஓய்வு இல்லாமல் 'கொக்குக்கு ஒன்றேமதி' என்னுமாபோலே ஒரேபிடிவாதமாயிருந்து அநுபவிக்கிறார்கள்; இவர்களுடைய படி எங்கே!, நம்முடைய படி எங்கே!, என்று ஆழ்வார்களின் நிலைமையைப் பாராட்டியும் ஸம்ஸாரிகளின் நிலைமையைப் பழித்தும் பேசினபடி. .... (௩௧)

பெருவில் பகழிக் குறவர்கைச் செந்தீ *
வெருவிப் புனந்துறந்த வேழம் *—இருவிசும்பில்
மீன்வீழக் கண்டஞ்சும் வேங்கடமே * மேலசுரர்
கோன்வீழக் கண்டுகந்தான் குன்று. (௩௦)

பெரு வில்	பெரிய வில்லையும்	செம் தீ	சிவந்த நெருப்புக்கு
பகழி	அம்புகளையு முடையரான	வெருவி	பயப்பட்டு
குறவர்	குறவர்களினுடைய	புனம் துறந்த	கொல்லையை விட்டு நீங்கின
கை	கையிற்பிடித்திருந்த	வேழம்	யானையானது,

இரு விசும்பில்	பரந்த ஆகாசத்தில் நின்றும்
மீன் வீழ	நக்ஷத்திரம் விழ
கண்டு	அதனைப்பார்த்து (நாம் அப்பால் போக முடியாத படி குறவர்கள் கைக்கொள்ளியைப் பூமியிலே எறிந்தார்கள் என்று ப்ரமித்து)
அஞ்சும்	பயப்படுமிடமான
வேங்கடம்	திருவேங்கடமானது,
மேல்	முன்பொருகால்
அசுரர் கோன் வீழ கண்டு	இரணியாசுரனை முடித்து.
உகந்தான்	(ப்ரஹ்லாதனுடைய விரோதி தொலைந்தது என்று) மகிழ்ந்த பெருமானுடைய
குன்று	திருமலையாம்.

[பெருவிற்பகழி.] "வேங்கடமே அசுரர்கோன் வீழக்கண்டு உகந்தான் குன்று"—பாகவத விரோதியான இரணியனைத் தொலைத்துப் பரமபாகவதனான ப்ரஹ்லாதனைக் காத்தருளின பெருமான் அந்த ஆச்ரிதபக்ஷபாத மஹாகுணத்தை வெளியிட்டுக்கொண்டு இன்றைக்கும் ஸேவைஸாதிக்குமிடம் திருமலையென்கிறார். அத்திரு வேங்கடம் எப்படிப்பட்டதென்ன, அவ்விடத்துச் செய்திகளில் ஒன்றை யெடுத்துரைக்கிறாரிதில். திருமலையிற் கொல்லைகளில் (இராக்காலங்களில்) யானை பட்டிமேய, அதனைத் துரத்துவதற்காக அம்புதொடுத்தவில்லை ஒரு கையிலேகொண்ட குறவர்கள் மற்றொரு கையிலே தீவட்டியைக்கொளுத்திப் பிடித்துக்கொண்டு அதட்டிச்செல்ல, அத்தீவட்டியையும் அம்புகோத்த வில்லையும் கண்ட அக்களிறு அஞ்சி ஓடிப்போக, அகஸ்மாத்தாக ஆகாசத்தில் நின்றும் நக்ஷத்திரம் அவ்யானை பதறிச்செல்லும் வழியிடையே வந்து பெருஞ்சோதியுடனே விழ, அதைக்கண்டு இது நக்ஷத்ரமென்றுணராது 'குறவர்கள் கைத்தீவட்டியையே கீழெறிந்தார்கள்' என்று ப்ரமித்து 'இவ்வழியை நாம் எப்படி கடந்து செல்ல வல்லோம்?' என்றஞ்சித் திகைத்து நிற்குமிடமாம் அத்திருமலை.

அஸ்தானே பயசங்கை பண்ணுகிற யானையின் செய்தியைக் கூறினவிதனால்—அஸ்தானே பயசங்கைபண்ணி எம்பெருமானுக்கு மங்களாசாஸநம் பண்ணுகிற மஹான்களின் இருப்பை நினைப்பூட்டினாராகக் கொள்ளலாமென்ப. ... ... (௩௦)

குன்றனைய குற்றஞ் செய்யினும் குணங்கொள்ளும் *
இன்று முதலாக வென்னெஞ்சே *—என்றும்
புறனுரையே யாயினும் பொன்னாழிக் கையான் *
திறனுரையே சிந்தித் திரு. (சக)

என் நெஞ்சே	எனது மனமே!,	சிந்தித்து இரு	அநுஸந்தித்துக் கொண்டிரு;
என்றும்	எப்போதும்		(அப்படியிருந்தால்)
புறன் உரையே ஆயினும்	(உள்ளூர இல்லாமல்) மேலுக்குச் சொல்லுகிற வார்த்தையாயிருந்தாலும்	இன்று முதலாக	இன்று தொடங்கி
பொன் ஆழி கையான் திறன் உரையே	சக்ரபாணியான எம்பெருமான் விஷயமாகப் பேசும் பேச்சையே	குன்று அனைய குற்றம் செய்யினும்	மலைபோல் (பெருப் பெருத்த) குற்றங்களைச் செய்தாலும்
		குணம் கொள்ளும்	(அவற்றையெல்லாம் எம்பெருமான்) குணமாகவே திருவுள்ளம் பற்றுவன்.

[குன்றனையகுற்றம்.] எம்பெருமானுடைய வாத்ஸல்யகுணத்தி லீடுபட்டுப் பேசுகிறார். நெஞ்சே!, ஆந்தரிகமான அன்பின் மிகுதியினாலே சொற்களைத்தொடுத்து எம்பெருமானைத் துதிப்பார் பலருண்டு; அப்படிப்பட்ட அன்பு நமக்கு இல்லாமையினால் கழுத்துக்கு மேற்படவே சில சொற்களை நாம் கபடமாகச் சொல்ல வல்லோம்; அப்படி மேலுக்குச்சொல்லுகிற வார்த்தையாயிருந்தாலும் அது பகவானைப்பற்றின வார்த்தையாக இருந்துவிடுமாயின் பயன்படும். எம்பெருமான் "मित्रभावेन सम्प्राप्तं न त्यजेयं कथञ्चन = மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந" [ப்ரீதியை பாவனைசெய்து வருபவனையும் கைவிடமாட்டேன்] என்று சொன்னவனுகையாலே நாம் மேலுக்குச் சொல்லுகிற வார்த்தையையும் அவன் கனத்ததாகத் திருவுள்ளம்பற்றித் தன்னுடைய வாத்ஸல்ய குணத்தை நம்மேல் ஏறிப்பாயவிடுவன்; நாம் மலைமலையாகக் குற்றங்கள் செய்தாலும் 1. "என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்னுமவனுடைய

1. பெரியாழ்வார் திருமொழி 4—9—2.

திருவுள்ளத்தில் அவையெல்லாம் நற்றமாகவே படும்; அவன் நமது ஆபிமுக்கியத்தை மாத்திரமே எதிர்பார்ப்பவனாதலால் நாம் மேலுக்குச்சொல்லும் வார்த்தையும் அவனுக்குக் கார்யோபயோகியாக ஆய்விடுங்காண்—என்றாராயிற்று.

ஸ்ரீவைகுண்டத்திலே எம்பெருமான் நித்யர்களோடும் முக்தர்களோடும்கூடிப் பரிபூர்ணாநுபவம் பெறாநிற்கச்செய்தேயும், அதனால் அப்பெருமான் சிறிதும் மகிழாது, பல பிள்ளைகளைப் பெற்ற ஒரு தகப்பனார் ஒரு மகன்மாத்திரம் தேசாந்தரத்திலிருக்க மற்ற எல்லாப்புத்திரர்களோடும் கூடி வாழாநின்றாலும் அதனால் மகிழ்ச்சியடையாமல் தேசாந்தரத்திலுள்ள புத்திரனது பிரிவையே நினைத்துப் பரிதபித்திருக்குமாபோலே எம்பெருமானும் ஸம்ஸாரிகளான அஸ்மதாதிகளின் பிரிவையே நினைத்துப் பரிதாபமுற்று, நம்மோடே கலந்து பரிமாறுவதற்காகக் கரணகளேபரங்களை நமக்குத்தந்தருளி அவற்றைக்கொண்டு நாம் காரியஞ்செய்யும்படியான சக்தி விசேஷங்களையும் நமக்குக்கொடுத்து, மிகவும் அஹங்காரிகளான நம்மெதிரில் தான் ப்ரத்யக்ஷமாக வந்து நின்றால் நாம் பொறாமைகொண்டு ஆணையிட்டாகிலும் தன்னைத் துரத்திவிடுவோமென்றெண்ணி ஒருவர்கண்ணுக்குந் தோற்றாதபடி, உறங்குகிற குழந்தையைத் தாயானவள் முதுகிலே அணைத்துக் கொண்டு கிடக்குமாபோலே எம்பெருமான்றானும் தானறிந்த ஸம்பந்தமே காரணமாக நம்மை விடமாட்டாமல் அந்தர்யாமியாயிருந்து தொடர்ந்துகொண்டு நம்மையொருகாலும் கைவிடாமல் ஸத்தையை நோக்கிக்கொண்டு நமக்குத் துணையாய்ப் போருமளவில், நாம் கெட்ட காரியங்களிலே கைவைத்தோமாகில் நம்மைத் திருப்பமாட்டாமல் அநுமதிபண்ணி உதாஸீநரைப்போலேயிருந்து திருப்புகைக்கு இடம்பார்த்துக்கொண்டேயிருந்து, நாம் செய்கிற தீமைகளிலே ஏதேனுமொரு தீமையாவது $ நன்மையென்று பேரி

$ விஷய ப்ரவணனாய் வேசிகளைப்பின்தொடர்ந்து அடிக்கடி கோவில்களிலே நுழைந்து புறப்படுகை; வயலில் பட்டிமேய்ந்த பசுவை அடிப்பதாகத் துரத்திக்கொண்டு போம்போது அது ஒரு கோவிலைப் பிரதக்ஷிணம் பண்ணிக்கொண்டு ஓடுகிறவளவிலே அதை விடமாட்டாத ஆக்ரஹத்தாலே தானும் அக்கோவிலை வலஞ்செய்கை; (சிசுபாலாதிகளைப்போலே) நிந்தை செய்வதற்காகத் திருநாமங்களைச்சொல்லுகை முதலியன.

டக்கூடியதாயிருக்குமோவென்று பார்த்துவந்து, அப்படிப்பட்ட தீமைகளைக் கண்டுபிடித்து "என் ஊரைச்சொன்னாய், என் பேரைச்சொன்னாய்" என்றிப்படி சில ஸுக்ருதங்களை ஏறிட்டு மடிமாங்காயிட்டுக் காரியம் செய்கிறானென்று இதிஹாஸ புராணங் களிலே காணநின்றோமாகையாலே, இப்படி அநுக்ரஹிப்பதற்குச் சிறிது வ்யாஜமாத்திரத்தை எதிர்பார்த்துத்திரிகின்ற எம்பெருமா னுடைய திருவுள்ளத்துக்கு இசைய "புறனுரையேயாயினும் பொன்னுழிக்கையான்திறனுரையே சிந்தித்திரு" என்றருளிச் செய்தாரிங்கு.

"குன்றனைய குற்றஞ்செய்யினுங் குணங்கொள்ளும்" என்ற முதலடிக்கு இரண்டுவகையாகப் பொருள் பணிப்பர். (1) நாம் மலை மலையாகக் குற்றங்கள் செய்தாலும் எம்பெருமான் அவற்றில் திருக் கண் செலுத்தாமல் குணமாகவுள்ளவற்றையே கண்டுகொள்வன்— என்பதாக ஒரு பொருள்: (2) நாம் மலைமலையாகக் குற்றங்கள் செய்தாலும் அவற்றையெல்லாம் தான் குணமாகக்கொள்வன் (அதாவது) போக்யமாகக் கொள்வன்—என்பதாக மற்றொரு பொருள்: இவற்றுள், முதற்பொருளைவிட இரண்டாம் பொருள் சிறக்கும். குற்றங்களிற் கண்செலுத்தாமல் குணமாகவுள்ளதையே கொள்ளுகிறானென்னும் பொருளில், நம்மிடத்தில் குணங்களுஞ் சில உண்டென்று வெளியிட்டபடியாகும்: 1. "அக்ருதஸுக்ருத கஸ்ஸுஷ்க்ருதாஃ ஸுபகுணலவலேசதேசாதிகஃ। அஸுப குணபரஸ்ஸஹஸ்ராவ்ருதஃ வரதமுருதயம் கதிம்த்வாம் வ்ருணே = அக்ருதஸுக்ருதகஸ் ஸுதுஷ்க்ருத்தரஃ சுபகுணலவ லேசதேசாதிகஃ—அசுப குணபரஸ்ஸஹஸ்ராவ்ருதஃ வரதமுருதயம் கதிம்த்வாம் வ்ருணே." என்றாற்போலே, குற்றங்களே கூடுபூரித் திருப்பதாகவும் குணமென்பது லவலேசமுமில்லையாகவும் அநுஸந் தித்துக்கொள்ளும் பெரியோர்களின் கருத்துக்கிணங்க, 'குற்றங் களையெல்லாம் குணமாகக் கொள்வன்' என்னும் பொருள் மிகச் சிறக்கும்.

குற்றங்களை நற்றமாகக் கொள்வனென்னு மிப்பொருளின் ஸாரஸ்யத்தைப்பற்றிச் சில சொல்லவேண்டிற்றுண்டு; கேண்

1. கூரத்தாழ்வானது வரதராஜஸ்தவம்—92.

மின் ;—இவ்வுலகின்கண் மதிவிகற்பால் பிணங்கும் சமயங்கள் பலபலவுண்டு ; 'எம்பெருமானே இல்லை' என்கிற பாஹ்யஸமயிகளும், எம்பெருமானொருவ னுண்டென்றிசைந்து 'அவனுக்குக் குணமில்லை' என்கிற [நிர்க்குண ப்ரஹ்மவாதிகளான] குத்ருஷ்டிகளும் ஏற்பட்டிருப்பதுபோலவே, எம்பெருமானையும் அவனுக்குக் குணங்களையும் இசைந்துவைத்து 'ஆனால் அக்குணங்கள் ஓர் எல்லையுடையன' என்னுங் கொள்கையுடையாரும் சிலருண்டு. "உயர்வற வுயர்நலமுடையவன்" என்றருளிச்செய்த ஆழ்வாரையும், "அநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுணகணௌக மஹார்ணவ!= அநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண்குணகணௌக மஹார்ணவ!" என்றருளிச்செய்த எம்பெருமானாரையும் வழிபடுகின்ற ஸாத்விகர்களின் ஸித்தாந்தம் 'எம்பெருமானுடைய திருக்குணங்களின் அதிசயத்திற்கு எல்லையில்லை' என்பதேயாம். எம்பெருமானது எண்ணிறந்த குணங்களுள் வாத்ஸல்யம் என்பது ஒன்று. (அடியார்களின்) குற்றங்களைக் காணாதிருக்கையே வாத்ஸல்யமென்று சிலரது கொள்கை. அங்ஙனன்றியே, 'தோஷங்களையும் போக்யமாகக் கொள்ளுதலே வாத்ஸல்யம்' என்பது ஸத்ஸம்ப்ரதாயஸித்தாந்தம். இங்ஙனே பொருளாகில் சாஸ்த்ரார்த்தங்கள் வ்யாகுலங்களாய் விடுமென்று பிரதிபக்ஷிகள் பகர்வதுண்டு; அஃது எம்பெருமானுடைய குணத்திற்குக் குறை கூறினபடியாமத்தனை. அடியார்களுடைய தோஷங்களைக்கண்டு வெறுப்புக் கொள்ளாதே அவர்களைக் கைக்கொள்வதற்கு அந்த தோஷங்களையே $ பச்சையாக்குகை—வாத்ஸல்யம், என்னும் ஸத்ஸம்ப்ரதாயப் பொருளில் குறை இறையுமில்லை. 'தோஷங்களை போக்யமாகக் கொள்வதென்பது குணமா? அன்றா?' என்று பொதுவாகக் கேட்கிறோம். எம்பெருமான் விஷயத்திலே இக்கேள்வி கேட்கிறோமென்று கொள்ளாமல் ஸாமாந்யமாகக் கேட்கிறோமென்று கொண்டு விடையளிக்க வேணும் ; "ஸம்பந்நவிஶேஷாணாம் தேஷாம் ஸ்ரீ: ஸ்நேஹ: ; யஸ்ய விபாகா: ஸ்வாஸந்நயஸங்கித்வம், தோஷாநவஹாஸ:, தோஷேபி குணத்வபுத்திரித்யாதய:." [உறவினர்களிடத்து வைக்கும் அன்புக்குப் பல பரிபாகங்களுண்டு; அவையாவன:

$ பச்சை—உபஹாரம்.

காரணமின்றியே பயத்தை சங்கிப்பது, தோஷம் தோற்றாதிருக்கை, தோஷத்தையும் குணமாகக்கொள்ளுகை முதலியன.] என்று ச்ருதப்ரகாசிகையிலே அருளிச்செய்திருக்கையாலே, குற்றங்களையும் நற்றமாகக் கொள்ளுகையென்பது சிறந்த குணமேயாம் என்ன வேணுமேயன்றி, குணமன்றென்னவொண்ணாது. “வாத்ஸல்யம் நாம தோஷேஷ்வபி குணத்வபுத்தி:” என்று ஸமந்வயாதிகரண ச்ருதப்ரகாசிகையிலுமுள்ளது. ஆகவே, குணமென்று ஏற்படுகிற விது எம்பெருமானுக்கு இல்லையென்றால் அவனுக்கு ஒரு குணம் குன்றியதாகிறது. அப்போது, பகவத்குணங்களுக்கு இட்ட ‘உயர்வறவுயர்’ என்ற விசேஷணமும் ‘அநவதிகாதிசய’ என்ற விசேஷணமும் பழுதேயாம்.

உண்மையில் தோஷமானவற்றை குணமென்று க்ரஹித்தால் இது ப்ராந்திஜ்ஞாநமாகையாலே எம்பெருமானை ப்ராந்தனென்று சொன்னபடியாகாதோவென்னில்; ப்ரேமத்தின் கனத்தாலே வரும் ப்ரமமெல்லாம் $ அடிக்கழஞ்சுபெறுமே. ‘உலகமடங்கலும் எனக்கு சரீரம், நானொருவனே சரீரி’ என்றுரைத்த பெருமான் தானே அதற்கு முரணாக “ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்” என்று கீதையிலருளிச் செய்தானே: இதனையும் ப்ரமமென்ன வேண்டாவோ? தூப்புலம்மானருளிச்செய்த விரோதபரிஹார ரஹஸ்யத்திலே—“ஸர்வசேஷியான ஸர்வேச்வரன் ஆச்ரிதர்களைப்பற்ற சேஷமாயிருக்குமிருப்பு குணக்ருதமாய் ப்ரீத்யதிசயஹேதுவாகையாலே தோஷமன்று” என்றுள்ளது கண்டீர்களோ? 1. “உன்னதென்னதாவியும் என்னதுன்னதாவியும்” என்றவிடத்துக்கு ஆளவந்தாரருளிச் செய்யுமது அறிவீர்களோ? ஸர்வரக்ஷகனை எம்பெருமானை ரக்ஷ்யகோடியிலேயாக்கி மங்களாசாஸநம் பண்ணுவதும் ப்ராந்திகார்யமென்றிட்டு தூஷிக்கப்படவேணுமே. நோன்பு நோற்கை, காமன்காலிலே விழுகை, மடலூர்வேனென்கை முதலிய ப்ரபந்நஸந்தாநப்ரவ்ருத்திகளையும் ப்ராந்திகார்யமென்றுகொண்டு ஆழ்வார்களையும் இகழவேணுமே. 2. “ஆங்காரவாரமது கேட்டு அழலுமிழும் பூங்காரரவு” 3. “ஸஹநாஸ்யா நாகக்ஷாவ்யஸநி

$ அடிக்கழஞ்சுபெறுமென்றது—உத்தமோத்தமம் என்றபடி.
1. திருவாய்மொழி 5-3-8. 2. நான்முகன் திருவந்தாதி—10.
3. ஸ்ரீகுணரத்நகோசம்.

ஹிரஸ்யம் ஸாக்ஷிவக்ராஸிகூ³ஜெவ்ருஃ” இத்யாதிப்படியே * நல மந்தமில்லதோர் நாட்டிலுங்கூட இருள்தருமாஞாலத்திற்போல பய சங்கைபண்ணிக் கலங்குகின்ற அயர்வறுமமரர்களையும் அறிவிலா மனிசரோடொக்க நினைக்கவேணுமே.

“ஸௌஶீல்யம் நாம—மந்த³ஜநஸம்ஶ்லேஷஸமயே ஸ்வமஹத்வாபிமாநராஹித்யம்” [ஸௌசீல்ய குணமாவது—மந்தஜனங்களோடு தான் கலந்து பரிமாறும்போது, தான் மிகப் பெரியவன் என்கிற எண்ணத்தைத் தவிர்த்துக்கொள்ளுகை] என்று ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் அருளிச்செய்கிறார் ; எம்பெருமான் ‘மஹதோ மஹீயாந்’’ என்னப்பட்ட தன்னை மந்தனிலும் கடைகெட்ட மந்தனாக நினைத்துக்கொள்வது எங்ஙனே கொல் பொருந்துவது ?

“ஜ்ஞாநவிபாககார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சுபெறும்” என்ற ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்திக்கு இசைந்து, கீழ்ச்சொன்ன விஷயங்களையெல்லாம் உபபந்நமென்னும்போது இக்கணக்கிலேதானே ‘தோஷேஷு குணத்வபுத்தி:’ என்கிற ப்ரக்ருத விஷயத்தையும் பொருந்தவிட ப்ராப்தம்.

அமரஸிம்ஹன் தான் இயற்றிய கோசத்திலே “ஸ்நிக்³த⁴ஸ்து வத்ஸல:=வத்ஸலனென்றால் ஸ்நேஹமுடையவன்” என்றானேயன்றி “தோ³ஷஜ்ஞஸ்து வத்ஸல: =ப்ரமமுள்ளவன் வத்ஸலன்” என்றானில்லை—என்றொருகோடி சொன்னார் சிலர் ; குற்றத்தை நற்றமாகக் கொள்ளுகையென்கிற குணத்வஜ்ஞாநம் ஸ்நேஹவிபாகம்— (அதாவது) அன்பு முற்றின அவஸ்தை என்று ச்ருதப்ரகாசிகையில் அருளிச்செய்திருக்கையாலே, பரமகாஷ்டாபந்ந [—முதிர்ந்த எல்லையில் நின்ற] ஸ்நேஹமேயிறே வாத்ஸல்யமாவது. ஆகையாலே அமரஸிம்ஹன் சொன்னது பொருத்தமுடைத்தே. ஶ்லோ ॥ ஸ்நேஹோ ஹ்யயமஸாவஸாவயிதயா தோஷேஷு தத்³வத்தாம் ஸோ வ்ருஜந் ஹி ஸ பக்ஷபாதமநுமந்தா³ ஸ்ரீஸாஷ்யடீகாக்ருதா । யதஸ்தஸ்மாத³மரஸிம்ஹகோஶவசிதம் ஸ்நிக்³த⁴வாத்ஸல்யயோ: வயாப்யவ்யாபகபாவமுந்நயதாம் ஸஞ்ஜாயதே ஸம்டம்” என்று ஸம்ப்ரதாயஸித்தாஞ்ஜநத்திலும் சொன்னோம்.

தோஷத்தில் தோஷத்வமென்கிற தன்மை எப்போதும் தோற்றிக்கொண்டேயிருக்க, தோஷத்தைக்கண்டு குணமென்று க்ரஹிப்பது எம்பெருமானுடைய ஸர்வஜ்ஞதைக்கும் தத்வஜ்ஞதைக்கும் கொத்தையாம்—என்றும் ஒரு கோடி சொல்லுவர்கள் ; அந்தோ !, ‘தோஷத்தைக் காணாதிருக்கை வாத்ஸல்யம்’ என்னுங் கொள்கையுடையார் தாமும் இந்த தூஷணத்திற்குப் பரிஹாரம் பண்ணித் தீரவேணுமே. ஸர்வஜ்ஞனுக்கு அஜ்ஞானத்தை அங்கீகரிப்பதோடு அந்யதாஜ்ஞானத்தை அங்கீகரிப்பதோடு வாசியில்லை கிடீர். ஒரு வஸ்துவை உள்ளபடி அறியாதவளவில், அடியோடு அறியாமையும், ஸம்சயாத்மாவாய்த் திகைத்து நிற்பதும், விபரீதமாக அறிவதும் ஆகிய எல்லாம் துல்ய யோக க்ஷேமமென்பது விவாதமற்ற விஷயமாதலால், எம்பெருமானை இவர்கள் அஜ்ஞனாகச் சொல்லுவதோடு நாம் அந்யதாஜ்ஞானியாகச் சொல்லுவதோடு ஒரு வாசியில்லையே. [தோஷங்களைக் காணானென்பது அஜ்ஞனென்றபடி ; தோஷங்களை குணமாகக் கொள்வனென்பது அந்யதாஜ்ஞானியென்றபடி.]

ஸஹஸ்ரநாமத்திலே “பக்தவத்ஸலஃ” என்ற திருநாமத்திற்கு பகவத்குண தர்ப்பணத்திலே பாஷ்ய மருளிச்செய்யாநின்ற பட்டர் “தஜுாஸவஸஂஜூஉவிஸூஹ தாநுஃகாஉஃ—ஸகுவத்ஸலுஃ” [ஓரடியான் கிடைக்கப்பெற்ற பெருமையினால் மற்றதொன்றிலும் ஆசைகொள்ளாது எல்லாவற்றையும் மறந்திருக்கை—பக்தவாத்ஸல்யம்] என்றார் : இந்த ஸ்ரீஸூக்தியின் சுவையை ஆழ்ந்து அறிந்து அநுபவிப்பாரார்? ஸஹஸ்ரநாமத்திலே “ஸஹஸ்ராம்சுஃ” என்னச்செய்தேயிறே “அவிஜ்ஞாதா” என்கிறது. [ஸஹஸ்ராம்சுஃ—ஸர்வதோமுகமான ஞானத்தையுடையவன் ; அவிஜ்ஞாதா—(அடியார் செய்யுங் குற்றங்களை) அறியாதவன்.] அஜ்ஞத்வ—ஸர்வஜ்ஞத்வங்களுக்கு ஸாமாநாதிகரண்யத்தை இவர்கள் நிர்வஹிக்கும்போது அந்யதாஜ்ஞாத்ருத்வத்தை நிர்வஹிப்பது தானோ அருமைப்படும்?.

இங்கே ஸூக்ஷ்மமாக ஒன்று ஆராயவேணும் ; எம்பெருமான் அடியார்களின் தோஷங்களைக் காண்பதில்லை என்கிற அர்த்தமும் தோஷங்களை போக்யமாகக் கொள்ளுகிறானென்கிற அர்த்தமும்

ஆக இரண்டும் நூல்களிலுண்டு; "ஸஹஸ்ராம்சு:" என்ற திருநாமத்தின் பாஷ்யத்திலும் ஸஹஸ்ரநாம ச்ருதப்ரகாசிகை யிலும் மற்றும் பல விடங்களிலும் $ தோஷாதர்சித்வோக்தி காணலாம். ஆகையாலே எம்பெருமானுக்கு தோஷ போக்யத்வ மொழிய $ தோஷாதர்சித்வமே கிடையாதென்று ஸித்தாந்திகள் கூறுமவரல்லர். பூர்வபக்ஷிகளோவென்னில், தோஷாதர்சித்வ மாத்திரமிசைந்து தோஷபோக்யத்வத்தை மறுக்கின்றனர்; இரண்டுக்கும் குறையில்லையென்பர் ஸித்தாந்திகள். தோஷாதர்சித்வமும் தோஷபோக்யத்வமும் விருத்த தர்மங்களல்ல; தோஷாதர்சித்வமென்பது ப்ரீதியின் ப்ரதம பர்வமென்றும், தோஷ போக்யத்வமென்பது ப்ரீதியின் சரம பர்வமென்றும் ஆசார்யர்கள் தெளியவைத்தார்கள். எம்பெருமான் சிலர் பக்கல் சிலகாலங்களில் தோஷங்களைக் காணுதவனாகவும், மற்றொருகால் அவர்கள் பக்கலிலேயோ வேறொருவர் பக்கலிலோ தோஷங்களை போக்யமாகக் கொள்பவனாகவுமுளன்—என்றிறே ஸத்ஸம்ப்ரதாயம். இதிலே விப்ரதிபத்திபண்ணில் க்ஷமாகுணமும் தோஷாதர்சித்வத்தோடு விரோதிக்குமென்னவேணும். தோஷங்களைக் காண்பதே யில்லாவிடில் க்ஷமிக்க ப்ரஸக்திதானுமில்லையிறே. "க்ஷமாகாஷாஸ-தவாத்ஸல்யஜநந க்ஷமாவத்கா ஸவதி" என்கிறாரே கத்ய பாஷ்யத்தில் தேசிகன்.

ஒரு குணத்தைக்கொண்டு மற்றொருகுணத்தைக் கண்ணழிக்கப்பார்க்கில் பரத்வமொன்றுமே ஓங்கி நின்று மற்ற குணங்களடங்கலும் கடல்புக்கொளிக்கும்படி தர்க்க கௌசலம் காட்டலாகும். * பிணங்கி அமரர் பிதற்றுங் குணங்கெழு கொள்கையினானுகிய எம்பெருமானுடைய குணப்ரஸரத்துக்கு க்ஷுத்ர யுக்திகளாலே கண்ணழிவு சொல்லப்பார்ப்பது வக்தாக்களுக்கே தோஷமாம். எம்பெருமானுடைய ப்ரணயரஸம் இருகரையுமழியப் பெருகப்புக்கால் அணையிட்டும் ஆணையிட்டும் தடுக்கவல்லாரில்லை கிடீர். "சாஸ்த்ரங்களெல்லாம் ஒரு தட்டும் அவனுடைய கல்யாண குணப்ரஸரம் ஒரு தட்டுமாயிருக்கும்" என்றிறே பிள்ளானருளிச்செய்வது.

$ குற்றங்களைக் காணுக்கண்ணிட்டிருக்கிறுனென்பது.

எம்பெருமான் தோஷ போக்யனாகில் சேதநன் அச்சங் கெட்டு தோஷங்களைச் செய்யவேண்டி வருமென்று கூறும் தூஷணம் தோஷாதர்சித்வபக்ஷத்திலும் ஸமாநம். எம்பெருமானுடைய க்ஷமாகுணத்தை யறிந்தவர்களும் அஞ்சாதே தோஷங்களைச் செய்யவேண்டி வருமன்றோ? நாம் தோஷம் செய்யாவிடில் எம்பெருமானுடைய க்ஷமாகுணம் புகர்பெறாதென்று நினைத்துக் குற்றம் செய்யப்புகுமவர்களை எங்ஙனே விலக்கவல்லீர்? நாம் அநர்த்தங்களை விளைத்துக்கொள்ளா தொழியில் எம்பெருமானுடைய ஆபத்ஸகத்வ குணம். நிறம்பெறாதென்று நினைத்துத் தன்னைத்தானே நலிந்துகொள்ளப் புகுமவனையும் எங்ஙனே மறுக்கக்கடவீர்?. ஆக இவற்றால், குயுக்திகளைக்கொண்டு பகவத்குணத்தைக் கண்ணழிக்கலாகா தென்றதாயிற்று.

எம்பெருமானுக்கு அளவற்ற குணங்கள் உள்ளன; அவற்றுள். எந்த குணம் எந்த ஸமயத்தில் எந்த வ்யக்தியின்மேல் எந்த விதமாக ப்ரஸரிக்குமென்று நிலையிட வல்லாராருமில்லை. 'அவனுடைய வாத்ஸல்யகுணத்திற்கு நாமே இலக்கு' என்கிற நிச்சயவுணர்ச்சி நமக்கிருக்குமாகில், தோஷங்களை புத்திபூர்வகமாகவே செய்யவேண்டி வருமென்கிற தூஷணத்திற்கு இடமுண்டாகலாம். "கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந" [எனக்கே விருப்பமுண்டாம் போது நான் ஏதோவொரு ஸமயத்தில் ஏதோவொரு வ்யக்தியைக் கடாக்ஷிப்பேன்] என்றருளிச் செய்கிற எம்பெருமானை யறிந்துவைத்து ஒருவன் புத்திபூர்வகமாகக் குற்றம்செய்ய முயலக்கூடுமோ? க்ஷமதிகமாகவும் அபுத்திபூர்வகமாகவும் ஆச்ரிதர்களிடத்தில் ஏதேனும் குற்றங்கள் நேர்ந்திருந்தால் அவற்றை எம்பெருமான் காணக்கண்ணிட்டிருப்பன்—கண்டாலும் பொறுப்பன்—போக்யமாகவுங் கொள்வன் என்றதித்தனை.

கடோபநிஷத்தில் [2—4—12.] "அங்குஷ்டமாத்ர: புருஷோ மத்ய ஆத்மநி திஷ்டதி। ஈசாநோ பூதபவ்யஸ்ய நததோ விஜுகுப்ஸதே" என்ற விடத்திற்கு பாஷ்ய முரையாநின்ற ரங்கராமாநுஜஸ்வாமி "பூதபவ்யேஶ்வரத்வா

தேவ வாத்ஸல்யாதிஶயாத் தேஹமதாநவி தோஷாந் ஹோம்ய தயா வஶ்யேதீஹ்யஸி.” என்றுரைத்தார். ஸ்ரீதேசிகன் வரதராஜ பஞ்சாசத்திலே “ ஔத்ஸுக்யதோ ஹரிஸுந்தி ஹோஸூரேதி ஸூரா வெய்ய திவ்யஸேதந் தயோஸ் வரஹ்ஸிந்த்ய । த்ரஷ்டுஜ்ஜ்ஜ்ர்ஜ்க்ஷ்ம் ஜாதம் கரீஶ ! கயோஸாதாணாவத்ஸதே ॥ ” [பரமபதம் முதலிய சிறந்த ஸ்தாநங்களையெல்லாம் இகழ்ந்திட்டுப் பரம ஹேயமான பாவியேனுடலை போக்யமாகக் கொண்டு வர்த்திக்கிறாயே !] என்றார். இப்படிப்பட்ட தோஷ போக்யத்வமே வாத்ஸல்யமென்று இந்த ச்லோகத்தின் வியாக்கியானத்திலும் விசிதமாக வரைந்தார்கள். இந்த தோஷபோக்யத்வத்தை 1. “ மங்கவொட்டுன் மாமாயை ” என்ற பாட்டிலே ஆழ்வாரும் விளங்க வுரைத்தருளினர்.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரத்திலே—“ என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர் போலும் என்றவிடத்தில் போலு மென்று சொல்லுகையாலே இது வஸ்து வ்ருத்தியில் நன்றன்றென்னுமிடம் ஸூசிதம் ” என்றருளிச்செய்திருக்கிறாரே யென்னில் ;—“ பின்தொடர்ந்தோடியோர் பாம்பைப்பிடித்துக் கொண்டாட்டினாய் போலும் ” “ விளங்காயெறிந்தாய் போலும் ” “ வாரிவளைத்துண்டிருந்தான் போலும் ” “ மரமேறியிருந்தாய் போலும் ” “ நாகத்தினோடு பிணங்கி நீ வந்தாய் போலும் ” “ எந்தை பெருமானார் மருவி நின்றவூர் போலும் ” இத்யாதிகளான பல்லாயிரமிடங்களிலே போலு மென்றதை இசைநிறையாகக் கண்டுவைத்தும், வடமொழியில் “ கிதிவஹி ஐயாரணாம் ” “ கயதிவ வரிவயமாம் ” இத்யாதிகளில் இவ சப்தம்போல இதுவும் தமிழில் ஒருவகை வாக்யாலங்கார மென்றறிந்து வைத்தும் விபரீதார்த்த வர்ணநம் பண்ணினது அபிநிவேச வசத்தாலென்று அடிபவர்க்குமெய்யனார் பணிக்கும்படி.

தயாசதகத்திலே “ ஐயி திஷ்தி தூஷ்க்ருதாம் வ்யபோஹ்ய ஷிதிதோஷாநிதராநு விவிநதீவதம் । ஸவரா யஶதெதரவந்த்யேணாம் க்ஷமா க்ஷூணாகாஜ்ஞதேயெ ! கயம் ஹவிதீ ॥” என்றும் “ ஔத்ஸு

1. திருவாய்மொழி 10—7—10.

க்ருபயா பர்யபாலயத் ஸாபராதாநபி ஸதா ப்ரஸாதயிதும் ப்ரவ்ருத்தி ரேஷ ஸந்த்வம்। க்ருபயா தாந்நிரவசேஷ ஸம்ஸ்ருதி துஷ்க்ருதாந் தாஸ்யஸ்யஹோ ப்ரஹ்ம பரம் ப்ரயதா த்மநே ததம்॥" என்றும் "ஸாந்த்ராஸந்ந ப்ரபவத்வஜ்ஞ ப்ராஜ்ய தஜ்ஞதாம்" என்றும் அழகாக அருளிச்செய்த ஆசிரியர் இவற்றுக்கு முரணும்படி ஒன் றிரண்டு வார்த்தைகள் எழுதிவைத்தாரென்றால் இதற்கு நாம் என் சொல்லவல்லோம்.

"அற்றமுரைக்கிலடைந்தவர்பாலம்புயைகோன், குற்றமுணர்ந் திகழுங்கொள்கையனோ—எற்றே! தன் கன்றினுடம்பின் வழு வன்றோ காதலிப்பது; அன்றதனை ஈன்றுகந்த ஆ." என்று ஞான ஸாரத்திலே அருளாளப்பெருமாளெம்பெருமானருளிச்செய்த பாசுரம். "வாத்ஸல்யம்—தோஷவதி குணத்வபுத்தி:" என்று சரணாகதிகத்யச்ருதப்ரகாசிகையில் ஸ்ரீஸூக்தி. "ஸஹி வத்ஸம் வஸிஷ்டஜாதேஷ்வபி ப்ராணாபதேஷு க்ஷீராஸ்வாதேஷு தோஷேஷ்வபி வத்ஸஷு ஸஹஸ்ராணாம் ஸ்வயஸ்யம் ஸ்வஸ்தநவேஷ்வநாம் கிங்கர்த்வ்யதாகுலா யேநவத்ஸ ஸம்ஸ்க்ருதி." என்று ஸஹஸ்ரநாம பாஷ்யத்திலே வத்ஸலநாமவியாக்கி யானத்தில் பட்டர் ஸ்ரீஸூக்தி. இவற்றுக்கெல்லாம் மூலமாக ஸ்ரீபாஞ்சராத்ரப்ரஹ்மஸம்ஹிதையிலே "க்ருதம் மத்யேந விஜ்ஞாயம் ஹ்ருதி நவத்ருணாக்ஷரம்। யாநஜீவந்தி ஸா யேந: ஸ்வயோ நிவாஸரமந்த:॥ ஸ்வேச்சா ஜாதஸ்ய வத்ஸஸ்ய தேஹஜாதி நித்யஸம் வசம்। யதா ஹிநஸ்தி தோஷாஸம் ததா ஜீவஸ்ய கல்மஷம்। ஹோமஸ்யம் ஜஜ வ ஜக்ஷ்யாஸ்ய விஜ்ஞீ வம்கஜஸம்ஜவ॥" என்று பரக்கப் பேசப்பட்டது.

இப்படி உபபத்திகள் பலபலவுண்டாகையாலே குற்றங்களை நற்றமாகக்கொள்ளுங்குணம் எம்பெருமானுக்குக் கண்ணழிவற் றதேயாம். * பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்குமழுக் குடம்புமான நம்போலியர்களின் சரீரத்திலே விரும்பியுறைகின்ற எம்பெருமானை தோஷபோக்யனென்ன இசையாதார் சார்வாகாதி களையே நல்லராக்கினார்களென்று ஞானப்பிரான் பணிக்கும்.

"இப்படி எம்பெருமானுக்குள்ள தோஷபோக்யத்வ குணத்தை ஸாக்ரஹமாக இல்லைசெய்யுமவர்கள் நிர்க்குணப்ரஹ்மவாதி கோடியிலே அந்தர்ப்பவிக்கை அழகிது" என்று எண்ணுவாரிடரைக் களைவான்பிள்ளை பணிக்கும்.

முடிவில் ஸாரமாகவொன்று சொல்லித் தலைக்கட்டுகிறோம். எம்பெருமானுக்குப் பல்லாயிரம் குணங்களிருந்தாலும், ஆச்ரிதர்கள் பக்கலிலே அவன் அளவுகடந்த அன்புடையவன் என்னுமிடத்தை நன்கு விளக்கவல்ல குணங்களே ப்ரதாநங்கள். உலகத்திலே அன்பின்மிகுதியை நாம் எங்ஙனே காண்கிறோமென்றால், 'ஹா ஹா! தேவதத்தனுக்கு யஜ்ஞதத்தனிடத்திலே என்ன அன்பு! என்ன அன்பு!!, இவன் எத்தனையபராதங்கள் செய்தாலும் அத்தனையும் அவனுக்கு போக்யமாகிறதேயொழிய ஒன்றாவது இகழ்வுக்கு உறுப்பாகிறதில்லையே; இவன்காலில் முள்ளைத்தானும் அவன் கண்ணில் நீர் பெருகுகின்றதே; இப்படியும் ஒரு அன்பு இருக்குமோ!" என்று சொற்போக்குகளிருக்கும்படியை எங்கும் காணுகின்றோம். ஆகவே, தோஷபோக்யத்வமும் பரதுஃக்கதுஃக்கித்வமுமாகிற இரண்டு குணங்களே அன்பின்மிகுதியை விளக்குவனவாம். இவ்விரண்டு குணங்களுக்கும் பூர்வபக்ஷிகள் எம்பெருமான் திறத்திலே அவத்யம் சொல்லித் தீர்ந்தார்களான பின்பு மற்ற குணங்களினுண்மையை இசைந்துவைத்தும் பயன் பெற்றார்களில்லை. ஜாமாதாவைப் புகழப்புகுந்தானொருவன் "நம் மாப்பிள்ளைக்கு முப்பத்திரண்டு குணங்களில் இரண்டு குணங்கள் மாத்திரமே குறை; நன்மை தீமைகளைத் தானுமறியான், பிறர் சொல்லிலும் கேளான்; மற்றெல்லாக் குணங்களும் குறைவற்றன" என்னுமாபோலேயிறே இவர்கள் பண்ணும் பகவத்குண ப்ரசம்ஸையிருக்கிறபடி. 'ஆச்ரிதர்களிடத்தில் எம்பெருமானுக்கு அன்பு உண்டு' என்று அவனுடைய ப்ரேமகுணத்தை இசைந்துவைத்தும் அதன் அதிசயத்தை ஸஹிக்கின்றிலராகையாலே "ஜுஹுஸ்ய காநநஸ்யேமெஜ்ம்ய மதூஷிகெஷொ: காஸாரஸத்வநிஹதஸ்யவ கொ விமெஷ:" என்ற ஆழ்வான் ஸ்ரீஸூக்திக்கு இவர்களும் இலக்காகக் குறையில்லை. ஆயிரந்தான் சொல்லிலும் குற்றங்களை நற்றமாக் கொள்ளுகை ஆஹார்யஜ்ஞாநமேயாம் என்று

மீண்டுமீண்டும் கலங்கிப்பேசுமவர்களைப்பற்ற ‘ அந்தோ ! கருவிலே திருவிலாமையே !!’ என்று இரங்கக்கடவதத்தனை.

இன்னமுமிங்கு விரித்துரைக்கவேண்டுமவற்றை பகவத்குண ரத்நபாண்டாகாரத்திலே விரித்துரைத்தோம், கண்டுகொள்க. (௬௧)

திருமகளும் மண்மகளு மாய்மகளும் சேர்ந்தால் *
திருமகட்கே தீர்ந்தவா றென்கொல் *—திருமகள்மேல்
பாலோதம் சிந்தப் படநா கணைக்கிடந்த *
மாலோத வண்ணர் மனம். (௬௨)

பால் ஓதம் சிந்த	திருப்பாற்கடலில் சிறு திவலைகளானவை சிதறி விழுந்து ஸுகப்படுத்த,	திரு மகள் மேல் மனம்	பெரிய பிராட்டியார் மேல் (காதல் கொண்ட) திருவுள்ளமானது,
படம் நாக அணை கிடந்த	படமெடுத்த பாம்பினணையிற் பள்ளிகொண்ட	திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால்	ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி மூவரோடும் கலந்து பரிமாறும்போது
மால் ஓதம் வண்ணர்	பெரிய கடல் போன்ற வடிவையுடையனான எம்பெருமானது	திருமகட்கே தீர்ந்த ஆறு என்கொல்	பெரிய பிராட்டியொருத்தியின் மேலே அற்றுத் தீர்ந்திருக்கிற விதம் என்னோ?.

[திருமகளும்மண்மகளும்.] நாம் மலைபோன்ற குற்றங்களைச் செய்தாலும் எம்பெருமான் அவற்றைக் குணமாகத் திருவுள்ளம் பற்றுவன் என்றார் கீழ்ப்பாட்டில். அப்படி குற்றத்தையும் குணமாகத் திருவுள்ளம் பற்றவேண்டிய காரணம் ஏதென்ன, பிராட்டிமார் மூவரும் கூடவே குடியிருக்கை தான் காரணமென்கிறாரிதில். ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என்னும் மூன்று பிராட்டிமார்களும் கூடியிருக்கும்படியை முதலடியி லருளிச்செய்கிறார்.

• பாலோதம் சிந்தப் படநாகணைக்கிடந்த மாலோதவண்ணரது திருமகள் மேல் (வைத்த) மனமானது திருமகட்கே தீர்ந்தவாறு என்கொல் ? என்கிறார். இப்பாட்டுக்கு இரண்டு படியான நிர்வாஹங்களுண்டு ; தீர்ந்தவாறென்கொல் என்பதை நாய்ச்சிமார் மூவரிடத்திலும் கூட்டி, திருமகட்கே தீர்ந்தவாறென்கொல், மண்

மகட்கே தீர்ந்தவாறென்கொல், ஆய்மகட்கே தீர்ந்தவாறென்கொல்' என்று திருமலைஅனந்தாழ்வான் நிர்வஹிப்பாரம். இதன் கருத்தை விரித்துரைப்போம் கேண்மின் ;—

ஸௌபரி என்கிற ஒரு மாமுனிவன் நீர் நிலையிலிருந்து கொண்டு தவம்புரியா நின்றவளவில் அங்கு மீன்களெல்லாம் கூடிக்களித்து விளையாடா நின்றமையைக் கண்ணுற்று 'நாமும் இப்படி குடும்பவாழ்க்கையிற் கூடி நின்று சிற்றின்பம் நுகர்ந்து களிக்கவேணும்' என்று ஆவல்கொண்டு மாந்தாதா என்னும் அரச னுக்குப் பல பெண்கள் இருப்பதாக உணர்ந்து அவனிடஞ்சென்று தனக்குக் கன்னிகாதானஞ் செய்யுமாறு வேண்ட, அரசன் இவ ருடைய கிழத்தனத்தையும் குரூபத்தையுங்கண்டு இசையகில்லா மல் 'பெண்கொடுக்க முடியாதென்று நம் வாயாற் சொன்னால் முனிவர் முனிந்து சபித்துவிடக்கூடும்; பெண்களிருக்குமிடத் திற்கு இவரை யனுப்புவோம்; இவரைக்கண்டு பெண்கள் காமுற் றார்களாகில் விவாஹம் செய்துகொள்ளட்டும். இல்லையாகில் அவர்களே மறுத்துவிடட்டும்; நம் தலையில் பழிவேண்டா' என் றெண்ணி முனிவரைப் பெண்களிருக்குமிடத்திற்குப் போகவிட, முனிவர் அங்குச் செல்லும்போதே தமது தவவலிமையால் திவ்ய ஸுந்தரமான ரூபத்தை ஏன்று கொண்டுபோய் அவர்கள் முன்னே நின்றவளவில் அங்கிருந்த ஐம்பது பெண்களும் 'நானே இவரை மணந்துகொள்வேன், நானே இவரை மணந்துகொள் வேன்' என்று போட்டி போட்டுக்கொண்டு மேல்விழுந்தவாறே, முனிவர் அத்தனை பெண்களையும் விவாஹஞ்செய்துகொண்டு தனித்தனியே அதிமனோஹரமான ஐம்பது மாளிகைகளை நிரு மித்து ஒவ்வொரு மாளிகையிலும் ஒவ்வொரு மனைவியைக் குடி யிருக்கவைத்துத் தமது தவவலிமையால் ஐம்பது வடிவெடுத்து ஒவ்வொருத்தியினிடத்திலும் இரவும் பகலும் பிரியாதிருந்து ரமித்து வரும்நாளில், பெண்களை விசாரித்து வருவோமென்று அவாக்கொண்டு வந்த தந்தை ஒவ்வொருத்தியின் மாளிகையிலும் புகுந்து ஸந்தோஷ வார்த்தை விசாரித்துவருகையில் தனித் தனியே ஒவ்வொருத்தியும் சொல்லிக்கொண்டதாவது—எனக் கொரு குறையுமில்லை; பர்த்தா ஒரு நொடிப்பொழுதும் என்னை

விட்டுப் பிரியாதிருக்கிறார்; இப்படி என்னொருத்தியிடமே இருந்து விட்டு மற்றவர்களை மறந்திருக்கிறாரே என்னும் துக்கமொன்றே யுள்ளது; என்னுடன் பிறந்தவர்களும் என்னைப்போலே ஆநந்தித் திருக்கவேணுமன்றோ? அப்படியிருக்கப்பெறாத குறையைத் தீர்க்குமாறு நீர் ஜாமாதாவுக்குச் சொல்லிப் போகவேணும்-என்று; இவ்வாறே ஒவ்வொருத்தியும் சொல்லுமாறு அம்முனிவர் எப்படி ஒவ்வொருத்திக்கே அற்றுத் தீர்ந்து பரிமாறினரோ, அப்படி எம்பெருமான் திருமகளிடத்தும் மண்மகளிடத்தும் ஆய்மகளிடத் தும் பரிமாறும்போது, 'நம்மையொழிய மண்மகளைக் கண்ணெடுத் தும் பார்ப்பதில்லை' என்று திருமகள் நினைக்கும்படியாகவும், 'நம்மையொழியத் திருமகளைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை' என்று மண்மகள் நினைக்கும்படியாகவும், இப்படியே ஆய்மகளும் நினைக்கும்படியாகவும் ஒவ்வொரு தேவிக்கும் விலக்ஷணஸம்ச்லேஷ ரஸத்தைத் தந்து பரிமாறுகிறபடியைச் சொல்வதாக அனந் தாழ்வானுடைய நிர்வாஹம்.

இங்ஙனன்றிக்கே பட்டருடைய நிர்வாஹம்—திருமகட்கே தீர்ந்தவாறென்கொல்?=திருமகளோடு கலந்து பரிமாறும்போது மண்மகள் முதலிய மற்ற பிராட்டிமார்கள் போகத்திற்கு உப கரணமாயிருப்பார்கள்; திருமகளோடு ஸம்ச்லேஷிப்பதைத் தங் கள் முலையோடும் தோளோடும் ஸம்ச்லேஷிப்பதுபோலவே நினைத் திருப்பார்கள். ஆகையாலே மற்ற தேவிமார்களை உபகரண கோடி யிலேயாக்கித் திருமகள் பக்கலிலேயே பிரதான போகம் கொள் வது என்கொல்?—என்று. பட்டருளிச்செய்த ஸ்ரீகுணரத்ந கோசத்தில் "[illegible] ॥" [வாரீர் பெரிய பிராட்டியாரே! தேவரீரும் பெரிய பெருமாளும் ஸம்ச்லேஷரஸம் அநுபவிக்கும்போது மண்மகளும் ஆய்மகளும் மற்றுள்ள பல தேவிமார்களும் புஷ்பம் சந்தனம் முதலிய ஸாமக்ரிகள்போல உபகரண கோடியிலே நிற்பார்கள்;

அத்தேவிமார்களை நீர் திருமுலை திருத்தோள் முதலிய அவயவங்களாகக்கொண்டு பெருமாளை ரமிப்பிக்கின்றீர்.] என்ற ச்லோகமும் இங்கு அநுஸந்திக்கத்தகும்.

தீர்ந்தவாறு=தீருகையாவது—ஒரு வஸ்துவைவிட்டு மற்றொரு வஸ்துவில் சிறிதும் நெஞ்சு செல்லாமல் அந்த ஒரு வஸ்துவிலேயே ஆழங்காற்பட்டிருக்கை. 1. "தாமரைக்கண்களுக்கு அற்றுத் தீர்ந்தும்" என்ற திருவாய்மொழிப் பிரயோகமுங் காண்க. (௪௨)

மனமாசு தீரு மருவினையுஞ் சாரா *
தனமாய தானே கைகூடும் *—புனமேய
பூந்துழா யானடிக்கே போதோடு நீரேந்தி *
தாந்தொழா நிற்பார் தமர். (௪௩)

புனம் மேய பூ துழாயான் அடிக்கே	தன்னிலத்தி லிருப்பதுபோலவே செவ்வி குன்றாதிருக்கிற திருத்துழாயை அணிந்துள்ள எம்பெருமான் திருவடிகளில்
போதொடு நீர் ஏந்தி	(திருவாராதநத்துக்கு உபகரணமான) புஷ்பங்களையும் தீர்த்தத்தையும் எடுத்துக்கொண்டு
தொழா நிற்பார் தமர் தாம்	வணங்குமவர்களான பாகவதர்களுக்கு
மனம் மாசு தீரும்	மனக்குற்றங்கள் விட்டு நீங்கும்;
அரு வினையும் சாரா	(ஸ்வப்ரயத்நத்தால்) நீக்கமுடியாத தீவினைகளும் அணுகமாட்டா;
தனம் ஆய	(பக்திமான்களுக்கு) செல்வமாகிய பரமபக்தி முதலியவைகளும்
தானே கைகூடும்	தனக்குத்தானே வந்து கைபுகுரும்.

[மனமாசுதீரும்.] கீழ்ப்பாசுரத்திலருளிச்செய்தபடி பிராட்டிமார்கள் இடைவிடாது கூடியிருக்கையாலே ஒருவரும் தங்கள் குற்றங்களை நினைத்துப் பின்வாங்கவேண்டுவதில்லை; ஸ்வரூபத்துக்குச் சேர்ந்த கிஞ்சித்காரங்களிலே அந்வயிக்கலாம்; அப்படி அந்வயிக்கவே தீமைகளெல்லாம் தொலைந்து நன்மைகள் கைகூடுமென்கிறார். ஸர்வரக்ஷகன் என்பது விளங்கத் தனிமாலையிட்டிருக்கிற எம்பெருமானுடைய திருவடிகளில் திருவாராதன உபகரணங்க

1. திருவாய்மொழி

ளான புஷ்பம் தீர்த்தம் முதலியவற்றை யேந்திக்கொண்டு வந்து பணிமாறி வழிபடுமவர்களுக்கு—மநஸ்ஸைப் பற்றிக்கிடக்கிற அஜ்ஞாநம் விஷயராகம் முதலான தோஷங்களடங்கலும் தன்னையே விட்டுக்கழலும்; இவற்றுக்கு மூலகாரணமான துஷ்கருமங்களும் கிட்டவராதபடி தொலைந்துபோம்; ஸ்வரூபாநுரூபமான செல்வமாகிய பரமபக்தி முதலியவைகளும் தனக்குத்தானே வந்து கைபுகுரும் என்றாராயிற்று.

மனம், தனம்—வடசொல்விகாரம். பாகவதர்களுக்கு பகவத்பக்தியே பெருஞ்செல்வமாதலால் 'தனமாய' என்றார். 1. "நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்" என்னும்படியிருப்பர்கள் பாகவதர்கள். ... ... (௪௩)

தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே *
தமருகந்த தெப்பேர் மற்றப்பேர் *—தமருகந்து
ஏவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே *
அவ்வண்ணம் மாழியா னும். (௪௪)

ஆழியான்	திருவாழியாழ்வான் முதலிய நித்ய ஸூரிகளைப் பரிஜநமாகவுடைய எம்பெருமான்,	அப்பேர் ஆம்	அந்தத் திருநாமமே தனக்காம்படியிருப்பன்;
தமர் உகந்தது எவ்வுருவம்	ஆச்ரிதர்களால் உகக்கப்பட்ட உருவம் எதுவோ,	தமர்	ஆச்ரிதர்கள்
அவ்வுருவம் தானே ஆம்	அவ்வுருவமாகத் தான் பரிணமமடைவன்;	உகந்து	உகப்புடனே
தமர் உகந்தது எப்பேர்	ஆச்ரிதர்களால் உகக்கப்பட்ட திருநாமம் எதுவோ	எவ்வண்ணம் சிந்தித்து	குணம் சேஷ்டிதம் முதலியவற்றில் யாதொரு விதத்தை அநுஸந்தித்து
		இமையாது இருப்பர்	ஓயாமல் பாவனை பண்ணிக்கொண்டிருப்பர்களோ
		அவ்வண்ணம் ஆம்	அவ்வண்ணமே யாவன்.

[தமருகந்ததெவ்வுருவம்.] கீழ்ப்பாசுரத்தி லருளிச்செய்தபடி ஆச்ரிதர்கள் அடிமை செய்யுமளவில், எந்த ரூபத்தையும் எந்த

1. பெருமாள் திருமொழி 5—9.

நாமத்தையும் இவர்கள் உகந்திருப்பர்களோ அந்த ரூப நாமங் களையே யுடையனுகத் தன்னை அமைத்துக்கொண்டு அர்ச்சாவதார ரூபியாய் இங்கே அடிமைகொள்வனென்கிருர். தமர்கள் கல்லையோ மண்ணையோ லோஹங்களையோ எதை உருவமாக்கினுலும் அதையே தனக்கு அஸாதாரண விக்ரஹமாகப் பரிக்ரஹித்து அதிலே ஸந்நிதாநம்பண்ணி யெழுந்தருளியிருப்பன். அந்த விக்ர ஹத்தில் தமர்கள் எந்த திருநாமத்தையிட்டு வழங்குவர்களோ அந்தத் திருநாமத்தையே நாராயணுதி நாமங்கள்போல விரும்பிக் கொண்டிருப்பன். மற்றும், குணம் சேஷ்டிதம் முதலியவற்றில் எந்த குணசேஷ்டிதங்களை அநுஸந்தித்து அநவரதபாவனை பண் ணுவர்களோ, அவற்றையே கொண்டிருப்பன்—என்று அர்ச்சாவ தார ஸௌலப்யத்தை யருளிச்செய்தாராயிற்று.

இப்பாட்டின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் சில ஐதிஹ்யங்கள் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன:—“எம் பெருமானுர் மாதுகரத்துக்கு எழுந்தருளாநிற்க, சில பிள்ளைகள் காலாலேகீறி ‘உம்முடைய எம்பெருமான் திருமேனி’ என்று காட்ட, பாத்ரத்தை வைத்துத் தண்டனிட்டருளினுர்.” [எம் பெருமானுர் பிக்ஷைக்காகத் திருவீதியில் எழுந்தருளாநிற்கையில் தெருப் புழுதியில் விளையாடிக்கொண்டிருந்த சிறுபிள்ளைகள் திரு வாழிதிருச்சங்கு முதலியவற்ருேடே ஒரு உருவத்தைத் தரையிலே கீறி ‘உடையவரே! உம்முடைய பெருமாள் பார்த்தீரா?’ என் றழைத்துக்காட்ட, உடையவரும் “ தமருகந்த தெவ்வுருவமவ்வுரு வந்தானே” என்ற இப்பாசுரத்தைத் திருவுள்ளமபற்றி அந்தக் கீறலை மெய்யே பகவத்விக்ரஹமாகப் பிரதிபத்திபண்ணி தண்ட னிட்டருளினுர்.]

“கோயிலிலே சில பிள்ளைகள் விளையாடுகிறவர்கள் திருவீதி யிலேயிருந்து பெருமாளும நாய்ச்சிமாரும் பெரிய திருமண்டபமும் கற்பித்துப் பெருந் திருப்பாவாடையும் அமுதுசெய்வித்து ‘எம் பெருமானுர்! ப்ரஸாதப்படும்’ என்று மணலைக் கையாலே முகந் தெடுக்க, தத்காலத்திலே மாதுகரத்துக் கெழுந்தருளுகிறவுடைய வர், அவ்விடத்திலே அது கேட்டருளித் தெண்டனிட்டு அவர்க

ளெடுத்த ப்ரஸாதத்தைப் பாத்ரத்திலே ஏற்றார் என்று ஜீயரருளிச்செய்தார்.” [=நம்பெருமாள் ஸந்நிதியில் நடக்கிற ரீதிகளை அப்படியே அபிநயித்துத் தெருப்புழுதியில் ஒருநாள் விளையாடிக் கொண்டிருந்த சிறுபிள்ளைகள் ஒரு கொட்டாங்கச்சியில் மண்ணை வாரியெடுத்துக்கொண்டு, ஸந்நிதியில் அருளிப்பாடுகள் சொல்லுகிற க்ரமத்திலே சொல்லிக்கொண்டு வரும்போது “ஜீயோ!” என்று அருளிப்பாடு சொல்லிக்கூவ, அந்த ஸமயத்தில் யாத்ருச்சிகமாக பிக்ஷைக்கெழுந்தருளிக் கொண்டிருந்த உடையவர் இவ் விளையாட்டொலியைக் கேட்டு மெய்யே ப்ரதிபத்தி பண்ணி ‘நாயிந்தே!’ என்று சொல்லிக்கொண்டேபோய் ஸேவித்து அந்த மண்ணைச் சிக்கத்தில் ஏற்றுக்கொண்டார்.]

“எங்களாழ்வார் பாடே ஆயர்தேவு சென்று நாவற்பழம் வேண்ட, ‘நீயார்?’ என்று அவர்கேட்க, ஜீயர்மகனை ஆயர்தேவு, என்னை, ஜீயரைக்கண்டு உம்முடைய பிள்ளை எங்களைக் குடியிருக்க வொட்டுகிறிலன் என்றார்.” [=நஞ்சீயருடைய திருவாராதனப் பெருமாளுக்கு ஆயர்தேவு என்று திருநாமம். அப்பெருமாள், திருக்குருகைப்பிரான் பிள்ளானுடைய சிஷ்யரான எங்களாழ்வானுக்கு ஸ்வப்நத்திலே ஸேவைஸாதித்து, தான் இன்னானென்று தெரிவித்து நாவற்பழம்யாசிக்க, மறுநாள் எங்களாழ்வான் நஞ்சீயரைக் கண்டு ‘உங்கள் பெருமாள் நாவற்பழத்துக்காக என்பிராணனை வாங்குகிறாரே’ என்று விநோதமாக ஸாதித்தாராம். கண்ணபிரானை விபவத்தில் உகந்திருந்த நாவற்பழத்தை அர்ச்சையிலும் உகந்தபடி சொல்லிற்றென்க.]

“தமருகந்ததேவ்வண்ணம்” என்று பலரும் அஸம்பத்தமாக ஓதுவர்கள்; அது பாடமன்று; பொருளுக்கும் சேராது; “தமருகந்தேவ்வண்ணம்” என்றே ஓதுக. ... ... (சச)

ஆமே யமரர்க் கறிய வதுநிற்க *
நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே *—பூமேய
மாதவத்தோன் தாள்பணிந்த வாளரக்கன் நீண்முடியை *
பாதமத்தா லெண்ணினான் பண்பு. (சரு)

நல் நெஞ்சே	நல்ல மனமே !,	அமரர்க்கு அறிய ஆமே	பிரமன் முதலிய தேவர்கட்கு அறியக் கூடியதோ ?
பூ மேய மா தவத்தோன் தாள் பணிந்த	திருநாபிக் கமலத் திற்பொருந்திய மஹாதபஸ்வி யான பிரமனு டைய பாதத் திலே வந்து ஆச்ரயித்த	அது நிற்க	அவர்கள் அறிய வல்லரல்லர் என்பது கிடக் கட்டும் ;
வாள் அரக்கன்	கொடிய இராவண னுடைய	நாமே அறிகிற்போம்	(எம்பெருமா னுடைய நிர்ஹே துக க்ருபாகடா க்ஷத்திற்குப் பாத் திரமாகிய) நாம் அறியக் கடவோம்.
நீள் முடியை	நீண்ட பத்துத் தலைகளையும்		
பாதம் அத் தால் எண்ணி னான் பண்பு	அந்தத் திருவடி களாலே கீறி எண்ணிக் காட் டின எம்பெருமா னுடைய குணம்		

[ஆமேயமரர்க்கறிய.] இப்பாட்டின் பின்னடிகளில் அநுஸந் திக்கப்பட்டிருக்கும் பகவத்கதை மூன்றாந்திருவந்தாதியில்—"ஆய்ந் தவருமறையோன் நான்முகத்தோன் நன்குறங்கில், வாய்ந்த குழவியாய் வாளரக்கன்—ஏய்ந்த, முடிப்போது மூன்றேழென் றெண்ணினான், ஆர்ந்த அடிப்போது நங்கட்கரண்." என்ற எழுபத் தேழாம் பாட்டிலும், நான்முகன் திருவந்தாதியில்—"கொண்டு குடங்கால் மேல்வைத்த குழவியாய், தண்டவரக்கன் தலைதாளாற் பண்டெண்ணிப்—போங்குமரன்........" என்ற நாற்பத்துநாலாம் பாட்டிலும் பேயாழ்வாராலும் திருமழிசைப்பிரானாலும் அநுஸந் திக்கப்பட்டுள்ளது. முன்பு இராவணன் தனது பத்துத்தலைகளை மறைத்துக்கொண்டு நான்முகனிடஞ் சென்று வரம் வேண்டிக் கொள்ளுமளவில் எம்பெருமான் ஒரு சிறுகுழந்தை வடிவாய் அப் பிரமனுடைய மடியிலே உறங்குவான்போலே கிடந்து 'இவன் பத்துத்தலைகளையுடைய இராவணன் ; ஸ்வஸ்வரூபத்தை மறைத் துக்கொண்டு உன்னை வஞ்சித்து வரம்வேண்டிக்கொள்ள வந்திருக் கிறான் ; இவனுக்கு நீ வரமளித்தால் பெருந்தீங்காக முடியும்' என்று தெரிவிப்பவன்போன்று தன் திருவடியால் அவ்விராவண னுடைய பத்துத்தலைகளையும் எண்ணிக்காட்டினன்—என்பதாக

இவ்வரலாறு விளங்குகின்றது. இக்கதை இதிஹாஸ புராணங்களில் உள்ளவிடம் தெரியவில்லை; பெரியாழ்வார் திருமொழியில் 1. "சீமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்" என்றும் 2. "எல்லியம் போதினிதிருத்தலிருந்ததோரிடவகையில், மல்லிகைமாமாலை கொண்டங்கார்த்ததுமோரடையாளம்" என்றும் அருளிச்செய்த கதைகள் வ்யாஸர் வால்மீகி முதலிய முனிவர்களால் ஸாக்ஷாத்கரிக்கப்படாமல் ஆழ்வாரால் மாத்திரம் $ நிர்ஹேதுக கடாக்ஷமடியாக ஸாக்ஷாத்கரிக்கப்பட்டவை என்று நம் பூருவாசாரியர்கள் நிர்வஹித்திருப்பதுபோலவே இக்கதையும் ஆழ்வார்களால் மாத்திரம் ஸாக்ஷாத் கரிக்கப்பட்டதென்று பெரியோர் கூறுவர். இனி, இதற்கு இதிஹாஸ புராணங்களில் ஆகரமுண்டேல் கண்டுகொள்க; விரிவும் வல்லார்வாய்க் கேட்டுணர்க.

பூமேய மாதவத்தோன் தாள்பணிந்த வாளரக்கன் நீண்முடியைப் பாதமத்தா லெண்ணினானை எம்பெருமானுடைய குணங்களைத் தேவர்களால் அறியமுடியாது; எம்பெருமானுடைய திருவருளாலேதெளியக் காணவல்ல நாமே அறியவல்லோம்—என்பது ஒரு பொருள்; தேவர்களே அறியமாட்டாதபோது நாமோ அறியக் கடவோம் என்று நைச்சியமாகச் சொல்லிக் கொள்வதாக மற்றொரு பொருள்.

பாதமத்தால்—பாதத்தால் என்றபடி. .... (சரு)

பண்புரிந்த நான்மறையோன் சென்னிப் பலியேற்ற *
வெண்புரிநூல் மார்பன் வினைதீர *—புண்புரிந்த
வாகத்தான் தாள்பணிவார் கண்டீர் * அமரர்தம்
போகத்தால் பூமியாள் வார். (சசு)

பண் புரிந்த நான்மறையோன்	ஸ்வரங்களோடு கூடின நால் வேதங்களை நிரூபகமாக வுடையனான பிரமனுடைய		சென்னி	தலையில்
				[கிள்ளியெறிந்ததனால் கையிலொட்டிக்கொண்ட கபாலத்தில்]
			பலி ஏற்ற	பிச்சை யெடுத்துத் திரிந்தவனும்

(1) 2—7—8. (2) 3-10—2.

$ பெரியாழ்வார் திருமொழி 5—4—6 பாட்டின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் காண்க.

வெண் புரி நூல் மார்பன்	வெளுத்த யஜ்ஞோபவீதத்தை மார்பிலே அணிந்தவனுமான ருத்ரனுடைய	தாள்	திருவடிகளை
		பணிவார்	ஆச்ரயிக்குமவர்கள்
வினை	ப்ரஹ்மஹத்தி பாபமானது	அமரர்தம் போகத்தால்	நித்யஸூரிகளின் போகமாகிய பரமபதாநுபவத்தோடு
தீர	நீங்கும்படியாக (ரக்த ஜலத்தை எடுத்துக் கொடுப்பதற்காக)		
புண் புரிந்த ஆகத்தான்	தன்னுடைய திருமார்பைப் புண்படுத்திக் கொண்டவனான எம்பெருமானுடைய	பூமி	இந்தலீலா விபூதியை
		ஆள்வார்	ஆட்சிபுரிவர்கள்.

* * *—[பண்புரிந்தநான்மறையோன்.] பிரமனுக்கு அருள் செய்தமையைக் கீழ்ப்பாட்டிற்சொன்னார்; சிவனுக்கு அருள்செய்தமையைச் சொல்லுகிறாரிதில். ஒரு காலத்திலே பரமசிவன், தன்னைப்போலவே பிரமனும் ஐந்துதலையுடையனாயிருப்பது பலரும் பார்த்து ப்ரமிப்பதற்கு இடமாயிருக்கிறதென்று கருதி அவனது சிரமொன்றைக் கிள்ளியெடுத்துவிட, அக்கபாலம் அப்படியே சிவன்கையில் ஒட்டிக்கொள்ளவே, அவன் 'இதற்கு என்ன செய்வது' என்று கவலைப்பட, தேவர்களும் முனிவர்களும் 'இப்பாவம் தொலையப் பிச்சையெடுக்கவேண்டும்; என்றைக்குக் கபாலம் நிறையுமோ அன்றைக்கே இது கையைவிட்டு நீங்கும்' என்றுகூற, சிவபிரான் பலகாலம் பல தலங்களிலுஞ் சென்று பிச்சையேற்றுக் கொண்டே வருந்தித் திரிந்தும் அக்கபாலம் நிறையாமையாலே நீங்காதிருக்க, பின்பு ஒருநாள் பதரிகாச்ரமத்தை யடைந்து அங்கு எழுந்தருளியுள்ள நாராயணமூர்த்தியை வணங்கிப் பிரார்த்தித்தவளவில் எம்பெருமான் தனது திருமார்பை நகத்தாலேகீறி அதில் நின்றும் பெருகின ரத்தநீரை யெடுத்து 'அக்ஷயம்' என்று பிக்ஷையிட, உடனே அது நிறைந்து கையைவிட்டு அகன்றது என்பது பண்புரிந்த நான்மறையோன்சென்னிப் பலியேற்ற வண்புரிநூல் மார்பன்வினைதீர்த்த வரலாறு. சிவனுடைய வினையைத் தீர்ப்பதற்காகத் தனது திருமார்பை நகத்தால்கீறிப் புண்படுத்திக்கொண்டது

பற்றிப் புண்புரிந்தஆகத்தான் என்றார். இப்படி பரோபகார சீலனான பெருமானுடைய திருவடிகளைப் பணியுமவர்களே உபய விபூதியையும் ஆளவல்ல பாக்யசாலிகள்—என்றாராயிற்று. 1. "வையம்மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" என்ற திருவாய்மொழிப் பாசுரம் இங்கு நினைக்கத்தகும்.

போகம், பூமி—வடசொற்கள். ... ... (௬௬)

வாரிசுருக்கி மதக்களி றைந்தினையும் *
சேரி திரியாமல் செந்நிறீஇ *—கூரிய
மெய்ஞ்ஞானத் தாலுணர்வார் காண்பரே * மேலொருநாள்
கைந்நாகங் காத்தான் கழல். (௬௭)

மதம் களிறு ஐந்தினையும்	மதம்பிடித்த ஐந்து யானைகள் போன்ற பஞ்சேந்திரியங்களையும்	மெய் ஞானத்தால்	உண்மையான பக்தி ரூபாபந்ந ஜ்ஞானத்தாலே
		உணர்வார்	(அவனை) உள்ளபடி உணரவல்லவர்கள்
வாரி சுருக்கி	ஜலம்போன்ற சப்தாதி விஷயங்களில் நின்றும் இழுத்துப் பிடித்து	மேல் ஒரு நாள்	முன்பொரு காலத்திலே
		கை நாகம் காத்தான்	கஜேந்திராழ்வானை ரக்ஷித்தவனான அப்பெருமானுடைய
சேரி திரியாமல் செம் நீறீஇ	கண்டவிடங்களிலும் திரியவொட்டாமல் செவ்வையாக நிலைநிறுத்தி	கழல்	திருவடிகளை
கூரிய	மிகவும் ஸூக்ஷ்மமான	காண்பர்	கண்டு அநுபவிக்கப் பெறுவர்கள்.

* * *—[வாரிசுருக்கி.] கீழ்ப்பாட்டில் "புண்புரிந்த வாகத்தான் தாள்பணிவார் கண்டீர் அமரர்தம் போகத்தால் பூமியாள்வார்" என்றார்; எம்பெருமானது தாள்களைப்பணிதல் யார்க்குக் கைகூடும்? என்று கேள்வியுண்டாக, இந்திரியங்களை அடக்கி ஆள்பவர்களே எம்பெருமான் திருவடியைப் பணிதற்குப் பாங்குடையர் என்கிறாரிதில்.

இந்திரியங்களை அடக்கியாளுதல் மிகவும் அரிது என்பது தோன்ற, அவ்விந்திரியங்களை மதம்பிடித்தயானையாக உபசரித்துக்

கூறுகின்றார். யானைகள் நீர்நிலையில் புகுந்தால் முசலை முதலிய ஜலஜந்துக்களால் துன்பம் நேரிடுவது ஸம்பாவிதமாதலால் அங்குப்போகாதபடி சுருக்கவேணும் யானையை; அப்படியே, பிரகிருதத்தில் நீர்நிலையாவது—விஷயாந்தரங்கள்; இந்திரியங்களாகிற மதயானைகள் சப்தாதி விஷயங்களினருகிற் சென்றால் துன்பம் நேரிடுவது திண்ணமாதலால் அவற்றில் நின்றும் சுருக்கவேணும் இவற்றை; இதுவே "வாரிசுருக்கி" என்பதன் கருத்து. வாரி என்னும் வடசொல்லுக்கு 'நீர்' என்று பொருள்; நீரானது எப்படி விடாயைப் பிறப்பிக்குமோ அப்படி விஷயங்களும் விடாயைப் பிறப்பிக்கின்றனவென்பதுபற்றி விஷயங்களை 'வாரி' என்ற சொல்லாற் குறித்தனரென்க. "வாரி சுருக்கி" என்றதே போதுமாயிருக்க, மறுபடியும் "சேரித்ரியாமல் செந்நிறீஇ" என்றது—பலாத்கரித்தாகிலும் இந்திரிய மதயானைகளை விஷய வீதிகளில் நின்றும் மடக்கியடக்கி ஆளவேண்டுவது அவசியம் என்பதற்காக வென்க. நிறீஇ—சொல்லிசையளபெடை.

ஆகவிப்படி இந்திரியங்களை வென்று பாரமார்த்திகமான பக்திரூபாபந்நஜ்ஞானத்தாலே அவனை உள்ளபடி உணரக்கூடியவர்கள் யாரோ, அவர்கள் அவனுடையதிருவடிகளை ஸேவிக்கப்பெறுவர்கள்—என்றாராயிற்று. "கைந்நாகங்காத்தான் கழல்" என்ற சொல்லாற்றலால் ஸ்ரீகஜேந்திராழ்வான் போல்வார் இப்படிப்பட்ட அதிகாரிகள் என்பது ஸூசிப்பிக்கப் பட்டதாம். ... (சஎ)

கழலோன் றெடுத்தொருகை சுற்றியோர் கைமேல் *
சுழலும் சுராசுரர்க ளஞ்ச *—அழலும்
செருவாழி யேந்தினான் சேவடிக்கே செல்ல *
மருவாழி நெஞ்சே மகிழ். (சஅ)

ஆழி நெஞ்சே	கம்பீரமான மனமே!,	ஒரு கை	ஒரு திருக்கையாலே
(முன்பு திரிவிக்ரமாவதார காலத்தில்)		சுற்றி	(பிரதிகூலரான நமுசி முதலானவர்களைச்) சுழற்றியெறிந்து
ஒரு கழல்	ஒரு திருவடியை		
எடுத்து	மேலுலகங்களிலே செல்ல நீட்டி,	ஓர் கை மேல்	மற்றொரு திருக்கையிலே,

சுழலும் சுராசுரர்கள் அஞ்ச அழலும் செரு ஆழி ஏந்தினை	(இவனுக்கு என்ன நேரிடுமோ வென்று) தவிக்கிற (அநுகூலரான) தேவர்களும் (பிரதிகூலரான) அசுரர்களும் அஞ்சும் படியாக (எதிரிகளின் மேல்) அழலையுமிழ்கிற புத்தஸாதநமான சக்கரத்தை ஏந்தின எம்பெருமானுடைய	சே அடிக்கே செல்ல	திருவடிகளிலே சென்று கிட்டும் படி
		மருவு	பொருந்துவாயாக ;
		மகிழ்	இதை ஆநந்தரூபமாக ஏற்றுக்கொள்.

* * *—[கழலோன்றெடுத்து.] உலகளந்த பெருமானுடைய திருவடிகளைப் பணிந்து மகிழ்ந்திரு என்று திருவுள்ளத்தைத் தேற்றுகின்றார். ஸ்ரீவாமநமூர்த்தி மஹாபலியினிடத்தினின்றும் தானம் வாங்கினவுடனே திரிவிக்கிரமனாய் மூன்றடி மண்ணையளக்கப்புக, அதைக்கண்ட மஹாபலிபுத்திரனான நமுசி யென்பவன் ஓடிவந்து 'இது என்ன அநியாயம்!' என்றுசொல்லி வளருகின்ற திருவடியைத்தகைய, ஸ்ரீவிஷ்ணு 'நீ ஏன் தகைகிறாய்? நான தானம் பெற்றதை அளந்துகொள்ள வேண்டாவோ' என்ன ; நமுசி 'நீ செய்கிறது கபடமன்றோ' என்ன ; ஸ்ரீவிஷ்ணு 'உன்னுடைய தகப்பன் எனக்குத் தாரைவார்த்து தத்தம் பண்ணினது பொய்யோ? என்ன ; நமுசி 'என்னுடைய பிதா உன்னுடைய மோசவகை தெரியாமல் உன்வஞ்சனத்தில் அகப்பட்டுக்கொண்டான்' என்ன ; ஸ்ரீவிஷ்ணு 'நான் செய்வதை வஞ்சகமென்று எதனாற்சொல்லுகிறாய்?' என்ன ; நமுசி 'நீ செய்வது வஞ்சகமன்றாகில் நீ முன்பு யாசித்தபோதிருந்த வடிவத்தைக்கொண்டு அளந்துகொண்டுபோ' என்ன, ஸ்ரீவிஷ்ணு, 'சரீரமென்பது எப்போதும் ஒரே தன்மையாக இருக்கமாட்டாதே ; விகாரப்படுந் தன்மையுடையதுகாண் ; முன்னைய வடிவத்தைக்கொண்டு எப்படி அளக்க முடியும்?' என்ன, இப்படி ஸமாதானஞ் சொல்லவுங் கேளாமல் தான் பிடித்த திருவடியின் பிடியை விடாமல்

உறுதியாயிருந்த நமுசியை வளர்ந்த திருவடியினால் ஆகாயத்திலே கொண்டுபோய்ச் சுழன்று விழும்படி செய்தானென்ற கதை "என்னிதுமாயம் என்னப்பனறிந்திலன், முன்னைய வண்ணமே கொண்டு அளவாயென்ன, மன்னு நமுசியை வானில் சுழற்றிய, மின்னுமுடியனே!" என்ற பெரியாழ்வார் திருமொழிப் பாசுரத்தில் விரிய அநுஸந்திக்கப்பட்டுள்ளது; அஃது இப்பாட்டில் "ஒருகை சுற்றி" என்றதனால் சுருங்க அநுஸந்திக்கப்பட்டதென்க.

"ஓர்கைமேல் அழலும் செருவாழியேந்தினான்" என்று அந்வயம். [சுழலும் சுராசுரர்கள் அஞ்ச.] 'சுழலும்' என்ற விசேஷணம் 'சுராசுரர்கள்' என்ற பதத்தின் ஏகதேசமான சுரர்களிடத்தில் அந்வயிக்கும். முதலிலே பிடித்து சுக்கிரன் நமுசி முதலானவர்கள் தடை செய்துகொண்டே வருவதைக்கண்ட தேவர்கள் 'இக்காரியம் இடையூறொன்றுமின்றிப் பூர்த்திபெற வேணுமே; இடையில் என்ன தீங்கு நேரிடுமோ!' என்று குடல் குழம்பியிருந்தமையைச் "சுழலும்" என்ற விசேஷணம் தெரிவிக்கும். இந்த விசேஷணத்தை அசுரர்களிடத்திலும்கூட அந்வயிக்கலாம்; 'நமக்கு எவ்வளவு தீங்கு நேரிடுமோ!' என்று அசுரர்கள் கவலைகொண்டிருக்கின்றமையைக் கூறியவாறு. ஆகவிப்படி த்ரிவிக்ரமாவதாரம் செய்தருளின பெருமானுடைய திருவடிகளிலே சென்று கிட்டும்படி நெஞ்சே! நிரந்தரமாகப் பொருந்தியிருக்கப்பார்; இதை வருத்தமாகக் கொள்ளாமல் ஆநந்த ரூபமாகவும் கொள்—என்று தம் திருவுள்ளத்திற்கு உபதேசித்தாராயிற்று. .... (சஅ)

மகிழலகோன்றேபோல் மாறும் பல்யாக்கை *
நெகிழ முயல்கிற்பார்க் கல்லால் —முகிழ்விரிந்த
சோதிபோல் தோன்றும் சுடர்போன் நெடுமுடி * எம்
ஆதிகாண் பார்க்கு மரிது. (சகூ)

மகிழ் அலகு ஒன்றே போல்	(கணக்கில் நிபுணனான ஒருவனால் வைக்கப்பட்ட) ஒரு மகிழம் விதையே காணிஸ்தாநத்திலும் கோடிஸ்தாநத்திலும் மாறிமாறி நிற்பதுபோல	மாறும் பல் யாக்கை	மாறிமாறிப் பலவகையாக வருகின்ற சரீரங்கள்
		நெகிழ	தனனைவிட்டு நீங்கும்படியாக

முயல்கிற்பார்க்கு அல்லால் — முயற்சிசெய்யக் கூடியவர்களுக்குத்தவிர,

ஆர்க்கும் — மற்ற எவர்க்கும்

முகிழ் விரிந்த சோதி போல் தோன்றும் சுடர் பொன் நெடு முடி எம் ஆதி காண்பு — விண்டு விரிந்த தேஜஸ்ஸைப் போல் தோன்றுகிற தேஜஸ்ஸையுடைய அழகிய பெரிய திருவபிஷேகத்தை யுடையனான எம்பெருமானைக் காண்பது

அரிது — கூடாதகாரியம்.

* * *—[மகிழலகு.] தேவயோநிகளென்றும் மநுஷ்யயோநிகளென்றும் திர்யக்யோநிகளென்றும் பலவகைப்பட்ட யோநிகளில் பிறப்பதும் இறப்பதுமாகிற ஸம்ஸாரத்தைத் தொலைத்துக் கொள்ள விருப்பமுடையவர்களுக்கே எம்பெருமானைக் காணுதல் கைகூடு மென்கிறார். பலகறை, மகிழம்விதை முதலியவற்றைக் கொண்டு கணிதம் பார்க்கிற முறைகள் சிலவுண்டு ; அந்த கணிதத்தில் காணிஸ்தாநமென்றும் கோடிஸ்தாநமென்றும் பாகுபாடுகளுமுண்டு ; காணிஸ்தானமென்பது மிகத்தாழ்ந்த ஸ்தாநம் ; கோடிஸ்தானமென்பது மிகவுயர்ந்தஸ்தாநம். கணிதம்பார்க்கிற வகையில் ஒரு மகிழம் விதையே சற்றுப்போது காணிஸ்தாநத்திலும் சற்றுப்போது கோடிஸ்தாநத்திலுமாக மாறிமாறி வந்து கொண்டிருக்கும்; (இது கணிதஸாமர்த்தியத்தைப் பொறுத்ததுமாம்.) அதுபோல பகவத் ஸங்கல்பத்தாலே கர்மாநுகுணமாக (உத்க்ருஷ்டமாகவும் அபக்ருஷ்டமாகவும்) பலவகைப்பட்டு மாறிமாறி வரக்கூடிய (பிரமன் முதற்கொண்டு எறும்பு ஈறாகவுள்ள) சரீரங்கள் தொலைந்து நித்யாநந்தமநுபவிக்க வேணுமென்று ஆசை கிளர்ந்து அதற்குரிய முயற்சியைச் செய்யுமவர்களுக்குத்தவிர மற்று யார்க்கும் எம்பெருமானை ஸாக்ஷாத்கரிப்பது அரிதாகும்.

• . நான்காமடியை "ஆதிகாண்பு ஆர்க்கும் அரிது" எனப்பிரித்து உரைக்கப்பட்டது காண்பு—காணுதல். இனி, "காண்பார்க்கும்" என்று ஒரு சொல்லாகவே கொண்டு உரைக்கவுமாம் ; காணவேணுமென்னும் விருப்பமுடையவர்களுக்கும் எம் ஆதி அரிது (அருமைப்படுவன்) என்க.

இப்பாட்டில் முதலடிக்குச் சார்பாக ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்திலுள்ள "பட்நைகவராடிகேவ க்லுப்தா ஸ்தலயோ: காகணிகாஸுவர்ண கோட்யோ: = படுநைகவராடிகேவ க்லப்தா ஸ்தலயோ: காகணிகாஸுவர்ண கோட்யோ:." என்றச்லோகம் ஒரு புடை ஒப்புமையாக ஸ்மரிக்கத்தக்கது. .... (சக)

அரியபுல னைந்தடக்கி யாய்மலர்கொண்டு—* ஆர்வம்
புரிய பரிசினால் புல்கில் *—பெரியனாய்
மாற்றாது வீற்றிருந்த மாவலிபால் * வண்கைநீர்
ஏற்றானைக் காண்ப தெளிது. (௫௦)

அரிய	அடக்கமுடியாத	பெரியன் ஆய் மாற்றாது வீற்றிருந்த மாவலி பால்	'நாமே பெரியோம்' என்னு மஹங்காரத்தையுடையனாய் தானஞ் செய்வது தவறாதவனாய் இருந்த மஹாபலியிடத்தில்
புலன் ஐந்து	பஞ்சேந்திரியங்களையும்		
அடக்கி	கட்டுப்படுத்தி,		
ஆய்	ஆராய்ந்தெடுக்கப்பட்ட		
மலர்	புஷ்பங்களை	வண் கை	உதாரமான தனது திருக்கையாலே
கொண்டு	கையில் ஏந்திக்கொண்டு	நீர் ஏற்றானை	உதகதானம் வாங்கின பெருமானை
ஆர்வம் புரிய பரிசினால்	அன்பு மிகுந்த விதத்தினாலே	காண்பது	ஸேவிப்பது
புல்கில்	கிட்டப்பார்த்தால்,—	எளிது	ஸுலபமாகும்.

* * *—[அரியபுலன்.] விஷயாந்தரங்களில் பற்றற்று அன்புடன் அவனை ஆச்ரயிக்குமவர்களுக்கு அவனைக் காண்பதில் அருமையேயில்லை யென்கிறார். செவி வாய் கண் மூக்கு உடலென்கிற ஜ்ஞாநேந்திரியங்களைந்தையும் விஷயாந்தரங்களில் போகவொண்ணாதபடி அடக்கி, பகவதாராதனைக்கு உரிய நன்மலர்களைச் சேகரித்துக்கொண்டு மெய்யன்பு நன்கு விளங்கும்படி சென்று பணிந்தால், மாவலியின் மதமொழித்த பெருமானைக் கண்டநுபவிப்பது மிகவும் எளிதாகும். .... (௫௦)

எளிதி லிரண்டடியுங் காண்பதற்கு—* என்னுள்ளம்
தெளியத் தெளிந்தொழியும் செவ்வே *—களியில்
பொருந்தா தவனைப் பொரலுற்று—* அரியா
யிருந்தான் திருநாம மெண். (ருக)

என் உள்ளம்	எனது நெஞ்சே!,(நீ)	பொரல் உற்று	போர்செய்யத் தொடங்கி
தெளிய	கலக்கம்தீர்ந்து தெளிவுபெற்றால்	அரி ஆய் இருந்தான்	நரசிங்கமாக அவதரித்த பெருமானுடைய
(அந்த எம்பெருமானும்)		திரு நாமம்	திருநாமங்களை,
செவ்வே தெளிந்தொழியும்	மிகவும் நன்றாக ப்ரஸந்நனுவன் ;	இரண்டு அடியும் எளிதில் காண்பதற்கு	(அவனுடைய) உபய பாதங்களையும் சுலபமாகக் காணும்பொருட்டு
(ஆகையினால்)		எண்	சிந்திப்பாயாக.
களியில்	அஹங்காரத்தாலே		
பொருந்தாத வனை	அடிபணியாதிருந்த ஹிரண்யா ஸுரனோடு		

* * *—[எளிதிலிரண்டடியும்.] எம்பெருமானுடைய திருநாமங்களைப் பரமபோக்யமாக நாம் வாயாரச்சொல்லவே, அப்பெருமான் ப்ரஹ்லாதாழ்வானுடைய விரோதியைத்தொலைத்துத் தன்னைக் கொடுத்தாப்போலே நமக்கும் விரோதியைப் போக்கித் தன்னைத் தந்தருள்வனென்கிறார்.

என்னுள்ளம் என்றது அண்மைவிளி ; என்னுள்ளமே! என்றபடி. நீ எம்பெருமானுடைய திருவடியிணையை ஸேவித்து அநுபவிப்பதற்குத் தெளிவுகொண்டிருந்தால் அவன் ப்ரஸந்நனுய் அருள்புரிவன் ; நீ தெளிவுற்றிருக்கிறுயென்பது நன்குவிளங்குமாறு ஸ்ரீ நரஸிம்ஹமூர்த்தியின் திருநாமங்களை எண்ணிக் கொண்டிரு. .... (ருக)

எண்மர் பதினொருவ ரீரறுவ ரோரிருவர் *
வண்ண மலரேந்தி வைகலும் *—நண்ணி
ஒருமாலை யால்பரவி யோவாது *—எப்போதும்
திருமாலைக் கைதொழுவர் சென்று. (ருஉ)

எண்மர்	அஷ்டவஸுக்களும்	நண்ணி	(எம்பெருமானைக்) கிட்டி
பதினொருவர்	ஏகாதச ருத்ரர்களும்	ஒரு மாலையால்	ஒப்பற்ற புருஷ ஸூக்தமாகிற சொல்மாலையைக் கொண்டு
ஈர் அறுவர்	த்வாதசாதித்யர்களும்	ஓவாது	இடைவிடாமல்
ஓர் இருவர்	இரட்டையரான அச்விநீ தேவதைகளும்	எப்போதும்	எல்லா வேளைகளிலும்
(ஆகிய முப்பத்து மூவரான தேவர்களும்)		பரவி	துதிசெய்து
வைகலும்	நாள்தோறும்	திருமாலை சென்று	திருமகள் கொழுநனைக் கிட்டி
வண்ணம் மலர் ஏந்தி	நாநாவர்ணங்களையுடைய புஷ்பங்களை யெடுத்துக் கொண்டு	கை தொழுவர்	வணங்குவர்கள்.

* * *—[எண்மர்பதினொருவர்.] அஹங்காரிகளான முப்பத்து மூவரமரர்களும் எம்பெருமானை யடிபணிந்தே சிறப்புற்றிருக்கின்றனரென்கிறார். முதலடியில் முப்பத்துமூன்றுதேவர்களை எடுத்துக் காட்டினது முப்பத்து முக்கோடி தேவர்களெனப்படுகிற அனைவரையும் எடுத்துக்காட்டினமைக்குப் பர்யாய மென்க. நம்மாழ்வாரும் பெரிய திருவந்தாதியில் "இருநால்வர் ஈரைந்தின் மேலொருவர், எட்டோடொரு நால்வர் ஓரிருவர்" என்றருளிச் செய்தது காண்க. .... (ருஉ)

சென்றால் குடையா மிருந்தால்சிங் காசனமாம் *
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் *—என்றும்
புணையா மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு
மணையாம் * திருமாற் கரவு. (ருங)

திரு மாற்கு	பிராட்டியோடு (எப்போதும்) கூடியிருக்கிற பெருமானுக்கு	சென்றால் குடை ஆம்	(அப்பெருமான்) உலாவினால் (அப்போது மழை வெயில் படாத படி) குடையாக உருவெடுப்பன்;
அரவு	திருவனந்தாழ்வான்,	இருந்தால்	எழுந்தருளி யிருந்தால்

	(அப்போது)	
சிங்காசனம் ஆம்	ஸிம்ஹாஸநமா யிருப்பன்;	
நின்றால்	நின்று கொண் டிருந்தால்	
	(அப்போது)	
மரவடி ஆம்	பாதுகையாவன்;	
நீள் கடலுள்	பரம்பின கடலிலே	
	(சயனிக்கும்போது)	
என்றும்	எப்போதும்	
புணை ஆம்	திருப்பள்ளி மெத்தையாவன்;	
அணி விளக்கு ஆம்	மங்களதீபமாவன்;	
பூம்பட்டு ஆம்	அழகிய திருப்பரி வட்டமாவன்;	
புல்கும் அணை ஆம்	தழுவிக்கொள்வ தற்கு உரிய அணையுமாவன்.	

* * *—[சென்றாற்குடையாம்.] திருவனந்தாழ்வானைப்போல எம்பெருமானுக்கு எல்லாக்காலங்களிலும் எல்லாவிதமான அடிமைகளையும் செய்யப்பெற வேணுமென்று திருவுள்ளங்கொண்ட ஆழ்வார் அத்திருவனந்தாழ்வான் செய்யுமடிமைகளை யெடுத்தருளிச் செய்கிறார். எம்பெருமான் உலாவியருளும்போது மழை வெயில் படாதபடி குடையாகவடிவெடுப்பன்; எழுந்தருளியிருந்தகாலத்தில் திவ்யஸிம்ஹாஸநஸ்வரூபியாயிருப்பன்; நின்று கொண்டிருந்தால் பாதுகையாயிருப்பன்; திருப்பாற்கடலில் திருக்கண்வளர்ந்தருளும்போது திருப்பள்ளி மெத்தையாயிருப்பன்; ஏதேனுமொன்றை விளக்குக்கொண்டுகாண அவன் விரும்பினபோது திருவிளக்குமாவன்; சாத்திக்கொள்ளும்படி திருப்பரியட்டத்தை அவன் விரும்பினபோது அதுவுமாவன்; சாய்ந்தருளும்போது தழுவிக்கொள்வதற்குரிய உபதாநமுமாவன்.

ஆகவிப்படி பலவகைவடிவுகொண்டு அடிமைத் தொழிலைச் செய்வதனால்தான் திருவனந்தாழ்வானுக்கு சேஷன் என்று திருநாமமாயிற்றென்பதை ஸ்தோத்ர ரத்நத்தில் "நிவாஸஶய்யாஸந பாது³காம்ஶுகோபதா⁴ந வர்ஷாதபவாரணாதி³பி⁴: । ஶரீர பே⁴தை³ஸ்தவ ஶேஷதாம் க³தைர் யதோ²சிதம் ஶேஷ இதீரிதே ஜநை: ॥" என்றச்லோகத்தால் ஆளவந்தாருமருளிச் செய்தார். பிள்ளைப்பெருமாளையங்காரது திருவரங்கத்துமாலையில் "சென்றாற்குடையாம் கடற்புணையாம் திருத்தீவிகையாம், நின்றாலிரு திருப்பாதுகையாம் நித்திரைக்கணையாம், குன்றாமணி

யொளியாசனமாம் புணைகோசிகையாம், அன்றாலிலையில் துயிலரங் கேசர்க்கரவரசே.” என்ற பாசுரமும் இப்பாட்டை யடியொற் றியதே.

நீள்கடலுள் புணையாம்—திருப்பாற்கடலில் அழுந்தாதபடி தெப்பமாவன் என்று முரைக்கலாம். புல்கும் அணையாம்=எம் பெருமான் பிரணயகலஹத்தினால் பிராட்டிமாரைப் பிரியநேர்ந் தால் அப்போது விரஹதுக்கம் தோன்றாதபடிக்குத் திருவனந்தாழ் வானைத் தழுவிக்கொள்வானும்.

மூன்றாமடியில் “மணி விளக்காம்” என்றும் பிரிக்கலாம். (௫௩)

அரவ மடல்வேழ மான்குருந்தம் புள்வாய் *
குரவை குடமுலைமற் குன்றம் *—கரவின்றி
விட்டிறுத்து மேய்த்தொசித்துக் கீண்டு கோத்தாடி * உண்
டட்டெடுத்த செங்க ணவன். (௫௪)

செம் கண் அவன்	செந்தாமரைக் கண்ணனாகிய அப்பெருமான்
கரவு இன்றி	மறைவு இல்லாமல் [ஸர்வலோக ப்ரஸித்தமாம்படி]
அரவம்	காளிய நாகத்தை
விட்டு	விட்டடித்தும்
அடல் வேழம்	பொருவதாக வந்த (குவலயாபீட மென்னும்) யானையை
இறுத்து	(தந்தத்தை) முறித்து உயிர் தொலைத்தும்
ஆன்	பசுக்களை
மேய்த்து	(வயிறு நிரம்ப) மேய்த்தும்
குருந்தம்	(அஸுரா வேசமுடைய) குருந்தமரத்தை
ஒசித்து	ஒடித்துப் பொகட்டும்
புள் வாய்	பகாஸுரனுடைய வாயை
கீண்டு	கிழித்தும்
குரவை	ராஸக்ரீடையை
கோத்து	(இடைப்பெண்களோடு) கை கோத்து ஆடியும்
குடம்	குடங்களைக்கொண்டு
ஆடி	கூத்தாடியும்
முலை	பூதனையின் முலையை
உண்டு	(அவளுடைய உயிரோடு) உறிஞ்சியுண்டும்
மல்	(கம்ஸனால் ஏவப்பட்ட) மல்லர்களை

அட்டு	கொன்றும்	எடுத்த	(குடையாக) எடுத்துப்பிடித்த இச்செயல்கள்
குன்றம்	கோவர்த்தன மலையை		(என்ன ஆச்சரியம்!.)

* * * * —[அரவமடல்வேழம்.] ஆச்ரிதவிரோதிகளைப் போக்க வேண்டில், கீழ்ப்பாட்டிலருளிச் செய்தபடி தன்நினைவுக்குத் தகுதியாக எல்லாவடிமைகளையுஞ் செய்கிற திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலும் பொருந்தமாட்டாமல் இந்த லீலாவிபூதியில் வந்து பிறந்து களைபிடுங்கித் தன்விபூதியைப் பாதுகாப்பவன் என்று அவனது திருக்குணத்தை அநுஸந்தித்து அதற்கேற்ற சில திவ்ய சேஷ்டிதங்களை யநுபவிக்கிறாரிப்பாட்டில்.

கண்ணபிரானது காளியமர்த்தநம் முதலிய அரிய செயல்களை அநுஸந்தித்த ஆழ்வார் அவற்றில் உள்குழைந்து ஈடுபட்டு மேலொன்றும் சொல்லமாட்டாமையால் ஒரு வினைமுற்றுச் சொல்லவும்மாட்டாது விட்டனர்; ஆச்சர்யகரமான விஷயங்களைக் கூறும்போது அவற்றுக்கு வினைமுற்றுத்தந்து முடியாது நிறுத்துவதைப் பல கவிகளின் வாக்குகளிலும் காணலாம்.

ஈற்றடியில் எடுத்த என்றது—'அன்' சாரியை பெறாத பலவின்பாற்பெயர்; சாரியைபெறின் 'எடுத்தன' எனநிற்கும். இப்பாட்டில், அரவுமுதலிய பெயர்ச்சொற்கள் 'விட்டு' முதலிய வினைச்சொற்களை முறையே சென்று இயைதலால் முறை நிரனிறையாம்; இது வடமொழியில் 'யதாஸங்க்யாலங்காரம்' என்றும், தென்மொழியில் 'நிரனிறையணி' என்றும் அலங்காரசாஸ்திரிகள் கூறுவர்.

காளியநாகத்தை வலியடக்கி உயிரோடு விட்டதும், குவலயாபீடமென்னும் கம்ஸனதுயானையைக் கொம்புமுறித்து முடித்ததும், தன்மேன்மையைப் பாராமல் தாழநின்று பசுக்களை மேய்த்ததும், அஸுரன் ஆவேசித்திருந்ததொரு குருந்தமரத்தை முறித்து வீழ்த்தியதும், பகாஸுரன் வாயைக் கீண்டொழித்ததும், இடைப்பெண்களோடே குரவைக்கூத்தாடியதும், குடங்களெடுத்தேற வெறிந்தாடியதும், தன்னைக்கொல்லுமாறு தாய்வடிவு கொண்டு வந்த பூதனையின் ஸ்தனங்களை உறிஞ்சியுண்டதும், மல்லர்களைக்

கொன்றதும், கோவர்த்தனமலையைக் குடையாகவெடுத்தேந்தி நின்றதுமாகிய இச்செயல்கள் என்ன ஆச்சரியம்! என்று ஈடுபட்டுப்பேசினாராயிற்று. ... ... (ருச)

அவன்தம ரேவ்வினைய ராகிலும் * எங்கோ
னவன்தமரே யென்றொழிவ தல்லால் *—நமன்தமரா
லாராயப் பட்டறியார் கண்டீர் * அரவணைமேல்
பேராயர்க் காட்பட்டார் பேர். (ருரு)

அரவு அணை மேல் — சேஷசயனத்தின் மீது வாழ்கிற

பேர் ஆயற்கு — இடைத்தனத்தில் குறைவின்றிப் பூர்ணமாயிருக்கிற ஸ்ரீகிருஷ்ணனுக்கு

ஆட்பட்டார் பேர் — அடிமைப்பட்டவர்களின் திருநாமத்தை வஹிக்குமவர்களும்

நமன் தமரால் யமபடர்களாலே,

“அவன் தமர் எவ் வினையர் ஆகிலும் — “அந்த ஸர்வேச்வரனுடைய பக்தர்கள் எவ்வகையான செயலையுடையவராயிருந்தாலும்

எங்கோன் அவன் தமரே” — எம்பெருமானுடைய பக்தர்களன்றோ”

என்று — என்று கொண்டாடிச் சொல்லி

ஒழிவது அல்லால் — (தாங்கள்) விலகிப் போவது தவிர,

ஆராயப்பட்டு அறியார் — ஆராயப்பட்டிருக்க அறியமாட்டார்கள்.

* * *—[அவன்தமர்.] யமபடர்கள் பாகவதர்திறத்திலே அஞ்சியிருக்கும்படியை அருளிச்செய்கிறார். யமன் நாட்டிலுள்ளாருடைய பாவங்களையெல்லாம் ஆராய்வதற்கு அந்த ஸர்வேச்வரனால் நியமிக்கப்பட்டவனே; ஆனாலும் தனக்கும் நியாமகனான அந்த ஸர்வேச்வரனுடைய பக்தர்கள் நற்காரியங்களைத் தவிர்ந்து தீயகாரியங்களையே செய்துவந்த போதிலும் அவர்களை யமகிங்கரர்கள் “நமது யஜமாநனான யமனையும் நியமிக்கும் வல்லமை யுடையவர்களன்றோ இந்த பாகவதர்கள்” என்று கொண்டாடி வணங்கி அப்பால் போய்விடுவர்களே தவிர, அவர்களுடைய குணதோஷங்களை ஒருபோதும் ஆராய்ச்சி செய்யமாட்டார்கள்: ஏனெனில்; அப்படிப்பட்டவர்களை ஸம்ரக்ஷிப்பதில் புருஷகாரபூதையான

பிராட்டியும் ஒருகால் ஏதேனும் குறை சொல்லிலும் அதையும் லக்ஷியஞ் செய்யாமல் 1. "என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்று சொல்லிக்கொண்டு ஸர்வேச்வரன் பரிந்து ரக்ஷிப்பவனன்றோ? இப்படிப் பெரிய பிராட்டியாராலும் குறை கூறக்கூடாதவர்கள் விஷயத்தில் நம்மால் அணுகவும் முடியுமோ? என்கிற பயத்தினாலென்க. அன்றியும், யமன் தன்படர்களை நோக்கி 'நீங்கள் வைஷ்ணவர்கள் திறத்தில் அபசாரப்படவேண்டா; அவர்களைக்கண்டால் அநுவர்த்தித்திருங்கள்' என்று கட்டளையிட்டிருக்கின்றானென்பதை, "திறம்பேன்மின் கண்டீர், திருவடி தன் நாமம், மறந்தும் புறந்தொழா மாந்தர்—இறைஞ்சியும், சாதுவராய்ப் போதுமின்களென்றான் நமனும் தன், தூதுவரைக் கூவிச் செவிக்கு." என்ற நான்முகன்திருவந்தாதிப் பாசுரத்தாலும், "𑌸𑍍𑌵𑌪𑌰𑍁𑌷𑌮𑌭𑌿𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑌾𑌶𑌹𑌸𑍍𑌤𑌂 𑌵𑌦𑌤𑌿 𑌯𑌮𑌃 𑌕𑌿𑌲 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌣𑌮𑍂𑌲𑍇। 𑌪𑌰𑌿𑌹𑌰 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑌹𑌮𑌨𑍍𑌯𑌨𑍃𑌣𑌾𑌂 𑌨 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌨𑌾𑌂 = ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே—பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்." என்ற ஸ்ரீவிஷ்ணுபுராணவசநத்தாலும் அறிக. "கெடுமிடராயவெல்லாம் கேசவாவென்ன, நாளுங் கொடுவினைசெய்யுங் கூற்றின் தமர்களுங் குறுககில்லார்" என்ற திருவாய்மொழியும், "வென்றிகொண்ட வீரனார், வேறுசெய்து தம்முளென்னை வைத்திடாமையால் நமன், கூறுசெய்துகொண்டு இறந்த குற்றமெண்ண வல்லனே" என்ற திருச்சந்தவிருத்தமும் இங்கு அநுஸந்திக்கத் தக்கன.

இப்பாட்டில் "பேராயற்கு ஆட்பட்டார்பேர்" என்ற ஈற்றடிக்கு வேறுவகையாகவும் பொருளுரைக்க இடமுண்டாயினும், அழகியமணவாளப்பெருமாள் நாயனாரருளிச்செய்த திருப்பாவை ஆறாயிரப்படி வியாக்கியானத்தில் ஆழிமழைக்கண்ணா வென்னும் நாலாம்பாட்டின் அவதாரிகையில், "அவன் தமரேவ்வினையராகிலும் இத்யாதி" என்று இப்பாசுரத்தை யெடுத்து ["அரவணைமேல் பேராயற்கு ஆட்பட்டார் பேர் ஆராயப்பட்டு அறியார் கண்டீர்=

---

1. பெரியாழ்வார் திருமொழி 4—9—2.

ஒரு பாகவதன் பேரை ஒரு அபாகவதன் தரிப்பது, அவனையும் யமன் கோஷ்டியில் பட்டோலைபார்க்கப் பெறாது.''] என்று வியாக்கியானித்தருளியிருக்கக் காண்கையாலே 'பேராயற்காட்பட்டார் பேர்' என்னுமளவை ஒருசொல்லாகக்கொண்டு (அன்மொழித்தொகையாகப் பாவித்து) எம்பெருமானுக்கு ஆட்பட்டவர்களுடைய பேரையுடையவர்கள் எனப் பொருள்கொள்ளுதல் சிறக்கும். .... (நு௫)

பேரே வரப்பிதற்ற லல்லாலெம் பெம்மானை *
ஆரே யறிவா ரதுநிற்க *—நேரே
கடிக்கமலத் துள்ளிருந்தும் காண்கிலான் * கண்ண
னடிக்கமலந் தன்னை யயன். (நு௬)

(நாம் வாயினால் ஏதேனுமொன்றைச் சொன்னாலும், அது)

பேரே	எம்பெருமானது திருநாமமாகவே
வர	வரும்படியாக
பிதற்றல் அல்லால்	பிதற்றுவதைத் தவிர
எம் பெம்மானை	(அந்த) எம்பெருமானை
ஆரே	ஆர்தான்
அறிவார்	(உள்ளபடி) அறிய வல்லவர்கள்?
அது நிற்க	அந்த விஷயம் இருக்கட்டும்;
அயன்	பிரமனானவன்
கடி	பரிமளம் மிகுந்த
கமலத்துள்	(அவ்வெம்பெருமானது) நாபிக்கமலத்திலே (பிறந்து)
நேரே இருந்தும்	(அங்கே) நிரந்தரவாஸம்பண்ணிக் கொண்டிருந்தும்
கண்ணன் அடி கமலம் தன்னை	அந்த ஸர்வேச்வரனுடைய திருவடிகளை
காண்கிலான்	ஸேவிக்கப் பெற்றானில்லை.

* * *—[பேரேவரப்பிதற்றலல்லால்.] எம்பெருமானுடைய பிரபாவம் ஆர்க்கும் அளவிட்டறிய முடியாதது; கடற்கரையில் குடிசை கட்டிக்கொண்டிருப்பவர்க்கும் அந்தக் கடலினுடைய ஆழம் அறியமுடியாமற் போவதுபோலவே அவனுடைய திருநாபிக்கமலத்தில் தோன்றின நான்முகக்கடவுள் எப்போதும் அவ்விடத்தே வாஸஞ்செய்து கொண்டிருந்தும் அவனுக்கும் அப்பெருமானுடைய பெருமை அளவிட்டறியக் கூடாததாயிராநின்ற

தன்றோ; ஆகையினால் 'எம்பெருமான் உணர்வதற்கு முடியாதவன்' என்று நாம் உணர்ந்து அவனது திருநாமங்களை வாயில் வந்தபடியெல்லாஞ் சொல்லிக் கூப்பிடுவது செய்யலாமத்தனை யொழிய, அவனது மஹிமையை உள்ளபடியறிந்து எவராலும் சொல்லப்போகாது என்றவாறு. சாஸ்திரங்களில் பலபேர்களைக் குறித்து 'ப்ரஹ்மஜ்ஞாநி' என்றும் 'ப்ரஹ்மவித்' என்றும் சொல்லியிருப்பதெல்லாம்—பரப்ரஹ்மத்தை உள்ளபடி அளவிட்டறிந்தமையைச் சொன்னதன்று; 'எம்பெருமான் அளவிட முடியாதவன்' என்ற இவ்வுண்மையை அறிந்தவர்களே ப்ரஹ்மவித்துக்களெனப்படுவார் என்றறிக.

கன்றுக்குட்டியானது ஓரிடத்திலிருந்துகொண்டு தன் தாயைக் காணாமல் அம்மே! என்று கத்தினால் அக்கத்துதல் தன் செவிப்பட்ட மாத்திரத்தில் தாய்ப்பசு இரங்கிக் கன்றின் பக்கத்தில் வந்து நிற்பதுபோலவே, எம்பெருமானை உள்ளபடி அறியாவிட்டாலும் அவனது திருநாமத்தை வாய்வந்தபடி பிதற்றினால் அவன் வந்து அருள்புரிவான் என்ற கருத்து முதலடியில் உய்த்துணரத்தக்கது.

பெம்மான்—'பெருமான்' என்பதன் மரூஉ. நிற்க—வியங்கோள்முற்று. இப்பாட்டில் "நேரே கடிக்கமலத்துள்ளிருந்தும் அயன் கண்ணனடிக்கமலந்தன்னைக் காண்கிலான்; (ஆதலால்) எம்பெம்மானை ஆரேயறிவார்?" என்று கைமுதிகநியாயம்படக் கூறியிருத்தலால் தொடர்நிலைச் செய்யுட் பொருட்பேறணியாம். (௫௬)

அயனின்ற வல்வினையை யஞ்சினே னஞ்சி *
உயநின் திருவடியே சேர்வான் *—நயநின்ற
நன்மாலை கொண்டு நமோநாரணா வென்னும் *
சொன்மாலை கற்றேன் தொழுது. (௫௭)

அயல் நின்ற	(என்) அருகிலேயே இருந்துகொண்டு (என்னை இடைவிடாமல் ஹிம்ஸித்துக் கொண்டே) இருக்கிற	வல் வினையை	மிகக் கடினமான பாவங்களைக் குறித்து
		அஞ்சினேன்	பயப்பட்டேன்;
		அஞ்சி	(இப்படி) பயப்பட்டு

உய	(இந்தப் பாபஸம்பந்தம் நீங்கி) உஜ்ஜீவிக்கும்பொருட்டு	நல் மாலை கொண்டு	சிறந்த இந்தப் பிரபந்தத்தைக் கொண்டு
நின்	உன்னுடைய	தொழுது	(உன்னை) ஆச்ரயித்து
திரு அடியே	திருவடிகளில்தானே	நமோ நாரணா என்னும் சொல் மாலை	திருமந்திரத்தின் பொருளை
சேர்வான்	வந்து கிட்டுகைக்காக		
நயம் நின்ற	இன்பம் பொருந்திய	கற்றேன்	அப்யஸித்தேன்.

* * *—[அயனின்ற வல்வினையை.] பலவகைக் கொடியபாவங்கள் என்னிடத்தில் நெருங்கிக் கிடப்பதைக்கண்டு 'இப்பாவங்கள் இன்னமும் முன்புபோலவே மேல்விழுந்து நலிந்தால் நாம் என்னசெய்வது !' என்று பயப்பட்டேன் ; 'எம்பெருமானது திருவடிகளிற்சென்று சேர்ந்துவிட்டால் பாவங்கள் அடியோடு நீங்கப்பெற்று நாம் உஜ்ஜீவிக்கப்பெறலாம்' என்று துணிந்து, உன் திருவடிகளில் வந்துசேரும் விதம்யாது ? என்று ஆராய்ந்துபார்த்தேன் ; நமது வாய்மொழிகளை உன்விஷயத்தில் உபயோகிப்பதே அதற்குச் சிறந்தவழி என்று நிச்சயித்து, திருமந்திரத்தின் பொருளை விவரிப்பதான இப்பிரபந்தத்தைப்பாடினேன்; இதனால், பாவங்களுக்கு அஞ்சின அச்சம்தீர்ந்து உஜ்ஜீவநமும் பெற்றேன் என்றாராயிற்று.

சேர்வான்=வான் விகுதிபெற்ற எதிர்கால வினையெச்சம். "நயம்நின்ற" என்பதற்கு—'திருமந்த்ரார்த்தத்தை நயப்பித்தலில் நோக்கமாயுள்ள' என்று பொருள்கூறுதலும் பிரகரணத்திற்குப் பொருந்தும்: எம்பெருமானுடைய ஸ்வரூபம், அவனை அடைதற்குரிய ஜீவாத்மாவின் ஸ்வரூபம், அடைவதற்கான உபாயம், அடைந்து பெறவேண்டியபேறு, அடைவதற்கு இடையூறாகவுள்ள விரோதிஸ்வரூபம் ஆகிய இவ்வைந்துவிஷயங்களை திருமந்திரத்தின் அர்த்தமாதலாலும், இவையே இப்பிரபந்தத்திலும் விவரிக்கப்படுகின்றனவாதலாலும் இதுகூடும். ... ... (நிஎ)

தொழுது மலர்கொண்டு தூபம் கையேந்தி *
எழுது மெழுவாழி நெஞ்சே *—பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் மாலடியே கைதொழுவான் *
அந்தரமொன் றில்லை யடை. (நிஅ)

நெஞ்சே	மனமே!,	மந்திரங்கள்	பகவந் மந்த்ரங்களை
மலர் கொண்டு	புஷ்பங்களை சம்பாதித்துக்கொண்டும்	பழுது இன்றி கற்பனவும்	முறைப்படியே நாம் அப்யஸிக்கின்றனவும்
தூபம்	தூபத்தை		
கை ஏந்தி	கையிலே ஏந்திக்கொண்டும்	மால் அடி கை தொழுவான்என	ஸர்வேச்வரன் திருவடிகளைத் தொழுவதற்காகவேயாம்:
தொழுது	(எம்பெருமானை) வணங்கி		
எழுதும்	உஜ்ஜீவிப்போம்;		(ஆனபின்பு)
எழு	நீ புறப்படு;	அந்தரம் ஒன்று இல்லை	(நாம் ஆறியிருப்பதற்கு) அவகாசம் சிறிதுமில்லை;
வாழி	(உனக்கு இந்த ஸ்வபாவம்) நித்யமாயிடுக:		
(நான் இப்படிச் சொல்வதற்குக் காரண மென்னவென்றால்)		அடை	(அப்பெருமானை) விரைவில் சென்றுகிட்டு.

* * *—[தொழுதுமலர்கொண்டு.] நெஞ்சே! நாம் பகவத்விஷயத்தை விட்டு ஒரு நொடிப்பொழுதும் ஆறியிருக்க வழியில்லை; நாம் குருகுலவாஸம் பண்ணி மந்த்ரங்களை அப்யஸிப்பதெல்லாம் எம்பெருமானை அடிபணிவதற்கேயன்றி வேறொரு பிரயோஜனத்திற்காகவன்றே; ஆனபின்பு, தூபதீபபுஷ்பாதிகளான உபகரணங்களைக் கையிற்கொண்டு அப்பெருமானை ஆராதிக்கச் செல்வோம், எழுந்திரு; இனிநாம் தாமஸித்திருப்பதற்கு அவகாசமேயில்லை— என்று தம் திருவுள்ளத்தை த்வரைப்படுத்துகிறார்.

"மலர் கொண்டு தூபம்கையேந்தி—தொழுது—எழுதும் எழு" என்று ஆழ்வார் சொன்னவுடனே நெஞ்சு மிகவும் அதற்கு அநுகூலப்பட்டிருக்கவே "வாழிநெஞ்சே" என்று உவப்பினால் மங்களாசாஸநம் செய்தாரென்க: இந்த ஆநுகூல்யம் உனக்கு ஒருநாளும் மாறாதிருக்கவேணு மென்றவாறு.

• பழுது இன்றி=குருகுலவாஸம் செய்யாமல் மந்த்ரங்களைக் கற்பது பழுது; அப்படிப்பட்ட பழுது இல்லாமல் [குருகுலவாஸம் பண்ணி] என்றபடி. அந்தரம் ஒன்று இல்லை—'பிறகு பார்த்துக்கொள்வோம்' என்று ஆறியிருக்க அவகாசம் சிறிதுமில்லை. ... ... (௬அ)

அடைந்த வருவினையோ டல்லல்நோய் பாவம் *
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில் *—நுடங்கிடையை
முன்னிலங்கை வைத்தான் முரணழிய * முன்னொருநாள்
தன்விலங்கை வைத்தான் சரண். (௫௯)

அடைந்த	அடியேபிடித்துப் பற்றிக்கிடக்கிற
அரு	போக்குவதற்கு அருமையான
வினையோடு	பழவினைகளும்
அல்லல்	(அந்தப் பழவினையின் பயனாகவருகின்ற) மனத்துன்பங்களும்
நோய்	சரீரவியாதிகளும்
பாவம்	(இப்போது செய்கிற) பாவங்களும்
மிடைந்தவை	(இப்படிப் பலவகையாக, ஆத்மாவைத் தெரியாதபடி) மூடிக்கிடக்கின்றவை
மீண்டு ஒழிய வேண்டில்	வாஸனையோடு விட்டு நீங்க வேணுமானால்,
முன்	முன்பொருகால்,
நுடங்கு இடையை	மெல்லிய இடையையுடையளான பிராட்டியை
இலங்கை வைத்தான்	லங்காபுரியில் சிறை வைத்தவனான இராவணனுடைய
முரண் அழிய	மிடுக்கு அழியும்படி
முன் ஒரு நாள்	ஸ்ரீராமனாய்ப்பிறந்த வொருகாலத்து,
தன் வில்	தன்னுடையவில்லை
அம் கை	அழகிய திருக்கையிலே
வைத்தான்	எடுத்துப் பிடித்தவனான பெருமானே
சரண்	உபாயமாவான்.

* * *—[அடைந்தவருவினையோடு.] நாம் நல்ல வழியிற் போதுபோக்கவேணுமானால் பகவானை ஆச்ரயிப்போம்; அப்படி அவனை ஆச்ரயிக்குமிடத்து ஆச்ரயிக்க வொட்டாமல் இடையூறாக அருவினை அல்லல் நோய் பாவம் முதலியவை குறுக்கே நிற்கின்றனவே! அவற்றைப் போக்கும்வழி யாது? என்று சங்கை பிறக்க, நமது பிரதிபந்தகங்களை இருதுண்டமாக்குவதற்கு உபாயமாக ஸ்ரீராமபிரானைச் சரணம்புகுதல் நன்று என்கிறார். இத்தால், எம்பெருமானுக்கு போக்யமாயிருந்துள்ள ஆத்மவஸ்துவை என்னுடைய தென்று செருக்குற்றிருக்குமவர்கள் ராவணாதிகள் பட்டது படுவாரென்னுமிடமும், 'இவ்வாத்மவஸ்து அவனுடையது'

என்று அநுகூலித்திருக்குமவர்களுக்கு வரும் விரோதிகளை அப்பெருமான் பிராட்டியின் துயரத்தைப் பரிஹரித்ததுபோலே பரிஹரித்தருள்வனென்னுமிடமும் தெரிவிக்கப்பட்டனவாம். (௫௯)

சரணா மறைபயந்த தாமரை யானோடு *
மரணாய மன்னுயிர்கட் கெல்லாம் *—அரணாய
பேராழி கொண்டபிரா னன்றி மற்றறியாது—*
ஓராழி சூழ்ந்த வுலகு. (௬௦)

சரண் ஆம் மறை — (எல்லார்க்கும்) ஹிதத்தை உரைக்குமதான வேதத்தை
பயந்த — (எம்பெருமானிடத்தில் தானடைந்து நாட்டிலுள்ளவர்கட்காக) வெளிப்படுத்தின
தாமரையானோடு — பிரமனோடுகூட
மரண் ஆய — மரணமடையுந் தன்மையுடைய
மன் உயிர்கட்கு எல்லாம் — நித்யமான ஸ்வரூபத்தையுடைய ஆத்மாக்களெல்லாவற்றுக்கும்
அரண் ஆய — ரக்ஷகமான விதங்களை
பேர் ஆழி கொண்ட பிரான் அன்றி — பெரிய திருவாழியாழ்வானைக் கையிற்கொண்ட எம்பெருமான் அறிவனேயல்லது
மற்று — அவனிலும் வேறான
ஓர் ஆழி சூழ்ந்த உலகு — கடல்சூழ்ந்த இவ்வுலகத்திலுள்ளார்
அறியாது — அறியமாட்டார்கள்.

* * *—[சரணாமறைபயந்த.] உலகத்தில் பொதுவாக ஒரு நியாயமுண்டு; எவன் பலனை அநுபவிக்கிறானோ அவன் அதற்கு உரிய உபாயத்தை அநுஷ்டிக்கவேணுமென்று. அந்தநியாயத்தைக் கொண்டு பார்க்கும்போது, எம்பெருமானைப் பெறுதலாகிற பயனை அநுபவிப்பவன் சேதநனாயிருக்க அதற்குரிய உபாயமும் இவனிடத்திலன்றோ இருக்கவேண்டும்; 'எம்பெருமானே உபாயம்' என்று முறையிடுவது எங்ஙனே பொருந்தும்? என்று ஒருசங்கை தோன்ற, அஜ்ஞனாய் அசக்தனான இவனால் செய்யக்கூடியதொன்றுமில்லாமையினால், ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனான அவனே உபாயமாயிருக்கவேண்டியது ஆவச்யகமாயிற்றென்கிறார். பலனை அநுபவிப்

பவனும் எம்பெருமானே, அதற்கு உபாயாநுஷ்டாநம் செய்பவனும் எம்பெருமானே என்கிற ஸத்ஸம்ப்ரதாய ஸித்தாந்தம் இங்கு ஸ்மரிக்கத்தக்கது. கைதவறிப்போன பொருளைத் தேடிப்பிடித்து அநுபவிப்பதும் அதனால் ஆநந்தமடைவதும் ஸொத்தையுடைய ஸ்வாமியின் காரியமேயொழிய ஸொத்தின் காரியமல்லவே; அதுபோல அப்பரமபுருஷனுடைய ஸொத்தாகிய நாம் அவனை விட்டுத் தப்பித்தவறியிருக்கிறோமாயின், நம்மைத் தேடிப்பிடித்து ஆட்கொள்ளப் பெறுதலும் பெற்றுமகிழ்தலும் அவனுக்கே உரியனவாதலால் பலனை அநுபவிக்குமவனான தானே உபாயாநுஷ்டாநம் செய்கிறானென்க. ஸ்ரீபாஷ்யத்தில் முடிவான ஸூத்ரத்தின் பாஷ்யத்தில்—“ந ச பரமபுருஷ: ஸத்யஸங்கல்ப: அத்யர்த்தப்ரியம் ஜ்ஞாநிநம் லப்த்வா கதாசிதாவர்த்தயிஷ்யதி” என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த ஸ்ரீஸூக்திரத்நத்தில் “பரமபுருஷ: ஜ்ஞாநிநம் லப்த்வா” என்ற ஸ்வாரஸ்யமுணர்க.

இப்பாட்டில் சொல்லுகிற அர்த்தம் வேதங்களில் ஸித்தமானது என்பதைத் தெரிவிக்கவே “சரணமறைபயந்த” என்ற விசேஷணம் தாமரையானுக்கு இடப்பட்டது. “[illegible]” இத்யாதி வேதவாக்கியங்கள் குறிக்கொள்ளத்தக்கன.

‘அரணாய’ என்பதை பேராழிகொண்டபிரானுக்கு விசேஷணமாகப் பலர் மயங்கியொழிவர்; அது விசேஷணமன்று; இரண்டாம் வேற்றுமைத்தொகை: ‘அரணானவற்றை’ எனப் பொருள்படுதலால் பயனில்லை. பிரமன்முதல் எறும்பு ஈறாகவுள்ள ஸகலஜந்துக்களுக்கும் உபாயமானவற்றை எம்பெருமான் அறிவனேயல்லது அற்பஞானிகளான உலகத்தவர்கள் அறியமாட்டார்கள் என்றவாறு.

ஆழிசூழ்ந்த வுலகமானது மன்னுயிர்க்கெல்லாம் அரணாயிருக்கிற பேராழிகொண்ட பிரானையன்றி மற்றதொன்றையும் அறியாது—என்றும் பொருள் சொல்லலாமே என்று முற்காலத்தில் ஒருவர் சொன்னாராம்; உலகமானது எம்பெருமானை மறந்து மற்றவற்றையே அறிந்திருப்பதால் ‘உலகானது பிரானையன்றி மற்றறியாது’ என்கிற விப்பொருள் இணங்காது என்று கொண்டு நஞ்சீயர், “உலகமென்பது உயர்ந்தோர்மாட்டே” என்றிருப்

பதால் இவ்விடத்தில் உலகு என்பதற்கு 'சிறந்த மாஞானிகள்' என்று பொருள்கொண்டால், 'மஹான்கள் பேராழிகொண்ட பிரானையன்றி மற்றறியார்கள்' என்னும் பொருள் இணங்கி விடலாம் என்று அபிப்ராயம் கொண்டாராம்; இதை பட்டர் கேட்டருளி, "இவ்விடத்தில் 'ஓராழி சூழ்ந்த வுலகு' என்றிருப்பதை நோக்கவேணும்; 'ஆழிசூழ்ந்த' என்கிற விசேஷணம் இல்லாதிருந்தால் நீர் சொல்லும் பொருள் ஏற்கும்: 'கடலால் சூழப்பட்ட மஹான்கள்' என்று பொருள் சொல்லப்போகாமையாலே, 'கடல் சூழ்ந்த இவ்வுலகமானது தனக்கு அரணானவற்றை அறியமாட்டாது, பேராழிகொண்ட பிரானே அறிவான்' என்றே பொருள் கொள்ளவேணும்" என்று உபபாதித்து உரைத்தருளினராம். இங்ஙனே நிர்வஹித்து பட்டரருளிச் செய்தபோது நஞ்சீயரும் நம்பிள்ளையும் கேட்டிருந்தார்கள்; ஆனாலும் இதனை ஒருகால் நஞ்சீயர் மறந்திட நம்பிள்ளை ஞாபகப்படுத்தினர் என்றும் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்துளர்.

இப்பாட்டின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான அச்சுப் பிரதிகளில் சில பதங்களும் வாக்கியங்களும் விடுபட்டிருப்பதை ஓலை ஸ்ரீகோசங்களைக்கொண்டு பரிஷ்கரித்துக்கொள்க. .... (௬0)

உலகு முலகிறந்த வூழியும் * ஒண்கேழ்
விலகு கருங்கடலும் வெற்பும் *— உலகினில்
செந்தீயும் மாருதமும் வானும் * திருமால்தன்
புந்தியி லாய புணர்ப்பு. (௬௧)

உலகும்	பூமி முதலிய லோகங்களும்
உலகு இறந்த ஊழியும்	இவ்வுலகம் யாவும் அழிந்துகிடக்கிற பிரளயகாலமும்
ஒண் கேழ் விலகு	அழகிய நிறத்தோடு அலையெறிகிற
கரு கடலும்	கருநிறத்ததான ஸமுத்ரமும்
வெற்பும்	மலைகளும்
உலகினில் செம் தீயும்	இவ்வுலகத்திலுள்ள செந்நிறமான தேஜஸ் பதார்த்தங்களும்
மாருதமும்	காற்றும்
வானும்	ஆகாயமும்
	(ஆகிய இவை யாவும்)

திரு மால் தன்	லக்ஷ்மீபதியான எம்பெருமானுடைய	புந்தியில்	ஸங்கல்ப ஞானத்தினால்
		ஆய	படைக்கப்பட்ட
		புணர்ப்பு	படைப்புக்களாம்.

* * *—[உலகும்.] கீழ்ப்பாட்டில், அவ்வெம்பெருமானைத் தவிர்த்து உயிர்களெல்லாம் தாமே தமக்குவேண்டிய நன்மையைத் தேடவறியாது என்றருளிச்செய்த ஆழ்வார், இப்பாட்டில்—அவை தமக்குவேண்டிய நன்மையைத்தேட அறியாதிருக்கையிலும் எம்பெருமானே நன்மையைத் தேடுகிறதற்குக் காரணம்—இச்சராசரங்களையெல்லாம் அப்பெருமான் பேரருள்கொண்டு தன் ஸங்கல்பத்தினால் படைத்த ரக்தஸம்பந்தமேயாகுமென்கிறார். பெற்றவனையொழிய வளர்ப்பவரில்லையென்றதாயிற்று. சேதநங்கள் இறகொடிந்த பக்ஷிபோல மூலப்ரக்ருதியிலேயே லயித்துக் கிடவாமல் தன்னையடைந்து உஜ்ஜீவிக்குமாறு நிர்ஹேதுக க்ருபாகடாக்ஷத்தினால் அப்பரமன் கரசரணாதி அவயவங்களையும், தன்னை யுணருமாறு சாஸ்த்ரங்களையும் கொடுத்தருளினனென்பது நூற்கொள்கை. இவையறியாத காலத்திலும் அவனே ஸ்ருஷ்டிக்கையாலே இப்போது உபாயமறிவானும் அவனே என்று கீழ்ப்பாட்டோடே சேர்த்துப் பொருள் பெறுத்திக்கொள்க. ... (௬௧)

புணர்மருதி னூடேபோய்ப் பூங்குருந்தம் சாய்த்து *
மணமருவ மால்விடையேழ் செற்று *—கணம்வெருவ
ஏழுலகுந் தாயினவு மேண்டிசையும் போயினவும் *
சூழரவப் பொங்கணையான் தோள். (௬௨)

புணர் மருதின் ஊடு போய்	ஒன்றோடொன்று இணைந்திருந்த (இரட்டை) மருதமரத்தின் நடுவே தவழ்ந்து சென்று	பூங்குருந்தம் சாய்த்து	(இலையும் கொம்புந் தெரியாதபடி) பூக்கள் நிரம்பியிருந்த குருந்த மரத்தைத் தள்ளிப்போட்டு
(பின்பொருகாலத்தில்)		(மற்றுமொரு காலத்தில்)	

மணம் மருவ — (நப்பின்னைப் பிராட்டியோடு) விவாஹம் நிறைவேறுதற்காக

மால் விடை ஏழ் செற்று — பெரிய வடிவை யுடைய ஏழு ரிஷபங்களையும் முடித்து

(இன்னமொருகாலத்தில்)

கணம் வெருவ — எல்லாப் பிராணிகளும் நடுங்கும்படி

ஏழ் உலகும் தாயினவும் — மேலேழுலகங்களில் தாவிச் சென்றவையும்

எண் திசையும் போயினவும் — எட்டுத்திக்குகளிலும் போய்ப் பரவியவையும்

(எவையென்றால்)

சூழ் அரவம் பொங்கு அணையான் தோள் — (பரிமளம் குளிர்த்தி மென்மை என்னும் குணங்கள்) நிரம்பிய திருவனந்தாழ்வானை சிறந்த படுக்கையாக வுடையனான ஸர்வேச்வரனது திருத்தோள்களேயாம்.

* * *—[புணர்மருதினூடேபோய்.] கீழ்ப்பாட்டில், சராசரங்கள் யாவும் எம்பெருமானுடைய படைப்பு என்றார்; இப்படி உலகங்களை யெல்லாம் உண்டாக்கின பின்பு தான் தூரஸ்தனாய் நின்றுவிடாமல் உலகுக்கு உண்டாகின்ற களைகளைப் பிடுங்கிப் பாதுகாப்பதும் செய்கிறானென்பதை இப்பாட்டில் வெளியிடுகின்றார். இதில் தோள் என்றது திருக்கைகளை. இரட்டை மருதமரத்தினிடையே தவழ்ந்து சென்றபோது கைகளைத் தரையிலே ஊன்றித் தவழ்ந்ததனால் மருதம் முறித்ததைக் கைகளின்மேலேற்றிக் கூறினரென்க. மருதினூடேபோய் என்றது மருதமரங்களை முறித்துத் தள்ளினமையைச் சொன்னபடி. கூட்டமென்னும் பொருளதான 'க்ஷணம்' என்னும் வடசொல் கணமெனத் திரிந்தது: அநுகூலர் பிரதிகூலர் என்கிற வேறுபாடின்றி எல்லாப்பிராணிகளும் என்கை.

"சூழரவப்பொங்கணையான் தோள்" என்ற சொல்லாற்றலால், பரிமளம் குளிர்த்தி முதலிய குணங்களுக்கெல்லாம் எல்லை நிலமாயிருக்கிற திருவனந்தாழ்வானாகிற படுக்கையையும் பொறாத ஸௌகுமார்யத்தையுடைய அப்பெருமான் அப்படுக்கையில் கண் வளரப்பெறாமல் இப்படி அல்லாடித் திரிவதுபற்றி வயிறெரிகின்ற இவ்வாழ்வாரது பொங்கும்பரிவு விளங்கும். பிரஜைகளைப் பாது காப்பதில் கருத்தூன்றியவர்கள் ஓரிடத்தில் தங்கியிருக்கப்

பெறுமல் அலைந்து திரிவர்களன்றே. இப்பாட்டில் அநுஸந்திக்கப் பட்டுள்ள சரித்திரங்களெல்லாவற்றிலும் எம்பெருமானுடைய தோள்வலிமையே தெற்றென விளங்குமென்றுகொண்டு தோளின் மேலேயே எல்லாச் செயலையும் ஏற்றிக் கூறினரென்க. ... (சுஉ)

தோளவனை யல்லால் தொழா * என்செவி யிரண்டும்
கேளவன தின்மொழியே கேட்டிருக்கும் *—நாநாளும்
கோணு கணையான் குரைகழலே கூறுவதே *
நாணுமை நள்ளேன் நயம். (சுங)

தோள்	(எனது) கைகளானவை
அவனை அல்லால் தொழா	(வேறு சிலரைத் தொழு என்று நான் சொன்னாலும்) அப்பெருமானையல்லது வேறு எவரையும் வணங்கமாட்டா;
என் செவி இரண்டும்	எனது காதுகளிரண்டும்
கேள் அவனது	ஸகலவித பந்துவுமாகிய அப்பெருமான்விஷயமான
இன் மொழியே	இனிய பேச்சுக்களையே
கேட்டு இருக்கும்	கேட்டுக்கொண்டு (அதனாலே) ஸத்தை பெற்றிருக்கும்;
என் நா	என்னுடைய நாவானது
நாளும்	நாள்தோறும்
கோள் நாக அணையான்	மிடுக்கையுடையனான திருவனந்தாழ்வானைப் படுக்கையாக வுடைய அப்பெருமானது
குரை கழலே	ஒலிக்கின்ற வீரக் கழலையணிந்த திருவடிகளையே
கூறுவது	சொல்லா நிற்கிறது; (இப்படியான பின்பு)
நயம்	சப்தாதி விஷயங்களை
நாணாமை நள்ளேன்	வெட்கப்படாமல் விரும்புவாரைப் போலே நான் விரும்ப மாட்டேன்.

[தோளவனை.] தம்முடைய எல்லா இந்திரியங்களும் எம்பெருமான் பக்கலிலேயே ஊன்றப்பெற்றபடியை அருளிச்செய்கிறார். எம்பெருமானைத் தவிர்த்து வேறொருவரைத் தொழும்படி நான் சொன்னாலும் என் கைகள் தொழமாட்டோமென்கின்றன; இதர சப்தங்களைக் கேட்போமென்று நான் பாரித்தாலும் எனது காதுகளானவை பகவத் கதைகளைத் தவிர்த்து வேறு எதையும்

ஏற்றுக்கொள்ள மாட்டோமென்கின்றன; நாவினால் விஷயாந்தரங்களைப் பேசுவோமென்று நான் பார்த்தாலும் பகவத் பாதாரவிந்தத்தையன்றி மற்று எதையும் பேச நா எழுகின்றதில்லை; இப்படி எனது இந்திரியங்களெல்லாம் ஓரே உறுதியாயிருக்கவே, நானும் நாணங்கொண்டு இதர விஷயங்களைக் காறியுமிழ்ந்தேன் என்றாராயிற்று.

இரண்டாமடியில், கேள்—உறவு; "சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும், மேலாத் தாய் தந்தையுமவரே யினியாவாரே" என்கிறபடியே ஸகலவித பந்துவுமான எம்பெருமானுடைய என்றபடி. இன்மொழி—கீர்த்தி. 'நாக + அணை, நாகவணை' என வரவேண்டியது நாகணையென வந்தது தொகுத்தல் விகாரம். குரைகழல்—வினைத்தொகையன்மொழி என்னலாம். நாணுமை—எதிர்மறை வினையெச்சம். நயம்—நயக்கப்படுவது நயம்; ஆசைப்படத்தக்க விஷயாந்தரங்கள். "நயந்தரு பேரின்பமெல்லாம்" என்ற இராமாநுச நூற்றந்தாதித் தனியன் பிரயோகமுங் காண்க. ... ... (சுங)

நயவேன் பிறர்பொருளை நள்ளேன்கீழாரோடு—*
உயவே னுயர்ந்தவரோ டல்லால் *—வியவேன்
திருமாலையல்லது தெய்வமென் றேத்தேன் *
வருமாறென் னென்மேல் வினை. (சுச)

பிறர் பொருளை	பரமபுருஷனுடைய பொருளான ஆத்மவஸ்துவை
நயவேன்	(என்னுடைய தென்று) விரும்ப மாட்டேன்;
கீழாரோடு	ஸம்ஸாரிகளோடு
நள்ளேன்	ஸ்நேஹம் கொள்ள மாட்டேன்;
உயர்ந்தவரோடு அல்லால்	சிறந்த ஸ்ரீவைஷ்ணவர்களோடு தவிர (மற்றவர்களோடு)
உயவேன்	காலக்ஷேபம் பண்ண மாட்டேன்;
திருமாலை அல்லது	எம்பெருமானையன்றி (தேவதாந்தரங்களை)
தெய்வம் என்று ஏத்தேன்	தெய்வமாகக் கொண்டு துதிக்க மாட்டேன்;

வியவேன்	(இப்படியிருப்பதற்கு ஹேதுவான ஸத்வகுணம் எனக்குத்தானுள்ளதென்று அஹங்கரித்து என்னைப்பற்றி நானே) ஆச்சரியப்படவும் மாட்டேன்;	என் மேல்	(எம்பெருமானுடைய அநுக்ரஹத்திற்கு இலக்கான) என் மேலே
(இப்படியான பின்பு)		வினை	(அவனது நிக்ரஹரூபமான) பாபம்
		வரும் ஆறு என்	வரும்விதம் எது? [வாமாட்டாது.]

[நயவேன்பிறர்பொருளை.] கீழ்ப்பாட்டில், ஆழ்வார் தமக்கும் தம்முடைய இந்திரியங்கட்கும் விஷயாந்தரங்களைக் கண்ணெடுத்துப் பாராதபடி எம்பெருமானிடத்தில் ஊற்றமுண்டானபடியை அருளிச்செய்யவே, 'விஷயாந்தரங்கள் துர்வாஸனையால் வந்து மேல்விழுந்து உம்மை இழுத்துக்கொண்டு சென்றால் என்ன செய்வீர்?' என்று ஒரு கேள்விபிறக்க, எம்பெருமானுடைய அநுக்ரஹத்தைப் பூர்ணமாகப் பெற்றிருக்கிறேனாதலால் அப்படி நிகழ ஹேதுவில்லையென்கிறார்.

பிறர்பொருளை—"உத்தம புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத:" என்னும் பிரமாணத்தை அடியொற்றி இங்கு எம்பெருமானை 'பிறர்' என்ற சொல்லால் குறித்தனர். சேதநாசேதநங்களிற்காட்டில் விலக்ஷணன் என்றபடி. அவனுடைய பொருள்—ஆத்மவஸ்து. (கண்ணிநுண் சிறுத்தாம்பில் "நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்" என்ற விடத்திற்கு வியாக்கியானமுங் காண்க.) ஸர்வேச்வரனுக்குக் கௌஸ்துபஸ்தாநீயமாகி அப்பெருமான் 'தன்னது' என்று அபிமாநித்திருக்கும் இவ்வாத்மவஸ்துவை 'என்னது' என்று நினைத்தல் இராவணனது செயலோடொக்குமாதலால் "நயவேன் பிறர்பொருளை" என்றார். இராவணனுடைய செய்கைக்குத் துணையாயிருந்த மாரீசன் போல்வாரோடு நட்புக்கொள்ளமாட்டேனென்பது 'நள்ளேன் கீழாரோடு' என்றதன் கருத்து.

"திருமாலையல்லது வியவேன்" என்று கூட்டி—திருமாலைக் கண்டாலன்றி (தேவதாந்தரங்களைக்கண்டால் அதனால்) மநஸ்ஸில் சிறிதும் மகிழ்ச்சிகொள்ளமாட்டேன் என்பதாக உரைத்தலுமாம்,

வருமாறென் என்மேல் வினை ?—" 𑌅𑌵𑌶𑍍𑌯𑌮𑌨𑍁𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌂—அவச்யமநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம்" [அவரவர்கள் செய்த நல்வினை தீவினைகளின் பலன்களை அவரவர் அநுபவித்தே தீரவேணும்] என்கிற சாஸ்த்ரம் பகவத் பக்தர்கள் விஷயத்தில் விலைச்செல்ல மாட்டாதென்று காட்டுகிறபடி. "வருமாறென் நம் மேல்வினை" என்ற பாடமுமுண்டு; அப்போது, கீழெல்லாம் நயவேன், நள்ளேன், உயவேன், வியவேன், ஏத்தேன்; என்று ஒருமையாகவந்து இங்கே நம் என்று பன்மையாக வந்தது—ஒருமையிற் பன்மைவந்த வழுவமைதியென்னவேண்டும். தம்மோடு ஸம்பந்தம் பெற்றவர்களையுங் கூட்டிக்கொண்டு நம்மேலென்கிறாரென்றலும் பொருந்தும்.

இரண்டாமடியில், உயவேன் என்றது—உசாவேன் என்றபடி: உசாவுதலாவது ஒருவர்க்கொருவர் வார்த்தையாடிப் போதுபோக்குதல்: "உசாத்துணை" என்ற ஆன்றோர்களின் ஸ்ரீஸூக்தியுங் காண்க. .... (௩௪)

வினையா லடர்ப்படார் வெந்நரகில் சேரார் *
தினையேனும் தீக்கதிக்கட் செல்லார் *—நினைதற்
கரியானைச் சேயானை, ஆயிரம்பேர் * செங்கட்
கரியானைக் கைதொழுதக் கால். (௩௫)

நினைதற்கு அரியானை	(ஸ்வப்ரயத்நத்தாலே) நினைப்பதற்குக் கூடாதவனும்
சேயானை	(நெஞ்சுக்கு விஷயமாகாதபடி) மிக்க தூரத்திலிருப்பவனும்
ஆயிரம் பேர்	ஆயிரம் திருநாமங்களையுடையவனும்
செம் கண் கரியானை	சிவந்த திருக்கண்களையும் கறுத்த வடிவையுமுடையனுமான பெருமானைக் குறித்து
கை தொழுதக்கால்	அஞ்ஜலி பண்ணினால்
(அப்படி அஞ்ஜலி பண்ணினவர்கள்)	
வினையால்	நல்வினை தீவினைகளால்
அடர்ப்படார்	நெருக்குப்பட மாட்டார்கள்;
வெம் நரகில்	கொடிய ஸம்ஸாரமாகிற நரகத்தில்
சேரார்	(மீண்டும்) சென்று கிட்டமாட்டார்கள்;
தினையேனும்	சிறிதளவும்
தீ கதிக்கண்	கெட்டவழிகளில்
செல்லார்	போகமாட்டார்கள்.

[வினையாலடர்ப்படார்.] இப்பாட்டில் ஆழ்வார் தாம் ஒழுங்குபட நிற்கும் நிலைமையை யருளிச்செய்தார். இப்படிப் பட்ட நிலைமை மற்று எல்லார்க்கும் உண்டாகவில்லையே, அஃது ஏன்? என்று ஒரு கேள்வி பிறக்க; இந்த நிலைமை எல்லார்க்கும் உண்டாகக்கூடியதே; எம்பெருமானைக் கைதொழுதால் இஃது எல்லார்க்கும் தன்னடையே உண்டாகும் என்கிறார் இப்பாட்டில்.

வினையால்அடர்ப்படார்='வினை' என்னும் பொதுச்சொல்லானது நல்வினை தீவினை என்ற இருவினைகளையும் இங்குக் குறிக்கும்; உபநிஷத்தில் "ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" [முமுக்ஷு மோக்ஷத்துக்குப் போம்போது புண்யம் பாபம் என்ற இருவினைகளையும் உதறிவிட்டுக் கல்மஷமற்றவனாய்ப் பரமஸாம்யத்தை அடைகின்றான்] என்று ஓதிவைத்திருக்கையாலே மோக்ஷமார்க்கத்திற்குப் பாபம் எப்படி இடையூறோ அப்படி புண்யமும் இடையூறென்பது நூற்கொள்கை. பாபம் நரகத்திலேகொண்டு தள்ளும்; புண்யம் ஸ்வர்க்காதி லோகங்களில் கொண்டுதள்ளும்; ஆகவே, பாபம் இரும்பு விலங்கு போன்றதென்றும், புண்யம் பொன்விலங்கு போன்றதென்றும் சமத்காரமாகச் சொல்லுவதுமுண்டு. இனி, "வினையாலடர்ப்படார்" என்றவிதற்கு—இங்கே யநுபவிக்கநேரும் பாபபலன்களினால் துன்பப்படமாட்டார்கள் என்று பொருள்கொள்வதும் பொருந்தும்.

வெம் நரகில் சேரார்="யஸ்த்வயா ஸஹ ஸ்வர்கோ நிரயோ யஸ்த்வயாவிநா" [எம்பெருமானோடு கூடியிருத்தல் ஸ்வர்க்கம்; அவனை விட்டுப் பிரிந்திருத்தல் நரகம்] என்று ஸ்ரீராமாயணத்திற் சொன்னபடியே எம்பெருமானைப் பிரிந்து வருந்துகையாகிற நரகாநுபவம் பண்ணமாட்டார்களென்கை.

தீனையேனும் தீக்கதிக்கண் செல்லார் = இவ்விடத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான வருளிச்செயல்—"தர்மபுத்ரன் நரகதர்சநம் பண்ணினவோபாதியும் கூடாது இவர்களுக்கு." என்று. அதாவது—பாரதப்போரில் த்ரோணாசார்யனை வஞ்சிப்பதற்காக "அச்வத்தாமா ஹத: (குஞ்ஜர:)" என்று தர்மபுத்திரர்

வாயினால் சொல்லும்படி செய்வித்தார்களென்பது ப்ரஸித்தமாதலால், தர்மபுத்ரர் மநஸ்கரித்து அப்படி பொய் சொன்னதன் பயனாகப் பரலோக ப்ரயாணஸமயத்தில் சற்று நரகலோகத்தைப் பார்வையிட்டுப்போக நேர்ந்ததாம்; அதுபோலவுங்கூட நேரிடாதாம் செங்கட்கரியானைக் கைதொழுதார்க்கு என்க. 'தினை' என்பது ஸூக்ஷ்மமான ஒரு தாந்யவிசேஷம்; ஸ்வல்பமென்னும் பொருளில் இச்சொல்லை உபயோகிப்பது வழக்கம். ... (௬௫)

காலை யெழுந்துலகம் கற்பனவும் கற்றுணர்ந்த *
மேலைத் தலைமறையோர் வேட்பனவும் *—வேலைக்கண்
ஓராழி யானடியே யோதுவது மோர்ப்பனவும் *
பேராழி கொண்டான் பெயர். (௬௬)

உலகம்	உயர்ந்தவர்களான முமுக்ஷுக்கள்	அடியே	திருவடிகளேயாம்;
காலை எழுந்து	(ஸத்வகுணம் வளரக் கூடிய) விடியற் காலையில் துயில் விட்டெழுந்து	ஓதுவதும்	(மஹான்களால்) ச்ரவணம் பண்ணப் பெறுவனவும்
கற்பனவும்	அப்யஸிப்பனவும்,	ஓர்ப்பனவும்	மநநம் பண்ணப் பெறுவனவும்
கற்று உணர்ந்த மேலை தலை மறையோர்	படித்து அறிவு நிரம்பிய வைதிகோத்தமர்கள்		(எவை யென்றால்)
வேட்பனவும்	(ஸாக்ஷாத்கரிக்க) ஆசைப்படுவனவும்	பேர் ஆழி கொண்டான்	பெரிய கடல் போன்ற திருமேனியைக் கொண்ட அப்பெருமானுடைய
	(எவை யென்றால்)	பெயர்	திருநாமங்களேயாம்.
வேலைக்கண் ஓர் ஆழியான்	திருப்பாற்கடலில் ஒப்பற்ற திருவாழியையுடையனாய்ப் பள்ளி கொண்டிருக்கும் பெருமானுடைய		

* * *—[காலையெழுந்து.] "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" [உலகம் என்னுஞ்சொல் மிகப்பெரிய மஹான்களைக்

குறிக்கும்] என்று தொல்காப்பியத்திற் கூறியிருப்பதனால், இப் பாட்டின் முதலடியிலுள்ள உலகம் என்னுஞ்சொல் 'உயர்ந்தவர்களான முமுக்ஷுக்கள்' என்னும் பொருளிலே பிரயோகிக்கப் பட்டது. அறிவு நிரம்பிய பெரியோர்கள் எம்பெருமானது திருவடிகளையும் அவனது திருநாமங்களையுமே காண்பதுங் கேட்பதுமாயிருப்பர்களென்கிறுரிப்பாட்டில்.

மேலைத்தலைமறையோர்—கீழ்வேதமென்றும் மேல்வேதமென்றும் வேதம் இருவகைப்படும்: கீழ்வேதமென்பது கர்மகாண்டம்; மேல்வேதமென்பது ப்ரஹ்மகாண்டம் (உபநிஷத்பாகம்); ஆகவே, மேலைத்தலைமறையோரென்றது வேதாந்திகளென்றபடி. ... (௬௬)

பெயருங் கருங்கடலே நோக்குமாறு * ஒண்பூ
உயருங் கதிரவனே நோக்கும் *—உயிரும்
தருமனையே நோக்குமோண் டாமரையாள் கேள்வன் *
ஒருவனையே நோக்கு முணர்வு. •(௬௭)

ஆறு	ஆறுகளானவை
பெயரும் கருகடலே நோக்கும்	பொங்கிக்கிளர்கின்ற மஹாஸமுத்ரத்தையே நோக்கிச் செல்லும்;
ஒண் பூ	அழகிய தாமரைப் பூவானது
உயரும்	உந்நதஸ்தானத்திலே [ஆகாசத்திலே] இருக்கிற
கதிரவனே	ஸூர்யனையே
நோக்கும்	கண்டுமலரும்;
உயிரும்	பிராணனும்
தருமனையே நோக்கும்	யமதர்மராஜனையே சென்று சேரும்;
	(இவை போலவே)
உணர்வு	ஞானமானது
ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே	அழகியதாமரைப் பூவிற்பிறந்த பிராட்டிக்கு வல்லபனுன பெருமானெருவனையே
நோக்கும்	சென்று பற்றும்.

[பெயருங்கருங்கடலே.] ஞானமென்பது உலகிற் பலவிதம்; தர்க்கசாஸ்திரம் படித்து வாதங்கள்செய்யத் தேர்ச்சிபெற்றவனும் தன்னை ஞானியென நினைக்கிறுன்; ஆயுர்வேதம் சோதிடம் மந்த்ரம் தந்த்ரம் முதலியவற்றில் கைதேர்ந்தவனும் தன்னை ஞானியென நினைக்கிறுன்; இப்படி ஒவ்வொரு யோக்யதை பெற்றவனும் தன்னை ஞானியென நினைத்துக்கொண்டால் உண்மையான ஞானம்

எது? வாஸ்தவத்தில் ஞானியென்பான் எவன்? என்கிற கேள்விக்கு சாஸ்த்ரங்கள் சொல்லும் உத்தரமாவது—எம்பெருமானை அறிகிற அறிவு ஒன்றுதான் ஞானமெனப்படும் என்பதே. ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் இரணியனை நோக்கி ப்ரஹ்லாதன் சொல்லும்போது “தத்கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே। ஆயாஸாயாபரம் கர்ம வித்யாந்யா ஶில்பநைபுணம்॥” [1—19—41.] (ஸம்ஸாரத்தில் சிக்குவதற்குக் காரணமாகாத கருமம் எதுவோ அதுதான் கருமம்; முக்திபெறுவதற் குறுப்பான ஞானம் எதுவோ அதுதான் ஞானம்; கீழ்ச்சொன்னபடியில்லாத கருமம் வீணான ஆயாஸரூபமாகவே தேறும்; பகவத் விஷயகமல்லாத ஞானம் செருப்புக்குத்தக் கற்றதுபோலவேயாம்.) என்று சொல்லப்பட்டிருக்கிறது. தவிரவும், அந்த ஸ்ரீவிஷ்ணு புராணத்திலேயே (6—5—87.) மைத்ரேயரை நோக்கிப் பராசரர் சொல்லும்போது, “ஸஞ்ஜ்ஞாயதே யேந தத்ஸ்ததோஷம் ஶுத்தம் பரம் நிர்மலமேகரூபம்। ஸந்த்ருஶ்யதே வாப்யதிகம்யதே வா தஜ்ஜ்ஞாநம் அஜ்ஞாநமதோந்யதுக்தம்॥” [பரப்ரஹ்மத்தை யறிவதற்கு உறுப்பான ஞானமொன்றே ஞானமெனப்படும்; மற்றவிதமான ஞானங்கள் அஜ்ஞாநமேயாம்] என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த சாஸ்த்ரார்த்தமே இப்பாட்டிலருளிச் செய்யப்படுகிறது. “ஒண்தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு” என்கிற வாக்கியமே இப்பாட்டின் முக்கிய விஷயம். மற்றவை த்ருஷ்டாந்தகோடியிலே அருளிச் செய்யப்பட்டவை. ஆறுகளானவை ஸமுத்ரத்தையே நோக்கிச் செல்வதும், தாமரைப்பூ ஸூர்யனை நோக்கியே மலர்வதும், பிராணன்கள் யமதர்மராஜனையே சென்று கிட்டுவதும் எப்படி நியதமாக நிகழ்கின்றனவோ அப்படியே ஜ்ஞாநமென்பதும் திருமாலைப்பற்றியல்லது வேறு விஷயங்களைப்பற்றி நில்லாது என்றது—எம்பெருமானைத் தவிர்த்து இதர விஷயங்களைப்பற்றியுண்டாகும் அறிவு அறிவல்ல; அது அஜ்ஞாநபர்யாயமே என்றவாறு. “தொக்கிலங்கியாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே, புக்கன்றிப் புறம்நிற்க மாட்டாத மற்றவைபோல், மிக்கிலங்கு முகில்நிறத்தாய் வித்துவக் கோட்டம்மா, உன்புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண் புண்ணி

யனே!" என்ற பெருமாள் திருமொழிப்பாசுரம் ஒருபுடை ஒப்பு நோக்கத்தக்கது.

பிள்ளைலோகாசார்யரருளிச்செய்த முமுக்ஷுப்படியில் திருமந்த்ரப்ரகரணத்தில் (73) "இந்தால்-* தாமரையாள் கேள்வ னொருவனையே நோக்கு முணர்வு என்றதாயிற்று" என்னும் ஸூத்ரத்திற்கு ஸ்ரீமணவாளமாமுனிகளருளிச்செய்துள்ள வியாக்கியான சைலியை நோக்குங்கால், இப்பாட்டில் உணர்வு என்பது 'ஜ்ஞாநமயனான ஆத்மா' என்று பொருள்படுகிறதென்று கொண்டு, ஜ்ஞாநைக நிரூபணீயனான ஆத்மா திருமாலுக்கு அநந்யார்ஹ சேஷபூதனென்பதை இப்பாட்டு உணர்த்துவதாகக் கருத்துக் கொள்ளவும் இடமேற்படுகின்றது: அதுவும் ஒரு நிர்வாஹமாகும்.

இப்பாட்டால் மூன்றுவகையான சாஸ்த்ரார்த்தங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன ;—1. எம்பெருமானைப்பற்றி யுண்டாகிற ஞானமே ஞானம். 2. ஆத்மா எம்பெருமானுக்கே உரியவன் (தாமரையாள் கேள்வனென்று பிராட்டி ஸம்பந்தம் தோற்றச் சொல்லியிருக்கையாலே) மிதுநசேஷத்வமே ஜீவாத்மலக்ஷணம்—என்னு மிப்பொருள்கள் மூன்றுமாம்.

"உயிரும் தருமனையே நோக்கும்" என்றவிடத்தில் ஒரு விசாரமுண்டு: அவைஷ்ணவர்களுடைய பிராணன் யமதர்மராஜனுக்கு வசப்படுமேயன்றி ஸ்ரீவைஷ்ணவர்களின் பிராணன் அப்படி யமனைச்சென்று கிட்டமாட்டாதே; அப்படியிருக்க, "உயிரும் தருமனையே நோக்கும்" என்று பொதுவாக எப்படி அருளிச்செய்யலாம்? என்று. இதற்கு அப்பிள்ளையுரையில் "உயிரும்—பகவத்பரரல்லாத நாட்டிற் பிராணிகளடங்கலும்" என்றுரைத்திருக்கக் காண்கையாலே இந்த சங்கை வேண்டா என்பர் சிலர். வைஷ்ணவர்களானாலும் சரி, அவைஷ்ணவர்களானாலும் சரி; எல்லாருடைய பிராணனும் பகவதாஜ்ஞையின்படி யமதர்மராஜனிடத்திலேயே சென்று சேரும்; ஸித்தாந்தத்தில் ஆத்மா வேறு, பிராணன் வேறு; வைஷ்ணவாத்மா எம்பெருமானைச்சென்று சேர்ந்தாலும் அவனுடைய பிராணன் யமனைத்

தான் சென்று சேரும் என்பர் சிலர். மற்றுஞ் சிலர் 1. "யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி ஸ்தித:" என்றும் "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்றும் எம்பெருமானையே யமனாகவும் தருமனாகவுஞ் சொல்லியிருக்கையாலே "உயிரும் தருமனையே நோக்கு" மென்கிற விவ்விடத்திற்கும் அவ்வெம்பெருமானே பொருள் என்பர். நிற்க. .... (கூஎ)

உணர்வாரா ருன்பெருமை யூழிதோ றூழி *
உணர்வாரா ருன்னுருவந் தன்னை *—உணர்வாரார்
விண்ணகத்தாய் மண்ணகத்தாய் வேங்கடத்தாய் * நால்வேதப்
பண்ணகத்தாய் நீகிடந்த பால். (கூஅ)

விண்ணகத்தாய்	பரமபதத்திலெழுந்தருளியிருப்பவனே!
மண்ணகத்தாய்	இந்த மண்ணுலகில் திருவவதரிப்பவனே!
வேங்கடத்தாய்	திருமலையில் நின்றருள்பவனே!
பண் நால் வேதம் அகத்தாய்	ஸ்வரப்ரதாநமான நான்கு வேதங்களாலும் அறியப்படுபவனே!
உன்பெருமை	(இப்படிப்பட்ட) உன்னுடைய பெருமையை
ஊழி தோறு ஊழி	காலமுள்ளதனையும்
	(இருந்து ஆராய்ந்தாலும்)
உணர்வார் ஆர்	அறியக்கூடியவர் யாவர்?
உன் உருவம் தன்னை	உனது திவ்யத்ம ஸ்வரூபத்தைத் தான்
உணர்வார் ஆர்	அறியக்கூடியவர் யாவர்?
நீ கிடந்த பால்	(ஆர்த்த ரக்ஷணத்துக்காக) நீ பள்ளிகொண்டிருக்கப்பெற்ற திருப்பாற்கடலைத்தான்
உணர்வார் ஆர்	அறிய வல்லாரார்? [எவருமில்லை.]

[உணர்வாரார்.] திருமாலை யறிவதே அறிவு என்று கீழ்ப்பாட்டில் அருளிச்செய்த ஆழ்வார், அறிவுக்கு எல்லைநிலம் எம்பெருமானல்லது இல்லை என்னும்படியிருந்தாலும் அவன் தன்மை அறிவார்தான் இல்லை என்று இப்பாட்டிலருளிச் செய்கிறார். இவ்வாறிருப்பது வஸ்துவின்ஸ்வபாவமே யொழிய அறிவின் குறைவன்றென்பதும் அறியத்தக்கது. 'உணர்வாரார்?' என்ற வினாவினால் ஸர்வஜ்ஞனான உன்னாலும் உன்தன்மை அறியமுடியாதென்பதும் ஸூசிப்பிக்கப்படும். "தனக்கும் தன்தன்மையறிவரியான்" என்றார் நம்மாழ்வாரும். ... ... (கூஅ)

1. மநுஸ்மிருதி—எட்டாமத்யாயம் 92.

பாலன் றனதுருவா யேழுலகுண்டு * ஆலிலையின்
மேலன்று நீவளர்ந்த மெய்யென்பர்—* ஆலன்று
வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ *
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு. (௬௯)

சோலை சூழ் குன்று எடுத்தாய்	சோலைகளால் சூழப்பட்ட கோவர்த்தனமலையைக் குடையாக வெடுத்துப் பிடித்தவனே !,	அன்று	(எல்லாம் அழிந்து கிடந்த) அக்காலத்தில்
நீ பாலன் தனது உரு ஆய்	நீ சிறுகுழந்தை வடிவுகொண்டு	ஆல்	அந்த ஆலானது
ஏழ் உலகு	எல்லா வுலகங்களையும்	வேலை நீர் உள்ளதோ	வெள்ளங் கோத்துக் கிடக்கிற பிரளய ஸமுத்ரத்தின் ஜலத்திலுள்ளதோ ?
உண்டு	திருவயிற்றிலே வைத்து		(அல்லது)
ஆல் இலையின் மேல்	ஓர் ஆலந்தளிரின் மேல்	விண்ணதோ	(நிராலம்பமான) ஆகாசத்திலுள்ளதோ ?
அன்று	பிரளயகாலத்தில்		(அல்லது)
வளர்ந்த	கண்வளர்ந்த செயலை	மண்ணதோ	(பிரளய ஜலத்திலே கரைந்துபோன) பூமியிலுள்ளதோ ?
மெய் என்பர்	(வைதிகர்கள் யாவரும்) ஸத்யமென்கிறார்கள் :	சொல்லு	இவ்வாச்சரியத்தை நீயே சொல்லவேணும்.

[பாலன்றனதுருவாய்.] இப்பாட்டு ஒரு சமத்காரமான கேள்வியாயிருக்கிறது. மஹாப்ரளயத்திலே இந்த விபூதிஅழியாதபடி திருவயிற்றிலே இதனை வைத்துக்கொண்டு அப்ராக்ருதமான உனது திருமேனியைச் சிறுக்கி ஒரு சிறுகுழந்தைவடிவத்தைக் கொண்டவனாகி, சயனிப்பதற்குச் சிறிதும்பற்றாத ஒரு ஆலந்தளிரில் நீ பிரளயகாலத்திலே சயனித்தருளினாயென்று பரம ஆப்தர்களான முனிவர் மொழிகின்றனர் ; 'எத்திறம் !' என்று நினைந்து நினைந்து ஈடுபடும்படியான இச்செயலானது—முன்பு கிருஷ்ணாவதாரத்தில் ஏழுபிராயத்தில் ஏழுநாள் ஒருசேரக் கோவர்த்தந

மலையையெடுத்துக் குடையாகப்பிடித்த அருஞ்செயலைக்காட்டிலும் அதிக ஆச்சரியமாயிருக்கின்றது; நீ கண்வளர்ந்த அந்த ஆல் பிரளயஸமுத்ரத்தில் தோன்றியதோ? அன்றி, பிடிப்பொன்றுமில்லாத ஆகாசத்தில் தோன்றியதோ? அன்றி, பிரளயத்தில் கரைந்துபோன மண்ணிலிருந்துதான் தோன்றியதோ? இதன் வரலாற்றை விளங்கச்சொல்லவேணுமென்று கேட்கிறார். இவ் வதிசயம் ஸர்வஜ்ஞனானவனாலும் கண்டுபிடித்துச்சொல்லமுடியாததென்றும், அகடிதகடநாஸாமர்த்தியத்தினால் நேரும் அதிமாநுஷ சேஷ்டிதங்களில் குதர்க்கங்கள்பண்ணுவது தகாதென்றும் வெளியிடுதலே இப்பாட்டின் முக்கிய நோக்கமாகும். ஆழ்வான் அருளிச்செய்த அதிமாநுஷஸ்தவத்தில் "உத்ருஹ்யஸே வடதளே சயிதோதிதந்வா தந்வா ஜகந்தி பிப்ரதேவ விகாஸவந்தி। தேநாஸ்திகோऽஸ்து தவ ஸக்திஷு தர்க்கதர்க்கம் தர்க்கஸ்ய ந க்ரிஹாவதீர்ண:." என்னும் ச்லோகத்தில் வடதளசாயிவ்ருத்தாந்தம் அகடிதகடநா ஸாமர்த்தியத்தினாலாயதென்று வெளியிடப்பட்டமைகாண்க. தத்வதர்சிகளான மஹான்களால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட சாஸ்திரங்களிற் கூறியுள்ள சிலவிஷயங்கள் அற்பபுத்திக்கு அஸம்பாவிதம்போல் தோன்றினாலும் விசித்ரசக்திவாய்ந்த எம்பெருமானது செயல்களில் துராக்ஷேபங்கள் பண்ணுவதற்கு யாரும் அதிகாரிகளல்ல என்பது ஆழ்வானருளிச்செய்த ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில் "கிம்ஸாயநா: க்வநிவஸந் கிமுபாதாநா: கஸ்மை ஸமைஹத ஜகஜ்ஜநிமீஸ ஏவம்। இத்யாதி நிஷ்ப்ரதிக தர்க்கவிதர்க்கயந்த: த்வத்வைபவம் ஸ்ருதிவிதோ விதுராப்தவாக்யாத்॥" என்ற ச்லோகத்தால் நன்கு காட்டப்பட்டது. (கசு)

சொல்லுந் தனையும் தொழுமின், விழுமுடம்பு *
செல்லுந் தனையும் திருமாலை *—நல்லிதழ்த்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால் *
நாமத்தா லேத்துதிரேல் நன்று. (எ௰)

திருமாலை	பிராட்டியோடு கூடின பெருமானை	விழும் உடம்பு செல்லும் தனையும்	அஸ்திரமான இந்த சரீரம் உள்ள வரையில்

நல் இதழ் தாமத்தால்	அழகிய மலர்களைக் கொண்டு தொடுத்த மாலைகளாலும்	தொழுமின்	தொழுங்கள்;
			(இவற்றைச் செய்ய சக்தியில்லாவிட்டால்)
வேள்வியால்	யாகம் முதலிய ஸத்கருமங்களாலும்	சொல்லும் தனையும்	(உங்களுக்குச்) சொல்லக்கூடிய சக்தியுள்ளவரையிலும்
தந்திரத்தால்	(மந்த்ரமில்லாத) வெறும் க்ரியைகளாலும்	நாமத்தால்	திருநாமங்களைக் கொண்டு
மந்திரத்தால்	(க்ரியாகலாபமில்லாத) வெறும் மந்திரங்களாலும்	ஏத்துதிர் ஏல்	புகழ்ந்தீர்களாகில்
		நன்று	அது மிகவும் நல்லது.

* * *—[சொல்லுந்தனையும்.] எம்பெருமான் விசித்ரசக்தி வாய்ந்தவனென்பதைக் கீழ்ப்பாட்டில் தெரிவித்து, இப்படிப்பட்ட பெருமானை உலகத்திலுள்ளீரெல்லீரும் பணிந்து வாழுங்கோளென்று பரோபதேசத்தில் மூளுகிறாரிப்பாட்டில். "வீழுமுடம்பு செல்லுந்தனையும் நல்லிதழ்த்தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால் திருமாலைத்தொழுமின்; சொல்லுந்தனையும் நாமத்தால் ஏத்துதிரேல் நன்று" என்று அந்வயிப்பது. இந்த சரீரம் என்றைக்காவதொருநாள் சரிந்தேபோகப்போகிறது; 1. "इदं शरीरं परिणामपेशलं पतत्यवश्यं श्लथसन्धि जर्जरम् = இதம் சரீரம் பரிணாம பேசலம் பதத்யவச்யம் ச்லதஸந்தி ஜர்ஜரம்" என்கிறபடியே தவறாமல் நசித்தேபோகக் கடவதான இவ்வுடல் உள்ளவரையில் சிறந்த புஷ்பங்களைக் கொண்டும் யாகம் முதலிய வைதிககருமங்களைக்கொண்டும் மந்த்ர தந்த்ரங்களைக்கொண்டும் எம்பெருமானைப் பணியுங்கள்; சரீரத்தால் சிரமப்பட்டுச் செய்யக்கூடிய அக்காரியங்களில் கைவைப்பது கஷ்டமாயிருந்தால், வெறும் வாயினால் எவ்வளவு சொல்லக்கூடுமோ அவ்வளவு திருநாமங்களைச்சொல்லி ஏத்தினாலும் போதுமானது—என்றாராயிற்று.

தாமம், தந்திரம், மந்திரம், நாமம்—வடசொற்கள். .... (௭௦)

1. முகுந்தமாலை.

நன்று பிணிமூப்புக் கையகற்றி நான்கூழி *
நின்று நிலமுழுது மாண்டாலும் *—என்றும்
விடலாழி நெஞ்சமே வேண்டினேன் கண்டாய் *
அடலாழி கொண்டான்மாட் டன்பு. (எக)

ஆழி நெஞ்சமே	(எம்பெருமானிடத்தில் ஆழ்ந்திருக்கிற நெஞ்சே!
பிணி	வியாதியையும்
மூப்பு	கிழத்தனத்தையும்
நன்று கைஅகற்றி	நன்ருக [அடியோடு தொலைந்தொழியும்படி] விட்டும் [கைவல்ய மோக்ஷத்தைப் பெற்ருலும்]
நான்கு ஊழி	நான்கு யுகங்களிலும் [காலமுள்ள வரையிலும்]
நின்று	ஸ்திரமாக இருந்து
நிலம் முழுதும் ஆண்டாலும்	பூமி தொடங்கிப் பிரமலோகம் வரையிலுள்ள இந்த அண்டைச்வரியங்கள் முழுவதையும் ஸ்வாதீனமாய் நிர்வஹிக்கப் பெற்ருலும்
அடல் ஆழி கொண்டான் மாட்டு அன்பு	தீக்ஷ்ணமான திருவாழியைக் கையிலேந்திய பெருமானிடத்தில் ப்ரீதியை
விடல்	விடாமலிரு;
வேண்டினேன் கண்டாய்	உன்னைப் பிரார்த்திக்கின்றேன்காண்.

* * *—[நன்றுபிணிமூப்பு.]—பகவத்விஷய வாஸனையேயறியாத நாட்டார்க்கு உபதேசித்தார் கீழ்ப்பாட்டில்; அரஸிகர்களான உலகத்தவர்க்கு உபதேசிப்பதைவிட பகவத்விஷய ரஸமறிந்த நமது நெஞ்சுக்கு உபதேசிப்பது நன்று என்று கொண்ட ஆழ்வார் இப்பாட்டில் தமது திருவுள்ளத்திற்கு உபதேசிக்கிருர். பரமைச்வர்யமாயினும் கைவல்ய மோக்ஷமாயினும் அல்லது அவ்விரண்டுமேயாயினும் உனக்குக் கிடைப்பதாயிருந்தாலும் அவற்றை நீ உதறித்தள்ளிவிட்டு நம்முடைய விரோதிகளைப் போக்கி நம்மைப் பாதுகாப்பதற்காகவே எப்போதும் கையுந் திருவாழியுமாயிருக்கிற எம்பெருமானை மறவாமல் அவனிடத்தில் அன்பை உறுதியாகக்கொள் என்று பால்குடிக்கக் கால்பிடிப்பாரைப்போலே தமது நெஞ்சை வேண்டுகின்ருர்.

பிணிமூப்புக்கையகற்றி=பிணியையும் மூப்பையுஞ் சொன்னது மாணத்துக்கும் உபலக்ஷணம்; "ஜராமரண மோக்ஷாய

மாமாச்ரித்ய யதந்தி யே” என்று பகவத்கீதையில் சொல்லியிருப்பதுகாண்க. பிறப்பதும் பிணிகளால் வருந்துவதும் கிழத்தனமடைவதும் இறப்பதுமாகிய ஸம்ஸார ஸ்வபாவங்கள் கைவல்ய நிஷ்டனுக்குக் கழிந்துபோகிறபடியால் இப்பாட்டின் முதலடியில் கைவல்ய மோக்ஷம் விவக்ஷிதம். அந்த மோக்ஷம் உனக்குக்கிடைத்தாலும் அது பகவதநுபவ ஆநந்தத்தில் மிகச் சிறிதென்றுகொண்டு அதனை விட்டுத்தொலை என்றபடி. பரமைச்வரியம் கிடைத்தாலும் அது அஸ்திரமென்று அதனையும் விட்டுத்தொலை என்கிறார் இரண்டாமடியில். இவ்விரண்டும் பகவானை மறப்பதற்குக் காரணமாதலால் அவற்றை வெறுக்கச்சொல்லுகிறாரென்க. ‘ஆண்டாலும்’ என்ற உம்மையில், அவற்றில் தமக்கு விருப்பமில்லை யென்பதும் தொனிக்கும். விடல்—எதிர்மறை வினைமுற்று. ஆழி நெஞ்சமே!= இந்தப் பிரார்த்தனையை உனக்கு நான் பண்ணவேண்டியதில்லை; நீயே பகவதநுபவத்தில் ஆழ்ந்தவன்; ஆனாலும் ஏதோ சொல்லி வைத்தேன் என்பது கருத்து.

கண்டாய்—முன்னிலை யசைச்சொல். .... (எக)

அன்பாழி யானை யணுகென்னும் நாவவன்றன் *
பண்பாழித் தோள்பரவி யேத்தென்னும் *—முன்பூழி
காணானைக் காணென்னும் கண்செவி கேளென்னும் *
பூணாரம் பூண்டான் புகழ். (எஉ)

அன்பு	பகவத்பக்தியே வடிவெடுத்தது போன்றிருக்கிற எனது நெஞ்சானது
ஆழியானை	‘ஸர்வேச்வரனை
அணுகு என்னும்	கிட்டி அநுபவி’ என்று எனக்கு உபதேசிக்கின்றது;
நா	வாக்கானது
அவன் தன் பண்பு ஆழி தோள் பரவி ஏத்து என்னும்	‘அப்பெருமானது ஸௌந்தர்ய ஸாகரமான திருத்தோள்களைப் பேசித் துதி’ என்று உபதேசிக்கின்றது;
கண்	கண்களானவை

முன்பு ஊழி காணானை காண் என்னும்	‘நாம் தன்னை வந்து ஆச்ரயிப்பதற்கு முன்பிருந்த காலத்திலுள்ள வைமுக்கிய நிலைமையை நெஞ்சாலுமெண்ணுத பெருமானை ஸேவி’ என்று உபதேசிக்கின்றன;	செவி	காதுகள்
		பூண் ஆரம் பூண்டான் புகழ் கேள் என்னும்	‘ஆபரணமான ஹாரம் முதலியவற்றை அணிந்துகொண்டிருக்கிற அப்பெருமானுடைய திருக்குணங்களைக் கேள்’ என்று தூண்டுகின்றன.

* * *—[அன்பாழியானை.]• ஆசார்ய சிஷ்யக்ரமம் மாறுடுகிறது இப்பாட்டில். கீழ்ப்பாட்டில் ‘நெஞ்சமே! வேண்டினேன் கண்டாய்’ என்று ஆழ்வார் தாம் நெஞ்சுக்கு ஆசார்யராய் நின்று உபதேசித்தார்; இவர் உபதேசிப்பதற்கு முன்னமே இவருடைய ஸகல கரணங்களும் பகவத்விஷயத்தில் ஈடுபட்டிருந்தமையால் அவை தாமே தனித்தனி ஆசார்யபதம் நிர்வஹிக்கக்கடவனவாய் இவர்தமக்கு உபதேசிக்க முற்பட்டபடியைப் பேசுகிறுரிதில்.

அன்பு ஆழியானையணுகென்னும்=இங்கு ‘அன்பு’ என்ற சொல்லால் நெஞ்சைக்குறித்தனர்; அன்பு என்பது வேறொரு வஸ்துவாகவும் அதனையுடைய நெஞ்சு என்பது வேறொரு வஸ்துவாகவும் தோன்றாமல் அன்பு தானே நெஞ்சாக வடிவெடுத்து வந்திருக்கின்றதென்னலாம்படி யிருத்தலால் நெஞ்சுக்கு ‘அன்பு’ என்றே வாசகமிடுகிறார். “தத்³கு³ணஸாரத்வாத்து தத்³வ்யபதே³ஶ: ப்ராஜ்ஞவத்” என்ற ப்ரஹ்ம ஸூத்ரம் இங்கு ஸ்மரிக்கத்தகும். “விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே” என்ற உபநிஷத்வாக்யத்தில், அறிவுக்கு ஆச்ரயமான ஆத்மாவை விஜ்ஞாந சப்தத்தையிட்டே சொல்லியிருப்பதும் நினைக்கத்தக்கது.

பண்பாழித்தோள்=பண்பு ஆழி என்றும், பண் பாழி என்றும் பிரிக்கலாம். பண்பு என்று அழகுக்குப் பெயர்; அழகுக்குக் கடல்போன்ற தோள் என்றும், பண்—அழகையும், பாழி—வலிமையையுமுடைய, தோள் என்றும் உரைக்க.

முன்பூழிகாணானை=ஊழி என்று காலத்துக்குப்பெயர்; முன்புள்ள காலத்தைக் காணாதவனென்றால் என்ன தாற்பரியம்?....

மஹாபராதியான ஒரு சேதநன் வந்து தன்னை ஆச்ரயித்தால், நேற்றுவரையில் அவன் எப்படியிருந்தான், என்னென்ன பாபங்கள் பண்ணினான் என்று முற்கால நிலைமைகளைச் சிறிதும் ஆராயாதவன் எம்பெருமான்—என்று தாற்பரியம். .... (எஉ)

புகழ்வாய் பழிப்பாய்நீ பூந்துழா யானை *
இகழ்வாய் கருதுவாய் $ நெஞ்சே *—திகழ்நீர்க்
கடலு மலையு மிருவிசும்புங் காற்றும் *
உடலு முயிரு மேற்றான். (எங.)

நெஞ்சே	(நல்லது கெட்டது களை ஆராயக் கூடிய) மனமே!,
நீ	நீ
பூந்துழாயானை	அழகிய திருத்துழாய் மாலையணிந்த பெருமானை
புகழ்வாய்	ஸ்தோத்ரம் பண்ணினாலும் பண்ணு;
	(அன்றியே)
பழிப்பாய்	நிந்திப்பதானாலும் நிந்தி;
	(அன்றியே)
இகழ்வாய்	அநாதரித்தாலும் அநாதரி;
	(அன்றியே)
கருதுவாய்	ஆதரித்தாலும் ஆதரி; (நீ உனக்கு இஷ்டமானபடி செய்;)
திகழ் நீர் கடலும்	விளங்குகின்ற ஜலபூர்த்தியையுடைய ஸமுத்ரமும்
மலையும்	பர்வதங்களும்
இரு விசும்பும்	பரம்பிய ஆகாசமும்
காற்றும்	வாயுவும்
உடலும்	(தேவாதி) சரீரங்களும்
உயிரும்	(அந்தந்த சரீரங்களிலுள்ள) பிராணிகளும் (ஆகிய இவற்றையெல்லாம்)
ஏற்றான்	தரித்துக்கொண்டிருப்பவன் அவ்வெம்பெருமானே காண்.

* * *—[புகழ்வாய்பழிப்பாய்.] 1. "சஞ்சலம் ஹிமந: க்ருஷ்ண!" என்றும் 2. "நின்றவா நில்லாநெஞ்சு" என்றுஞ் சொல்லுகிறபடியே நெஞ்சின் நிலைமை மாறிமாறிக்கொண்டேயிருக்குமென்பதை நினைத்த ஆழ்வார், 'நெஞ்சே! நீ எப்போதும்

$. "என்னெஞ்சே" என்ற பாடமுமுண்டு; வெண்டளை பிறழாது.
1. பகவத்கீதை. 2. பெரியதிருமொழி 1—1—4.

ஒரே நிலையாயிருந்து எம்பெருமானைப் புகழ்வதும் ஆதரிப்பதுமாயிருந்தாலும் சரி; நிலைமாறி சிசுபாலாதிகளைப்போலே அவனைப் பழிப்பதும் அநாதரிப்பதுமாயிருந்தாலும் சரி; நீ எது செய்தாலும் அவனுடைய பெருமேன்மைக்குக் குறைவு நிறைவுகள் வாராதுகாண்' என்று தம்முடைய உறுதியைத் தெரிவிக்கிறார். பின்னடிகளில், எம்பெருமான் கார்ய காரணரூபங்களான ஸகல பதார்த்தங்களையும் தரித்துக்கொண்டிருப்பவன் என்று அவனுடைய ஸர்வதாரகத்வத்தைச் சொன்னதானது நம்முடைய புகழ்வு மிகழ்வுமெல்லாம் அவனுக்கு அப்ரயோஜகம் என்கைக்காகவென்க. ஏற்றான்—எல்லாம் தானென்கிற சொல்லுக்குள்ளே அடங்கும்படி எல்லாவற்றையும் தனக்கு விசேஷணமாகக் கொண்டுள்ளான் என்றுரைப்பதுமுண்டு.

இரண்டாமடியில் "கருதுவாய் என் நெஞ்சே!" என்றும் பாடமோதுவர்; தளைபிறழாது. .... (எங)

ஏற்றான் புள்ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்விடந்தான் *
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான் *—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் * நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு. (எச)

ஏற்றான்	ரிஷபத்தை வாஹநமாகவுடையவனும்	கங்கையான்	(அச்சடைமுடியில்) கங்கையைத்தாங்கிக்கொண்டிருப்பவனுமான ருத்ரன்,
எயில் எரித்தான்	த்ரிபுரஸம்ஹாரம் பண்ணினவனும்	புள் ஊர்ந்தான்	கருடனை வாஹநமாகவுடையவனும்
நீற்றான்	சாம்பலைப் பூசிக்கொண்டிருப்பவனும்	மார்வு இடந்தான்	இரணியனது மார்வைப் பிளந்தொழித்தவனும்
கூறு ஒருபால் மங்கையான்	தனது உடம்பின் ஒருபக்கத்திலே பார்வதியைத் தரித்துக்கொண்டிருப்பவனும்	நிழல் மணி வண்ணத்தான்	நீலரத்நம்போலே குளிர்ந்த வடிவையுடையவனும்
வார் சடையான்	நீண்ட ஜடையைத் தரித்துள்ளவனும்		

பூமகளான்	பெரிய பிராட்டியைத் திவ்ய மஹிஷியாக வுடையவனும்	நீள் கழலான்	நீண்ட திருவடிகளை யுடையவனுமான ஸர்வேச்வரனுடைய
நீள் முடியான்	நீண்ட கிரீடத்தை அணிந்துள்ளவனும்	காப்பு	ரக்ஷணத்தில் அடங்கினவன்.

* * *—[ஏற்றான்புள்ளூர்ந்தான்.] எல்லாப் பதார்த்தங்களையும் தரிப்பவன் ஸ்ரீமந்நாராயணனென்றார் கீழ்ப்பாட்டில்: ருத்ரனை அப்படிப்பட்டவனாகச் சிலர் சொல்லுகின்றார்களே! அஃது என்ன? என்று கேள்விபிறக்க, ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்வத்தையும் சிவனுடைய அபரத்வத்தையுஞ் சொல்லி, சிவனும் எம்பெருமானுடைய ஆஜ்ஞையிலே அடங்கினவனே யென்கிறார்.

ஏற்றானையும் எயிலெரித்தானையும் நீற்றானையும் கூற்றொருபால் மங்கையானையும் வார்சடையானையும் கங்கையானையு மிருக்கிற ருத்ரன்—புள்ளூர்ந்தானையும் மார்விடந்தானையும் நிழல்மணி வண்ணத்தானையும் பூமகளானையும் நீண்முடியானையும் நீள்கழலானையு மிருக்கிற எம்பெருமானுடைய, காப்பு என்று அந்வயிப்பது. காப்பு—ரக்ஷ்யவர்க்கத்திற் சேர்ந்தவன் என்றபடி.

சிவனுடைய விசேஷணங்களை வரிசையாக இட்டு, பிறகு எம்பெருமானுடைய விசேஷணங்களை வரிசையாக இட்டு, இன்னான் இன்னானுடைய காப்பு—என்று அடைவுபடச் சொல்லலாமாயிருக்க, அப்படிச் சொல்லாமல் விஷ்ணு ருத்ரர்களை மாறிமாறித் தொடுத்திருப்பது இருவர்க்குமுள்ள வாசி உடனுக்குடனே தெரியவேணுமென்பதற்காக. தமோகுணமே வடிவெடுத்ததாயும் மூடர்களுக்கு உவமையாக எடுக்கக்கூடியதாயு முள்ள ரிஷபத்தை வாஹநமாக வுடையவன் அவன்; வேதஸ்வரூபியான பெரிய திருவடியை வாஹநமாகவுடையவன் இவன்; தன்னை ஆச்ரயித்தவர்களின் குடியிருப்பான திரிபுரத்தைச் சுட்டெரித்தவன் அவன்; ஆச்ரிதனான ப்ரஹ்லாதனுக்கு விரோதியான இரணியனது மார்வைப் பிளந்தொழித்தவனிவன்; தான் ப்ராயச்சித்தியென்று தோற்றும்படி நீறுபூசின ஸர்வாங்கத்தையு முடையவன் அவன்; ச்ரமஹரமான நீலரத்நம்போலே குளிர்ந்த வடிவை யுடையவன்

இவன். தன்உடலின் பாதிபாகத்தை ஸ்த்ரீரூபமாக ஆக்கிக்கொண்டவன் அவன்; உலகுக்கெல்லாம் ஈச்வரியான கமலச்செல்வியை திவ்ய மஹிஷியாகவுடையவன் இவன்; தன்குறையைத் தீர்த்துக் கொள்ளும் வண்ணம் ஸாதநாநுஷ்டாநம் பண்ணுவது எல்லார்க்குந் தெரியும்படி சடை புனைந்தவன் அவன்; ஸர்வேச்வரத்வ ஸூசகமான திருவபிஷேகத்தையுடையவன் இவன்; தான் பரிசுத்தனாவதற்குக் கங்கையைத்தரிப்பவன் அவன்; அந்த கங்கைக்கு உத்பத்தி ஸ்தாநமான திருவடியை யுடையவன் இவன்—என்று சொல்லுமழகு காண்மின்.

எயிலெரித்த வரலாறு கீழ் இருபத்தெட்டாம் பாட்டினுரையில் விரித்துரைக்கப்பட்டது காண்க. எயில்—மதிள்; த்ரிபுரத்துக்கு இலக்கணை. ... ... (எச)

காப்புன்னை யுன்னக் கழியு மருவினைகள் *
ஆப்புன்னை யுன்ன வவிழ்ந்தொழியும் *—மூப்புன்னைச்
சிந்திப்பார்க் கில்லை திருமாலே * நின்னடியை
வந்திப்பார் காண்பர் வழி. (எரு)

திருமாலே — லக்ஷ்மீநாதனே!,
உன்னை — (பரமபுருஷனான) உன்னை
உன்ன — ரக்ஷகனாக அநுஸந்திக்குமளவில்
காப்பு — பிரதிபந்தகங்கள்
கழியும் — விட்டு நீங்கும்;
உன்னை உன்ன — உன்னை நினைக்குமளவில்,
அரு வினைகள் ஆப்பு — போக்கமுடியாத கருமங்களின் பந்தமும்
அவிழ்ந்து ஒழியும் — அவிழ்ந்துபோம்;
உன்னை சிந்திப்பார்க்கு — உன்னை த்யானிப்பவர்களுக்கு
மூப்பு இல்லை — கிழத்தனம் முதலிய ஷட்பாவ விகாரங்களும் இல்லையாம்;
நின் அடியை வந்திப்பார் — உன் திருவடிகளை ஆச்ரயிக்குமவர்கள்
வழி — அர்ச்சிராதி மார்க்கத்தை
காண்பர் — கண்டு அநுபவிக்கப் பெறுவர்கள்.

* * *—[காப்புன்னையுன்ன.] திருமாலே! ஸர்வரக்ஷகனுன்னை அநுஸந்திப்பவர்களுக்கு எல்லாப்பிரதிபந்தகங்களும் நீங்கி

பிரகிருதி ஸம்பந்தமும் நீங்கி திவ்யலோகப்ராப்தியும் வாய்க்குமென்கிறார். பகவத் ஸம்பந்தத்தை யுணர்ந்தவர்கள் கர்மவச்யராகாரென்பதை முன்னடிகளாலும், பரமஸாம்யாபத்தியை அடைவார்களென்பதைப் பின்னடிகளாலும் அருளிச்செய்கிறார்.

முதலடியில், காப்பு என்பதற்குப் 'பிரதிபந்தகம்' என்று பொருள் கூறப்பட்டது; காவல் என்பதற்குத் 'தடை' என்று பொருளாதலால். அன்றியே, பாபஸாக்ஷியாக எம்பெருமானால் நியமிக்கப்பட்டுள்ள பதினால்வர் என்று கொள்ளவுமாம். அவராவார்—ஸூர்யன் சந்திரன் வாயு அக்நி த்யுலோகம் பூமி ஜலம் ஹ்ருதயம் யமன் அஹஸ் ராத்ரி இரண்டு ஸந்த்யைகள் தர்மதேவதை என்ற இவராவர். "𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌵𑌨𑌿𑌲𑍋𑌽𑌨𑌲𑌶𑍍𑌚 𑌦𑍍𑌯𑍌𑌰𑍍𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌪𑍋 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌯𑌮𑌶𑍍𑌚। 𑌅𑌹𑌶𑍍𑌚 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌶𑍍𑌚 𑌉𑌭𑍇 𑌚 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑍇 𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌚 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌨𑌰𑌸𑍍𑌯 𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑍍 = ஆதித்ய சந்த்ராவநிலோநலச்ச த்யௌரப் பூமிராபோ ஹ்ருதயம் யமச்ச—அஹச்ச ராத்ரிச்ச உபேச ஸந்த்யே தர்மச்ச ஜாநாதி நரஸ்ய வ்ருத்தம்." என்ற மஹாபாரத ச்லோகமுங் காண்க. உன்னை யநுஸந்திப்பவர்கள் செய்யுங் கருமங்களை எம்பெருமானா லேற்படுத்தப்பட்டுள்ள கர்மஸாக்ஷிகளும் ஆராயக்கடவரல்லர் என்றவாறு.

ஆப்பு—யாப்பு; கட்டு: கருமபந்தம். மூப்பு என்று கிழத்தனத்தை மாத்திரம் சொன்னது ஷட்பாவ விகாரங்களுக்கும் உபலக்ஷணம். அவையாவன—உளதாகை பிறக்கை மாறுகை வளர்கை மூப்பு [குறைகை] அழிகை என்பன. இவை வடமொழியில் "𑌅𑌸𑍍𑌤𑌿, 𑌜𑌾𑌯𑌤𑍇, 𑌪𑌰𑌿𑌣𑌮𑌤𑍇, 𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌤𑍇, 𑌅𑌪𑌕𑍍𑌷𑍀𑌯𑌤𑍇, 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿" என்று வ்யவஹரிக்கப்படும். இவை சரீரமெடுத்த ஜந்துக்களுக்கெல்லாம் வருமவை.

வழி காண்பர்—நரகத்தைப்போலே பொல்லாததான வழியைக்காணுதலின்றியே நித்ய விபூதிக்குப் போம்வழியைக் காண்பரென்றவாறு. ... . (௭௫)

வழிநின்று நின்னைத் தொழுவார் * வழுவா
மொழிநின்ற மூர்த்தியரே யாவர் *—பழுதொன்றும்
வாராத வண்ணமே விண்கொடுக்கும் * மண்ணளந்த
சீரான் திருவேங் கடம். (௭௬)

வழி நின்று	பக்திமார்க்கத்திலே நிலைத்து நின்று
நின்னை தொழுவார்	உன்னை ஆச்ரயிக்குமவர்கள்
வழுவா மொழி நின்ற மூர்த்தியரே ஆவர்	உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டிருக்கிற ஸ்வரூப ஆவிர்ப்பாவத்தை உடையவராகவே ஆவர்கள்;
(இதைப்பற்றிச் சொல்லவேணுமோ?)	
மண் அளந்த சீரான் திருவேங்கடம்	உலகளந்த மஹாநுபாவன் எழுந்தருளியிருக்கிற திருமலையே
பழுது ஒன்றும் வாராத வண்ணமே	ஒரு குறையுமில்லாதபடி
விண் கொடுக்கும்	(ஆச்ரிதர்களுக்கு) மோக்ஷமளிக்கக் காண்கிறோமன்றோ.

* * *—[வழிநின்று.] எம்பெருமானோடு ஸம்பந்தமுடைய திருமலை தானே தன்னைப்பற்றினோர்க்கு நற்கதியைத்தரும் வல்லமையுடையதாயிருக்கையில், எம்பெருமானைத் தொழுமவர்கள் நற்கதி பெறுவாரென்று நாம் பெரிதாக எடுத்துச் சொல்ல வேணுமோ? என்கிறார். கைமுதிக நியாயம் தோற்றப் பேசின பாசுரம் இது. மண்ணளந்த சீரானுடைய திருவேங்கடமே பழுதொன்றும் வாராதவண்ணமே விண்கொடுக்குமதாயிருக்க, நின்னை வழிநின்று தொழுமவர்கள் வழுவாமொழிநின்ற மூர்த்தியராவரென்பது விசேஷித்துச் சொல்லவேண்டிய விஷயமோ என்றவாறு.

வழுவாமொழியாவது வேதம்; அதில் சொல்லப்பட்ட மூர்த்தியாவது ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவம்; "பரஂஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே" [பரஞ்சோதியான பரமபுருஷனைக்கிட்டி ஸ்வஸ்வரூப ஆவிர்ப்பாவத்தை (ஜ்ஞாநாநந்த விகாஸத்தை) ப்பெறுகிறான்] என்று சுருதியில் சொல்லப்பட்டது காண்க. இதனையே திருமங்கையாழ்வார் 1. "தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத், தம்மையே யொக்க அருள்செய்வர்" என்ற பாசுரத்தினால் பேசினார்.

எம்பார் இப்பாசுரத்தை நாடோறும் சிற்றஞ் சிறுகாலையில் அநுஸந்திப்பது வழக்கமாம். "எம்பார் விடிவோறே அநுஸந்

1. பெரிய திருமொழி 11—3—5.

திக்கும் பாட்டு" என்பது பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான வருளிச்செயல். ... . (எசு)

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் * அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும்*—நான்கிடத்தும்
நின்றா னிருந்தான் கிடந்தான் நடந்தானே *
என்றால் கெடுமா மிடர். (எஎ)

வேங்கடமும்	திருமலையும்
விண்ணகரும்	வைகுந்தமாநகரும்
வெஃகாவும்	திருவெஃகாவும்
அஃகாத பூ கிடங்கின் நீள் கோவல் பொன் நகரும்	பூ மாறாத நீர் நிலைகளையுடைய சிறந்த திருக்கோவலூரென்கிற திவ்யதேசமும்
	(ஆகிய)
நான்கு இடத்தும்	நான்கு திருப்பதிகளிலும்
	(வரிசைக்கிரமமாக)
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தான் என்றால்	(எம்பெருமான்) நிற்பதும் வீற்றிருப்பதும் பள்ளிகொண்டிருப்பதும் நடப்பதுமாயிருக்கிறானென்று அநுஸந்தித்தால்
இடர்	துக்கங்களெல்லாம்
கெடும் ஆம்	விட்டோடிப் போய்விடும்.

* * *—[வேங்கடமும்.] எம்பெருமான் ஒவ்வொரு திவ்ய தேசத்திலும் எழுந்தருளியிருக்கிறபடிகளை நாம் அநுஸந்தித்தால் நமது இடரெல்லாம் நீங்கிவிடுமென்கிறார். அவன் திருப்பதிகளில் நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் நடப்பதுமானபடிகளை நாம் சொல்ல, நாம் நின்றுமிருந்தும் கிடந்தும் நடந்தும் செய்த பாபங்களெல்லாம் தன்னடையே போகுமென்றபடி. நூற்றெட்டுத் திருப்பதிகளுள் பரமபதமும் ஒன்றாதலால் இங்கு 'விண்ணகரும்' என்று அத்திருநாடு கூறப்பட்டது. உப்பிலியப்பன் ஸந்நிதியென்கிற திருவிண்ணகரைச் சொல்லுவதாகக் கொண்டால் அங்கு வீற்றிருந்த திருக்கோலமில்லையாதலால் மிடிபடும். கச்சிமாநகரிலுள்ள பரமேச்சுர விண்ணகரைச் சொல்லுவதாகக் கொள்ளினும் குறையில்லை. உலகளந்த திருக்கோலமாக ஸேவை ஸாதிக்குமிடத்தை நடந்தகோலத்திருப்பதியாக அநுஸந்திப்பதுண்டாதலால் 'பூங்கோவல் நடந்தான்' என்றார். ... ... (எஎ)

இடரார் படுவா ரெழுநெஞ்சே * வேழம்
தொடர்வான் கொடுமுதலை சூழ்ந்த*—படமுடைய
பைந்நாகப் பள்ளியான் பாதமே கைதொழுதும் *
கொய்ந்நாகப் பூம்போது கொண்டு. (௭௭)

நெஞ்சே	மனமே!	பாதம்	திருவடிகளை
வேழம் தொடர்	கஜேந்திராழ்வானை (விழுங்குவதாகத்) தொடர்ந்துவந்த	கொய் நாகம் பூ போது கொண்டு	கொய்யப்பட்ட புன்னையின் அழகிய மலர் களைக்கொண்டு
வான்	பெரிய	கைதொழுதும்	தொழுவோம்;
கொடு	(நெஞ்சில் இரக்கமின்றியே) கொடுமைபூண்ட	எழு	எழுந்திரு; (அவனுக்கு இவ்வாறு அடிமை செய்யாமல்)
முதலை	முதலையை	இடர்	துக்கத்தை
சூழ்ந்த	(தப்பிப்போகாதபடி) எண்ணிக் கொன்றவனும்	படுவார் ஆர்	அநுபவிக்க யாரால் முடியும்? (என்றால் முடியாது.)
படம் உடைய பை நாகம் பள்ளியான்	படத்தையும் பசுமைநிறத்தையுமுடைய திருவனந்தாழ்வானைத் திருப்பள்ளிமெத்தையாகவுடையனுமான எம்பெருமானது		

* * *—[இடரார்படுவார்.] எம்பெருமான் நமக்காகச்செய்த செயல்களை நாம் அநுஸந்திப்போமாகில் அவனது திருவடிகளில் அடிமைசெய்தே நிற்கவேண்டியதாகுமேயன்றி ஒரு நொடிப்பொழுதும் வெறுமனிருக்க முடியாது; நாம் அப்பெருமானை ஆச்ரயிக்கவே துக்கங்களெல்லாம் தொலைந்துபோம்; துக்கப்படுகைக்கு ஆளில்லை; ஒருகால் நமக்கு துக்கம் வந்தாலும் அது கஜேந்திராழ்வானைத் தொடர்ந்த முதலை பட்டது படும் என்றவாயிற்று.

இரண்டாமடியில், சூழ்ந்த என்ற பெயரெச்சம் பள்ளியானென்பதைக்கொண்டு முடியும். முதலையை முடித்து கஜேந்திரனைக்காத்த கதை ப்ரஸித்தம்.

ஈற்றடியில், நாகம்-'புந்நாகம்' என்ற வடசொற்சிதைவு. (௭௮)

கொண்டானை யல்லால் கொடுத்தாரை யார்பழிப்பார் *
மண்டா வெனவிரந்து மாவலியை*—ஒண்டாரை
நீரங்கை தோய நிமிர்ந்திலையே * நீள்விசும்பி
லாரங்கை தோய வடுத்து. (எகூ)

மண் தா என மாவலியை இரந்து — '(மூவடி) நிலத்தை எனக்குத் தா' என்று மாவலியிடத்தில் யாசித்து

(அவனும் மறுக்கமாட்டாமல் அப்படியே உனக்குத் தந்தேனென்று தாரை வார்க்க)

ஒண் தாரைநீர் — அழகிய அந்த நீர்த்தாரை

அம் கை — (தனது) அழகிய திருக்கையிலே

தோய — வந்து விழுந்ததும்

நீள் விசும்பிலார் — பரம்பின மேலுலகத்தில் வாழ்கின்ற ப்ரஹ்மாதிகளுடைய

அம் கை — அழகிய கைகள்

தோய — ஸ்பர்சித்துத் திருவடி விளக்கும்படி

அடுத்து நிமிர்ந்திலையே — கடுக ஓங்கி வளரவில்லையோ?

(இப்படி தன்னதான வஸ்துவைக் கொள்வதற்கும் தன்னை அழிய மாறிவந்து)

கொண்டானை — தன்னதாக்கிக் கொண்ட எம்பெருமானை

அல்லால் — பழிக்கிறார்களே யன்றி

கொடுத்தாரை யார் பழிப்பார் — (தன்னதல்லாததைத் தன்னதாக அபிமானித்துக்) கொடுத்த அந்த மாவலியைப் பழிப்பவர்கள் யாருமில்லையே! (இஃது என்ன அநியாயம்!.)

* * *—[கொண்டானையல்லால்.] எம்பெருமான் ஆச்ரித ரக்ஷணத்திற்காகத் தன் ஸ்வரூபத்தை மாறாடிக்கொண்டும் காரியம் செய்பவன் என்பதை மூதலிக்கவேண்டி, மஹாபலியினிடத்தில் வாமநனாய்ச்சென்று மூவடிமண் வேண்டிப் பெற்றுத் திரிவிக்கிரமனாகித் தன் விபூதியை அப்பெருமான் மீட்டுக்கொண்டதை உதாஹரணமாகக்காட்டி, இப்படி ஆச்ரிதர் பொருட்டாக அப்பரமன் அரும்பாடுபட்டும் அதனை யறியவல்லார் ஸம்ஸாரத்தில் ஒருவருமில்லாததுபற்றிக் கவலைப்படுகிறா ரிப்பாட்டால்.

மாவலியானவன் தன்னதல்லாததைத் தன்னதென்று அபிமானித்துக்கொண்டு செருக்குற்றிருந்ததற்காக இராவணனைப்

போலவே அவனையுங் கொல்லவேண்டியிருந்தும் அவனிடத்தில் ஔதார்யமென்ற ஒரு சிறந்தகுண மிருந்ததனால் தன்னதான விபூதியை அவனதுபோலவே பாவித்துச் சென்று யாசித்து நீரேற்று வாங்கிக்கொண்ட மஹாகுணம்பொருந்தியவன் எம்பெருமான்; இப்படிப்பட்ட மஹாகுணத்தில் யாராவது ஈடுபடுவாருண்டோ? வஞ்சகனென்றும், ஸர்வஸ்வாபஹாரியென்றும், தனக்கு தானஞ்செய்தவனைப் பாதாளத்திலே தள்ளினவனென்றும் சில பழிச்சொற்களைச்சொல்லி அப்பெருமானை உலக மடங்கலும் பழிக்கின்றதேயன்றி, தன்னதல்லாதனைத் தான் தந்ததாக நினைக்கிற மாவலியை பகவத்விபூதியைக் கொள்ளைகொண்டவனென்றும் அஹங்காரியென்றும் ஆஸுர ப்ரகிருதியென்றும் அவனுடைய குற்றங்களையிட்டுச் சொல்லுவார் இந்த ஸம்ஸாரத்தில் யாருமில்லையே!; குற்றத்தைக் குணமாக்கியும், குணத்தைக் குற்றமாக்கியுஞ் சொல்லும்படியன்றோ ஸம்ஸாரிகளின் ஸ்வபாவமிருப்பதென்பது 'கோண்டானையல்லால் கொடுத்தாரை யார்பழிப்பார்?' என்பதன் கருத்து.

தோய—செயவெனெச்சம் உடனிகழ்ச்சிப் பொருளது. நீர் கைதோய நீள்விசும்பிலார் அங்கை தோய அடுத்து நிமிர்ந்திலையே—மாவலி தாரைவார்த்த உதகமும் ப்ரஹ்மாதிகள் திருவடி விளக்கின உதகமும் ஏகோதகமென்னலாம்படி அத்தனை விரைவாக நீ வளரவில்லையோ? என்றபடி.

"நீள்விசும்பிலார் அங்கை தோய" என்பதற்கு—விசும்பிலுள்ள தேவர்கள் (உனது) திருத்தோளிலே வந்து அணையும்படியாக என்றும், "நீள்விசும்பில் ஆரம் கைதோய" என்றெடுத்து, பரந்த விசும்பிலே (உனது திருமார்பிலணிந்திருந்த) முத்தாஹாரமும் திருக்கையும் பொருந்தும்படி (ஓங்கி) என்றும் பொருள் கொள்ளலாம். ... ... (எகூ)

அடுத்த கடம்பகைஞற் காற்றேனேன் ன்றேடி *
படுத்த பெரும்பாழி சூழ்ந்த—விடத்தரவை *
வல்லாளன் கைக்கொடுத்த மாமேனி மாயவனுக்கு *
அல்லாது மாவரோ ஆள். (அ௰)

அடுத்த கடு பகைஞற்கு — 'நெருங்கிய கொடிய சத்துருவான கருடனுக்கு

ஆற்றேன் என்று — (நேரேநின்று பிழைத்திருக்கத் தக்க) வல்லமை யுடையே னல்லேன்' என்று சொல்லிக் கொண்டு

ஓடி — விரைந்து ஓடிப்போய்,

படுத்த பெரு பாழி — (எம்பெருமான் பள்ளிகொள்ளுமாறு) விரித்த பெருமைபெற்ற படுக்கையாகிய சேஷனை

சூழ்ந்த — சுற்றிக்கொண்ட

விடத்து அரவை — விஷத்தையுடைய ஸுமுகனென்கிற ஸர்ப்பத்தை

வல்லாளன் கை கொடுத்த — வலிமையுடைய கருடனது கையிலே (அடைக்கலப் பொருளாகத்) தந்து ரக்ஷித்த

மா மேனி மாயவனுக்கு அல்லாலும் — சிறந்த திருமேனியையுடைய எம்பெருமானுக்குத்தவிர

(மற்ற தேவதாந்தரங்கட்கு)

ஆள் ஆவரோ — அடிமையாவர்களோ.

* * *—[அடுத்த கடும்பகைஞற்கு.] தேவேந்திரனுக்குப் பரம ஆப்தனும் ஸாரதியுமான மாதலி யென்பவன் தனது புத்திரியான குணகேசி யென்னுங் கன்னிகைக்குத் தகுந்த வரனைத்தேட நாரத மஹர்ஷியோடு புறப்பட்டுப் பல வுலகங்களிலுஞ் சென்று கடைசியாகப் பாதாள லோகத்தில் 'போகவதி' என்னுஞ்சிறந்த நகரத்தை யடைந்து, (ஐராவத குலத்திற் பிறந்தவனும் ஆர்யகனது பௌத்திரனும் வாமனது தௌஹித்ரனும் சிகுரனது புத்திரனுமான) ஸுமுகனென்னும் நாககுமாரனைக்கண்டு அவனது அழகு குணம் முதலியவற்றி லீடுபட்டு அவனுக்குத் தன் மகளைக் கொடுக்க வுத்தேசித்து அவனது பிதாமஹனை ஆர்யகனைக் கண்டு தன் உத்தேசத்தைத் தெரிவிக்க, ஆர்யகன் ஆநந்தத்தையும் ஸங்கடத்தையும் ஏககாலத்தில் கொண்டவனாகி 'இவனது தந்தையைக் கருடன் பக்ஷித்து இவனையும் ஒரு மாதத்திற்குள் பக்ஷிப்பேனென்று சொல்லி யிருக்கிறானாதலால் இவனுக்கு இப்போது விவாஹம் நடத்துவது உசிதமன்று' என்று தெரிவித்தான். அதற்கு மாதலி, 'இவன் என்னோடுவந்து தேவேந்திரனைக் காணட்டும்; இவனுக்கு ஆயுளைத்தந்து கருடனால் கேடுவராமல் தடுக்க முயல்வேன்' என்று சொல்லி அச்சுமுகனை உடனழைத்துக் கொண்டு சென்று உபேந்

திர மூர்த்தியோடிருந்த தேவேந்திரனைக் கண்டு நாரதர் மூலமாகச் செய்தியைத் தெரிவிக்க, அதுகேட்ட உபேந்திரனான ஸ்ரீ மஹாவிஷ்ணு 'இவனுக்கு அம்ருதத்தைத் தரலாம்; அதனால் இஷ்டஸித்தி உண்டாகும்' என்று சொல்ல, இந்திரன் கருடனுடைய பராக்ரமத்தை நினைந்து சிறிது அச்சத்துடனே அம்ருதமுண்பியாமல் அந்த ஸுமுகனுக்கு நீண்ட ஆயுளை மாத்திரம் வரமாக அளிக்க, உடனே மாதலி அச்சுமுகனுக்குத் தன்மகளை மணஞ் செய்வித்தான்: இச்செய்தியைக் கேள்வியுற்ற கருடன் இந்திரனோடு மாறுபட்டு, தன் இரையைத் தடுத்ததற்காக நிஷ்டூரமாகப் பேசுகையில், சுமுகன் பாம்பு வடிவமாய்த் திருமாலையடைந்து, அப்பெருமான் பள்ளி கொள்ளுதற்கு ஏற்றவாறு அமைப்பவனான ஆதிசேஷனாகிய கட்டிலின் காலைக் கட்டிக்கொண்டு சரணம் புக, பின்பு கருடன் திருமாலை நோக்கி 'ஸகல தேவர்களுள்ளும் பலசாலியான வும்மைச் சிறிதும் சிரமமின்றி இறகுமுனையால் சுமக்கின்ற என்னைவிட வலிமையுடையார் யார்? இதனைச் சற்று ஆலோசியும்' என்று கருவங்கொண்டுபேச, கடூரமான அந்த வார்த்தையைக் கேட்ட எம்பெருமான் கருடனைநோக்கி 'மிகவும் துர்ப்பலனான நீ தன்னை மஹாபலசாலியாக எண்ணி என்முன்னே ஆத்மஸ்துதி செய்துகொண்டது போதும்; மூன்று லோகமும் எனது உடம்பை வஹிக்க முடியாதே; யானே எனது சக்தியால் என்னையும் வஹித்துக்கொண்டு உன்னையுமல்லவோ வஹிக்கிறேன்; எனது இந்த வலக்கை யொன்றை மாத்திரமாவது நீ தாங்குவையா?' என்று சொல்லித் தமது வலக்கையைக் கருடனது தோளில் வைத்தமாத்திரத்தில் அவன் அந்தத் திருக்கையின் அதிபாரத்தைத் தாங்கமாட்டாமல் வருந்தி வலியழிந்து மூர்ச்சித்து விழுந்து, பின்பு அரிதில் தெளிந்து எம்பெருமானை வணங்கி ஸ்துதித்து அபராதக்ஷாமணஞ் செய்துகொள்ள, திருமால் திருவுள்ள மிரங்கி அவனுக்கு ஸமாதானஞ் சொல்லித் தனது திருவடியின் பெருவிரலால் ஸுமுகனென்ற நாகத்தை யெடுத்துக் கருடன் தோளிலிட்டு 'இவனை நீ உனது அடைக்கலமாகக் கொண்டு பாதுகாக்கக் கடவை' என்று குறிப்பிக்க, அது முதலாக ஸுமுகனோடு கருடன் ஸ்நேஹங்கொண்டு அவனைத் தோளில் தரிக்க, அவனும்

அச்சமின்றி 'கருடா! ஸுகமா?' என்று குசலப்ரச்நம் பண்ணுவானாயினன்—என்ற உபாக்கியானத்தைத் திருவுள்ளம்பற்றி இப்பாசுரமருளிச் செய்யப்பட்ட தென்க. (௮0)

ஆளமர் வென்றி யடுகளத்து ளஞ்ஞான்று *
வாளமர் வேண்டி வரைநட்டு *—நீளரவைச்
சுற்றிக் கடைந்தான் பெயரன்றே * தொன்னரகைப்
பற்றிக் கடத்தும் படை. (௮௧)

ஆள் அமர்	யுத்தவீரர்கள் நெருங்கியிருக்கப் பெற்றதும்
வென்றி	ஜயத்தையுடையதுமான
அடு களத்துள்	(எதிர்த்தவரைக்) கொல்லுகின்ற யுத்தகளத்திலே
அஞ்ஞான்று	(அசுரர்களை தேவர்கள் மேல்விழுந்து நலிந்த) அக்காலத்திலே
வாள் அமர் வேண்டி	(அநுகூலரான தேவர்கட்கு வெற்றியுண்டாகும்படி) மதிப்புடைய யுத்தத்தைவிரும்பி
	(அதற்கு ஏற்ப)
வரை நட்டு	(தண்ணீரில் அமிழக் கூடிய, மந்த்ர) பர்வதத்தை மத்தாகநாட்டி
நீள் அரவை சுற்றி	உடல்நீண்ட வாஸுகி நாகத்தைக் கடைகயிறாகச்சுற்றி
கடைந்தான்	(அமுதமுண்டாகும் படி) திருப்பாற் கடலைக்கடைந்தவனுடைய
பெயர்	திருநாமம் (எப்படிப் பட்டதென்றால்)
பற்றி	(ஸம்ஸாரிகளை) வாரிப்பிடியாகப் பிடித்துக் கொண்டுபோய்
தொல்நரகை	பழமையாயிருக்கிற (ஸம்ஸாரமென்னும் நரகத்தை)
கடத்தும்	தாண்டுவிக்கின்ற
படை	ஸாதனம்.

* * *—[ஆளமர்வென்றி.] ப்ரயோஜநாந்தர பரர்கட்கும் கூடத் தன் திருமேனிநோவக் கடல்கடைந்து அமுதத்தை யெடுத்துக்கொடுத்து அத்தேவர்கட்கு அஸுரஜாதியால் யாதொரு தீங்கும் நேரிடாதபடி ரக்ஷித்தருளு மெம்பெருமானுடைய திருநாமமே ஸம்ஸாரிகளான நமக்கெல்லார்க்கும் உத்தாரகம் என்கிறார். கடல்

கடையுங்காலம் தேவாஸுரர்கள் பரஸ்பரம் பெரிய போர்புரியுங் காலமா யிருந்ததனால் "ஆளமர் வென்றியடுகளத்துள்" எனப்பட்டது; "ஆராத போரி லசுரர்களுந் தானுமாய்க், காரார் வரைநட்டு நாகங்கயிறாகப், பேராமல் தாங்கிக் கடைந்தான்" என்று சிறிய திருமடலிலுமருளிச் செய்யப்பட்டுளது

நரகு என்றது ஸம்ஸாரத்தை. .... (அக)

படையாரும் வாள்கண்ணார் பாரசிநாள் * பைம்பூம்
தொடையலோ டேந்திய தூபம் *—இடையிடையின்
மீன்மாய மாசூணும் வேங்கடமே * மேலொருநாள்
மான்மாய வெய்தான் வரை. (அஉ)

மேல் ஒரு நாள்	முன்னொருகாலத்திலே [ஸ்ரீராமாவதாரத்தில்]	பை பூ தொடையலோடு	பசிய (வாடாத) மலர்களைக் கொண்டு தொடுத்த மாலையோடுகூட
மான்	மாரீசனாகிற மாயமான்	ஏந்திய	(திருவேங்கடமுடையானுக்கு ஸமர்ப்பிக்கும்படி) ஏந்தியுள்ள
மாய	இறந்துவிடும்படி	தூபம்	தூபமானது
எய்தான்	அம்பு தொடுத்துவிட்ட இராமபிரான் (நித்யவாஸஞ்செய்கின்ற)	இடை இடையில் மீன்	(ஆகாசத்தில்) நடுவே நடுவே தோன்றுகின்ற நக்ஷத்ரங்கள்
வரை	மலையாவது,	மாய	மறையும்படி
படை ஆரும் வாள் கண்ணார்	வேலாயுதம் போன்று ஒளி பொருந்திய கண்களையுடைய பெண்கள்	மாசூணும்	மாசு ஏறும்படி பண்ணுகிற
பாரசி நாள்	த்வாதசியன்று	வேங்கடமே	திருமலையேயாகும்.

* * *—[படையாரும்.] பெண் பிறந்தாரும் அநாயாஸமாக ஆச்ரயிக்கும்படி எம்பெருமான் திருமலையிலே நித்யவாஸம் பண்ணுகிறபடியை அநுஸந்திக்கிறார். திருமலையில் நாள்தோறும் நானுவகை யடியவர்கள்வந்து ஆச்ரயியா நிற்க, 'படையாரும் வாள் கண்ணார்' என்று ஸ்த்ரீகளை மாத்திரமும் 'பாரசிநாள்' என்று த்வாதசீ தினத்தை மாத்திரமும் விசேஷித்து எடுத்துச் சொன்ன

தன் கருத்து யாதெனில்; அறிவொன்று மில்லாத பெண்களுங் கூட வந்து பணியுமாறு ஸர்வ ஸமாச்ரயணீயனாக இருக்குமிருப்பு விளங்குதற்காகப் 'படையாரும் வாள் கண்ணார்' என்றார்; சிற்றஞ் சிறுகாலையில் தானே பாரணை செய்யும்படி விடிவதற்கு முன்னே வைஷ்ணவர் யாவரும் தொழுவதற்கு ஏற்ற நாளாதல் பற்றி ஸத்வோத்தரமான த்வாதசிநாளை யெடுத்தருளிச் செய்தனர்.

'த்வாதசீ' என்னும் வடசொல் பாரசியெனச் சிதைந்தது. தூபம்—வடசொல். திருவாராதந உபகரணமான தூபத்தின் கமழ்ச்சியே திருமலையெங்கும் பரவிக் கிடக்கின்றதென்பது மூன்றாமடியின் கருத்து. .... (அஅ)

வரைகுடைதோள் காம்பாக ஆநிரைகாத்து * ஆயர்
நிரைவிடையேழ் செற்றவா றென்னே*—உரவுடைய
நீராழி யுள்கிடந்து நேரா நிசாசரர்மேல்
பேராழி கொண்ட பிரான். (அகூ)

உரவு உடைய { மிடுக்கை யுடைத்தான

நீர் ஆழியுள் { நீரையுடைய திருப்பாற் கடலிலே

கிடந்து திருக்கண்வளர்ந்து,

நேர் ஆ (ன) எதிரியாகவந்த

நிசாசரர் மேல் { மதுகைடபர் முதலிய ராக்ஷஸர்களின் மீது

(அவர்கள் நீறுகும்படி)

பேர் ஆழி { பெரிய சக்ராயுதத்தை

கொண்ட { கையிற் கொண்டிருக்கிற

பிரான் உபகாரகனே !,

(இப்படி கருதுமிடஞ் சென்று பொருது கைநிற்கவல்ல திருவாழி யாழ்வானிருக்கவும் அவனைக்கொண்டு காரியங்கொள்ளாமல்)

வரை குடை ஆக { (ஒருவராலும்அசைக்கவும் முடியாத கோவர்த்தன) மலையே குடையாகவும்

தோள் காம்பு ஆக { தனது திருத்தோளே (அந்தக் குடைக்குக்) காம்பாகவும் (ஆக்கி)

ஆ நிரை காத்து { பசுக்களின் கூட்டங்களைப் பாது காத்து,

(நப்பின்னைப் பிராட்டிக்காக)

ஆயர் நிரை விடை ஏழ் { இடையர்கள் வைத்திருந்த திரண்ட ரிஷபங்களேழையும்

செற்ற ஆறு முடித்தவிதம்

என்னே எங்ஙனே ?

* * *—[வரைகுடைதோள்.] எம்பெருமானே!, ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதும் ஆச்ரித விரோதிகளை சிக்ஷிப்பதுமாகிய இரண்டு காரியங்கள் உனக்கு உண்டு; ஆச்ரித விரோதிகளை சிக்ஷிப்பது தானே ஆச்ரித ரக்ஷணமாகத் தேறுமாதலால் விரோதிகளைத் தொலைப்பதென்கிற ஒரு காரியமே போதுமாயிருக்கின்றது; அக்காரியஞ் செய்ய உனக்கு முக்கியமான ஸாதநம் திருவாழி; அத்திருவாழியைக் கொண்டே ஆச்ரித விரோதிகளைப் பொடிபடுத்துகின்றாய்; மதுகைடபர் முதலிய துஷ்ட வர்க்கங்களைப் பொடிபடுத்தின அவ்வாயுதம் கையிலேயிருக்கவும், ஆநிரையைக் காக்க மலையையெடுப்பதும் நப்பின்னையைக் காக்க விடையேழடர்ப்பதும் முதலியனவாக உடம்புநோவக் காரியஞ்செய்தது என்னே? திருவாழியை ஏவினால் இந்திரனது தலை அறுபடுமே; கல்மழை ஓயுமே; ஆயர்களும் ஆநிரைகளும் இனிது வாழ்ந்து போமே; மலையை யெடுத்துப் பரிச்ரமப்பட்டிருக்க வேண்டாவே; இங்ஙனமே, நப்பின்னைப் பிராட்டியை மணம் புணர்வதற்கு விரோதியாயிருந்த எருதுகளின் மேலும் திருவாழியைப் பிரயோகித்திருந்தால் உனக்கொரு சிரமமின்றியே காரியம் இனிது நிறைவேறியிருக்குமே; இப்படி அநாயாஸமாக ஆச்ரிதவிரோதிகளை நிரஸிக்கும் முகத்தாலேயே ஆச்ரித ரக்ஷணத்தை மிக எளிதாகச் செய்யலாமாயிருக்கவும் நீ உடம்புநோவக் காரியஞ் செய்தது வெறுமனேயோ? ஆச்ரித பாரதந்திரியத்தால் அவர்கள் காரியத்தைச் செய்வதைப் பெரும்பேறாக நினைப்பதனாலன்றோ?—என்று ஆழ்வார் எம்பெருமானது ஆச்ரித பாரதந்திரியத்திலீடுபட்டுப் பேசினரென்க.

திருவாழியைக்கூட ஏவாமல் ஸங்கல்ப மாத்திரத்தாலே காரியஞ் செய்ய வல்லமை எம்பெருமானுக்கிருந்தாலும் ஆச்ரிதர்களுக்காகத் தான் உடம்புநோவக் காரியஞ் செய்தாலன்றித் தனக்கு த்ருப்தி பிறவாதாகையால் தானே கைதொட்டுக் காரியஞ் செய்தருள்கின்றனனென்பது உணரத்தக்கது. "மழுங்காதவைநுதிய சக்கர நல்வலத்தையாய், தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே, மழுங்காத ஞானமே படையாக மலருலகில், தொழும்பாயார்க்களித்தாலுன் சுடர்ச்சோதி மறையாதே!"

(3—1—9) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் பரமரஸமான பொருளையும் இங்கு அநுஸந்திக்க.

மூன்றாமடியில் 'நேரான' என்றிருக்க வேண்டிய பெயரெச்சம் 'நேரா' என்றிருக்கிறது.

நிசாசரர்—வடசொல்; இரவில் திரிகின்றவர்கள் என்று காரணக்குறி. (அ௩)

பிரானுன் பெருமை பிறரா ரறிவார் *
உரா யுலகளந்த நான்று*—வராகத்
தெயிற்றளவு போதாவா றென்கொலோ * எந்தை
அடிக்களவு போந்த படி. (அ௪)

பிரான்	உபகாரகனே! (நீ)
உலகு	லோகத்தை
உராய் அளந்த நான்று	எங்கும் ஸஞ்சரித்தபடி அளந்தகாலத்தில்
எந்தை	எனது ஸ்வாமியான வுன்னுடைய
அடிக்கு	திருவடிகட்கு
அளவு போந்த	அளப்பதற்குப் போந்திருந்த
படி	பூமியானது
வராகத்து	வராஹரூபியான உன்னுடைய
எயிறு	திருவெயிற்றின்
அளவு	ஏகதேசத்தளவும்
போதா	போதாதாக இருந்த
ஆறு	விதம்
என் கொல்	எங்ஙனேயோ?
உன் பெருமை பிறர் ஆர் அறிவார்	உனது பெருமையை யறிவார் யாருமில்லை.

* * *—[பிரானுன் பெருமை.] எம்பெருமானே! நீ பெரிய வடிவுகொண்டு உலகளந்தகாலத்து மிகவிசாலமான அத்திருவடிக்குப் பர்யாப்தமாயிருந்த பூமியானது வராஹாவதாரகாலத்தில் எயிற்றின் ஏகதேசத்திலும் அடங்காதிருந்ததென்று புராணம் வல்லார் வாய்க் கேள்விப்படுகின்றோம்; இப்படியிருந்ததற்கு ஹேது வான உனது பெருமை ஸர்வஜ்ஞனான உன்னால்தான் அறியமுடியுமோ முடியாதோவென்று ஸந்தேஹிக்கும்படியா யிராநின்றதே யன்றி உன்பெருமை ஒருவராலு மறியக்கூடியதா யில்லைகாண்-என்றாராயிற்று. உன்னால் மயர்வற மதிநலமருளப்பெற்ற என் போல்வார் உன் பெருமையை ஒருகால் கண்டறியக் கூடுமேயல்லாமல் ஸ்வயத்நத்தாலுணர விரும்புவார்க்கு ஒருநாளும் காண முடியாதென்று கூறுதலும் உள்ளுறையுமென்ப.

இரண்டாமடியில், உராய்-உலாய் [உலாவி] என்றபடி ரகர லகரங்கட்கு அபேதங்கொள்ளும் மரபினால் இவ்வாறு பொருள் கூறுதல் பொருந்தும். சிறிதும் சிரமமின்றி என்று கருத்து இது பட்டருடைய நிர்வாஹம். இனி, 'உரையாய்' என்னும் முன்னிலை யேவலொருமை வினைமுற்று 'உராய்' எனத் திரிந்திருப்பதாகக் கொள்ளலாமென்றான் ஒரு தமிழன்: 'சொல்லு' என்று பொருளாம்; அது வேண்டா. உராய்-உரோசிக்கொண்டு; எல்லாரோடும் தீண்டிக்கொண்டு என்றுமாம். (௮௪)

படிகண் டறிதியே பாம்பணையினான் * புட்
கொடிகண் டறிதியே கூறாய் *—வடிவில்
பொறியைந்து முள்ளடக்கிப் போதோடு நீரேந்தி *
நெறிநின்ற நெஞ்சமே நீ. (௮௫)

பொறி ஐந்தும்	பஞ்சேந்திரியங்களையும் (வெளியில் மேயவொட்டாதபடி)	நீ	நீ
		பாம்பு அணையினான்	சேஷசாயியான பெருமானுடைய
வடிவில் உள் அடக்கி	சரீரத்திற்குள்ளே அடங்கியிருக்கச் செய்து	புள் கொடி	கருடப்பறவையாகிற த்வஜத்தை
		கண்டு	ஸேவித்து
போதொடு நீர் ஏந்தி	(திருவாராதன ஸாமக்ரியான) புஷ்பங்களையும் தீர்த்தத்தையும் தரித்துக்கொண்டு	அறிதியே	அநுபவித்து அறிந்திருக்கிறாயோ? (அன்றி)
		படி	அவனது திருமேனியை
நெறி	ஆச்ரயிக்கும் மார்க்கத்திலே	கண்டு அறிதியே	ஸேவித்து அநுபவித்து அறிந்திருக்கிறாயோ?
நின்ற	நிலைத்து நின்ற		
நெஞ்சமே	மனமே!,	கூறாய்	சொல்லு.

* * *—[படிகண்டறிதியே.] கீழ்ப்பாட்டில் "பிரானுன் பெருமை பிறராரறிவார்" என்று ஆழ்வாரருளிச்செய்யவே, அவரது நெஞ்சானது "பிறராரறிவாரென்று சொல்லுவானேன்? நானறிந்திருக்கிறேனே" யென்று அபிப்ராயங்காட்ட; நெஞ்சே! நீயும் இந்திரியங்களை வென்று ஆச்ரயணத்திலே இழிந்தாயத்தனை யல்லது இன்னமும் அவன் படிகளை ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றா

யில்லையே; அப்படி ஸாக்ஷாத்கரித்திருப்பாயேல், அப்பெருமான் பெரிய திருவடியாகிற த்வஜத்தை யெடுத்துப் பிடித்துக்கொண்டு ஆச்ரித ரக்ஷணார்த்தமாக எழுந்தருளும்படியை ஸேவிக்கப் பெற்ருயோ? அன்றி, அவன் திருவனந்தாழ்வா னநுபவிக்கும்படி தனது திருமேனியைத் தந்தவண்ணமாக யோகநித்திரை செய்தரு ளும்படியை ஸேவிக்கப்பெற்ருயோ? ஏதேனும் ஸேவிக்கப்பெற்ற துண்டாகில் சொல்லிக்காண் என்கிருர்.

இதனால், எம்பெருமான் கருடாரூடனாய் ஸேவை ஸாதிக்கும் நிலைமையில் ஸேவிக்கப் பெறுதலிலும் சேஷசாயியாய் ஸேவை ஸாதிக்கும் நிலைமையில் ஸேவிக்கப் பெறுதலிலும் தமக்கு ஆசை கரைபுரண்டிருக்கும்படியை வெளியிட்டாராகிருர். (அரு)

நீயும் திருமகளும் நின்ருயால் * குன்றெடுத்துப்
பாயும் பனிமறுத்த பண்பாளா *—வாசல்
கடைகழியா வுள்புகாக் காமர்பூங் கோவல் *
இடைகழியே பற்றி யினி. (அசு)

குன்று	கோவர்த்தனமலையை
எடுத்து	வேரோடு பிடுங்கி யெடுத்து
பாயும் பனி மறுத்த	மேலேவந்துசொரிகிற மழையை மேலேவிழாமல் தடுத்த
பண்பாளா	குணசாலியே!
காமர் பூகோவல்	விரும்பத்தக்க அழகிய திருக்கோவலூரில்,
வாசல் கடை	திருவாசலுக்கு வெளியே
கழியா	வெளிப்பட்டுப் போகாமலும்
உள் புகா	உள்ளேபுகாமலும்
இடைகழியே	நடுக்கட்டான இடைகழியிடத்தையே (பொய்கை பூதம் பேய் என்ற நாங்கள் மூவரும் தங்கியிருந்ததனால்)
பற்றி	விரும்பிய இடமாகக்கொண்டு
நீயும் திருமகளும்	நீயும்பிராட்டியுமாக
இனி	இப்போது
நின்ருய்	நின்றருளினாய்;
ஆல்	ஆச்சரியம்!.

* * *—[நீயுந் திருமகளும்.] "பாவருந்தமிழாற் பேர்பெறு பனுவற் பாவலர் பாதிநாளிரவின், மூவருநெருக்கி மொழிவிளக் கேற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு" என்று புகழ்ந்து கூறும் படி முதலாழ்வார் [பொய்கையார், பூதத்தார், பேயார்] மூவரும்

ஒருவரை யொருவர் சந்தித்து அந்தாதிபாடின தலம் திருக்கோவலூர் என்பது ப்ரஸித்தம். இவ்வரலாற்றுக்கு மூலமாயிருக்கும் இப்பாட்டு.

பிரானே!, நானும் மற்றையாழ்வார்களிருவரும் ஓடித்திரியும் யோகிகளாய் க்ராமைகராத்ரமாய் ஸஞ்சரித்துப் போருகையில் உனது ஸங்கல்பத்தாலே திருக்கோவலூரில் நெருக்கமானதொரு இடைகழியிலேவந்துசேர, அங்கே நீ திருமகளோடுவந்து புகுந்து நெருக்கினாயே, இஃது என்ன திருவருள்! என்று ஈடுபடுகின்றார்.

திருக்கோவலிடைகழியில் நெருக்குண்ட முதலாழ்வார்கள் மூவரும் ஸ்ரீமந்நாராயணனுடைய நீலமேக ச்யாமளமான திருமேனியையும் காளமேகத்தில் மின்னற்கொடி படர்ந்தாற்போன்ற திருமகளாரையும் நெஞ்சென்னு முட்கண்ணாலே கண்டு அநுபவித்தபடியை இவ்வாழ்வார் இங்கு வெளியிட்டருளினராயிற்று. [இவ்வரலாற்றின் விரிவு இவரது சரித்திரத்திற் காணத்தக்கது.]

குன்றெடுத்துப் பாயும்பனிமறுத்த பண்பாளா! = கல்மழை காக்கக் கோவர்த்தனமெடுத்து நின்றவக்காலத்து இடையரிடைச்சிகளோடும் பசுக்கூட்டங்களோடும் நெருக்குண்டு நின்றாற்போலேயன்றோ எம்மோடு நெருக்குண்டிருந்தாயென்ற குறிப்பு. "பனி மறைத்த" என்றும் சிலர் பாடமோதுவர்.

வடமொழியில் 'தேஹளீ' என்னப்படும், உலகவழக்கில் 'ரேழி' என்னப்படும் வருகிற ஸ்தானமே இடைகழியாம். இடைகழிக்கு வெளியிலே ஸம்ஸாரிகளும், உள்ளே உபாஸகனும் ரிஷியுமா யிருக்கையாலே அநந்யப்ரயோஜநரான இவ்வாழ்வார்கள் மூவரும் நின்றவிடமே எம்பெருமான் தான் உவந்து சாருமிடமாகப் பற்றினனென்ப.

கீழ்ப்பாட்டில் ஆழ்வார் தமது திருவுள்ளத்தைக் குறித்து 'நீ அவனை ஸாக்ஷாத்கரித்து அநுபவிக்கப் பெற்றாயில்லை' என்று சொன்னது பொறுக்கமாட்டாமல் இவரிருந்த விடத்திலே எம்பெருமான் பிராட்டியுந் தானுமாகவந்து நெருக்க, அதைக் கண்டு அநுபவிக்கிறார் என்று இப்பாட்டுக்கு அவதாரிகை கூறுதல் பரம ரஸம், "இவர் தம்முடைய திருவுள்ளத்தைக் குறித்து 'ஸாக்ஷாத்

கரித்திலையிறே' என்னத் தரியானிறே அவன்" என்ற பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தியின் போக்யதையும் அநுபவிக்கத்தக்கது. முன்னேநடந்த திருக்கோவலிடைகழிநெருக்கத்தை எம்பெருமான் மீண்டும் அநுபவிப்பித் தருளினன் போலும். ... ... (௭௬)

இனியார் புகுவா ரெழுநரக வாசல் *
முனியாது மூரித்தாள் கோமின் *—கனிசாயக்
கன்றெறிந்த தோளான் கனைகழலே காண்பதற்கு *
நன்கறிந்த நாவலஞ்சூழ் நாடு. (௭௭)

கனி சாய	விளாம்பழம் உதிர்ந்துவிழும்படி
கன்று	வத்ஸாஸுரனை
எறிந்த	எறிதடியாக எடுத்தெறிந்து இரண்டசுரரையும் முடித்த
தோளான்	திருத்தோள்களையுடையவனான ஸர்வேச்வரனுடைய
கனை கழலே	ஆபரணத்வநியையுடைய திருவடிகளை
காண்பதற்கு	ஸேவிப்பதற்கு ஸாதநம்

(அவன் உகந்து வாழ்கிற திருக்கோவலூர்க்கு ஸமீபமான இடத்தில் வஸிப்பதுதானென்று)

நன்கு	நன்றாக
அம் நாவல் சூழ் நாடு	அழகிய 'ஜம்பூ' என்று பேர்படைத்த பரந்த த்வீபத்திலுள்ள பிராணிகள்
அறிந்த	அறிந்துவிட்டன;

(இப்படியானபின்)

எழு நரகம் வாசல்	ஏழுவகைப்பட்ட நரகங்களின் வாசல்களிலே
இனி	இனிமேல்
புகுவார் ஆர்	பிரவேசிப்பவர் யாவர்?

(ஒருவருமில்லை)

(ஓ யமகிங்கரர்களே!,)

முனியாது	(உங்கள் ஸ்தானத்துக்கு அழிவுண்டாவதாகச் சொல்லுகிற என்மேல்) கோபங்கொள்ளாமல்
மூரி தாள் கோமின்	(இனி ஒருகாலும் திறக்கமுடியாதபடி) பெரிய தாழ்ப்பாளைப் போட்டுப் பூட்டுங்கோள்.

* * *—[இனியார் புகுவார்.] கீழ்ப்பாட்டில் ஆழ்வாருடைய திருவுள்ளம் ஆநந்தத்தின் எல்லையிலே நின்றது; திருக்கோவலூரிடைகழியிலே பெருமானோடும் பிராட்டியோடும் நெருக்குண்டிருக்கும் நிலைமையிலேயே இருப்பதாகத் தம்மை யநுஸந்தித்தார்; இனித் தாம் உலகத்தாரை யெல்லாம் உபதேசங்களாலே நன்கு திருத்திப் பணிகொள்ளலாமென நிச்சயித்தார். அப்படியே எல்லாரும் திருந்தி எம்பெருமான் திருவடிகட்கு ஆட்பட்டுவிட்டதாகவும் பாவநாப்ரகர்ஷத்தாலே அநுஸந்தித்தார்; இனி எல்லாரும் ஈடேறி விட்டதாகவும் நரகத்துக்குச் செல்ல ஆள் கிடையாதாகவுங் கருதி "நமன்தமர்காள்! நீங்கள் நரகவாசலை யடைத்துவிட்டு ஓடிப்போகலாம்; இனி உங்கள் நாட்டுக்கு அதிதிகளாக வருவாராருமில்லை; உங்கட்கும் காரிய மொன்றுமில்லை; இங்ஙனே உண்மையை எடுத்துரைக்கின்ற என்மேல் நீங்கள் கோபங் கொள்ள வேண்டா" என்று யமபடர்களைநோக்கி கம்பீரமாக அருளிச்செய்கிறார்.

ஆழ்வாரருளிச்செயல்கள் நடமாடும் இந்த ஜம்பூத்வீபமே நாடு; மற்ற இடம் காடு என்ற பொருள் இதில் தொனிக்கும்.

"பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம், நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கி யாதொன்றுமில்லை" என்ற திருவாய்மொழிப் பாசுரம் இங்கு அநுஸந்திக்கத்தகும்.

ஈற்றடியில், அறிந்த—அன்சாரியை பெறாத வினைமுற்று; அறிந்தன என்றபடி. நாட்டிலுள்ளவர்கட் கெல்லாம் இனி விரைவில் பகவத் விஷயஜ்ஞாநம் உண்டாகியேவிடும் என்ற நம்பிக்கையினால் எதிர்காலச் செய்தியை இறந்தகாலச் செய்தியாகவே கூறிவிட்டாரென்க.

எழுநரகம்—நரகங்கள் பல பல கிடக்கின்றனவே; ஏழுதானேயுள்ளது என்னில்; கொடிய நரக வகைகளைப்பற்றி எழுநரகமென்றது; அவை "பெருங்களிற்று வட்டம் பெருமணல் வட்டம், எரியின் வட்டம் புகையின் வட்டம், இருளின் வட்டம் பெருங்கீழ் வட்டம், அரிபடை வட்டமென எழுவகை நரகம்" என ஓரிடத்திலும், "கூட சாலங் கும்பீபாகம், அள்ளலதோகதி யார்வம்பூ, செந்துவென்றேழுந் தீநரகப்பெயர்" என வேறோரிடத்திலும் இன்

னும் வரிவகையாகவும் தமிழ் நூல்களிற் கூறப்பட்டுள்ளன. இனி, ரௌரவம், மஹா ரௌரவம், தமஸ், நிக்ருந்தநம், அப்ரதிஷ்டம், அஸிபத்ரம், தப்தகும்பம் என்று கூறுவாரும் வேறுவகையாகக் கூறுவாருமுளர். இனி, "எழுநரகம்" என்ற இத்தொடர்க்கு— எழுகிற நரகம் = ஸம்ஸாரிகளடங்கலும் சென்று புகுகிற நரகம் என்றும், கிளர்த்தியையுடைய நரகமென்றும் பொருள் கூறுதலுமுண்டு.

முனியாது—நரகவாசலில் எப்போதும் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு தாங்கள் ஜீவிக்க நலியுமாறு எந்தப்பாவி வரப்போகிறானென்று எதிர்பார்த்தவண்ணமாயிருக்கின்ற யம படர்களை நோக்கி "மூரித்தாள் கோமின்=கதவுகளைக் கெட்டியாகப் பூட்டிக்கொண்டு ஒழிந்து போங்கள்" என்றால் அவர்களுக்குக் கோபம் உண்டாவதற்கு ப்ரஸக்தியுள்ளதனால் 'முனியாது' என்கிறார். உண்மையுரைப்பவன்மீது கோபங்கொள்ளலாகா தென்கை. மூரித்தாள்—மிக்க வலிமையுள்ள தாழ்ப்பாள். கோமின் என்ற வினைமுற்றில், கோ—வினைப்பகுதி ;-தொடுத்தல்.

கனிசாயக்கன்றெறிந்த வரலாறு:—கம்ஸனேவப்பட்ட அசுரர்களில் கபித்தாசுரன் விளாமரத்தின் வடிவமாய், கண்ணன் தன் கீழ் வரும்போது மேல்விழுந்து கொல்வதாக எண்ணி வந்துநிற்க, அதனையறிந்து க்ருஷ்ணபகவான் அவ்வாறே தன்னை முட்டிக் கொல்லும் பொருட்டுக் கன்றின்வடிவங் கொண்டுவந்த வத்ஸாஸுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்தெடுத்துச் சுழற்றி விளாமரத்தின்மேல் எறிய, இருவருஞ் சிதைந்து தமது அசுரவடிவத்துடனே விழுந்து இறந்தனர். (இது முள்ளைக் கொண்டே முள்ளைக் களைவது போலாம்.)

கனியாகிற இலக்கைக் கன்றுகொண்டு எறிந்து வீழ்த்தச் சென்றபோது உண்டான ஆபரண த்வநியி லீடுபட்டுக் கழலென்றார்.

நாவல் நாடு—ஜம்பூத்வீபம்; அதிலுள்ள பிராணிகட்கு இடவாகு பெயர். .... (அ௭)

நாடிலும் நின்னடியே நாடுவன் * நாடோறும்
பாடிலும் நின்புகழே பாடுவன் *—சூடிலும்
பொன்னாழி யேந்தினான் பொன்னடியே சூடுவேற்கு *
என்னாகி லென்னே யெனக்கு. (அஅ)

நாடிலும்	(மனத்தினால்) தேடும்போது
நின் அடியே	உனது திருவடிகளையே
நாடுவன்	தேடுவேன்;
நாள் தோறும்	எப்போதும்
பாடிலும்	வாய்விட்டு ஏதாவது சொல்லும்போதும்
நின் புகழே	உனது புகழ்களையே
பாடுவன்	பாடுவேன்;
சூடிலும்	(ஏதாவதொன்றைத் தலையில்) அணிவதாயிருந்தாலும்
பொன் ஆழி ஏந்தினான்	அழகிய திருவாழியைத்தரித்துக் கொண்டிருக்கின்ற உன்னுடைய
பொன் அடியே	அழகிய திருவடிகளையே
சூடுவேற்கு எனக்கு	சிரோபூஷணமாகக் கொள்பவனான எனக்கு
என் ஆகில் என்	எது எப்படியானாலென்ன ?.

* * *—[நாடிலும்.] கீழ்ப்பாட்டில் "இனியார் புகுவாரெழு நரகவாசல்" என்று கம்பீரமாக அருளிச் செய்துவிட்டாலும், உண்டியே உடையே உகந்தோடும் மண்டலத்தவர்கள் திருந்தி உய்வதென்பது எளிதன்றே; அநாதி துர்வாஸனையை அற்ப காலத்தில் அகற்றப்போமோ? நரகத்துக்கு ஆளில்லாமற் போகும்படி எம்பெருமான் அருகேயுள்ள திருக்கோவலூரி லெழுந்தருளி யிருக்கவும் அவனைப்பற்றாமல் நரகத்துக்கு ஆளாகும்படி ஸம்ஸாரிகள் சப்தாதி விஷயங்களிலேயே மண்டித் திரிகிறபடியைக் கண்டா ராழ்வார்; தாமும் அவர்களைப்போல ஆகாதபடி தமது மநோவாக் காயமென்னும் த்ரிகரணங்களும் அவ்வெம்பெருமான் விஷயத்தி லேயே ஊன்றி யிருக்குமாற்றை உவந்து நினைந்து 'நாட்டிலுள் ளார் இவனைப் பெற்றால்தான் எனக்கு என்ன? இழந்தால்தான் எனக்கு என்ன? நான் நல்லபடியே ஈடேறலானேனே!' என்று சொல்லித் தம் நிலைமைக்குத் தாம் மகிழ்கிறார். "நாடிலும் நின் னடியே நாடுவன்" என்றதனால் மநோவ்ருத்தியும், "பாடிலும் நின் புகழே பாடுவன்" என்றதனால் வாக்வ்ருத்தியும் "சூடிலும் பொன் னாழியேந்தினான் பொன்னடியே சூடுவேற்கு" என்றதனால் சரீர

வ்ருத்தியும் சொல்லப்பட்டனவாதலால், தமது மனமொழி மெய்கள் மூன்றும் பகவத் விஷயத்திலே அவகாஹித்தபடியை அருளிச்செய்தாராயிற்று.

ஈற்றடியில் 'என் ஆகில்' என்பதற்கு—எனது கரணத்ரயமும் எம்பெருமானைப் பற்றினபின்பு நான் இங்கு இருந்தால்தான் என்ன? பரமபதத்திற்குப் போனால்தானென்ன? எல்லாம் எனக்கு ஒன்றே—என்பதாகக் கருத்துரைத்தலுமாம்.

'சூடுவேற்கு' என்பதே 'சூடுகின்ற எனக்கு' என்று பொருள்பட விருந்தாலும், ஈற்றடியில் 'எனக்கு' என்று தனியே பிரயோகித்துள்ளதனால் சூடுவேற்கென்பது விசேஷணமாக மாத்திரம் பொருள்பட்டு நிற்கக்கடவது: சூடுகின்ற என்று பொருள். இங்ஙனமே பலகவிகளும் பிரயோகிப்பதுண்டு ... (அஅ)

எனக்காவா ராரொருவரே * எம் பெருமான்
தனக்காவான் தானே மற்றல்லால் *—புனக்காயாம்
பூமேனி காணப் போதியவிழும் பூவைப்பூ *
மாமேனி காட்டும் வரம். (அகூ)

எனக்கு	(எம்பெருமானுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்திற்குப் பாத்ரபூதனான) எனக்கு
ஆவார் ஆர் ஒருவரே	ஒப்பாகுபவர் எவரொருவரிருக்கின்றனர்?
	[எவருமில்லை ;]
எம்பெருமான்	அந்த ஸர்வேச்வரனும்
தானே தனக்கு ஆவான் அல்லால்	தானே தனக்கு ஒப்பாவானேயல்லாமல்
மற்று	அவன்தானும் எனக்கு ஒப்பாகவல்லனோ?
	(இப்படி நீர் சொல்லும்படி உமக்கு வந்த ஏற்றமென்ன? என்னில்)
புனம் காயா பூமேனி	தனக்கு உரிய நிலத்தில் தோன்றிய காயாம் பூவின் நிறமும்
காண பொதி அவிழும் பூவைப்பூ	காணக்காணக் கட்டவிழாநிற்கும் பூவைப்பூவின் நிறமும்
வரம்	சிறந்ததான
மா மேனி	(அவனது) கரிய திருமேனியை
காட்டும்	எனக்குக் காட்டாநிற்கும். [ஆகையாலே, போலியான பொருள்களைக் கண்டும் அவனைக் கண்டதாகவே நினைந்து மகிழ்கிற எனக்கு ஒருவரும் ஒப்பாகார் என்றது.]

* * *—[எனக்காவார்.] இப்பாட்டும் கீழ்ப்பாட்டுக்கு சேஷபூதம். கீழ்ப்பாட்டில் ஓடின மகிழ்ச்சிப்பெருக்கே இதனிலும் பொலியும். த்ரிகரணங்களும் எம்பெருமான்திறத்தி லீடுபட்டு அடிமைச் சுவையைப் பூர்ணமாக அறிந்த தமக்கு ஒப்பாவார் ஒருவருமில்லை யென்கிறார். தமக்குண்டான ஏற்றத்தைப் பின்னடிகளிற் பேசுகிறார்;—காயாம்பூ, பூவைப்பூ முதலியவற்றைக் கண்டால் ஸாமாந்ய ஜனங்கள் 'இவை சில காட்டுப்பூக்கள்' என்று எண்ணியொழிகின்றனர்; அப்புஷ்பங்களை நான் கண்டாலோ அப்படி எண்ணுவதில்லை; 'இவை ஸாக்ஷாத் எம்பெருமானது திருவுருவம்' என்றே நினைக்கின்றேன்; ஆகவே, இப்படி போலியான பொருள்களைக் கண்டவளவிலும் அப் பெருமானையே கண்டதாக நினைந்து களிக்கின்ற எனக்கு இவ்விபூதியில் நிகராவார் ஆருமில்லையே; எம்பெருமானும் தனக்குத்தான் நிகரானவனேயன்றி எனக்கு நிகரல்லன்—என்றாராயிற்று.

இப்படி எம்பெருமானது அடிமையி லீடுபட்டு அதன் மூலமான செருக்கைக் கொள்ளுதல் அடிக்கழஞ்சு பெறுதலால்தான் "எனக்கினியார் நிகர் நீணிலத்தே" என்றும் "எனக்காரும் நிகரில்லையே" என்றும் மற்றையோரு மருளிச்செய்வது. இவ்வஹங்காரம் ஹேயமன்று; உபாதேயமேயாம்.

"பூவையுங் காயாவும் நீலமும் பூக்கின்ற, காவிமலரென்றுங் காண்டோறும், பாவியேன் மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும், அவ்வவையெல்லாம் பிரானுருவே யென்று." என்ற பெரிய திருவந்தாதிப் பாசுரம் இங்கு ஸ்மரிக்கத்தகும். ... ... (அ௬)

வரத்தால் வலிநினைந்து மாதவ நின்பாதம் *
சிரத்தால் வணங்கானா மென்றே *—உரத்தினால்
ஈரரியாய் நேர்வலியோ னாய விரணியனை *
ஓரரியாய் நீயிடந்த தூன். (௯௰)

மாதவ — திருமாலே!,
ஈர் அரி ஆய் — (இரண்டுகூறாகக்) கிழித்துப் போடவேண்டிய சத்துருவாகி
நேர் வலியோன் ஆய — எதிர்த்து நின்று போர்செய்யும் வலிவையுடையனாகிய
இரணியனை — ஹிரண்யாஸுரனது

ஊன்	சரீரத்தை,	வலி	பலத்தை
ஓர் அரி ஆய்	ஒப்பற்ற நரசிங்க மூர்த்தியாகி	நினைந்து	பெரிதாக மதித்து
உரத்தினால்	உனது மிடுக்கினாலே	நின் பாதம்	உனது திருவடிகளை
நீ இடந்தது	நீ உன் நகங்களினால் குத்திக் கீண்டதானது,	சிரத்தால்	தனது தலையினால்
வரத்தால்	(பிரமன் முதலானவர்கள் கொடுத்த) வரத்தினால் (தனக்கு உண்டான)	வணங்கானும் என்றே	வணங்காமலிருந்தானென்ற காரணத்தினாலோ? (அன்று; பக்தனான ப்ரஹ்லாதனை நலிந்தானென்ற காரணத்தினாலே.)

* * *—[வரத்தால் வலி நினைந்து.] எம்பெருமான் தன்னளவிலே ஆஸுரப்ரக்ருதிகள் எத்தனை அபசாரப்பட்டாலும் அதனால் சிறிதும் திருவுள்ளம் சீறமாட்டான்; தன்னடியவர்பக்கல் அபசாரப்படுமளவில் அவ்வபராதிகளைப் பங்கப்படுத்தியே தீருவன்—என்கிற அர்த்தம் இப்பாட்டி லருளிச் செய்யப்படுகிறது. "மாதவனே!, நீ இரணியனை ஊனிடந்ததானது (அவன்) நின் பாதம் சிரத்தால்வணங்கானுமென்றே?" என்ற வினாவினால்—இரணியன் உன் பக்கலிலே விமுகனாய்க் கிடந்தானென்னும் காரணத்தினால் அவனை நீ கொன்றொழித்தாயல்லை; பரம பாகவதனான ப்ரஹ்லாதன் திறத்திலே அவன் பொறுக்கொணாக் கொடுமைகளைப்புரிந்தானென்பது பற்றியே அவனை யொழித்தாய் என்ற ஸமாதாநம் வெளியிடப்பட்டதாகும்.

"ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத் தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை யென்று ஜீயரருளிச் செய்வர்" என்று ஸ்ரீவசநபூஷணத்திற் பாசுரம். அதாவது—ஸங்கல்ப மாத்திரத்தாலே எல்லாவற்றையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வ சக்தியான ஸர்வேச்வரன் தன்னையழியமாறி இதர ஸஜாதீயனாயவதரித்துக் கைதொடனாய் நின்று செய்த ஹிரண்ய ராவணாதி நிரஸநரூபமான அதிமாநுஷ க்ருத்யங்களெல்லாம் ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் முதலான பாகவதர் திறத்தில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே என்று நஞ்சீயரருளிச்செய்வராம். இவ்வர்த்தமே இப்

பாட்டி லருளிச்செய்யப்படுகிறது. எம்பெருமான் தன்னளவிலே நீரக்கழிய அபராதப் படுமவர்களைப்பற்றி ஒன்றும் கணிசியான்; ஆச்ரிதர் விஷயத்தில் ஸ்வல்பாபராதம் பண்ணுவானுண்டாகிலும் அவனை அப்போதே தலையறுத்துப் பொகடுவானென்பது இதிஹாஸ புராண ப்ரஸித்தம். ["𑌤𑍍𑌵𑌯𑌿 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑍇 𑌕𑌿𑌂𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌸𑍀𑌤𑌯𑌾 𑌮𑌮?" = த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம.] இராமபிரான் எழுந்தருளி நிற்கச்செய்தே இராவணன் கோபுரசிகரத்திலே வந்து தோற்றினவாறே 'ராஜத்ரோஹியான இப்பயல் பெருமாள்திருமுன்பே நிற்கையாவதென்?' என்று ஸுக்ரீவமஹாராஜர் அவன்மேலே பாய்ந்து வென்று வந்தபோது அவரைநோக்கிப் பெருமாள் இங்ஙனே அருளிச்செய்கிறார்;— 'நீர் மஹாராஜரான தரம்குலைய [உம்மைத் திரஸ்கரித்து] அந்த ராக்ஷஸப்பயல் ஒருவார்த்தை சொன்னானாகில் பிறகு ஸீதை தானும் எனக்கு ஏதுக்கு?' என்றார். ஆச்ரித விஷயத்திலே எம்பெருமானுடைய பக்ஷபாதம் இப்படியன்றோ இருப்பது. தன் உயிர்நிலையான பாகவதர்களுக்கு ஒரு தீங்கு நேர்ந்தால், தனக்குத் தீங்குநேரும்போது பிறக்கும் சீற்றம் அற்பமென்னும்படி சீற்றம் பெருகிச்செல்லும். தான் ஸமுத்ரராஜனை சரணம் புகச்செய்தேயும் அவன் முகங்காட்டிற்றிலனாக, "கோபமாஹாரயத் தீவ்ரம்" என்னும்படி சீற்றத்தை வரவழைத்துக் கொண்டார் பெருமாள்; பின்பு இராவணனாலே அனுமான் நோவுபட்டபோது "ததோ ராமோ மஹாதேஜா: ராவணேந க்ருதவ்ரணம்—த்ருஷ்ட்வா ப்லவக சார்தூலம் கோபஸ்ய வசமேயிவாந்." என்னும்படி கோபமிட்ட வழக்கானார். இங்ஙனேயிறே பாகவதவிஷயத்திலே எம்பெருமானுக்குள்ள பரிவின் மிகுதியிருப்பது.

இரணியன் எம்பெருமான் திறத்திலே நேராக அபசாரப்பட்டுத் திரிந்தநாள்கள் எண்ணிறந்தவையுண்டு; அந்நாட்களிலே எம்பெருமானுடைய திருவுள்ளம் அவ்வரக்கனளவிலே சிறிதும் விகாரப்படவில்லை; பள்ளியிலோதிவந்த தன்சிறுவன் வாயிலோராயிரநாமம் ஒள்ளியவாகிப்போத ஆங்கதனுக்கு ஒன்றுமோர் பொறுப்பிலனாகிப் பிள்ளையைச் சீறிவெகுண்டு நலிந்தானென்று அறிந்தவாறே "நம்மளவிலே எத்தனை தீம்பனாயிருந்தாலும்

பொறுத்திருப்போம்; நம்முடையனான சிறுக்கனை நலிந்தபின்பும் பொறுத்திருக்கவோ" என்று ஆறியிருக்கமாட்டாதே அப்போதே வந்துதோன்றிப் புடைத்தானாயிற்று.

இப்பாட்டில் வினாமாத்திரமே யுள்ளது; விடை இல்லை; அதனை வரதராஜஸ்தவத்தில் கூரத்தாழ்வான் வெளியிட்டருளினார். "யத்வாராஹஸஹஸ்ரஜஸ்ரஜம் த்வயி ஶரண்ய! ஹிரண்ய உத்வாஹஸ। வாத்ய தேந கிம் த்வதிதி யஃ விசஷ்டி ஸுரேந்த்ரநிஸ்ஸ்ரஜ நாத்யபா:." என்ற அறுபத்தெட்டாம் ச்லோகம் இப்பாசுரத்திற்கே விவரணமாக அவதரித்ததென்க. ஆழ்வார்கள் எம்பெருமானுடைய சில அபதானங்களைப் பற்றிப் பேசியருளும்போது உத்தரம் இன்னதென்பதை வெளியிடாமல்தானே கேள்விமாத்திரங் கேட்டு ஸூத்ரம்போலே நிறுத்துவர்கள்; அவர்களுக்கு விவக்ஷிதமான விடையை ஆழ்வான் தமது ஸ்தவங்களில் வெளியிட்டருள்வது வழக்கம். பெரிய திருவந்தாதியில் "சீராற்பிறந்து சிறப்பால் வளராது, பேர்வாமனாகாக்கால் பேராளா!—மார்பாரப், புல்கி நீயுண்டுமிழ்ந்த பூமி நீரேற்பரிதே, சொல்லு நீ யாமறியச் சூழ்ந்து" என்று கேள்விமாத்திரமாய் ஸூத்ரம்போலே அருளிச்செய்ததை இவ்வாழ்வான்தாம் அதிமாநுஷ ஸ்தவத்திலே "த்வந்நிர்மிதா ஜடரகாச தவ த்ரிலோகீ கிம் பிக்ஷணாதியம்ருதே பவதா துராபா?' என்று அநுவதித்து, "மத்யே கதாது ந விசக்ரமிஷே ஜகச்சேத் த்வத் விக்ரமைஃ கதமிவ ச்ருதிரஞ்சிதா ஸ்யாத்." என்று உத்தரார்த்தத்தாலே ஆழ்வாருடைய திருவுள்ளத்தை வெளியிட்டருளினார். ஆழ்வார் வெளிப்படையாக அருளிச் செய்துள்ளவற்றுக்கு ஆழ்வான் ஸூத்ர மியற்றுமிடமு முண்டு: திருவாய்மொழியிலே "மழுங்காத வைநுதிய சக்கரநல் வலத்தையாய், தொழுங்காதல்களிறளிப்பான் புள்ளூர்ந்துதோன்றினையே, மழுங்காதஞானமே படையாக மலருலகில், தொழும்பாயார்க் களித்தால் உன்சுடர்ச்சோதி மறையாதே." என்று வெளிப்படையாக அருளிச் செய்ததற்கு இவர் ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்திலே "விஶ்வம் பிபேஷ விதயஸ்ய நிகாய்ய ஸத்யஃ ஸஞ்ஜஹ்ருஷேஷு ஸரீஸ்ருதவத்ஸ்வவத்தே। ஹ்ருஜ்ஜத்யுஷ்வ மஹோத்ஸவம் ஹிதேந வாஹம் வராஹரூபஶேஷேஷிவ கா

உநீஷா. ?" என்று ஸூத்ரமியற்றி யருளினார். இங்ஙனே கண்டு கொள்க.

"வரத்தால் வலிநினைந்து" என்ற தொடரில்—இரணியன் தனக்கு வரங்கிடைத்ததைப் பெரிதாக நினைத்தானேயல்லாமல் வரங் கொடுத்தவர்களின் சக்தி ஸ்ரீமந்நாராயணனுடைய அதீநம் என்பதை நினைத்தானில்லை—என்ற கருத்துத் தோன்றும். ஈர் அரி—பெரிய சத்ரு என்றுமாம். ஓர் அரி=ஓர்தல்—தியானித்தல்; (பக்தர்களால்) தியானிக்கப்படுகின்ற நரசிங்கம் என்னவுமாம். (௯0)

ஊனக் குரம்பையி னுள்புக் கிருள்நீக்கி *
ஞானச்சுடர் கொளீஇ நாடோறும் *—ஏனத்
துருவா யுலகிடந்த வூழியான் பாதம் *
மருவாதார்க் குண்டாமோ வான். (௯௧)

ஊனக் குரம்பையின்	மாம்ஸத்தினாலாகிய (சரீரமாகிற) குடிசையிலே
உள் புக்கு	உள்ளே பிரவேசித்து [அதாவது—சரீரத்தின் தோஷமெல்லாம் மனத்திற் படியும்படி அதை நன்றாக ஆராய்ந்து]
இருள் நீக்கி	(சரீரம் போக்யமென்று நினைக்கிற அஜ்ஞானமாகிற) இருட்டைப்போக்கி
ஞானம்	தத்வஜ்ஞானமாகிற
சுடர்	விளக்கை
கொளீஇ	ஏற்றி,
ஏனத்து உரு ஆய்	வாராஹரூபியாகி
உலகு இடந்த	(பிரளயங்கொண்ட) பூமியைக்குத்தியெடுத்துக் கொணர்ந்த
ஊழியான்	எம்பெருமானுடைய
பாதம்	திருவடிகளை
நாள்தோறும்	எப்போதும்
மருவாதார்க்கு	ஸேவியாதவர்களுக்கு
வான் உண்டாமோ	பரமபதம் கிடைக்குமோ? [கிடைக்கமாட்டாது.]

* * *—[ஊனக்குரம்பையின்.] கீழ்ப்பாட்டில் நரஸிம்ஹாவதார ப்ரஸ்தாவத்தினால் அவ்வவதாரத்திற்கு முந்தின வராஹாவதாரம் ஸ்மரிக்கப் பட்டதாகி அதனைப்பேசி யநுபவிக்கிறார். "ஊனக்குரம்பையினுள்புக்கு" என்றது—"தீண்டா வழும்புஞ்

செந்நீருஞ் சீயு நரம்புஞ் செறிதசையும், வேண்டா நாற்றமிகு முடல்" என்று பரமஹேயமாகச் சொல்லப்பட்டும் காணப்பட்டு மிருக்கின்ற சரீரத்தின் தோஷங்களை யெல்லாம் செவ்வையாக ஆராய்ந்து என்றபடி. இருள் நீக்கி—சரீரமே போக்யமென்று நினைக்கிற அஜ்ஞாநத்தை இங்கு இருளென்றார்; சரீரத்தின் தோஷமெல்லாம் மனத்திற்படியவே இந்த அஜ்ஞாநம் நீங்கு மென்க. அஜ்ஞாநவிருள் நீங்கிற்றென்றால் ஞானச்சுடர் தன்னடையே கொழுந்துவிட் டோங்குமாதலால் அதனை இரண்டா மடியி லருளிச்செய்தார். ஆகூ, சரீரத்தைப்பற்றின அஜ்ஞாநம் தொலைந்து ஆத்மாவைப்பற்றின ஸத்ஜ்ஞாநம் திகழ்ந்து ஞானப்பிரானது திருவடிகளையடைந்து வாழுமவர்கட்கே வானுலகம் எய்தலாகும்; மற்றையோர்க்கு அஃதில்லை என்றதாயிற்று. சுடர் கோளீஇ—சுடர் கொளுவி; சொல்லிசையளபெடை. உலகமெல்லா மழிந்த யுகாந்த காலத்திலும் தான் இவற்றை ஸத்தையழியாமல் பாதுகாத்துக் கொண்டிருந்தவன் என்னுங் காரணத்தினால் எம்பெருமானுக்கு ஊழியானென்று பெயராயிற்று. (௬௧)

வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய் *
தேனாகிப் பாலாம் திருமாலே *—ஆனாய்ச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே * முன்னொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு. (௬௨)

வான் ஆகி,	ஆகாசமாகியும்
தீ ஆய்	அக்நியாகியும்
மறி கடல் ஆய்	அலையெறிகிற கடலாகியும்
மாருதம் ஆய்	காற்றாகியும்
தேன் ஆகி	தேன்போன்றும்
பால் ஆம்	பால்போன்றும் பரம போக்யனான
திரு மாலே	எம்பெருமானே!
முன் ஒருநாள்	பிரளயம் நீங்கின காலத்திலே
மண்ணை	(பிரளயகாலத்தில் உட்கொண்டிருந்த) இவ்வண்டத்தை
உமிழ்ந்த	(உள்ளேயிருந்து தளர்ந்துபோகாதபடி) வெளிவிட்ட
வயிறு	உன் வயிறானது

ஆன் ஆய்ச்சி வெண்ணெய்	இடைக்குலத்திற் பிறந்தவளான யசோதையென்னும் இடைச்சி கடைந்துவைத்த வெண்ணெயை	விழுங்க	அள்ளி அமுது செய்ததனால்
		நிறையுமே	நிறைந்துவிடுமோ? [நிறைய மாட்டாது.]

* * *—[வாஞகித்தீயாய்.] உலகமுண்ட பெருவாயனான வுனக்கு ஓரிடைச்சி கடைந்துவைத்திருந்த வெண்ணெயைவாரி விழுங்கியுண்டவளவால் பசி தீர்ந்ததாகுமோ? என்றவிதன் கருத்து யாதெனில்; அவாப்தஸமஸ்தகாமனான வுனக்குப் பசி என்பதில்லை; வெண்ணெய் முதலியவற்றைக் களவுசெய்து உண்டதெல்லாம் பசிநீங்கி வயிறுநிறைவதற்காகவன்று; ஆச்ரிதருடைய ஹஸ்த ஸ்பர்சம்பெற்ற வஸ்துவை உட்கொண்டாலன்றித் தரிக்க முடியாமையினால் ஊண்டாயத்தனை—என வெளியிட்டபடியாம்.

நம்மாழ்வாரும் திருவாய்மொழியில், "உண்டாயுலகேழ் முன்னமே உமிழ்ந்துமாயையால் புக்கு, உண்டாய் வெண்ணெய் சிறுமனிசருவலையாக்கை நிலையெய்தி, மண்டான் சோர்ந்த துண்டேலும் மனிசர்க்காகும் பீர்சிறிதும், அண்டாவண்ணம் மண்கரைய நெய்யூண் மருந்தோ மாயோனே!" என்ற பாசுரத்தில் இங்ஙனே யருளிச்செய்தது காண்க.

"ஆச்ரிதஸ்பர்சமுள்ள த்ரவ்யத்தாலல்லது தரிக்கமாட்டாத படியான வ்யாமோஹத்தாலே அமுதுசெய்தா யத்தனையன்றோ" என்பது அவ்விடத்து வியாக்கியானம் 1. "தாழ்குழலார் வைத்த தயிருண்ட பொன்வயிறு, இவ்வேழுலகு முண்டும் இடமுடைத்தால் சாழலே" என்றும் 2. "உறியார் நறுவெண்ணெ யுண்டுகந்த பொன்வயிற்றுக்கு எறிநீருலகனைத்தும் எய்தாதால் சாழலே" என்றும் திருமங்கையாழ்வாரருளிச் செய்தவையும் அறியத் தக்கன.

"வாஞகி...மாருதமாய்" என்று இங்கே நான்கு பூதங்களைச் சொன்னது ஐந்தாவது பூதத்துக்கும் உபலக்ஷணம்; இத்தால், பஞ்ச பூதங்களாற் சமைந்த இவ்வண்டத்திற்குள் ளிருக்கும் பதார்த்தங்கட்கு நிர்வாஹகனானவனே! என்றதாயிற்று.

---

1. பெரியதிருமொழி 11—5—3. 2. ௸ 11—5—4.

தேனுகிப்பாலாந்திருமாலே! என்றது—பரம போக்யனை உன்னை ஞானிகள் உட்கொள்ளக் கருதாநிற்க நீ வேறொரு வஸ்துவை போக்யமாக நினைத்து உட்கொள்ளுவது என்னோ? என்ற குறிப்பு. .... (௯௨)

வயிறழல வாளுருவி வந்தானை யஞ்ச *
எயிறிலக வாய்மடுத்த தென்நீ *—பொறியுகிரால்
பூவடிவை யீடழித்த பொன்னாழிக் கையா * நின்
சேவடிமே லீடழியச் செற்று. (௯௩)

பூ வடிவை ஈடு அழித்த — புஷ்பத்தின் ஸௌகுமாரத் தன்மையை அடியோடு போக்கிய [மிகவும் ஸௌகுமாரமான]

பொன் ஆழி கையா — அழகிய திருவாழியைக்கொண்ட திருக்கையையுடையவனே!

வயிறு அழல — (என்ன தீங்கு நேருமோவென்று அநுகூலர்) வயிறெரியும்படி

வாள் உருவி வந்தானை — வாளை உருவிக்கொண்டு வந்தவனை ஹிரண்யனை

அஞ்ச — (அவன் உன் வடிவத்தைக்கண்டு) நடுங்கும்படி

நின் சேவடி மேல் — உனது திருவடிகளின்மேலே (போட்டுக்கொண்டு)

பொறி உகிரால் — நாநாவர்ணமான நகங்களினால்

ஈடு அழிய செற்று — கட்டுக்குலைந்து போம்படி கொன்று (பின்னையும் சீற்றம் மாறாமையால்)

எயிறு இலக — பற்கள் வெளித்தெரியும்படி

நீ வாய் மடுத்தது — நீவாயை மடித்துக் கொண்டிருந்தது

என் — ஏதுக்காக?

* * *—[வயிறழல] புஷ்பத்தைக்காட்டிலும் மிகவும் ஸௌகுமாரமான திருக்கையினால் முரட்டுடம்பனை இரணியனைத்தொட்டுப் பிடித்திழுத்து ஆச்ரிதர்கட்கு ப்ராப்யமான திருவடிகளின் மேலே போட்டுக்கொண்டு மார்வைப் பிளந்தொழித்த பின்பும் பிரானே! நீ உனது பற்கள் வெளித்தெரியும்படி நாவை மடித்துக் கொண்டிருந்தது ஏதுக்காக? ஆச்ரிதவிரோதி முடிந்துபோனபின்பும் வெகு நாழிகைவரையில் சீற்றம் மாறாதேயிருந்தது ஏன்! என்று கேட்கிறவிதன் கருத்துயாதெனில்; எம்பெருமான் ஆச்ரித

விரோதிகளின்மீது கொள்ளும்கோபமே சரணாகதர்க்குத் தஞ்சமாவது என்ற அர்த்தத்தைக் காட்டினபடியாம். திருமங்கையாழ்வாரும் 1. "கொடியவாய் விலங்கினுயிர் மலங்கக் கொண்ட சீற்றமொன்றுண்டுளதறிந்து உன்னடியனேனும் வந்தடியிணையடைந்தேனணி பொழில் திருவரங்கத் தம்மானே!" என்றருளிச் செய்ததுகாண்க: அவ்விடத்து வியாக்கியானத்திலே "தரித்ரனானவன் தநிகனை யடையுமாபோலே 'சீற்றமுண்டு' என்றாய்த்து இவர் பற்றுகிறது ; .... விரோதி நிரஸநத்துக்குப் பரிகரமிறே சீற்றம்" என்று பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்துள்ளதும் குறிக்கொள்ளத்தக்கது.

எயிறிலகவாய்மடித்ததேன்? என்ற இக்கேள்விக்கு வாய்த்த உத்தரம்:—ஆச்ரித விரோதி விஷயத்திலுண்டான இப்படிப்பட்ட அளவுகடந்த சீற்றமே உங்கட்கெல்லாம் தஞ்சமென்று மற்றும்பல பக்தர்களுக்குக் காட்டுதற்காகவாம் என்பது.

"பொன்னாழிக் கையால்" என்றும் பாடமாம். ... (கூ௩)

சேற்றெழுந்து தீவிழித்துச் சென்றவிந்த வேழுலகும் *
மற்றிவையா வென்று வாயங்காந்து *—முற்றும்
மறையவற்குக் காட்டிய மாயவனை யல்லால் *
இறையேனு மேத்தா தென்னா. (கூ௪)

எழுந்து	(அநியாயம் மேலிட்டபடியால் லௌகிக பதார்த்தங்களை யெல்லாம் அடியோடு அழிக்கப் பெருமுயற்சியோடு) கிளம்பி	இந்த ஏழ் உலகும்	இவ்வுலகங்களை யெல்லாம்
		செற்று	அழித்து
		மற்று	பின்பு
தீ விழித்து	(உள்ளே கொண்ட கோபம் வெளிக்குத்தெரியும்படி) நெருப்பெழ விழித்துப்பார்த்து	இவை	"பிரளயத்தில் அழிந்த இப்பதார்த்தங்கள்
		சென்ற	(என்னிடத்து) அடங்கிக் கிடக்கின்றன" (என்று சொல்லி)

1. பெரிய திருமொழி 5—8—3

ஆவென்று வாய் அங்காந்து	ஆவென்று வாயைத்திறந்து
முற்றும்	ஸகல ஜகத்தையும்
மறையவற்கு	வைதிகனான மார்க்கண்டேய மஹர்ஷிக்கு
காட்டிய	(முன்போலவே யிருப்பதைக்) காட்டியருளிய
மாயவனை அல்லால்	ஆச்சர்ய சக்தியுக்தனான எம்பெருமானைத் தவிர்த்து (வேறொருவனை)
என் நா	எனது நாவானது
இறையேனும்	சிறிதும்
ஏத்தாது	துதிக்கமாட்டாது.

* * *—[சேற்றெழுந்து.] காலகதியைக் கடந்து என்றும்பதினாறாக நீடூழி வாழும்படி நீண்டஆயுள்பெற்ற மார்க்கண்டேயமுனிவன் பத்திர நதிக்கரையில் தவம்புரிந்து நரநாராயணரது ஸேவையைப்பெற்று 'யான் பிரளயக் காட்சியைக் காணுமாறு அருள் புரியவேண்டும்' என்று பிரார்த்திக்க, அவ்வாறே அவர்கள் அநுக்ரஹித்துச் சென்றபின்பு, மாயவன் மாயையால் மஹாப்ரளயந் தோன்ற, அப்பிரளயப் பெருங்கடலிற் பலவாறு அலைப்புண்டு வருந்திய மார்க்கண்டேயன் அவ்வெள்ளத்தில் ஆலிலையின்மீது ஒரு குழந்தைவடிவமாய் அறிதுயிலமர்கிற ஸ்ரீமந் நாராயணனைக் கண்டு அப்பெருமானது திருவயிற்றினுட்புகுந்து அங்கிருந்த உலகங்களையும் ஸகல சராசரங்களையும் கண்டு பெருவியப்புக் கொண்டனன் என்ற இதிஹாஸம் அறியத்தக்கது. பிள்ளைப்பெருமாளையங்கார் திருவரங்கத்தந்தாதியிலும் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியிலும் "எய்த்த மார்க்கண்டன் கண்டிடவமலைக்கு முலகழியாதுள்ளிருந்த தென்னே" என்றும் "ஆலத்திலை சேர்ந்தழியுலகை யுட்புகுந்த காலத்திலெவ்வகை நீ காட்டினாய்...வேதியற்கு மீண்டு" என்றும் பேசினவை காண்க.

யுகாந்த காலத்திலே உலகத்தில் அக்ரமம்விஞ்சி அதனால் எம்பெருமான் உக்கிரங்கொண்டு இவ்வுலகங்களை யெல்லாம் அழித்துத் தன்னிடத்திலே யடக்கிக் கொள்வனென்னும் நூற்கொள்கை முதலடியில் காட்டப்பட்டது.

முதலடியில், சென்ற—சென்றன என்றபடி: அன்சாரியை பெறாத வினைமுற்று. .... (௯௰)

நாவாயிலுண்டே நமோ நாரணாய வென்று *
ஓவா துரைக்கு முரையுண்டே *—மூவாத
மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே * என்னொருவர்
தீக்கதிக்கண் செல்லும் திறம் (௯௫)

நா	(ஸ்தோத்ரம் பண்ணுவதற்குக் கருவியான) நாக்கானது (ச்ரமப்பட்டுத் தேடவேண்டாதபடி)
வாயில் உண்டே	ஒவ்வொருவருடைய வாயிலும் படைக்கப்பட்டிருக்கின்றதே ;
ஓவாது	(ஸஹஸ்ராக்ஷரீமாலா மந்த்ரம்போலே இடையிடையே) விட்டு விட்டுச் சொல்லாமல்
உரைக்கும்	(எளிதாக ஒரு மூச்சிலே) சொல்லக்கூடிய
நமோ நாரணாய என்று உரை	திருவஷ்டாக்ஷர மந்த்ரம்
உண்டே	ஸித்தமாயிருக்கின்றதே ;
மூவாத	கிழத்தன்மையற்ற [திரும்பிவருதலில்லாத]
மா கதிக்கண்	பரமப்ராப்யமான மோக்ஷத்திலே
செல்லும் வகை உண்டே	சென்று சேர்வதற்கேற்ற உபாயம் உண்டே;
	(இப்படியிருக்கவும் உஜ்ஜீவிக்காமல்)
தீ கதிக்கண்	விநாசத்துக்குக் காரணமான கெட்ட வழிகளிலே
ஒருவர்	சிலர்
செல்லும் திறம் என்	போய்விழுகிறபடி என்னோ !.

* * *—[நாவாயிலுண்டே.] இவ்வுலகில் எல்லாருமே நற்கதி பெறுதற்கு யாதொரு தடையுமில்லை; எளிதில் அநுஸந்திக்கக்கூடிய திருவஷ்டாக்ஷரம் ஸித்தமாயிருக்கின்றது; அதைச் சொல்லுவதற்குக் கருவியான நாவும் கடவுளால் படைக்கப்பட்டிருக்கின்றது; இப்படி எம்பெருமானை ஏத்துகைக்கென்று ஏற்பட்ட நாவைக்கொண்டு எம்பெருமானை ஏத்தாதே உபயோகமற்ற விஷயங்களைச் சொல்லுகைக்கு இதைக் கருவியாகக்கொண்டு உலகத்தார் அநர்த்தப் படுகின்றார்களே ! இஃது என்ன ஆச்சரியம்!—என்று ஆழ்வார் வியக்கின்றார். "நாராயணேதி ஶப்தோஸ்தி வாகஸ்தி வஶவர்த்திநீ। ததாபி நரகே கோரே பதந்தீதி கிமத்புதம் = நாராயணேதி சப்தோஸ்தி வாகஸ்தி வசவர்த்நீதி,

ததாபி நரகே கோரே பதந்தி கிமத்புதம்." என்ற புராண ச்லோகத்தின் பொருளை இப்பாட்டால் அநுஸந்தித்தாராயிற்று.

முதலடியில் "நமோ நாரணா வென்று" என்றே பெரும்பான்மையான நவீந பாடம் வழங்கிவரக் காண்கிறது; இப்பாடத்தில் வெண்டளை பிறழ்தலால் "நமோ நாரணாய வென்று" என்ற ப்ராசீந பாடமே கொள்ளத்தகும். இனி நவீநபாடத்தையும் பொருந்தவிடலாம்; 'நாரணா வென்றோவாதுரைக்கும்' என்று ஸந்தியாக்காமல் "நாரணாவென்று ஓவாதுரைக்கும்" என்று ஸந்தியாக்குக: குற்றியலுகரத்துக்கு முன் உடம்படுமெய் வந்ததாகக் கொள்க.

இரண்டாந்திருவந்தாதியில் "தாமுளரே தம்முள்ள முள்ளுளதே, தாமரையின் பூவுளதே ஏத்தும் பொழுதுண்டே-வாமன், திருமருவு தாள்மருவு சென்னியரே செவ்வே, அருநரகஞ் சேர்வதரிது" என்ற பாசுரமும் பெரும்பாலும் இப்பாட்டின் கருத்தைத் தழுவியதே யென்க.

ஓவாதுஉரைக்கும் உரை = ஸஹஸ்ராக்ஷரீமாலா மந்த்ரத்தைச் சொல்லவேணுமானால் இடையில் மூச்சுவிடவும் முடியாதே நெடுமுயற்சிகொண்டும் ஒய்ந்து ஒய்ந்து சொல்லவேண்டிய அருமையுண்டு; திருவஷ்டாக்ஷரம் அப்படியன்று; இடையில் ஒய்வை அபேக்ஷியாமல் ஒருகாலே சொல்லி இளைப்பாறலாம் படியான மந்த்ரமிது. இவ்வளவு ஸுலபமான மந்த்ரம் கைப்பட்டிருக்கவும் அந்தோ! சிலர் இழக்கிறார்களே! என்ன கொடுமை!. ... (௯௫)

திறம்பாதென் னெஞ்சமே செங்கண்மால் கண்டாய்—*
அறம்பாவ மென்றிரண்டு மாவான் *—புறந்தானிம்
மண்தான் மறிகடல்தான் மாருதந்தான் * வான்தானே
கண்டாய் கடைக்கட் பிடி. (௯௬)

என் நெஞ்சமே } எனது மனமே !,

அறம் பாவம் என்ற இரண்டும் ஆவான் } புண்யம் பாபம் எனப்படுகின்ற இருவகைக் கருமங்களுக்கும் நிர்வாஹகன்

செம் கண் மால் கண்டாய் } புண்டரீகாக்ஷனை எம்பெருமானே யாவன்;

இம்மண் தான் இந்தப்பூமியும்

மறி கடல் தான் } அலையெறிகிற கடலும்

மாருதம் தான்	வாயுவும்	தானே கண்டாய்	அந்தத் திருமாலேயாவன்;
வான்	ஆகாசமும்	கடைக்கண்	முடிவாக ஆராய்ந்து பார்க்குமளவில்
புறம் தான்	இவை தவிரவுள்ள மஹாந் முதலிய தத்துவங்களும்	(இதுவே உண்மையென்பதை)	
(ஆகிய எல்லாவற்றுக்கும் நிர்வாஹகன்)		திறம்பாது	தவறாமல்
		பிடி	உறுதியாகக்கொள்.

* * *—[திறம்பாதென்னெஞ்சமே.] 'அந்தோ ! சிலர் அநியாயமாக நரகவழி நோக்குகின்றனரே!' என்று கீழ்ப்பாட்டில் உலகத்தாரைப்பற்றிக் கவலையுற்ற ஆழ்வார், இப்பாட்டில், அவர்கள் எங்ஙனே கெட்டொழிந்தாலும் ஒழிக; நெஞ்சே! நீ மாத்திரம் ஸர்வ நிர்வாஹகன் அப்பெருமா னொருவனேயென்று நான் சொல்லுவதில் ஒருபோதும் விப்ரதிபத்தி கொள்ளாமல் இதுவே பரமார்த்தமென்று உறுதிகொண்டிரு—என்று தமது திருவுள்ளத்தை நோக்கி உபதேசிக்கின்றனர்.

"ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி தம் யமேப்யோ லோகேப்ய உந்நிநீஷதி; ஏஷ ஏவாஸாது கர்ம காரயதி தம் யமதோ நிநீஷதி" [இந்த எம்பெருமானே எந்த ஆத்மாவை நற்கதி நண்ணுவிக்கக் கருதுகின்றானோ அவனைக் கொண்டு நல்வினையைச்செய்விக்கின்றான்; எந்த ஆத்மாவை அதோகதியடைவிக்கக் கருதுகின்றானோ அவனைக்கொண்டு தீவினையைச் செய்விக்கின்றான்] என்ற வேதவாக்கை யடியொற்றி "அறம்பாவ மென்றிரண்டு மாவான்" எனப்பட்டது. ... ... (கசு)

பிடிசேர் களிறளித்த பேராளா * உன்றன்
அடிசேர்ந் தருள்பெற்றா ளன்றே *—பொடிசேர்
அனற்கங்கை யேற்றா னவிர்சடைமேல் பாய்ந்த *
புனற்கங்கை யென்னும் பேர்ப்பொன். (கஎ)

பிடி சேர் களிறு	பேடையோடு சேர்ந்து விஷய போகபரனை (கஜேந்த்ராழ்வானென்கிற) ஆண் யானையை	பேராளா	மஹாநுபாவனே!,
அளித்த	காத்தருளின	பொடி சேர்	(தான் பண்ணின பாபத்துக்கு ப்ராயச்சித்தமாக) பஸ்மத்திலே சாயுமவனாகி

அனற்கு அம் கை ஏற்றான்	அக்நிக்கு (த் தனது) அழகிய கையை ஏற்ற பாதகியான ருத்ரனுடைய	கங்கை என்னும் பேர்	கங்கையென்னும் பெயர்பூண்டுள்ள
அவிர் சடை மேல்	ஒளிபொருந்திய ஜடையின் மேலே	பொன்	சிறந்த பெண்
பாய்ந்த	(அவனுடைய சுத்தியின்பொருட்டு) வந்து குதித்த	உன்தன் அடி சேர்ந்து	உன்னுடைய திருவடிகளைக் கிட்டி
புனல்	ஜலமயமான	அருள் பெற்றாள் அன்றே	(பாபிகளைப் பரிசுத்தமாக்கும்படி) உனது திருவருளைப் பெற்றாளன்றோ.

* * *—[பிடிசேர்களிறளித்த.] கீழ்ப்பாட்டில் "அறம்பாவமென்றிரண்டு மாவான்" என்றருளிச் செய்ததற்கு விவரணம் போலும் இப்பாட்டு. புண்யமும் பாபமும் அவனிட்ட வழக்காயிருக்குமென்றிறே கீழ்ப்பாட்டிற் சொல்லிற்று; அப்படி எங்கே கண்டோமென்ன, இரண்டுக்கும் இரண்டு வ்ருத்தாந்தங்கள் காட்டுகிறாரிதில். ஸ்ரீ கஜேந்திராழ்வானை முதலை வாயினின்றும் விடுவித்துக் காத்தருளினமை ப்ரஸித்தம். அக்களிறு பூர்வஜந்மவாஸனையினால் பகவத்பக்தி மாறாதிருக்கப் பெற்றாலும் மற்றுள்ள காட்டானைகள் போலே விஷயப்ரவணமுமாய்த் திரிந்துகொண்டிருந்தமைபற்றிப் பிடிசேர்களிறு என்றார். [பிடி—யானையின்பேடை.] சாபத்தின் பலனாகப் பாபயோநியிற் பிறவிபெற்ற அவ்யானைக்கும் அருள்செய்யக் காண்கையாலே பாபம் அவனிட்ட வழக்காயிருக்குமென்பது பெறப்பட்டது. பாபிஷ்டர்களையும் பரிசுத்தராக்குந் தன்மை கங்கைக்கு எம்பெருமானருளாலே வந்ததென்கையாலே புண்யம் அவனிட்ட வழக்காயிருக்குமென்பது பெறப்பட்டது. 1. "ஆனின் மேயவைந்தும் நீ அவற்றுள் நின்ற தூய்மை நீ" [சுத்தியை விளைக்கக்கூடிய பதார்த்தங்களுள் முதன்மையாகக் கூறப்படுகிற பஞ்சகவ்யமும் அவற்றிலுண்டான பரிசுத்தியும் உனது ஸங்கல்பத்தினாலாயது] என்றார் திருமழிசைப்பிரான்; 'பஞ்சகவ்யம் பரிசுத்திகரமாகக் கடவது' என்று ஸங்கல்பித்தது போலே 'கங்கை பரிசுத்திகரமாகக் கடவது' என்றும் ஸங்கல்பித்து வைத்திருக்கையாலே புண்யம் நீயிட்ட வழக்கென்கிறது.

1. திருச்சந்த விருத்தம் 94.

ஈற்றடியில் "பெயர்ப்பொன்" என்பது சிலருடைய பாடம்; "பேர்ப்பொன்" என்பதே ப்ராசீநபாடம். 'பெயர்ப்பொன்' என்ற பாடத்தில் தளைதட்டுதல் இல்லையாயினும் மோனையின்பம் குறையுறுகின்றதென்க. .... (கூஎ)

பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும் *
நின்றுலகம் தாய நெடுமாலும் *—என்றும்
இருவரங்கத்தால் திரிவ ரேலும் * ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன். (கூஅ)

பொன் திகழும் மேனி	பொன்போல விளங்குகின்ற உடலையும்
புரி சடை	பின்னின சடைமுடியையுமுடையனாய்
அம்	அழகிய
புண்ணியனும்	(ஸாதநாநுஷ்டாநமாகிற) புண்ணியத்தையுடையனான ருத்ரனும்
நின்று உலகம் தாய நெடுமாலும்	நின்று உலகங்களையெல்லாம் அளந்துகொண்ட ஸர்வேச்வரனும்
என்றும்	எக்காலத்திலும்
இருவர் அங்கத்தால் திரிவர் ஏலும்	இருவராகி வெவ்வேறு வடிவத்தைக்கொண்டு இருந்தார்களேயாகிலும்
ஒருவன்	சடைபுனைந்து ஸாதநாநுஷ்டாநம் பண்ணுமொருவனாகிய சிவன்
ஒருவன் அங்கத்து	நெடுமாலான மற்றொருவனுடைய சரீரத்திலே
என்றும்	எப்போதும்
உளன்	ஸத்தை பெற்றிருப்பன்.

* * *—[பொன்திகழுமேனி.] கீழ்ப்பாட்டில், எம்பெருமானது திருவடியில் தோன்றிய கங்கையைச் சடைமேலே தரித்துக்கொண்டதனாலே ருத்ரன் பாதகம்நீங்கிப் பரிசுத்தனாயினனென்றது; இப்படி ஏன் சொல்லவேண்டும்? இதனால் ருத்ரனுக்கொரு குறை சொல்லலாமோ? அவனும் ஒரு ஸம்ஹாரக் கடவுளென்று பேர்பெற்று ஈச்வரனென்று நாட்டில் கௌரவிக்கப் படவில்லையா? என்றொரு கேள்வி பிறக்க, அவனுடைய ஈச்வரத்வம் எம்பெருமானுக்கு சரீரபூதனாகையாலே வந்ததித்தனை யொழிய இயற்கையாக இல்லையென்பதை ஸ்தாபிக்கக்கருதி இப்பாட்டருளிச் செய்கிறார்.

அரியும் அரனும் தனித்தனி இரண்டு சரீரங்களை யுடையவு

ராய்த் திரியாநின்றாலும் அரனானவன் அரியினது திருமேனியின ஒருபுறத்திலே யொதுங்கி ஒரு வஸ்துவாக ஸத்தை பெறுகிறான் என்றதாயிற்று. 1. "பரன் திறமன்றிப் பல்லுலகீர் தெய்வம் மற்றில்லை பேசுமினே" என்றார் நம்மாழ்வாரும்.

"புரிசடையம்புண்ணியன்" என்ற தொடரில், இவனுடைய வேஷமே இவன் ஈச்வரனல்லனென்பதைக் காட்டுமென்ற கருத்தும், "நின்றுலகம் தாய நெடுமோலும்" என்ற தொடரில், ருத்ரன் தலையோடு மற்றவர் தலையோடு வாசியற எல்லார் தலையிலுமாகத் தனது தாளைநீட்டியவனென்பதால் அவனே ஸர்வேச்வரனென்ற கருத்தும் ஸ்பஷ்டமாக விளங்குதல் காண்க.

ஒருவன்ஒருவனங்கத்துஎன்றுமுளன்—"வலத்தனன் திரிபுரமெரித்தவன்" என்ற திருவாய்மொழியுங் காண்க. "ஒருவனங்கத்து" என்பதற்கு—ஸ்ரீமந் நாராயணனாகிய ஒருவனுடைய சரீரத்தின் ஏகதேசத்திலே என்றும், சரீர பூதனாகி என்றும் பொருள் கொள்வர். .... (௯அ)

உளன்கண்டாய் நன்னெஞ்சே உத்தம னென்றும்
உளன்கண்டாய் * உள்ளுவா ருள்ளத்—துளன் கண்டாய்*
வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்து மேயானும் *
உள்ளத்தி னுள்ளானேன் றோர். (௯௯)

நல் நெஞ்சே	எனக்குப் பாங்கான மனமே!,
உத்தமன்	புருஷோத்தமனான எம்பெருமான்
உளன் கண்டாய்	(நம்மை ரக்ஷிப்பதனாலே) ஸத்தை பெற்றிருப்பவன் காண்;
என்றும் உளன் கண்டாய்	எக்காலத்திலும் (நம்மை ரக்ஷிப்பதிலே தீக்ஷை கொண்டு) இருக்கிறான் காண்;
உள்ளுவார் உள்ளத்து	ஆஸ்திகர்களுடைய மனத்திலே
உளன் கண்டாய்	நித்யவாஸம் பண்ணுமவன்காண்;
வெள்ளத்தின் உள்ளானும்	திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருள்பவனும்
வேங்கடத்து மேயானும்	திருமலையிலே நிற்பவனும்
உள்ளத்தின் உள்ளான் என்று	இப்போது நம்முடைய ஹ்ருதயத்திலே வந்து புகுந்து நித்யவாஸம் பண்ணுகிறானென்று
ஓர்	தெரிந்துகொள்.

1. திருவாய்மொழி 4—10—3.

* * *—[உளன்கண்டாய்.] இப்பாட்டும் மேற்பாட்டும் சாற்றுப்பாசுரங்கள். தமது திருவுள்ளத்தை நோக்கிக் கூறுகின்றார். திருப்பாற்கடல் திருவேங்கடம் முதலிய இடங்கள் எம்பெருமானுக்கு வாஸஸ்தலங்களாயினும் அவ்விடங்களில் எம்பெருமான் வஸிப்பதானது ஸமயம்பார்த்து ஞானிகளின் மனத்திலே புகுவதற் காகவேயாம். ஸ்ரீவசநபூஷணத்தில்—'திருமாலிருஞ்சோலைமலையே' என்கிறபடியே உகந்தருளின நிலங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இவனுடைய சரீரைக தேசத்திலே பண்ணும்; அங்குத்தை வாஸம் ஸாதநம்; இங்குத்தைவாஸம் ஸாத்யம். 'கல்லும் கனைகடலும்' என்கிறபடியே இது ஸித்தித்தால் அவற்றிலாதரம் மட்டமாயிருக்கும்" என்ற ஸ்ரீஸூக்திகள் காண்க. நெஞ்சே! ஸர்வரக்ஷகனை ஸர்வேச்வரன் திருப்பாற்கடல் திருமலைமுதலிய இடங்களில் வந்து தங்கினது விலக்காதார் நெஞ்சில் வந்து புகுவதற்காகவேயாதலால் அவன் இப்போது நம்முடைய நெஞ்சில் ஆதரவோடு நித்யவாஸம் பண்ணலானன், இதனை நீ அறிந்து உவந்திரு என்கிருர்.

இதில், நன்னெஞ்சே! என்று நெஞ்சை விளித்து 'உள்ளத்தினுள்ளானென்றோர்' என்றது எங்ஙனே பொருந்தும்? நெஞ்சமும் உள்ளமும் ஒன்றுதானே; நெஞ்சுக்கும் ஒரு உள்ளமிருப்பது போலச் சொல்லியிருக்கிறதே, இஃதுஎன்? என்னில்; இதுமிகச் சிறியகேள்வி; தம்மிற்காட்டில் நெஞ்சை வேறுபடுத்தி விளிப்பது அதைத் தனிப்பட்டவொரு வ்யக்தியாக ஆரோபணம் செய்து கொண்டேயாதலால் இதுவும் ஒரு ஆரோபணமேயாம். நெஞ்சு தவிர உசாத்துணையாவார் வேறொருவருமில்லாமையால் நெஞ்சை விளித்துச் சொல்லுகிறதித்தனை. ... ... (கூகூ)

ஓரடியும் சாடுதைத்த வொண்மலர் சேவடியும் *
ஈரடியும் காணலா மென்னெஞ்சே *—ஓரடியில்
தாயவனைக் கேசவனைத் தண்டுழாய் மாலைசேர் *
மாயவனையே மனத்து வை. (கoo)

என் நெஞ்சே — எனது மனமே!,

ஓர் அடியின் — (தனது) ஒப்பற்ற அடிவைப்பினாலே

தாயவனை — லோகங்களை யெல்லாம் அளந்து கொண்டவனும்

கேசவனை — கேசியென்னு மஸுரனைக் கொன்றவனும்

தண் துழாய் மாலை சேர் — குளிர்ந்த திருத்துழாய் மாலையோடு சேர்ந்தவனுமான

மாயவனையே — எம்பெருமானையே

மனத்து வை — மனத்தில் உறுதியாகக் கொள்வாயாக:

(இப்படி அவனே உபாயமென்று உறுதிகொண்டால்)

ஓர் அடியும் — உலகங்களை யெல்லாமளந்துகொண்ட ஒரு திருவடியும்

சாடு உதைத்த ஒண் மலர் சேவடியும் — சகடம் முறிந்து விழும்படி உதைத்த அழகிய பூப்போன்ற திருவடியும் ஆகிய

ஈர் அடியும் — இரண்டு திருவடிகளையும்

காணலாம் — ஸேவிக்கப் பெறலாங்காண்.

* * *—[ஓரடியும்.] எம்பெருமானுடைய திருவடிகளை நாம் ஸாக்ஷாத்கரிக்கப் பெறவேண்டில் அதற்கு அவனையே உபாயமாகக் கொள்ளவேணுமென்கிறது. "மாயவனையே மனத்துவை" என்றது எம்பெருமானொருவனையே உபாயமாகக் குறிக்கொள் என்றபடி. அப்படி அவனையே உபாயமாகக்கொண்டால் அவனுடைய உபயபாதங்களையும் ஸேவிக்கப் பெறுகை நமக்கு எளிதாம் என்றதாயிற்று.

இப்பாட்டின் முதலிலுள்ள 'ஓரடியும்' என்பதற்கு 'உலகளந்த ஒரு திருவடியும்' என்று பொருளுரைத்தது—மேலே "ஓரடியின் தாயவனை" என்பதற்கேற்ப. கீழும் மேலும் பரவி இரண்டு திருவடிகளுமே உலகளந்தன வாதலால் அத்திருவடியிணையை யெடுத்துக்கூறாது சகடாஸுரனை யுதைத்துத் தள்ளின திருவடியைக் கூட்டிக்கொண்டதென் னென்னில்; விரோதிநிரஸநஞ் செய்யும் வல்லமையுடைமை தோற்றுதற்காக வென்க. உலகளந்த திருவடியானது எல்லார்தலையிலும் ஏறி வீற்றிருந்து இஷ்டப்ராப்தி செய்வித்தது; சாடுதைத்த திருவடியானது சகடாஸுரனுடைய வஞ்சனையில் நின்றும் (கண்ணபிரானாகிய) தன்னைத் தப்புவித்த முகத்தால் அநிஷ்ட நிவ்ருத்தி செய்வித்தது; ஆகவே

இஷ்டத்தை நிறைவேற்றுவித்து அநிஷ்டத்தை ஒழித்திடவல்ல திருவடிகளையுடையன் எம்பெருமான் என்று காட்டினாராயிற்று.

சாடுதைத்த வரலாறு:—நந்தகோப க்ருஹத்தில் ஒருவண்டியின் கீழ்ப்புறத்திலே கண்ணனைத் தொட்டிலிலிட்டுக் கண்வளர்த்தி யசோதை யமுனை நீராடப்போயிருக்கையில், கம்ஸனாலேவப்பட்ட அசுரனொருவன் அச்சகடத்தில் வந்து ஆவேசித்து ஸ்ரீக்ருஷ்ண சிசுவின்மேலே விழுந்து கொல்லமுயன்றதை யறிந்த அப்பகவான் பாலுக்கு அழுகிற பாவனையிலே தன்சிறிய திருவடிகளை மேலே தூக்கி உதைத்தருள, அவ்வுதை பட்டமாத்திரத்தில் அச்சகடு திருப்பப்பட்டுக் கீழேவிழுந்து அசுரனுட்பட அழிந்தது என்பதாம்.

எம்பெருமானுடைய அவதாரங்கள் பலவற்றினுள்ளும் த்ரிவிக்ரமாவதாரமும் க்ருஷ்ணாவதாரமுமே இவ்வாழ்வார்தாம் மிகவும் ஈடுபட்ட துறைகள் என்பதை விளக்குதற்கே உலகளந்த திருவடியையும் சாடுதைத்த திருவடியையும் பேசிப் பிரபந்தத்தை முடித்தருளினாரென்று பெரியோர் நிர்வஹிக்கும்படி. பின்னடியிலும் "தாயவனைக் கேசவனை" என்றது காண்க.

உபாயமும் உபேயமும் எம்பெருமானே; சைதந்ய கார்யமான இந்த அத்யவஸாயமொன்றே நமக்கு வேண்டியது—என்று அருளிச்செய்து தலைக்கட்டினாராயிற்று. ... . *

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில்
முதல் திருவந்தாதி உரை
முற்றுப்பெற்றது.

முதல் திருவந்தாதி.

அடிவரவு:—

1. வைய மென்று பார் நெறி அர னொன்றுந் திசை,
மயங்கவலம் பொரு மண்ணும் வாய் செவி.

2. செவி யிய லவரவர் முதல் பழு தடியும்,
நான்றமுலை மாலும் பெற்றார் நின் றறியும்.

3. அறியுந் தழும்பிரு விரலொடு உரை யெழு,
மலையால் கையவல மிறையுந் தெளிது புரி.

4. புரி யிமை நகர மென்னொரு ஆறிய,
முரண் வகைய றாரு மிடந்த பெருவில் குன்றனை.

5. குன்று திருமகளும் மனமாசு தமருகந்து,
ஆமே பண்புரி வாரிசுருக்கி, கழலொன்று
மகிழலகு அரியபுல னெளிதில்.

6. எளி தெண்மர் சென்று லரவ மவன்றமர்,
பேரே அயனின்ற தொழுதுமல ரடைந்த
சரணு வுலகும்.

7. உலகும் புணர்மரு தோளவனை நயவேன்,
வினையாலடர் காலை பெயரு முணர்வாரார்,
பாலன் சொல்லுநதனை நன்றுபிணி.

8. நன் றன்பாழி புகழ்வா யேற்றான், காப்புன்னை
வழிநின்று வேங்கடமு மிடரார், கொண்டானை
யடுத்த ஆளமர்வென்றி.

9. ஆள் படையாரும் வரைகுடை பிரானுன்,
படிகண்டு நீயு மினியார் நாடிலும், எனக்காவார்
வரத்தால்வலி ஊனக்குரம்பை.

10 ஊன வாணுகி வயிறழல செற்றெழு, நாவாயில்
திறம்பாது பிடி பொன் உள ஞோர் வை.